சத்திய வேத அகராதி

சத்தியத்தையும் அறிவீர்கள்,
சத்தியம் உங்களை விடுதலையாக்கும் யோவா 8:32

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

சத்திய
வேத அகராதி

நடமாடும் வேதாகம பல்கலைக் கழகம்
பேராசிரியர் டாக்டர். கிரீன் ரோஸ்
துணை வேந்தர்
"சத்தியம் பல்கலைக் கழகம்"

INTERNATIONAL
Truth University
Revelation Reformation Revolution

Regd. Office : 7/1 Clarke Road, Frazer Town
Bangalore 560 005, Ph : 080-25806613
Corporate Office : 35/2, Residency Road, 4th Cross,
Bangalore - 560 025, Ph : 080-25559184
Campus : Hennur Bunde, Bangalore - 560 045 Cell : 08892606246
Website : www.truthuniversity.edu.in
Email : thegreenroses@gmail.com

உதவி ஆசிரியர் குழு

டாக்டர். T. சாமுவேல் தங்கபுலவர்
டாக்டர். S. ஜோசப் ராஜ்
டாக்டர். V. சின்னத்துரை ஜோஸ்
டாக்டர். H. அப்துல் கமால் நாசர்
டாக்டர். P. சந்திரக்குமார்
டாக்டர். M. சுரேஷ் ஞானைய்யா
டாக்டர். A. எட்வின் பிரபு
டாக்டர். S. மைக்கேல் நிக்ஸன்
சகோதரி. பிரேமா

முதலாம் பதிப்பு : ஜனவரி 2012
பிரதிகள் : 2000

(c) பேராசிரியர் டாக்டர். கிரீன் ரோஸ்
துணைவேந்தர்
சத்தியம் பல்கலைக்கழகம்
பெங்களூர் - இந்தியா.

COPYRIGHT NOTICE

Written permission must be obtained from the Truth University of India as copy right holder, prior to the reproduction of any part of this publicaiton in any form or by any means electronic or mechanical, including photo copying, recording, or any information storage and retrieval system.

Printed by. **U.V. Printers,** Court Opp, Trichy -1.
Cell : 9361733999

Truth University

INTERNATIONAL

Revelation Reformation Revolution

சத்தியத்திற்குள்
அன்பானவர்களே III யோவா 1.,

வழியும், சத்தியமும், ஜீவனுமாகிய
இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள்.

பிதாவாகிய தேவன் சத்தியம் (ஏசா 65:16)
குமாரனாகிய இயேசு தேவன் சத்தியம் (யோவா 14:16)
ஆவியானவராகிய தேவன் சத்தியம் (யோவா 16:13)

ஆகவே, தேவனே சத்தியம் அவரது வார்த்தைகள் சத்தியம் (யோவா 17:17).அந்த சத்திய வார்த்தைகளை நாம் அறிந்துகொள்வது தேவசித்தம் (1 தீமோ 2:4).சத்தியத்தை அறிய வரும்போது சத்தியம் நம்மை விடுதலையாக்கும் என்பது நிச்சயம்(யோவா 8:32).

எனவே, சத்திய வேதத்தை தேட (ஏசா 34:16), தியானம் பண்ண (சங் 1:2), ஆராய (யோவா 5:39) இந்த சத்திய வேத அகராதி தங்களுக்கு பெரிதும் உதவி செய்யும் என நம்புகிறேன்.

மனித சாயலான நம்மை தேவசாயலாக மாற்றவந்த இயேசு கிறிஸ்து என்றென்றும் மாறாதவர் (எபி 13:8). சத்திய பிதாவின் சித்தம் நம்மிலே நிறைவேற சத்திய இயேசு நமக்குள் வாசம் பண்ண சத்திய ஆவியானவர் நம்மை வழி நடத்துவாராக!

உயிர்த்தெழுந்த இயேசு உங்களை ஆசீர்வதித்து, உயர்த்தி, பாதுகாப்பாராக!

சத்திய வார்த்தைக்குள்,

"நடமாடும் வேதாகம பல்கலைக்கழகம்"
பேராசிரியர் டாக்டர். கிரீன் ரோஸ்,
துணைவேந்தர்
சத்தியம் பல்கலைக்கழகம்.

"மாற்றங்கள் என்றுமே மாறாதவை"

பொருளடக்கம்

ஆதியாகமம்	1	யோவான் எழுதின சுவிசேஷம்	100
யாத்திராகமம்	4	அப்போஸ்தலருடைய நடபடிகள்	103
லேவியராகமம்	5	நிருபங்கள்	106
எண்ணாகமம்	6	ரோமருக்கு எழுதின நிருபம்	108
உபாகமம்	8	கொரிந்து	111
யோசுவா	10	கொரிந்தியருக்கு எழுதின நிருபங்கள்	112
நியாயாதிபதிகள்	11	1 கொரிந்தியர்	114
நியாயாதிபதிகளின் பெயர் அட்டவணை	13	2 கொரிந்தியர்	115
ரூத்	14	கலாத்தியர்	116
1 சாமுவேல்	16	கலாத்தியருக்கு எழுதின நிருபம்	117
2 சாமுவேல்	18	எபேசு	119
1 இராஜாக்கள்	19	எபேசியருக்கு எழுதின நிருபம்	120
2 இராஜாக்கள்	21	பிலிப்பி பட்டணம்	123
1 நாளாகமம்	23	பிலிப்பியருக்கு எழுதின நிருபம்	124
2 நாளாகமம்	25	கொலோசெயருக்கு எழுதின நிருபம்	126
எஸ்றா	27	1 தெசலோனிக்கேயர்	128
நெகேமியா	29	2 தெசலோனிக்கேயர்	130
எஸ்தர்	31	தீமோத்தேயு	131
யோபு	33	தீமோத்தேயுவுக்கு எழுதின நிருபங்கள்	133
சங்கீதம்	35	1 தீமோத்தேயு	134
நீதிமொழிகள்	38	2 தீமோத்தேயு	136
பிரசங்கி	40	தீத்து	138
உன்னதப்பாட்டு	42	தீத்துவுக்கு எழுதின நிருபம்	140
தீர்க்கதரிசிகள்	44	பிலேமோனுக்கு எழுதின நிருபம்	142
கால நிருபண அட்டவணை	46	எபிரெயருக்கு எழுதின நிருபம்	144
ஏசாயா	48	பொதுவான நிருபங்கள்	146
எரேமியா	5.	யாக்கோபு எழுதின பொதுவான நிருபம்	147
புலம்பல்	54	அப்போஸ்தலனாகிய பேதுரு	149
எசேக்கியேல்	56	பேதுரு எழுதின முதலாம் நிருபம்	152
தானியேல்	59	பேதுரு எழுதின இரண்டாம் நிருபம்	154
ஓசியா	62	அப்போஸ்தலனாகிய யோவான்	156
யோவேல்	65	யோவான் எழுதின முதலாம் நிருபம்	158
ஆமோஸ்	67	யோவான் எழுதின இரண்டாம் நிருபம்	160
ஒபதியா	69	யோவான் எழுதின மூன்றாம் நிருபம்	161
யோனா	71	யூதா எழுதின பொதுவான நிருபம்	164
மீகா	73	யோவானுக்கு வெளிப்படுத்தின விசேஷம்	166
நாகூம்	75	சிறந்தவைகளில் சிறந்தது சத்திய வேதமே	168
ஆபகூக்	77	சொல் அறிமுகம்-பரிசேயர்	178
செப்பனியா	79	சதுசேயர்	179
ஆகாய்	81	செலோத்தியர் (தீவிரவாதிகள்)	180
சகரியா	83	சமாரியர்	181
மல்கியா	85	எப்பிக்கூரியர்	182
கால நிருபண ஒழுங்கு-புதிய ஏற்பாடு	88	ஸ்தோயிக்கர்	183
இயேசுவின் ஜீவியம்	89	சனகெரிப் சங்கம்	184
சுவிசேஷங்கள்	90	ஜெப ஆலயம் (சினகாக்)	185
மத்தேயு எழுதின சுவிசேஷம்	91	நியாய சாஸ்திரிகள்	186
மாற்கு எழுதின சுவிசேஷம்	94	அர்த்தமு தேவி (தியானாள்)	187
லூக்கா எழுதின சுவிசேஷம்	96	அளவுகள்	188

எபிரேய கால அட்டவணை 190
ஆங்கிலம் மற்றும் தமிழ் கால ... 191
சத்திய முத்தீ 192
வேதாகம கணிதத்தின் ஏழு படிகள் 193
நடமாடும் வேதாகமம்-ஏழு படிகள் 195
தேவசித்தம்-ஏழு படிகள் 197
ஆத்துமாவில் ஏழு படிகள் 200
ஆவியில் ஏழு படிகள் 203
சரீரத்தில் ஏழு படிகள் 205
சத்திய தேவன் 207
சத்திய வேதம் 208
கூட்டுதல், குறைத்தல், புரட்டுதல் 209
தேடுதலின் இரகசியங்கள் 210
ஆராய்தலின் இரகசியங்கள் 211
தியானித்தலின் இரகசியங்கள் 212
வார்த்தை ஆராய்ச்சி 213
வசன ஆராய்ச்சி 214
அதிகார ஆராய்ச்சி 215
சத்திய மனிதனின் –சத்திய ஆத்துமா 216
சத்திய மனிதனின் –சத்திய ஆவி 217
சத்திய மனிதனின் –சத்திய சரீரம் 218
தெய்வீகத்தின் இரகசியங்கள் 219
தேவதூதர்களின் இரகசியங்கள் 220
பிசாசைக் குறித்த இரகசியங்கள் 222
மனிதனின் இரகசியங்கள் 224
குற்றத்தின் இரகசியங்கள் 225
இயேசுவின் முதல் வருகையின்... 226
இரட்சிப்பைக் குறித்த இரகசியங்கள் 228
சீஷனைக் குறித்த இரகசியங்கள் 230
கிறிஸ்தவனைக் குறித்த இரகசியங்கள் 231
பரிசுத்த ஆவியானவரைக் குறித்த ... 232
சபையைக் குறித்த இரகசியங்கள் 233
ஸ்நானத்தைக் குறித்த இரகசியங்கள் 234
அபிஷேகத்தைக் குறித்த இரகசியங்கள் 236
ஜீவ அப்பத்தைக் குறித்த இரகசியங்கள் 237
ஜீவ தண்ணீரைக் குறித்த இரகசியங்கள் 238
ஜீவ ஒளியைக் குறித்த இரகசியங்கள் 239
ஜெபத்தைக் குறித்த இரகசியங்கள் 241
கல்லைக் குறித்த இரகசியங்கள் 243
ஆசீர்வாதத்தைக் குறித்த இரகசியங்கள் 245
சோதனையைக் குறித்த இரகசியங்கள் 247
பாடுகளைக் குறித்த இரகசியங்கள் 249
கனிகளைக் குறித்த இரகசியங்கள் 250
ஆயத்தத்தின் இரகசியங்கள் 251
இயேசுவின் இரண்டாம் வருகை 252
உயிர்த்தெழுதலைக் குறித்த ... 254
உபத்திரவக் காலங்களைக் குறித்த ... 256
மகா உபத்திரவ கால இரகசியங்கள் 258
ஆட்டுக்குட்டியானவருடைய கலியாணம் 260
மூன்றாவது உலக மகா யுத்தம் 262
ஆயிர வருட அரசாட்சி 264
கொம்பைக் குறித்த இரகசியங்கள் 265
வெள்ளை சிங்காசன நியாயத் தீர்ப்பு 267
நியாயத்தீர்ப்பின் புத்தகங்கள் 268
கிரீடங்களைக் குறித்த இரகசியங்கள் 270
நித்தியத்தைக் குறித்த இரகசியங்கள் 271
மூன்று பரீட்சைக் குறித்த இரகசியங்கள் 273
மூன்று இரவு மூன்று பகல் 275
யோனாவின் மரணம் 277
பரலோகம் மூன்றாம் வானத்தில் இல்லை 279
தீர்க்கதரிசியைக் (தீர்க்கதரிசி) குறித்த ... 280
பலிபீடத்தைக் குறித்த இரகசியங்கள் 282
கிறிஸ்துவின் பிறப்பைக் குறித்த 284
இயேசுவைக் குறித்த இரகசியங்கள் 287
பரிசுத்த ஆவியானவரைக் குறித்த இரக... 317
பிதாவாகிய தேவனைக் குறித்த இரக ... 347
வார்த்தை ஆராய்ச்சி 387
வசன ஆராய்ச்சி 389
அதிகார ஆராய்ச்சி 392
புத்தக ஆராய்ச்சி 458
உவமைப்பகுதி ஆராய்ச்சி 463
குறிப்பிட்டு வார்த்தை ஆராய்ச்சி 466
எண்கள் ஆராய்ச்சி 470
சத்தியம் பல்கலைக் கழகத்தின் விளக்கம் 473
சத்தியம் பல்கலைக் கழகத்தின் தரிசனம் 476
சத்தியம் பல்கலைக் கழகத்தின் திட்டம் 477
சத்தியம் பல்கலைக் கழகத்தின் செயல்பாடு 478
சத்தியம் பல்கலைக் கழகத்தின் துறைகள் 480
O³ வார்த்தை ஊழியத்தின் விளக்கம் 484
O³ வார்த்தை ஊழியத்தின் தரிசனம் 485
O³ வார்த்தை ஊழியத்தின் திட்டம் 487
O³ வார்த்தை ஊழியத்தின் நோக்கம் 489
ஜீவ விருட்சத்தின் வெளியீடுகள் 490

ஆதியாகமம்

மோசே (ஜலத்திலிருந்து எடுக்கப்பட்டவன்)

ஆதியாகமத்தைக் குறித்து அறிவதற்கு முன்பு அதன் ஆக்கியோனான மோசேயைக் குறித்து சிறிது கவனிப்போம்.

மோசே லேவியின் சந்ததியாராகிய அம்ராம், யோகபேத் என்பவர்களின் மகன், இவன் எகிப்தில் பிறந்து, மூன்று மாதப் பிள்ளையாயிருக்கையில், பார்வோனின் குமாரத்தி இவனை ஒரு நாணற் பெட்டிக்குள்ளிருக்கக் கண்டு, அவனை எடுத்து வளர்த்தாள். (யாத். 2:3-10) அவன் அரமனையில் ராஜகுமாரனைப் போல் நாற்பது வயது மட்டும் வளர்ந்தான். (அப். 7:23)

மோசே தான் பெரியவனான போது, பார்வோனுடைய குமாரத்தியின் மகன் என்னப்படுவதை வெறுத்து, தேவனுடைய ஜனங்களோடே துன்பத்தை அனுபவிப் பதைத் தெரிந்து கொண்டான். (எபி. 11:24-25)

மோசேக்கு நாற்பது வயதான போது, அவன் தன் ஜனத்தோடு சேர்ந்து கொள்ளப் பார்த்தும், அவர்கள் அவனை ஏற்றுக்கொள்ளவில்லை. அதினிமித்தம் தனக்கு மோசம் நேரிடும் என நினைத்து, அங்கிருந்து மீதியான் தேசத்துக்குப் போய் அங்கே சஞ்சரித்தான். அத்தேசத்து ஆசாரியனுடைய குமாரத்தியை விவாகம்பண்ணி, அங்கு அவனுக்கு இரண்டு குமாரர் பிறந்தார்கள். (அப். 7:24-29)

நாற்பது வருஷம் சென்றபின், கர்த்தருடைய தூதன் அவனுக்குத் தரிசனமாகி, எகிப்துக்குப் போய், இஸ்ரவேல் ஜனத்தை மீட்டுக்கொண்டு வரும்படிச் சொன்னார். (யாத். 3-4; அப். 7:30-35)

யாத்திராகமம், லேவியராகமம், எண்ணாகமம், உபாகமம் ஆகிய புஸ்தகங்கள் மோசே இஸ்ரவேல் ஜனங்களை மீட்டுக் கொண்டு, சிவந்த சமுத்திரத்தைக் கடந்து, வனாந் தரத்தில் பிரயாணம் பண்ணி, கானான் தேசத்துக்கருகில் போய்ச் சேர்ந்ததைப் பற்றி விவரிக்கின்றன.

மோசே மேரிபா தண்ணீரண்டையில் மனம் பதறி பேசினதினிமித்தம் கானான் தேசத்துக்குட்படக் கூடாமற் போயிற்று. (எண். 20:1-13). ஆனாலும், அந்த தேசத்தை நேபோ மலை மேல் நின்று பார்த்தபின், 120-ம் வயதில் மோவாப் தேசத்தில் மரித்து, அடக்கம் பண்ணப்பட்டான். (உபா. 34:1-6).

மோசே பூமியிலுள்ள சகல மனுஷரிலும் மிகுந்த சாந்த குணமுள்ளவன். (எண். 12:6-8).

ஆதியாகமம், யாத்திராகமம், லேவியராகமம், எண்ணாகமம், உபாகமம் ஆகிய ஐந்து புஸ்தகங்களை மோசே எழுதினான்.

"ஆதியிலே தேவன்" என்பதோடு வேதாகமம் தொடங்குகிறது. அதாவது: "தேவன் இருக்கிறார். அவர் ஒருவரே தேவன், அவரே சிருஷ்டி கர்த்தர். தேவன் ஒன்றுமில்லாமையில் சர்வ லோகத்தையும் சிருஷ்டித்தார்" என்பதே அதன் கருத்து.

கி.மு. 1688-ல் இப்புத்தகம் எழுதப்பட்டதாக நம்பப்படுகிறது.

இப்புத்தகத்தில் 50 அதிகாரங்களும் 1533 வசனங்களும் உள்ளன.

புத்தகத் தொகுப்பு :

1. முதல் உலகத்தின் சிருஷ்டிப்பும் வரலாறும் 1:1-8:22.
2. இரண்டாம் உலகத்தின் ஆரம்பமும் வரலாறும் 9:1-11:32.
3. கோத்திரப்பிதாக்களின் வரலாறு. 12வது அதிகாரம் முதல் 50 வது அதிகாரம் வரை.

முக்கிய சம்பவங்களின் தொகுப்பு :

1. உலகங்களின் சிருஷ்டிப்பு ஆதி 1:1 .
2. உலகங்களின் மறுசிருஷ்டிப்பு (அ) உலகங்களின் சீரமைப்பு ஆதி 1:2 - 1:31.
3. ஆதாம் ஏவாளின் வாழ்க்கை வரலாறு அதி. 2 முதல் 5 வரை.
4. நோவாவின் வரலாறும் ஜலப்பிரளயமும் அதி. 6 முதல் 60 வரை.
5. பாபேல் கோபுரமும், பாஷைகள் தாறுமாறாக்கப் படுதலும் (அ) மொழிகள் பிரிக்கப்படுதலும் 11 வது அதிகாரம்.
6. கோத்திரப்பிதாக்களின் வாழ்க்கை வரலாறு அதி.12-26.
7. யோசேப்பின் வாழ்க்கை வரலாறு அதி. 37-50.

யாத்திராகமம்

எபிரெய பாஷையில் "நாமங்கள்" என்றும் கிரேக்க மொழியில் "புறப்படுதல்" என்றும் கருத்துள்ள பெயர் இப்புஸ்தகத்துக்குக் கொடுக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர் : மோசே

காலம் : கி.மு. 1688.

இப்புத்தகத்தில் 40 அதிகாரங்களும் 1213 வசனங்களும் உள்ளன.

புத்தகத் தொகுப்பு :

1. இஸ்ரவேலர் எகிப்துக்குச் செல்லுதல் 1 வது அதிகாரம்.
2. மோசேயின் பிறப்பு, வளர்ப்பு மற்றும் ஊழியம் அதி. 2 முதல் 15:21 வரை.
3. இஸ்ரவேலரின் வனாந்திர வாழ்க்கை அதி. 15:22 முதல் 40:38 வரை.

முக்கிய சம்பவங்களின் தொகுப்புகள் :

1. இஸ்ரவேலர் எகிப்துக்குச் செல்லுதலும் 1-வது அதிகாரம். மோசேயின் பிறப்பும் அழைப்பும் முதல் 4 அதிகாரம் வரை.
2. மோசேயின் ஊழியம் அதி.5-7.
3. எகிப்தில் ஏற்பட்ட வாதைகள் அதி.8-11.
4. பஸ்காவும், விடுதலையும் அதி.12-15.
5. சீனாய்மலையில் தேவனும், மோசேயும் 31 வது அதிகாரம்.
6. இஸ்ரவேலரின் வனாந்திர வாழ்க்கையின் முறுமுறுப்பு அதி. 15-40.
7. ஆசரிப்புக் கூடாரத்திற்கான கட்டளைகள் அதி.33-40.

லேவியராகமம்

லேவியராகமம் பரிசுத்தத்தைக் குறித்துக் கூறும் புஸ்தகம், "கர்த்தராகிய நான் பரிசுத்தராயிருக்கிற படியினாலே நீங்களும் எனக்கேற்ற பரிசுத்தவான்களா யிருப்பீர்களாக" என்பதே இப்புஸ்தகத்தின் உள்ளடக்கம்.

ஆசிரியர் : மோசே

காலம் : கி.மு.1686.

இப்புத்தகத்தில் 27 அதிகாரங்களும் 859 வசனங்களும் உள்ளன.

புத்தகத் தொகுப்பு :

1. பலிகளும் ஆசாரியத்துவமும் அதி. 1:1 முதல்10 வரை.
2. சுத்திகரிப்பிற்கான சட்டங்கள் அதி.11:1 - 24:23.
3. ஓய்வுநாள் மற்றும் பொருத்தனைகளுக்கான பிரமாணங்கள் அதி. 25 முதல் 27 வரை.

முக்கிய சம்பவங்களின் தொகுப்புகள் :

1. பலிகள் அதி.1 முதல் 7 வரை.
2. சுத்திகரிப்பு அதி.11 முதல் 15 வரை.
3. ஆராதனை 16, 17 அதிகாரங்கள்.
4. ஆசாரியத்துவ பிரமாணங்களும், பண்டிகை களும், அதி 21 முதல 24 வரை.
5. ஓய்வு நாள் பற்றிய பிரமாணங்கள் 25 வது அதிகாரம்.
6. சாபமும், ஆசீர்வாதமும் 26 வது அதிகாரம்.
7. பொருத்தனைகள் 27 வது அதிகாரம்.

எண்ணாகமம்

இப்புத்தகம் எபிரெய பாஷையின் "வனாந்தரத்தில்" (In the wilderness) என்றும் கிரேக்க பாஷையில், "எண்ணாகமம்" என்றும் குறிக்கப்பட்டுள்ளது. இஸ்ரவேல் ஜனங்கள் இரண்டு முறை தொகையிடப்பட்டதினால், எண்ணாகமம் எனப்பட்டது.

ஆசிரியர் : மோசே

காலம் : கானானில் பிரவேசிப்பதறகு முன்.

இப்புத்தகத்தில் 36 அதிராரங்களும் 1288 வசனாங்களும் உள்ளன.

புத்தகத் தொகுப்பு :

1. சீனாயிலிருந்து வாக்குத்தத்த நாட்டிற்குப் புறப்படுதல். அதி.1:1-10:10 வரை
2. சீனாயிலிருந்து காதேஸ் மற்றும்; மோவாப் சமபூமி வரை அதி. 10:11 - 32:42 வரை.
3. கானான் தேசத்தைக் குறித்த கட்டளைகள் அதி.33:1 - 36:13. வரை

முக்கிய சம்பவங்களின் தொகுப்புகள் :

1. இஸ்ரவேலரைத் தொகையிடுதல், ஆசரிப்புக் கூடாரத்தின் பிரமாணம், மோசே மற்றும் ஆரோனின் வம்சவரலாறு, ஆசரிப்புக்கூடாரத்திலே வேலை செய்பவர்களை தொகையிடுதல், கணவன், மனைவியைக் குறித்த பிரமாணங்கள் பற்றிய விளக்கங்கள் ஆகியவை 1 முதல் 5 அதிகாரங்கள்.

2. நசரேயவிரதம் காணிக்கைகளை செலுத்துதல், லேவியரைச் சுத்திகரித்தல், பஸ்காவை ஆசரித்தல், இஸ்ரவேலரின் முதல் பிரயாணம் பற்றிய விளக்கங்கள் ஆகியவை 6 முதல் 10 ஆதிகாரங்கள்.
3. இஸ்ரவேலரின் முறையிடுதல் மிரியாமும், ஆரோனும் மோசேக்கு விரோதமாகப் பேசுதல், பலிகள் மற்றும் பொருத்தனைகளைக் குறித்த பிரமாணங்கள் பற்றிய விளக்கங்கள். 11 முதல் 15 அதிகாரங்கள்.
4. கோராகின் கூட்டத்தார் மோசேக்கும், ஆரோனுக்கும் விரோதமாக எழும்புதல், ஆரோனிடம் பேசுதல், கர்த்தர் கற்பித்த நியாயப்பிரமாணம் மிரியாமின் மரணம், கன்மலையிலிருந்து தண்ணீர் புறப்பட்டு வருதல் பற்றிய விளக்கங்கள் 16 முதல் 20 அதிகாரங்கள்.
5. கொள்ளிவாய் சர்ப்பம், பிலேயாமின் கண்கள் திறக்கப்படுதல், செலோப்பியாத்தின் குமாரத்திகளுக்கு அவர்களுடைய சுதந்திரம் திரும்பக் கிடைத்தல், இஸ்ரவேலர் மேல் தேவ கோபம் 2 ம் முறை இஸ்ரவேலரைத் தொகையிடுதல் பற்றிய விளக்கங்கள் ஆகியன 21 முதல் 27 அதிகாரங்கள்.
6. பலிகள் காணிக்கைகளைக் குறித்த கட்டளைகள் 28 முதல் 32 அதிகாரங்கள்.
7. கானான் தேசத்தைக் குறித்த கட்டளைகள் 33 முதல் 36 அதிகாரங்கள்.

உபாகமம்

உபாகமம் பஞ்சாகாமத்தின் கடைசிப் புஸ்தகம். எபிரெய பாஷையில் இதன் பொருள் "வசனங்கள்" (உபா.1:2) கிரேக்க மொழியில், "சொன்னதைச் சொல்லுதல்" அல்லது "இரண்டாம் பிரமாணம்" எனப்படும்.

இல்க்கியா தேவாலயத்தில் கண்டெடுத்த புஸ்தகம் உபாகமம் என்று எண்ணப்படுகிறது. (2இராஜா. 22:8) எஸ்றா வாசித்த புஸ்தகமும் இதுவாயிருக்கலாம். (நெகே. 8:1) எசேக்கியாவின் மனுஷர் வைத்திருந்த கர்த்தருடைய வேத புஸ்தகமும் இதுவே. (2நாளா. 17:8-9) தாவீது சாலொமோனுக்கு மோசேயின் நியாயப் பிரமாணத்தின்படி, நடந்து கொள்ளென்று சொன்னதும் இந்தப் புஸ்தகத்தையே குறிக்கிறது. (1இராஜா 2:1-4). யோசுவா. கற்களில் பேர்த்தெழுதின நியாயப்பிரமாண புஸ்தகமும், இதுவே (யோசு. 8:32).

ஆசிரியர் : மோசே

காலம் : கி.மு. 1645

இடம் : கானானுக்குள் பிரவேசிப்பதற்கு சற்று முன் மோவாப் சமபூமியில் வைத்து.

இப்புத்தகத்தில் 34 அதிகாரங்களும் 958 வசனங்களும் உள்ளன.

புத்தகத் தொகுப்பு :

1. வரலாற்றுப் பினனணி அதி. 1:1 - 4:43.
2. உடன்படிக்கையின் நிபந்தனைகள் அதி.4:44-30:20
3. தலைமைத்துவத்தின் தொடர்ச்சி அதி.31:1 - 34:12.

முக்கிய சம்பவங்களின் தொகுப்புகள் :

1 கர்த்தர் விதித்த கட்டளைகளை மோசே இஸ்ரவேலருக்குச் சொல்லுதல் (அ) வரலாற்றுப் பின்னனி 1 முதல் 4 அதிகாரங்கள்.

2. அக்கினியின் நடுவிலிருந்து பேசுதல், ஆவி, ஆத்துமா, சரீரத்தில் வேதம், அருவருப்பானதை வெறுக்க வேண்டும். கர்த்தருடைய வார்த்தையினால் பிழைத்தல், மோசேயின் விண்ணப்பம் பற்றிய விளக்கங்கள் ஆகியவை 5 முதல் 9 அதிகாரங்கள்.

3. பத்துக்கற்பனைகளை கற்பலகைகளில் எழுதுதல், கானான் தேசத்தின் செழுமை, இரத்தத்தைக் குறித்த பிரமாணம் தீர்க்கதரிசி, சொப்பனக்காரனைக் கொண்டு கர்த்தர் இஸ்ரவேலரை சோதித்தல், தசமபாகம் பற்றிய விளக்கங்கள் ஆகியவை 10 முதல் 14 அதிகாரங்கள்.

4. எளியவர்களுக்கு இரங்க வேண்டும், பஸ்காவின் பிரமாணம், ராஜாவாக மாறுவதற்கான தகுதிகள், லேவியரின் சுதந்தரம் கண்ணுக்கு கண், பல்லுக்குப் பல், யுத்தத்திற்கான பிரமாணம், சேஷ்ட புத்திரம், கணவன் மனைவியைக் குறித்த பிரமாணம் பொருத்தனையை நிறைவேற்றுதல் பற்றிய விளக்கங்கள் ஆகியவை 15 முதல் 23 அதிகாரங்கள்.

5. தள்ளுதற்சீட்டு, குற்றவாளிக்கு 40 அடிகள் நிலத்தின் கனிகளில் முதற்பலன், கல்லுகளில் நியாயப்பிரமாணம் பற்றியவிளக்கங்கள் ஆகியவை 24 முதல் 27 அதிகாரங்கள்.

6. ஆசீர்வாதம், சாபம் பற்றிய விளக்கங்கள் ஆகியவை 28 முதல் 30 அதிகாரங்கள்.

7. ஆசரிப்புக் கூடாரத்தில் மோசேயும், யோசுவாவும், தேவனுடைய மகத்துவமும், கோபமும், இஸ்ரவேலரை மோசே ஆசீர்வதித்தல், மோசேயின் மரணம் ஆகியவை 31 முதல் 34 அதிகாரங்கள்.

யோசுவா

கர்த்தர் வாக்குப்பண்ணின தேசத்துக்கு இஸ்ரவேலை வழிநடத்திப் போகும்படி, யோசுவாவுக்கு கட்டளை பிறந்ததோடு இப்புஸ்தகத்தின் காரியம் ஆரம்பித்து, அவன் தேசத்தைப் பிரித்துக் கொடுத்ததோடு முடிவடைகிறது.

ஆசிரியர் : யோசுவா

காலம் : கி.மு. 1370க்கும் 1330க்கும் இடையில்

இப்புத்தகத்தில் 24 அதிகாரங்களும் 685 வசனங்களும் உள்ளன.

புத்தகத் தொகுப்பு :

1. இஸ்ரவேலர் கானானில் பிரவேசித்தல் அதி.1:1 - 5:12.
2. கானானைக் கைப்பற்றுதல் அதி.5:13 - 12:24.
3. நாட்டைப் பங்கிடுதல் அதி.13:1 - 24:33.

முக்கிய சம்பவங்களின் தொகுப்புகள் :

1. யோசுவாவை அழைத்தல் 1வது அதிகாரம்.
2. தேசத்தை வேவுபார்த்தல் 2 வது அதிகாரம்.
3. யோர்தானைக் கடந்து செல்லுதல் 1 முதல் 5 அதிகாரம் வரை.
4. இரண்டாம் விசை விருத்தசேதனம் 5:2.
5. எரிகோவின் சம்பவம் 6வது அதிகாரம்.
6. யுத்தம் செய்து கானானைக் கைப்பற்றுதல் அதி. 7:1 முதல் 12:24 வரை.
7. நாட்டைப் பங்கிடுதலும், யோசுவாவின் அறிவுரைகள் மற்றும் யோசுவாவின் மரணமும் அதி. 13:1 - 24:33 வரை.

நியாயாதிபதிகள்

யோசுவா மரித்த காலம் தொடங்கி, சவுல் ராஜாவான நாட்கள் மட்டுமுள்ள 300 வருஷ சம்பவங்கள் இப்புஸ்தகத்தில் குறிக்கப்பட்டுள்ளன. ரூத்தின் சரித்திரமும், முதலாம் சாமுவேலின் முதல் எட்டு அதிகாரங்களில் குறிக்கப்பட்டவைகளும், நியாயாதிபதிகளின் காலத்தைச் சேர்ந்தவை.

ஆசிரியர் : சாமுவேல்

காலம் : கி.மு. 1126.

இப்புத்தகத்தில் 21 அதிகாரங்களும் 618 வசனங்களும் உள்ளன.

புத்தகத் தொகுப்பு :

1. இஸ்ரவேலில் எழும்பின நியாயாதிபதிகள் அதி.1:1 – 16:31.
2. இஸ்ரவேலரின் ஆவிக்குரிய சீர்குலைவு அதி.17:1–20:48.
3. இஸ்ரவேலரின் தார்மீக சீர்குலைவு அதி.21:1 – 21:25.

முக்கிய சம்பவங்களின் தொகுப்புகள் :

1. எருசலேமின் அழிவு 1 முதல் 8 அதிகாரம் வரை.
2. நியாயாதிபதிகள் நியாயம் விசாரித்தல் மற்றும் இஸ்ரவேலர் யுத்தத்தில் கண்ட வெற்றியும் தோல்வியும் 9 முதல் 16 அதிகாரங்கள் வரை.
3. மீகா வீட்டில் லேவியனாகிய ஆசாரியன் 17 வது அதிகாரம்.

4. ஆசாரியனை அழைத்துச் செல்லுதல் 18 வது அதிகாரம்.
5. கிபியா பட்டணத்தார் இஸ்ரவேலிலே செய்த மதிகேடான காரியம் 19 வது அதிகாரம்.
6. இஸ்ரவேலிலே பென்யமீன் கோத்திரம் அறுப்புண்டு போகுதல் 20 வது அதிகாரம்.
7. பென்யமீனர் தங்களுடைய சுதந்தரத்திற்குத் திரும்புதல் 21 வது அதிகாரம்.

நியாயாதிபதிகளின் பெயர் அட்டவணை

பகைஞர்	ஒடுக்கிய காலம் (வருஷம்)	நியாயாதிபதி	ஓய்வு காலம் (வருஷம்)	குறிப்பு
மெசொப்பொத்தாமியா அம்மோனியர்	8 18	ஒத்னியேல்	40	நி.3:9-11
மோவாபியர் அமலேக்கியர்	18	ஏகூத்	80	நி.3:15
பெலிஸ்தியர்	20	சம்கார்		நி.3:31
கானானியர்	20	தெபோராள் பாராக்	40	நி.4:5-31
மீதியானியர்	7	கிதியோன் அபிமெலேக்கு தோலா யாவீர்	40 3 23 22	நி.6:8 நி.9:22 நி.10:2 நி.10:8
அம்மோனியர்	18	யெப்தா இப்சான் ஏலோன் அப்தோன்	31	நி.10-12 அதி.
பெலிஸ்தியர்	40	சிம்சோன்	20	நி.13-16 அதி

ரூத்தின் சரித்திரம்

ரூத் நியாயாதிபதிகளின் காலத்திலிருந்த ஒரு மோவாபிய பெண். எலிமெலேக்கு, நகோமி என்பவர்களின் மகனாகிய மக்லோன் இவளை மோவாப் தேசத்தில் விவாகம் செய்தான். எலிமெலேக்கும், மக்லோனும் மரித்தபின், நகோமியும் ரூத்தும் பெத்லெகேமுக்கு வந்து தங்கியிருந்தார்கள். ரூத் வயல் வெளியில் வேலைசெய்து, தங்களை ஆதரித்துக் கொண்டு வந்தாள். அந்நாட்களில் போவாஸ் இவளை விவாகஞ் செய்து, ஒரு பிள்ளை பிறந்தது. அந்தப் பிள்ளை தாவீதின் முன்னோனானான். இயேசுவும் அவன் வம்சத்தில் பிறந்தார்.

ஆசிரியர் : திட்டமாகக் கூறமுடியாது. யூத பாரம்பரியத்தின்படி சாமுவேல் தீர்க்கதரிசி என நம்பப்படுகிறது.

காலம் : கி.மு. 1600க்கும் 1500க்கும் இடையில்

இப்புத்தகத்தில் 4 அதிகாரங்களும் 85 வசனங்களும் உள்ளன.

புத்தகத் தொகுப்பு :

1. நகோமி மோவாபிற்குச் செல்லுதல் 1:1–1:5.
2. நகோமி மேவாபிலிருந்து பெத்லகேமிற்குத் திரும்புதல் 1:6–1:22.
3. ரூத்தின் வரலாறு அதி.2:1–4:22.

முக்கிய சம்பவங்களின் தொகுப்புகள் :

1. நகோமி மோவாபிற்குச் செல்லுதல் 1:1-1:5.
2. நகோமி மேவாபிலிருந்து பெத்லகேமிற்குத் திரும்புதல் 1:6 - 1:22.
3. ரூத் போவாஸின் வயலில் 2 வது அதிகாரம்.
4. ரூத் போரடிக்கும் களத்தில் 3 வது அதிகாரம்.
5. ரூத் பட்டணவாசலில் 4:11,12.
6. ஒலிமுகவாசலில் ஜனங்களின் சாட்சி 4:11.
7. ரூத்தின் திருமணம் 4:13.

1 சாமுவேல்

எப்பிராயீம் தேசத்தில் ராமதாயீம் ஊரில் எல்க்கானா என்பவனுக்கு இரண்டு மனைவிகளிருந்தார்கள். ஒருத்தி பெயர் அன்னாள். அவளுக்குப் பிள்ளை இல்லை. அவளும் புருஷனும் சீலோவுக்குப் பலியிடப் போனபோது

அன்னாள் கர்த்தரை நோக்கி அழுது விண்ணப்பம் பண்ணி, ஒரு ஆண் பிள்ளையைக் கேட்டாள். அப்படியே ஒரு பிள்ளை பிறந்த போது, அதற்குச் சாமுவேல் என்று பேரிட்டு, நசரேய விரதத்துக்குட்படுத்தி னாள். பிள்ளை வளர்ந்தபின், அவனை சீலோவுக்குக் கொண்டு போய் கர்த்தருடைய ஊழியத்திற்கென்று பிரதான ஆசாரியனாகிய ஏலியிடம் ஒப்புக் கொடுத்தார் கள். (1சாமு. 1ம் அதி)

ஆசிரியர் : சாமுவேல்

காலம் : கி.மு. 1204க்கும் 1035க்கும் இடையில்

இஸ்ரவேலின் நூறு வருட வரலாற்றை இதில் காணலாம்.

இப்புத்தகத்தில் 31 அதிகாரங்களும் 810 வசனங்களும்.

புத்தகத் தொகுப்பு :

1. சாமுவேலின் வாழ்க்கையும் ஊழியமும் அதி. 1:1-7:17.
2. சவுலின் வாழ்க்கையும் ஊழியமும் அதி.8:1-14:52.
3. தாவீதின் வாழ்க்கையும் ஊழியமும் அதி.15:1-31:13.

முக்கிய சம்பவங்களின் தொகுப்புகள் :

1. சாமுவேலின் பிறப்பு, வளர்ப்பு மற்றும் சாமுவேலுக்கு தேவன் தன்னை வெளிப்படுத்துதல் (அ) சாமுவேலை கர்த்தர் அழைத்தல்.1 முதல் 3 அதிகாரங்கள் வரை.
2. உடன்படிக்கை பெட்டியின் பிரயாணம். 4 முதல் 6 அதிகாரங்கள் வரை.
3. சவுலின் ராஜ்யபாரம். 8 முதல் 15 அதிகாரங்கள் வரை.
4. தாவீதை ராஜாவாக அபிஷேகம் பண்ணுதல். 16 - வது அதிகாரம்.
5. தாவீது கோலியாத்தை முறியடித்தல். 17- வது அதிகாரம்.
6. தாவீதைக் குறித்த சவுலின் சதி. 18 முதல் 27 அதிகாரங்கள் வரை.
7. சவுலின் கடைசி நாட்கள் மற்றும் மரணம். 28 முதல் 31 அதிகாரங்கள் வரை.

2 சாமுவேல்

2 சாமுவேல் புத்தகத்தில் 24 அதிகாரங்களும் 695 வசனங்களும் உள்ளன.

புத்தகத் தொகுப்பு :

1. தாவீதின் யுத்தம் அதி. 1:1-12:31.
2. அப்சலோமின் வரலாறு அதி. 13:1-20:26.
3. தாவீதின் பாட்டும் கடைசி வார்த்தைகளும், அதி. 21:1-24:25.

முக்கிய சம்பவங்களின் தொகுப்புகள் :

1. தாவீது அமலேக்கியரை முறியடித்தலும் தாவீதின் புலம்பலும் தாவீதை இரண்டாம் விசை யூதாவின் மேல் ராஜாவாக அபிஷேகம்பண்ணுதலும் 1,2 அதிகாரங்கள்.
2. சவுலின் குடும்பத்துக்கும், தாவீதின் குடும்பத்துக்கும் இடையே நடந்த யுத்தமும் பெலிஸ்தரை முறியடித்தலும் 3 முதல் 8 அதிகாரங்கள் வரை.
3. தாவீதின் பொல்லாப்பான காரியம். 11,12 அதிகாரங்கள்.
4. சீமேயி தாவீதை தூஷித்தலும் அப்சலோமின் வாழ்க்கையும் மரணமும்,13 முதல் 18 அதிகாரங்கள் வரை.
5. தாவீதின் நாட்களில் உண்டான பஞ்சம். 21 வது அதிகாரம்.
6. தாவீதின் பாட்டும் கடைசி வார்த்தைகளும்,22, 23 அதிகாரங்கள்.
7. இஸ்ரவேலின்மேல் தேவகோபத்தினால் உண்டான கொள்ளை நோய். 24 வது அதிகாரம்.

1 இராஜாக்கள்

இஸ்ரவேல், தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட ஜனம். அவர்கள் அந்நிய ஜாதியாரால் ஒடுக்கப்பட்ட வேளைகளில், அவர்களுடைய கூக்குரலைக் கேட்டு தேவன் நியாதிபதிகளைக் கொடுத்தார்.பின்பு மற்ற ஜாதிகளுக்கிருந்தது போல தங்களுக்கு ராஜாக்கள் வேண்டுமென்று கேட்கவே ராஜாக்களையும் கொடுத்தார்.

இப்புத்தகத்தில் 22 அதிகாரங்களும் 816 வசனங்களும் உள்ளன.

புத்தகத் தொகுப்பு :

1. சாலொமோனின் வாழ்க்கையும் தாவீதுக்கு ஒரு விளக்கைக் கட்டளையிடுதலும் அதி.1:1-16:34.
2. எலியா, எலிசா தீர்க்கதரிசிகளின் வாழ்க்கை அதி. 17:1-19:21.
3. கீழ்ப்படியாத தீர்க்கதரிசிகளின் நிலைமைகள் அதி. 20:1-22:53.

முக்கிய சம்பவங்களின் தொகுப்புகள் :

1. சாலொமோன் ராஜாவாக அபிஷேகம் பண்ணப்படுதல், தாவீது சாலொமோனுக்கு கட்டளையிட்டுச் சொன்ன வார்த்தைகள், கர்த்தர் சாலொமோனுக்குத் தரிசனமாகுதல், ஞானத்தை கொடுத்தல் பற்றிய விளக்கங்கள் 1 முதல் 4 அதிகாரங்கள்.
2. ஈராமும் சாலொமோனும் உடன்படிக்கைபண்ணுதல், சாலொமோன் ஆலயத்தைக்கட்டுதல், அ ர ண்

மனையைக் கட்டுதல் பற்றிய விளக்கங்கள் 5 முதல் 7 அதிகாரங்கள்.

3. சாலொமோனின் விண்ணப்பம், இரண்டாவது முறை கர்த்தர் சாலொமோனுக்குத் தரிசனமாகுதல், சேபாவின் ஸ்திரீ சாலொமோனை சோதிக்க வருதல் பற்றிய விளக்கங்கள் 8 முதல் 10 அதிகாரங்கள்.
4. சாலொமோனின்மேல் உண்டான கர்த்தருடைய கோபம், ரெகொபெயாம் முதியோர்களின் ஆலோசனையை தள்ளிவிடுதல், கீழ்ப்படியாத தீர்க்கதரிசிகளுக்கு வந்த நிலைமை, அபியாவின் வியாதி பற்றிய விளக்கங்கள் 11 முதல் 14 அதிகாரங்கள்.
5. தாவீதுக்கு ஒரு விளக்கைக் கட்டளையிடுதல் பாஷாவுக்கு எதிரான கர்த்தருடைய வார்த்தை, பற்றிய விளக்கங்கள் 15 முதல் 16 அதிகாரங்கள்.
6. சாறிபாத் விதவை சமாரியாவில் பஞ்சம் கொடிதாகுதல், பாகாலின் தீர்க்கரிசிகள் வெட்டப்படுதல் பற்றிய விளக்கங்கள் 17, 18 அதிகாரங்கள்.
7. சூரைச்செடியின் கீழ் எலியா, மலைகளின் தேவன், நாபோத்தின் திராட்சைதோட்டத்தை ஆகாப் எடுத்துக்கொள்ளுதல், தீர்க்கதரிசிகளின் வாயில் பொய்யின் ஆவி பற்றிய விளக்கங்கள் 19 முதல் 22 அதிகாரங்கள்.

2 இராஜாக்கள்

இஸ்ரவேலரின் 4 நூற்றாண்டு வரலாற்றை இதில் காணலாம்.

ஆசிரியர் : பாபிலோன் சிறையிருப்பில் இருந்த யாரோ ஒருவராக இருக்கலாம். ஏசாயா என்றும், எரேமியா என்றும் கருதுகிறவர்கள் உள்ளனர்.

காலம் : கி.மு. 562க்கும் 536க்கும் மத்தியில்.

இப்புத்தகத்தில் 25 அதிகாரங்களும் 719 வசனங்களும் உள்ளன.

புத்தகத் தொகுப்பு :

1. எலிசாவின் அற்புதங்கள் அதி. 1:1 - 8:29.
2. யெகூவின் ராஜ்யம் அதி.9:1 - 15:38.
3. ஆகாஸ் முதல் சிதேக்கியா வரையுள்ள ராஜ்யம் அதி.16:1-25:30.

முக்கிய சம்பவங்களின் தொகுப்புகள் :

1. அகசியா கர்த்தருடைய வார்த்தையின்படி மரித்தல், எலியா பரலோகத்திற்கு ஏறிப்போகுதல், பள்ளத்தாக்கு தண்ணீரால் நிரப்பப்படுதல் பற்றிய விளக்கங்கள் 1 முதல் 3 அதிகாரங்கள்.
2. சூனேமியாளின் பிள்ளையை உயிரோடு எழுப்புதல், நாகமானின் குஷ்டரோகம் நீங்குதல், கோடாரியை மிதக்கப்பண்ணுதல், நாலு குஷ்டரோகிகளின்

நற்செய்தி, சூனேமியாள் ராஜாவிடம் முறையிடுதல் பற்றிய விளக்கங்கள் 4 முதல் 8 அதிகாரங்கள்.

3. யெகூவை ராஜாவாக அபிஷேகம்பண்ணுதல், யெகூவின்ராஜ்யபாரம், அத்தாலியாளின் ராஜ்யபாரம், யோவாசின் ராஜ்யபாரம் பற்றிய விளக்கங்கள் 9 முதல் 13 அதிகாரங்கள்.
4. அமத்சியாவின் ராஜ்யபாரம், அசரியாவின் ராஜ்யபாரம், யெகூவோடே சொன்ன கர்த்தருடைய வார்த்தை நிறைவேறுதல் ஆகாஸின் ராஜ்யபாரம், ஓசெயாவின் ராஜ்யபாரம் பற்றிய விளக்கங்கள் 14 முதல் 17 அதிகாரங்கள்.
5. எசேக்கியா வியாதி நீங்கி பிழைத்தல் 18 முதல் 20 அதிகாரங்கள்.
6. மனாசேயின் ராஜ்யபாரம், ஆமோனின் ராஜ்யபாரம், யோசியாவின் ராஜ்யபாரம் பற்றிய விளக்கங்கள் 21 முதல் 23 அதிகாரங்கள்.
7. யோயாக்கீமின் ராஜ்யபாரம், சிதேக்கியாவின் ராஜ்யபாரம் பற்றிய விளக்கங்கள் 24,25 அதிகாரங்கள்.

1 நாளாகமம்

இப்புஸ்தகங்கள் தொடக்கத்தில் எஸ்றா, நெகேமியா புஸ்தகங்களோடு சேர்த்து ஒரு கால நிரூபண சரித்திரமாக எழுதப்பட்டது. கிரேக்க மொழி பெயர்ப்பில் “ இராஜாக்களின் புஸ்தகங்களில் குறிக்கப்படாதவைகள் இவைகளில் குறிக்கப்பட்டுள்ளன” எனக் கருத்துள்ள பெயர் கொடுக்கப்பட்டது.

இப்புஸ்தகங்களில் சவுலின் மரணம் தொடங்கி கோரேஸ் கட்டளை கொடுத்த கி.மு. 536-ம் வருஷம் வரையுள்ள சரித்திரம் குறிக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர் : எஸ்றா என்றும் வேதபாரகன்

காலம் : கி.மு. 450.

1 நாளாகமத்தில் 29 அதிகாரங்களும் 942 வசனாங்களும், 2 நாளாகமத்தில் 36 அதிகாரங்களும் 822 வசனாங்களும் உள்ளன.

புத்தகத் தொகுப்பு :

1. இஸ்ரவேலரின் வம்சவரலாறு அதி.1:1 - 9:44.
2. சவுலின் மரணம் அதி. 11:1 - 29:30.
3. தாவீதின் ஆட்சிக்காலம் அதி. 11:1 - 29:30,

முக்கிய சம்பவங்களின் தொகுப்புகள் :

1. வம்ச வரலாறு பற்றிய விளக்கங்கள் 1 முதல் 9 அதிகாரங்கள்.

2. சவுலின் மரணம் பற்றிய விளக்கங்கள் 10 வது அதிகாரம்.
3. தாவீதை ராஜாவாக அபிஷேகம் பண்ணுதல். தேவனுடைய பெட்டி ஓபேத் ஏதோம் வீட்டில். தாவீது பெலிஸ்தரோடு யுத்தம்பண்ணுதல். உடன்படிக்கை பெட்டி தாவீது நகரத்திற்கு வருதல் பற்றிய விளக்கங்கள் 11 முதல் 15 அதிகாரங்கள்.
4. தாவீதின் சங்கீதம். நாத்தான் கர்த்தருடைய வார்த்தையை தாவீதுக்குச் சொல்லுதல் பற்றிய விளக்கங்கள் 16 முதல் 17 அதிகாரங்கள்.
5. பெலிஸ்தர் மோவாபியரிடம் யுத்தம்பண்ணுதல். அம்மோன் புத்திரரின் யுத்தம். இஸ்ரவேலை தொகையிடும்படி சாத்தான் தாவீதை ஏவுதல் பற்றிய விளக்கங்கள். 18 முதல் 21 அதிகாரங்கள்.
6. ஆலயத்தைக் கட்டுவதைக் குறித்த தாவீது சாலொமோனிடம் பேசுதல். சாலொமோனை ராஜாவாக்குதல். ஆலயத்திற்கு பணிவிடை செய்பவர்களின் நாமங்கள் பற்றிய விளக்கங்கள் 22 முதல் 27 அதிகாரங்கள்.
7. தாவீது சாலொமோனுடனும், சகல ஜனங்களோடும் கர்த்தருடைய ஆலயத்தைக் குறித்து பேசுதல். கர்த்தருடைய ஆலயத்திற்காக மனப்பூர்வமாய் கொடுக்கப்பட்டதற்காக தாவீது கர்த்தரை துதித்தல். தாவீதின் மரணம் பற்றிய விளக்கங்கள் 28 முதல் 29 அதிகாரங்கள்.

2 நாளாகமம்

புத்தகத் தொகுப்பு :

1. சாலொமோனின் ராஜ்யபாரம் அதி.1:1 - 9:31.
2. ரெகொபெயாம் முதல் யோராமின் ராஜ்யம் வரை அதி.10:1 - 21:20
3. அகஸ்சியாவின் ராஜ்யம் முதல் யோராமின் ராஜ்யம் வரை 22:1 - 36:23

முக்கிய சம்பவங்களின் தொகுப்புகள் :

1. சாலொமோனுக்கு கர்த்தர் தரிசனமாகுதல், சாலொமோன் ஈராமிடத்தில் ஆட்களை அனுப்புதல். சாலொமோன் ஆலயத்தைக் கட்டுதல், கர்த்தருடைய மகிமை ஆலயத்தை நிரப்புதல் பற்றிய விளக்கங்கள் 1 முதல் 5 அதிகாரங்கள்.
2. சாலொமோனின் விண்ணப்பம் பலிசெலுத்துதல், ஆலயபிரதிஷ்டை, சேபாவின் ராஜஸ்திரீ சாலொமோனை சோதித்தல், சாலொமோனின் மரணம் , ரெகொபெயாம் ராஜாவாகுதல், முதியோரின் ஆலோசனையை தள்ளிவிடுதல் பற்றிய விளக்கங்கள் 6 முதல் 10 அதிகாரங்கள்.
3. செமாயாவுக்கு உண்டான கர்த்தருடைய வார்த்தை ரெகொபெயாமும் இஸ்ரவேலரும் நியாயப்பிரமாணத்தை விட்டுவிடுதல், ரெகொபெயாமின் மரணம், அபியாவுக்கும் யெரொபியாமுக்கும் நடந்த யுத்தம், ஆசா எத்தியோப்பியரை முறியடித்தல் ஓதேதின் குமாரனாகிய அசரியாவின் மேல் தேவனுடைய ஆவி இறங்குதல்பற்றிய விளக்கங்கள் 11 முதல் 15 அதிகாரங்கள்.

4. இஸ்ரவேலின் ராஜாவாகிய பாஷா யூதாவுக்கு விரோதமாக வருதல், யோசபாத்தின் ராஜ்யம், தீர்க்கதரிசிகளின் வாயில் பொய்யின் ஆவி, அம்மோன் புத்திரர், மோவாப் புத்திரர் யோசபாத்திற்கு விரோதமாய் யுத்தம் பண்ண வருதல், யோசபாத்தின் மரணம் பற்றிய விளக்கங்கள் 16 முதல் 20 அதிகாரங்கள்.
5. யோராம் குடல் வியாதியால் மரித்தல், அகசியாவின் ராஜ்யமும் மரணமும் யோராமின் ராஜ்யம், ஆலயத்தை புதுப்பித்தல், யோவாசின் மரணம், அமத்சியாவின் ராஜ்யமும் மரணமும் பற்றிய விளக்கங்கள் 21 - 25 அதிகாரங்கள்.
6 உசியாவின் ராஜ்யம், நெற்றியில் குஷ்டரோகம், உசியாவின் மரணம், யோதாமின் ராஜ்யம், ஆகாசின் ராஜ்யம், எசேக்கியாவின் ராஜ்யம் பற்றிய விளக்கங்கள் 26 முதல் 32 அதிகாரங்கள்.
7. மனாசேயின் ராஜ்யம், யோசியாவின் ராஜ்யம் யோவாகாஸ் ராஜ்யம், இஸ்ரவேலர் பாபிலோனுக்கு சிறைபட்டுப் போகுதல் பற்றிய விளக்கங்கள் 33 முதல் 36 அதிகாரங்கள்.

எஸ்றா

இவன் செராயாவின் குமாரன். ஆரோனின் சந்ததியான். மோசேயின் நியாயப் பிரமாணத்தில் தேறின வேதபாரகன். பாபிலோனில் சிறைப்பட்டிருந்த யூதருக்குள் ஆசாரிய ஊழியஞ் செய்து கொண்டிருந்த இவன், அர்தசஷ்டா ஆளுகிற காலத்தில், பெர்சியவுக்குப் போனான். அர்தசஷ்டா ஒரு நிரூபத்தை எழுதி அவனுககுக் கொடுத்து, எருசலேமுககுப் போகும்படி சொல்லியனுப்பினான்.

ஆசிரியர் : எஸ்றா என்னும் வேதபாரகன்

காலம் : கி.மு. 456க்கும் 444க்கும் நடுவில்

இப்புத்தகத்தில் 10 அதிகாரங்களும் 250 வசனங்களும் உள்ளன.

புத்தகத் தொகுப்பு :

1. பாபிலோன் சிறையிருப்பிலிருந்து திரும்பி வருதல் அதி.1 : 1 - 2 : 70
2. தேவாலயம் சீரமைப்பு அதி.3:1 - 6:22.
3. எஸ்றாவின் எருசலேம் பயணமும், சீர்திருத்தங்களும் அதி.7:1 - 10:44

முக்கிய சம்பவங்களின் தொகுப்புகள் :

1. ஆலயத்தைக்கட்டும்படி தேவன் கோரேசனின் ஆவியை எழுப்புதல், சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்த இஸ்ரவேலரின் தொகைகள், வம்சங்களின் தலைவரில் சிலர் ஆலயத்திற்காக உற்சாகமான

காணிக்கைகளைக் கொடுத்தல் பற்றிய விபரங்கள் 1, 2 அதிகாரங்கள்.

2. பலிபீடத்தைக்கட்டி பலி செலுத்துதல், அஸ்திபாரம் போடும்போது கர்த்தரைத் துதித்தல், தேவனுடைய ஆலயத்தின் வேலை தடைபண்ணப்படுதல் பற்றிய விளக்கங்கள் 3, 4 அதிகாரங்கள்.
3. தேவனுடைய ஆலயத்தைக் கட்டி முடித்து பிரதிஷ்டையை சந்தோஷமாய்க் கொண்டாடுதல், 5,6 அதிகாரங்கள்,
4. கர்த்தருடைய வேதத்தின்படி எஸ்றா தன் இருதயத்தைப் பக்குவப்படுத்தியிருத்தல் 7 வது அதிகாரம்,
5. பாபிலோனிலிருந்து எருசலேமிற்கு வந்த வம்சத் தலைவர்களின் அட்டவணையும் எஸ்றாவின் உபவாச ஜெபமும் 8 வது அதிகாரம்.
6. பரிசுத்த வித்து தேசத்து ஜனங்களோடே கலந்து விட்டதினால் எஸ்றா தேவனை நோக்கி ஏறெடுத்த பிரார்த்தனை 9 வது அதிகாரம்.
7. இஸ்ரவேலர் தாங்கள் செய்த குற்றத்தை ஒப்புக் கொண்டு அதைவிட்டு விலகுதல் 10 வது அதிகாரம்.

நெகேமியா

நெகேமியா என்பதன் பொருள் "ஆறுதல்" இவன் யூதா கோத்திரத்தான். அகலியாவின் குமாரன். பெர்சிய ராஜாவாகியஅர்தசஷ்டாவின்கீழ், சூசான் அரமனையில் பானபாத்திரக்காரனாயிருந்தான்.

இப்புஸ்தகத்தோடு இஸ்ரவேலின் பழைய ஏற்பாட்டுச் சரித்திரம், யோசுவாவின் நாட்கள் தொடங்கி, மல்கியாவின் காலம் வரை, 1020 வருஷ சம்பவங்கள் முடிவடைகிறது. (கி.மு. 1451-432).

ஆசிரியர் : நெகேமியா

காலம் : கி.மு. 456க்கும் 444க்கும் நடுவில்

இப்புத்தகத்தில் 13 அதிகாரங்களும் 406 வசனங்களும் உள்ளன.

புத்தகத் தொகுப்பு :

1. நெகேமியா சூசான் அரண்மனையில் அதி. 1 : 1 - 11.
2. நெகேமியா எருசலேமில் அதி. 2:1 - 12:47.
3. நெகேமியாவின் சீர்திருத்தங்கள் அதி. 13:1 - 13:31.

முக்கிய சம்பவங்களின் தொகுப்புகள் :

1. சூசான் அரண்மனையில் நெகேமியாவின் ஜெபம் 1 வது அதிகாரம்.
2. எருசலேமில் இடிந்துபோன அலங்கத்தை நெகேமியா பார்வையிடுதல், எருசலேமின் அலங்கம் கட்டப்படுதல் பற்றிய விளக்கங்கள் 2, 3 அதிகாரங்கள்.

3. அலங்கத்தைக் கட்டும்போது உண்டான எதிர்ப்புகளும் சமூக பொருளாதார பிரச்சனைகளும் 4, 5 அதிகாரங்கள்.
4. நெகேமியாவிற்கு எதிரான அச்சுறுத்தல்கள் மற்றும் சிறைப்பட்டோரின் பெயர்கள் 6, 7 அதிகாரங்கள்.
5. எஸ்றாவின் பிரசங்கம் 8 முதல் 10 அதிகாரங்கள்.
6. எருசலேமின் குடிகள் பற்றிய விளக்கங்கள் 11 வது அதிகாரம்.
7. அலங்கத்தின் பிரதிஷ்டை மற்றும் நெகேமியாவின் சீர்திருத்தங்கள் 12, 13 அதிகாரங்கள்.

எஸ்தர்

பாபிலோனிலிருந்து யூதர் அநேகர் திரும்பி எருசலேமுக்குப் போனார்கள். இன்னும் அநேகர் அங்கே தங்கியிருந்தார்கள். அவர்களில் மொர்தெகாய், எஸ்தர் என்பவர்களைப் பற்றி இப்புஸ்தகத்தில் குறிக்கப் பட்டுள்ளன.

எஸ்தர் பென்யமீன் கோத்திரத்து கீஸ் என்பவனின் குடும்பத்தைச் சேர்ந்த ஒரு ஸ்திரீ. வாசனை மரமென்னும் அர்த்தமுள்ள "அத்சாள்" (Hadassah) அவளது எபிரெயப் பெயர். அந்நாட்களில் அவளுடைய சிறிய தகப்பனாகிய மொர்தெகாய், ராஜ அரமனையில் ஊழியஞ் செய்து கொண்டிருந்தான். எஸ்தர், தாய் தகப்பன் இல்லாதவளானதால், அவன் அவளைத் தன் குமாரத்தியாக எடுத்துக் கொண்டான். (எஸ். 2:7)

அக்காலத்தில், பெர்சிய ராஜாவாகிய அகாஸ்வேரு எஸ்தரை விவாகம் செய்த போது, அவள் ராஜாத்தியானாள்.

ஆசிரியர் : நிச்சயமில்லை, ஆனாலும் வேதபாரனாகிய எஸ்றா என்று நம்பப்படுகிறது.

காலம் : கி.மு. 465க்குப் பின்.

இப்புத்தகத்தில் தேவன் என்கிற சொல் பயன்படுத்தப் படவில்லை. இதில் 10 அதிகாரங்களும் 167 வசனாங்களும் உள்ளன.

புத்தகத் தொகுப்பு :

1. வஸ்தி ராணி தள்ளப்படுதல் அதி.1:1 - 22.

2. எஸ்தரின் அரண்மனை வாழ்க்கை அதி. 2:1 - 7:10.
3. மொர்தெகாயின் வெற்றியும், பூரிம் பண்டிகையும் அதி.8:1 - 10:3.

முக்கிய சம்பவங்களின் தொகுப்புகள் :

1. வஸ்தி ராணி தள்ளப்படுதல் அதி.1:1 - 22.
2. எஸ்தர், ராணி பதவிக்கு உயர்த்தப்படுதல் அதி.2:1 - 2:23.
3. ஆமானின் சதி ஆலோசனை அதி.3:1 - 15.
4. எஸ்தரின் தீர்மானம், உபவாச ஜெபம், பற்றிய விளக்கங்கள் அதி.4:1 - 17.
5. எஸ்தரின் முதலாம் விருந்தும் ஆமானின் வீழ்ச்சியும் அதி.5:1 - 6:14 வரை.
6. எஸ்தரின் இரண்டாம் விருந்து அதி.7:1 - 10.
7. மொர்தெகாயின் வெற்றியும் பூரிம் பண்டிகையும் அதி.9:1 - 10:3.

யோபு

யோபு பூர்வ காலத்தில் ஊத்ஸ் தேசத்திலிருந்த ஒரு ஐசுவரியவான். இவனைப் பற்றி (எசே. 1:14) விலும், (யாக் 5:5-1) விலும் குறித்திருக்கிறபடி உண்மையான தென்று தெரிகிறது.

2. யோபு என்னும் பேருடைய, இசக்காருடைய ஒரு குமாரனிருந்தான். (ஆதி. 46:13)

கவிதை நூல்களின் பிரிவிலுள்ள ஒரு புத்தகம் இது. இதன் ஆசிரியரைத் திட்டமாகக் கூறமுடியாது. எனினும் பெரும்பான்மையான வேதப்பண்டிதர்கள் யோபு அல்லது மோசே எனறு நம்புகின்றனர். எழுதப்பட்ட காலம் கி.மு. 1849க்கும் 1703க்கும் நடுவில்.

இப்புத்தகத்தில் 42 அதிகாரங்களும் 1070 வசனங்களும் உள்ளன.

புத்தகத் தொகுப்பு :

1. யோபுவின் வாழ்க்கையும் சோதனையும் 1:1 - 2:13.
2. யோபுவுக்கும் நண்பர்களுக்கும் இடையிலான உரையாடல்கள் அதி. 3:1 - 27:23.
3. ஞான உபதேசமும் யோபுவின் இறுதிக்காலமும் அதி. 28:1 - 42:17.

முக்கிய சம்பவங்களின் தொகுப்புகள் :

1. யோபுவின் வாழ்க்கையும் சோதனையும் 1,2 அதிகாரங்கள்.

2. யோபுவுக்கும் நண்பர்களுக்கும் இடையிலான உரையாடல்கள் 3 முதல் 26 அதிகாரங்கள்.
3. யோபுவின் பிரசங்கம் 27 வது அதிகாரம்.
4. ஞான உபதேசம் 28 வது அதிகாரம்.
5. யோபுவின் புலம்பல் 29 - 37 அதிகாரங்கள்.
6. யோபுவுடன் கர்த்தர் பேசுதல் 38 - 41 அதிகாரங்கள்.
7. யோபு கர்த்தருடன் பேசுதல். யோபு சிநேகிதர்களுக்காக ஜெபம்பண்ணுதல். யோபுவின் ஆசீர்வாதமான வாழ்க்கை 42 வது அதிகாரம்.

சங்கீதம்

சங்கீத புஸ்தகம் எபிரெயருடைய பாட்டுப் புஸ்தகம் எனப்படலாம்.

இப்புஸ்தகத்தை ஐந்து பிரிவுகளாகப் பிரிக்கலாம். ஒவ்வொரு பகுதியும், மங்களத் துதியோடு முடிவடைகிறது. அவையாவன: (1) 1-41, (2) 42-72, (3) 73-89, (4) 90-106, (5) 107-150.

இப்புஸ்தகத்திலுள்ள 150 சங்கீதங்களில், 100-ல் ஆக்கியோன் யாரென்று குறித்துள்ளது. **தாவீது-73, கோராகின் புத்திரர்-10, ஆசாபின் புத்திரர்-12, சாலொமோன்-2, தேதான், ஏமான், மோசே என்பவர்கள் ஒவ்வொன்று.** மிகுதியான 50-ல் எழுதினவனின் பெயர் சொல்லப்படவில்லை.

காலம் : தாவீதின் நாட்கள் தொடங்கி, எசேக்கியாவின் நாட்கள் வரையுள்ள 300 வருஷங்களுக்குள் சங்கீதங்களில் அதிகமானவை எழுதப்பட்டன.

சங்கீதங்கள் பலவிதக் கருத்துக்களும் போதனைகளுமுடையன. அவைகளைப் பின்வருமாறு வகை வகையாகப் பிரிக்கலாம்.

நமது ஆண்டவரைப் பிசாசு சோதித்த வேளையில், 91-ம் சங்கீதத்திலிருந்து அவன் எடுத்துச் சொன்னவை களை அவர் ஏற்றுக் கொண்டார்.

கடைசி இராப்போஜன முடிவில், அவர் தமது சீஷரோடு 113-118 சங்கீதங்களைப் பாடினார். (மத். 26:30) அவர் சிலுவையில் தொங்கின வேளையிலும், சங்கீதமே

அவருடைய தியானமாயிருந்தது. அவர் சங்கீத வசனத்தைச் சொல்லிக் கொண்டே தமது ஜீவனையும் விட்டார்.

தமக்குச் சம்பவித்தவை சங்கீதங்களில் குறித்திருந்தவையென்றும், (யோவா. 13:18) சங்கீதங்களில் தம்மைக் குறித்து, எழுதியதெல்லாம் நிறைவேற வேண்டும் என்றும் சொன்னார். (லூக் 24:44).

பவுலும், சீலாவும் பிலிப்பி பட்டணத்தில் காவலிலிருந்து பாடின பாட்டுகளும் சங்கீதங்களே. (அப். 16:25).

கவிதை நூற்பிரிவில் மிகப் பெரியபுத்தகம் சங்கீதங்கள். 5 பகுதிகளாக இது பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பகுதியின் முடிவிலும் அழகான ஒரு தேவ துதி பாடலுடன் முடிவடைகிறது. (41:13, 72:18, 19, 89:52, 16:48, 150ம் சங்கீதம்) அப்பகுதிகளாவன:

இவைகளின் முதல் இரண்டு பகுதிகளும் சிறையிருப்பிற்கு முன் எழுதப்பட்டவைகளாகும்.

150 சங்கீதங்களில் 34 சங்கீதங்கள் மட்டுமே தலைப்புகள் இன்றி இருக்கின்றன. அவற்றில் அதிகமான சங்கீதங்கள் 3ம் மற்றும் 5ம் பகுதியிலும் காணப்படுகின்றன. சங்கீதங்களின் ஆசிரியர்கள் பலர்.

சங்கீதப் புத்தகத்தில் 150 சங்கீதங்களும் 2461 வசனங்களும் உள்ளன.

புத்தகத் தொகுப்பு :

1. முதல் பகுதியும் (1-41) இரண்டாவது பகுதியும் (42-72) 1:1-72:20.

2. மூன்றாவது பகுதியும் (73-89) நான்காவது பகுதியும் (90-106) 73:1 - 106:48.
3. ஐந்தாம் பகுதி 107:1 - 150:6.

முக்கிய சம்பவங்களின் தொகுப்புகள் :

1. மேசியாவைப் பற்றியவை
   16, 22, 24, 40, 68, 69, 118.
   மனஸ்தாபத்தைக் குறிக்கிறவை
   6, 32, 38, 51, 102, 130, 143.
2. அல்லேலூயா சங்கீதங்கள்
   106, 111, 112, 113, 117, 135, 140-150.
   உபதேசமுள்ளவை
   1, 5, 7, 15, 17, 50, 73, 94, 101.
3. பிரயாணத்துக்கடுத்தவை 120 - 134.
   ஜெப சங்கீதங்கள்
   17, 86, 90, 102, 142.
4. ராஜரீக சங்கீதங்கள் 90 - 100.
   பயபக்திக்குரியவை
   3, 16, 54, 61, 86, 28, 41, 59,70, 67, 122, 144.
5. காலை சங்கீதங்கள் 3, 4, 5, 19, 5, 7, 63, 108.
   மாலை சங்கீதங்கள் 4, 8, 143.
6. தியானத்துக்குரியவை
   16, 56, 60.
   கலக்கமான வேளையில்
   4, 5, 11, 28, 41, 55, 59, 64, 109, 120, 140, 143.
7. தீர்க்க தரிசனங்கள்
   2, 16, 22, 40, 45, 68, 69, 72, 97, 110, 118
   சரித்திர முறையானவை
   78, 105, 106.

நீதிமொழிகள்

யோபு. நீதிமொழிகள் பிரசங்கி என்னும் மூன்று புஸ்தகங்களும் அறிவுணர்த்தும் (Wisdom Books) புஸ்தகங்களென எபிரெயரால் மதிக்கப்பட்டன.

இப்புஸ்தகத்தை எழுதினவர்கள் சாலொமோன், (நீதி. 1:1). ஞானிகள் (நீதி. 22:17). எசேக்கியாவின் மனுஷர்(நீதி. 25:1) ஆகூர் (நீதி. 30:1) லேமுவேல் (நீதி. 31:1) என்பவர்களெனக் குறித்துள்ளது.

எஸ்றா இதிலொரு பகுதியை எழுதத் தொடங்கினா னென்றும், பின்பு எசேக்கியாவின் மனுஷர் நீதிமொழி களைச் சேர்த்தெழுதினார்களென்றும் எண்ணப்படுகிறது. (நீதி. 25:1)

ஆசிரியர் : சாலொமோன்

காலம் : கி.மு. 715க்கும் 686க்கும் நடுவில்

இப்புத்தகத்தில் 31 அதிகாரங்களும் 915 வசனாங்களும் உ ள்ளன.

புத்தகத் தொகுப்பு :

1. ஞானத்தைப்பற்றிய பாடல்கள் அதி.1:1 - 9:18.
2. சாலொமோனின் நீதிமொழிகள் அதி.10:1 - 29:27.
3. ஆகூர் மற்றும் லேமுவேலின் வார்த்தைகள் அதி.30:1-31:31,

முக்கிய சம்பவங்களின் தொகுப்புகள் :

1. பேதைகள், வாலிபர்கள், புத்திமான், விவேகி இவர்களுக்கு கிடைக்கும் வெகுமானங்கள் 1:1 - 1:7.
2. ஞானத்தைப்பற்றிய பாடங்கள் அதி. 1:8 - 9:18.
3. சாலொமோனின் நீதிமொழிகள் அதி.10:1 - 22:16.
4. ஞானியின் நீதிமொழிகள் அதி.22:17 - 24-34.
5. சாலொமோனின் நீதிமொழிகள் அதி.25 - 29 அதிகாரங்கள்.
6. ஆகூரின் வார்த்தைகள் 30 வது அதிகாரம்.
7. லேமுவேலின் வார்த்தைகள் 31 வது அதிகாரம்.

பிரசங்கி

"பிரசங்கி" என்பது பிரசங்கம் செய்கிறவனைக் குறிக்கும். இப்புஸ்தகத்திலுள்ளவை பிரசங்கியின் வாக்கியங்கள் என்பதிலிருந்து, அவனே இதனை ஆக்கியோன் என்பது தெளிவாகிறது.

ஆசிரியர் : சாலொமோன்

இப்புத்தகத்தில் 12 அதிகாரங்களும் 222 வசனங்களும் உள்ளன.

புத்தகத் தொகுப்பு :

1. சூரியனுக்கு கீழே நடக்கிற தீங்கான காரியங்கள் அதி.1 : 1 - 10 : 20.
2. தேவனுடைய செயல்கள் பற்றிய விளக்கங்கள் அதி.11 : 1 - 10.
3. சிருஷ்டிகரை நினைக்க வேண்டும் என்ற கட்டளை அதி.12 : 1 - 14.

முக்கிய சம்பவங்களின் தொகுப்புகள் :

1. தேவன் மனிதனுக்கு நியமித்த மாயையான காரியங்கள், சாலொமோனின் சுகபோகமான வாழ்க்கை, மூடனுக்கும், ஞானிக்கும் ஒரேவிதமாய் சம்பவித்தல், நலைவருக்கும், பாவம் செய்கிறவனுக்கும் கிடைக்கிற வெகுமானங்கள் பற்றிய விளக்கங்கள் அதி.1 : 1 - 2 : 26.
2. காலங்களின் இரகசியங்கள், மனிதன் செய்யக் கூடிய நன்மையான காரியம், நியாயத்தீர்ப்பைக்

குறித்த இரகசியங்கள், மிருகங்களுக்கும் மனிதர்களுக்கும் உள்ள வித்தியாசம் பற்றிய விளக்கங்கள் அதி. 3:1 - 22.

3. சூரியனுக்கு கீழே செய்யப்படும் கொடுமையான காரியம், கூடியிருப்பதினால் உண்டாகும் நன்மைகள் பற்றிய விளக்கங்கள் அதி. 4 : 1 - 16.
4. தேவகாரியங்களில் ஜாக்கிரதையாயிருத்தல், சூரியனுக்கு கீழே நடக்கிற தீங்கான காரியம், நலமான காரியங்களை பின்பற்ற வேண்டும், எச்சரிப்பின் வார்த்தைகள் பற்றிய விளக்கங்கள் 5 முதல் 8 அதிகாரங்கள்.
5. சூரியனுக்கு கீழே நடக்கிற விசேஷித்த தீங்கு. மனுஷனுடைய பிரயாசத்தினால் கிடைக்கும் பாங்கு, ஏழையின் ஞானம் பற்றிய விளக்கங்கள் 9 வது அதிகாரம்.
6. ஞானமே பிரதானம் 10 வது அதிகாரம்.
7. தேவனுடைய செயல்கள், இளமையைக்குறித்த எச்சரிப்புகள் வாலிப பிராயத்திலே சிருஷ்டிகரை நினைத்தல், மனுஷர் மேல் விழுந்த கடமை பற்றிய விளக்கங்கள் 11, 12 அதிகாரங்கள்.

உன்னதப்பாட்டு

நாம் தெரிந்து கொண்ட ஜனங்கள் மேல் தேவனுக்கிருந்த அன்பை உவமானப்படுத்திக் காட்டுகிற ஓர் புஸ்தகமென்று யூதர் இதை அங்கீகரிக்கிறார்கள். தீர்க்கதரிசனங்களில் உபயோகிக்கப்பட்ட பாஷைக் கிசைவாய் "என் நேசர்" என்பது கர்த்தரையும் "மணவாட்டி" என்பது இஸ்ரவேல் ஜனத்தையும் குறிக்கிறது எனச் சாதிக்கிறார்கள்.

கிறிஸ்தவ மார்க்கம் ஆரம்பமாகி மூன்றாம் நூற்றாண்டில் ரோமாபுரியில் ஹிப்பொலிடஸ் (Hippoletus) என்பவரும், பலஸ்தீனாவில் "ஒரிஜன்" (Origen) என்பவரும் இதில் சொல்லிய பதங்களை கிறிஸ்தவ சபைக்கு ஏற்றவையென. "கிறிஸ்துவை மணவாளன்" என்றும் சபையை "மணவாட்டி" என்றும் குறித்துள்ளனர். கிறிஸ்துவின் இரத்தத்தினால் மீட்கப்பட்டு, பரிசுத்தாவியின் அபிஷேகம் பெற்ற பரிசுத்தவான்கள் மணவாட்டி என்றும், பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்கள் மணவாளனின் தோழரென்றும், இரட்சிக்கப்பட்ட பரிசுத்தவான்கள் கன்னியரென்றும் திருஷ்டாந்தப் படுத்தி இப்புஸ்தகத்தில் காட்டியுள்ளது.

இது விவாகமுறையான, தூய்மையான அன்பைப் பற்றிய ஒரு பாட்டு என்று யூதர் இதைத் தங்களுடைய வேத புஸ்தகத்தில் சேர்த்துக்கொண்டு தங்கள் பண்டிகை நாட்களில் வாசிப்பது வழக்கம்.

ஆசிரியர் : சாலொமோன்

தேவன் என்ற சொல் இல்லாத இரண்டாம் புத்தகம் இது ஆகும். நேசருக்கு பிரியமானவளுக்கும் இடையிலான உறவின் நேசத்தின் கீதமே இப்புஸ்தமாகும். இதை கிறிஸ்துவுக்கும் சபைக்கும் நிழலாகப் படிக்கலாம்.

இப்புஸ்தகத்தில் 8 அதிகாரங்களும் 117 வசனங்களும் உள்ளன.

புத்தகத் தொகுப்பு :

1. மணவாளன், மணவாட்டியினுடைய முதல் சந்திப்பும் 2 ம் சந்திப்பும் அதி.1 : 1 - 3:5.
2. மணவாளன், மணவாட்டியினுடைய மூன்றாம் சந்திப்பும் நான்காம் சந்திப்பும் அதி.3:6 - 6:3.
3. மணவாளன், மணவாட்டியினுடைய ஐந்தாம் சந்திப்பு அதி.6:4 - 8:14.

முக்கிய சம்பவங்களின் தொகுப்புகள் :

1. மணவாளனுடைய, மணவாட்டியினுடைய அழகை வர்ணித்தல் 1 வது அதிகாரம்.
2. நேசத்தால் சோகமடைதல், ஆத்தும நேசரைத் தேடுதல், ஆத்தும நேசரைக் காணுதல் பற்றிய விளக்கங்கள் அதி.2 : 1 - 3 : 5.
3. இயேசு கிறிஸ்துவின் மூன்று வருகையைக் குறித்த தீர்க்கதரிசனம் அதி.3:6.
4. மணவாளியின் நேசம் அதி.4:1 - 16.
5. மணவாட்டி, மணவாளனுடைய அழகை வர்ணித்தல் 5, 6 அதிகாரங்கள்.
6. ராஜகுமாரத்தியின் வர்ணனை 7 வது அதிகாரம்.
7. நேசத்தைக் குறித்த விளக்கங்கள் 8 வது அதிகாரம்.

தீர்க்கதரிசிகள்

இஸ்ரவேலரின் வரலாற்றில் அதன் முக்கியமான இடத்தைப் பெற்றிருந்தவர்களே தீர்க்கதரிசிகள். மக்களின் ஆன்மீக, பொருளாதார, அரசியல் மற்றும் எல்லாத் துறைகளிலும் தீர்க்கதரிசிகளின் ஆதிக்கத்தை காணலாம். தாங்களுக்குக் கிடைத்த தெய்வீக வெளிப்பாடுகளை எழுத்து வடிவமாகவோ பேச்சின் மூலமாகவோ மக்களுக்கு தேவனுடைய வார்த்தைகளை அறிவித்து வந்தனர். இத்தீர்க்கதரிசன நூல்களை பெரிய தீர்க்கதரிசிகளின் நூல்கள், சிறிய தீர்க்கதரிசிகளின் நூல்கள் என்று இரண்டாகப் பிரிக்கலாம். ஏசாயா, எரேமியா, எசேக்கியேல், தானியேல் ஆகியோர் பெரிய தீர்க்கதரிசிகள் ஆவர். ஓசியா, யோவேல், ஆமோஸ், ஒபதியா, யோனா, மீகா, நாகூம், ஆபகூக், செப்பனியா, ஆகாய், சகரியா, மல்கியா ஆகியோர் சிறிய தீர்க்கதரிசிகள் ஆவர்.

இஸ்ரவேலரின் 300 வருட வரலாறு இத்தீர்க்கதரிசிகளின் காலமாகும். இஸ்ரவேலிலும், யூதேயாவிலும், சிறையிருப்பிலுமாக ஊழியம் செய்து கொண்டிருந்த இவர்களின் செய்திகளின் மூலமாக அக்கால மக்களின் ஆன்மீக, சமூக, பொருளாதார மற்றும் அரசியல் நிலைமைகள் நமக்கு தெரிய வருகின்றது. தேவனிடத்தில் திரும்பி வருவதற்கான அழைப்பும் நியாயத் தீர்ப்பைப் பற்றிய முன்னறிவிப்பும் இவர்களுடைய செய்தியின் மையக் கருத்தாகும்.

தீர்க்கதரிசனங்களை விளக்கும் போது யார்? யாருக்கு? எப்போது? எதற்காக? இப்பகுதிகளில் சொல்லப்பட்டது என்பதைக் குறிப்பாக கவனிக்க வேண்டும்.

தீர்க்கதரிசிகளுடைய சேவகத்தின் பொருள்

(1) இஸ்ரவேல் கர்த்தரிடம் திரும்பாவிடில் தேவ தீர்ப்பு அவர்கள் மேல் வரும்.

(2) ஆகிலும், அவர்கள் முற்றாய் அழிக்கப்படாமல், ஒரு பகுதி மீந்திருப்பார்கள்.

(3) உலக இரட்சகர் அவர்களிலிருந்து தோன்றி, கடைசி நாட்களில் அவர்களைப் பெரிய ஜாதியாக்குவார்.

கால நிருபண அட்டவணை

1. யோவேல். கி.மு. 837-800. கடைசி நாட்களில் இஸ்ரவேலர் சேர்க்கப்பட்டு, பரலோக ராஜ்யம் ஏற்படும்.

2. யோனா. கி.மு. 825-782. இஸ்ரவேலின் விரோதிகள் மேலும் தேவன் கிருபையாயிருந்து அவர்களையும் இரட்சிப்பார்.

3. ஆமோஸ். கி.மு. 779-743. இஸ்ரவேல் மேல் தேவ தண்டனை வரும். பின்பு இரட்சிப்படைவார்கள்.

4. ஓசியா. கி.மு. 762-725. இஸ்ரவேல் தம்மிடம் திரும்ப வேண்டுமென்று தேவன் ஆவலாயிருக்கிறார்.

5. ஏசாயா. கி.மு. 758-698. இஸ்ரவேலை ஒடுக்குவோர் மேல் வரும் தண்டனை, மேசியாவின் வருகை, இஸ்ரவேல் பெறப்போகிற மகிமை.

6. மீகா. கி.மு. 740-695. ஜாதிகள் மேல் வரப்போகிற தேவதீர்ப்பு, பெத்லகேமில் பிறக்கப்போகிறவரால் வரும் சிலாக்கியங்கள்.

7. நாகூம். கி.மு. 633-630. நினிவேயின் பாவத்தினி மித்தம் வரப்போகிற தேவ தண்டனை.

8. செப்பனியா. கி.மு. 640-610. இஸ்ரவேலின் பின் வாங்கலினிமித்தம் கர்த்தருடைய பயங்கர நாள் வரும்.

9. எரேமியா. கி.மு. 627-585. எருசலேம் பிடிக்கப்பட்டு, ஜனங்கள் சிறைபட்டுப் போவார்கள். திரும்பச் சேர்க்கப்பட்டு,

ராஜ்யம் ஏற்படும்.

10. ஆபகூக். கி.மு. 608-598. இஸ்ரவேலின் கொடுமையினிமித்தம், கல்தேயரால் அழிக்கப்படுவார்களென்றும், பின்பு அவர்களும் அழிந்து போவார்களென்றும் சொல்லப்பட்டுள்ளது.

11. தானியேல். கி.மு. 604-534. இவ்வுலக ராஜ்யங்களைப் பற்றியும், அவைகள் அழிந்து போய், அழிவில்லாத ராஜ்யம் ஏற்படும் என்றும் கூறப்பட்டுள்ளது.

12. எசேக்கியல். கி.மு. 592-572. சிறைபோன இஸ்ரவேலுக்கு ஆறுதல் கூறி, ஜாதிகள் மேல் தேவ தண்டனை வரும் என்றும், பிற்காலங்களில் இஸ்ரவேலர் சீரடைவார்களென்றும் குறிக்கப்பட்டுள்ளது.

13. ஒபதியா. கி.மு. 486-583. ஏதோமின் மேல் தேவ தண்டனை வந்து முற்றாய் அழிந்து போகும்.

14. ஆகாய். கி.மு. 520. சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்த இஸ்ரவேலரை தேவாலயம் கட்டும்படி ஏவி, எழுப்பினது.

15. சகரியா. கி.மு. 520-518. எருசலேமுக்குத் திரும்பி வந்த இஸ்ரவேலருக்கு ஆறுதல் கூறி, வரப்போகிற மேசியாவைப் பற்றிய தீர்க்கதரிசனங்கள் விவரிக்கப்பட்டுள்ளன.

16. மல்கியா. கி.மு. 450-400. மேசியாவின் முதலாம், இரண்டாம் வருகை, முன்னறிவிப்போர் இருவரின் தோற்றம், வரப்போகிற கர்த்தருடைய நாள் ஆகியவை குறிக்கப்பட்டுள்ளன.

பெரிய தீர்க்கதரிசிகள் - ஏசாயா

ஏசாயா என்பதன் பொருள் "கர்த்தரின் இரட்சிப்பு". ஏசாயா நாலு பிரதான தீர்க்கதரிசிகளில் விசேஷித்தவன். ஆமோத்சின் குமாரன் (ஏசா. 1:1; 37:2)ல் உசியா ராஜாவின் கடைசி வருஷத்தில் ஏசாயாவுக்கு அழைப்பு (கி.மு. 756) வந்தது. ஏசாயா தனக்கு தேவ தரிசனம் உண்டாகி, ஊழியத்துக்கு அழைக்கப்பட்டதைக் குறிக்கிறான். (ஏசா. 6:1-13) அதுமுதல் எசேக்கியா ராஜா காலம் வரை ஏறக்குறைய நாற்பது வருஷம் தீர்க்கதரிசனம் உரைத்தான். ஓசியா, மீகா தீர்க்கதரிசிகளும் இவன் காலத்திலிருந்தவர்கள். இவன் அதிகமாய் எருசலேமி லிருந்தான். ஏசாயா விவாகம் செய்து, இரணடு பிள்ளைகளிருந்தன. (ஏசா. 8:1-4). அவர்களுக்கு அடையாளப் பெயர்கள் இருந்தது.

ஆசிரியர் : ஏசாயா

இவன் எசேக்கியாவின் போதகராக இருந்தான். உசியாவின் மரணம் முதல் மனாசேயின் ஆட்சி காலம் வரை ஏசாயா ஊழியம் செய்தான். மனாசேயின் காலத்தில் வாளால் அறுப்புணடு இரத்த சாட்சியாக மரித்தானென்று நம்பப்படுகிறது.

காலம் : 1 முதல் 39 வரையிலுள்ள அதிகாரங்களில் கூறப்பட்டுள்ள விஷயங்கள் ஏசாயாவின் வாழ்நாள் காலத்திலேயே நிகழ்ந்தவைகள் ஆகும். கி.மு. 701 முதல் 681 க்கும் இடையில் இது எழுதப்பட்டது.

இப்புத்தகத்தில் 66 அதிகாரங்களும் 1292 வசனங்களும் உள்ளன.

புத்தகத் தொகுப்பு :

1. ஏசாயாவை அனுப்புதல் அதி.1 : 1 - 6:13.
2. இயேசு கிறிஸ்துவைக் குறித்த தீர்க்கதரிசனங்கள் அதி.7:1 - 40:3.
3. இஸ்ரவேல், சீயோனுக்கு ஆறுதல் அதி. 41:1 - 66:24.

முக்கிய சம்பவங்களின் தொகுப்புகள் :

1. கர்த்தர் ஜனங்களை வழக்காட அழைத்தல், ஆலயம் ஸ்தாபிக்கப்படுதல், ஆதரவுகளை விலக்குதல், மகிமையானவைகளில் காவல் உண்டாகுதல், திராட்சை தோட்டத்தைக் குறித்த பாட்டு, ஏசாயா ஆண்டவரைக் காணுதல். 1 முதல் 6 அதிகாரங்கள்.

2. இம்மானுவேலைக் குறித்த தீர்க்கதரிசனம், ஆயிர வருட அரசாட்சியைக்குறித்த தீர்க்க தரிசனம், மூன்றாம் வருகையைக் குறித்த தீர்க்கதரிசனம், அதிகாலை மகனாகிய விடிவெள்ளியைக் குறித்த இரகசியங்கள் பற்றிய விளக்கங்கள் 7 முதல் 14 அதிகாரங்கள்.

3. மோவாப் பாழாக்கப்படுதல், தமஸ்கு பாழாக்கப்படுதல், எகிப்து பாழாக்கப்படுதல், கடல் வனாந்திரம் பாழாக்கப் படுதல், தரிசன பள்ளத்தாக்கின் பாரம், தீருவின் பாரம் பற்றிய விளக்கங்கள் 15 முதல் 24 அதிகாரங்கள்.

4. மரணத்தை ஜெயமாக விழுங்குதல், யூதா தேசத்தில் பாடப்படும் பாட்டு, அந்நிய பாஷையினால் பேசுதல், இயேசு கிறிஸ்துவைப் பற்றிய தீர்க்க தரிசனம், கர்த்தரின் சுவாசத்தைக் குறித்த இரகசியங்கள் பறறிய விளக்கங்கள் 25 முதல் 30 அதிகாரங்கள்.

5. பறந்து காக்கும் பட்சிகள், ராஜா நீதியாக அரசாளுதல் மூன்றாம் வருகையின் இரகசியங்கள், ரப்சாக்கின் வார்த்தைகள் பற்றிய விளக்கங்கள் 31 முதல் 36 அதிகாரங்கள்.

6. எசேக்கியாவின் விண்ணப்பம், யோவான் ஸ்நானனைக் குறித்த தீர்க்கதரிசனம் 37 முதல் 40 அதிகாரங்கள்.

7. இஸ்ரவேலுக்கு தேவன் ஆறுதல் சொல்லுதல், சீயோனுக்கு ஆறுதல், இயேசுவின் பாடுகளைக் குறித்த மற்றும் இயேசுவைக் குறித்த செய்திகள் 41 - 66 அதிகாரங்கள்.

எரேமியா

எரேமியா என்பது "தேவன் நியமிக்கிறார்" என்று பொருள்படும்.

ஆசிரியர் : எரேமியா

எழுத்தர் : பாரூக்

காலம் : கி.மு. 627

ஏசாயா தீர்க்கதரிசியின் ஊழிய காலம் முடிந்து நூறு வருடங்களுக்குப் பின்னரே எரேமியா ஊழியத்திற்கு வந்தான்.

கி.மு. 640ல் எரேமியா தன் ஊழியத்தை ஆரம்பித்தான். ஆபகூக், செப்பனியா, தானியேல், எசேக்கியல் ஆகியோர் எரேமியாவின் சமகாலத்தவர்கள் ஆவர்.

இப்புத்தகத்தில் 52 அதிகாரங்களும் 1364 வசனங்களும் உள்ளன.

புத்தகத் தொகுப்பு :

1. தீர்க்கதரிசியின் அழைப்பும், யூதேயாவுக்கான தேவனுடைய செய்திகளும் அதி. 1:1 - 35:19.
2. தீர்க்கதரிசி அனுபவித்த பாடுகளும், எருசலேமின் வீழ்ச்சி மற்றும் அதைத் தொடர்ந்த நிகழ்வுகள் அதி. 36:1-45:5.

3. புறஜாதி நாடுகளுக்கான தேவனுடைய செய்திகள்
அதி.46:1 - 52:34

முக்கிய சம்பவங்களின் தொகுப்புகள் :

1. எரேமியாவை ஊழியத்திற்கு அழைத்தல். இஸ்ரவேலர்களின் தீமையினால் கர்த்தர் வழக்காடுதல். சீர்கெட்ட பிள்ளைகளை திரும்பச்சொல்லுதல். இஸ்ரவேலரை கர்த்தர் தள்ளிவிடுதல். பற்றிய விளக்கங்கள் 1 முதல் 7 அதிகாரங்கள்.

2. குமாரத்தியின் காயங்கள். சீயோனின் புலம்பல். சிருஷ்டிப்பின் காரியங்கள். உடன்படிக்கையின் வார்த்தைகள் எரேமியாவின் விண்ணப்பம். ஐபிராத்து நதியில் ஒளித்து வைக்கப்பட்ட கச்சை. மழைத்தாழ்ச்சியை குறித்து உண்டான வசனம் பற்றிய விளக்கங்கள் 8 முதல் 14 அதிகாரங்கள்.

3. நான்கு வாதைகள். மீன்பிடிக்கிறவர்களை அழைத்தல். இருதயத்தைக்குறித்த விளக்கங்கள். குயவன். களிமண். இஸ்ரவேல் ஜனங்களுக்கு எரேமியா கர்த்தருடைய வார்த்தையை சொல்லுதல். எரேமியாவை காவலறையில் போடுதல். ஜீவவழி. மரணவழி. யூதா ராஜாவுக்கு சொல்லப்பட்ட வசனம் பற்றிய விளக்கங்கள் 15 முதல் 22 அதிகாரங்கள்.

4. மேய்ப்பர்களுக்கு விரோதமான கர்த்தருடைய வார்த்தை. அத்திப்பழக்கூடை. யூதா ஜனங்களுக்கு சொல்லப்பட்ட வார்த்தைகள். ஜனங்கள் எரேமியாவுக்கு விரோதமாகக் கூடுதல். பொய்யான தீர்க்கதரிசனம். பாபிலோன் ராஜாவின் நுகத்தை முறித்தல். பாபிலோனுக்கு அனுப்பிய நிருபத்தின் விபரம் பற்றிய விளக்கங்கள் 23 முதல் 29 அதிகாரங்கள்.

5. இயேசு கிறிஸ்துவைக் குறித்த தீர்க்கதரிசனங்கள், இஸ்ரவேலின் சிறையிருப்பைத் திருப்புதல் குறித்த தீர்க்கதரிசனம், காவற்சாலையின் முற்றத்தில் எரேமியா அடைக்கப்படுதல். சிதேக்கியா ராஜா ஒப்புக்கொடுக்கப்படுதல். திராட்சரசத்தைக் குறித்த யோனதாபின் கட்டளைகள் கர்த்தருடைய வார்த்தைகளை புஸ்தகச் சுருளில் எழுதுதல், எரேமியாவை காவற்கிடங்கில் போடுதல், எரேமியா விடுதலையாக்கப்படுதல் பற்றிய விளக்கங்கள் 30 முதல் 40 அதிகாரங்கள்.

6. இஸ்மவேலரின் பொல்லாப்பு, தீங்குக்கு மனஸ்தாபப்படுதல், இஸ்ரவேலர் எகிப்துக்குத் திரும்புதல். பாருக்கைக் குறித்து உண்டான வசனம் பற்றிய விளக்கங்கள் 41 முதல் 45 அதிகாரங்கள்.

7. புறஜாதிகளுக்கு விரோதமாக உண்டான வசனம் 46 முதல் 52 அதிகாரங்கள்.

புலம்பல்

இந்தப் புஸ்தகம் ஐந்து அதிகாரங்களுடையது. அவைகளில் மூன்று, நேபுகாத்நேச்சார் கி.மு. 586-ல் எருசலேமை அழித்ததைக் குறித்த புலம்பற் பாட்டுகள், எரேமியா அங்கேயிருந்து, எருசலேம் சங்கரிக்கப் பட்டதையும், அதிலிருந்த பரிசுத்தப் பாத்திரங்கள் பாபிலோனுக்குக் கொண்டு போகப்பட்டதையும் பார்த்துக் கொண்டிருந்தான்.

இந்தப் பிரகாரம் எருசலேம் அழிக்கப்பட்ட போது, எரேமியா ஒரு குகைக்குள் புகுந்து, அங்கிருந்து அழுது கொண்டு, இந்தப் புலம்பல்களைப் பாடினானென்று சொல்லப்படுகிறது. (அந்தக் குகை கொல்கொத்தாவுக்கு அருகில் இருந்ததாம்). இதினிமித்தம் கண்ணீர் விட்டு அழுகிற தீர்க்கதரிசியென்ற பெயர் இவனுக்கு வழங்கிற்று.

இந்தப் புஸ்தகத்தை யூதர்கள் தங்கள் ஜெப ஆலயங்களில் இன்று வரையும் ஒவ்வொரு வருஷமும் நான்காம் மாதம் ஒன்பதாம் தேதியில் வாசிப்பது வழக்கம். (எரே. 52:6).

ஆசிரியர் : எரேமியா

காலம் : கி.மு. 575க்கு முன்.

எருசலேம் நகரம், தேவாலயம் மற்றும் மக்களின் அழிவைப் பற்றி எழுதப்பட்ட புலம்பலின் பாடலே இப்புத்தகம்.

இப்புத்தகத்தில் 5 அதிகாரங்களும் 154 வசனங்களும் உள்ளன.

புத்தகத் தொகுப்பு :

1. எருசலேமின் துன்பமும், வெறுமையும் அதி.1 : 1 - 22.
2. தமது ஜனத்திற்கு எதிரான தேவனுடைய கோபமும் அழிவிற்கான காரணமும் அதி.2:1 - 3:66.
3. சீயோனின் முன்நிலை, பின் நிலை மற்றும் மனஸ்தாபம் அதி.4:1 - 5:22.

முக்கிய சம்பவங்களின் தொகுப்புகள் :

1. எருசலேமின் கடுந்துரோகத்தினிமித்தம் நெருக்கப் படுதல் 1 வது அதிகாரம்.
2. சீயோன் குமாரத்தியின் கூடாரத்திலே தேவன் தமது கோபத்தை அக்கினியைப் போல் சொரியப்பண்ணுதல் அதி.2:17.
3. தேவனை நோக்கிக் கூப்பிடு என்று சீயோனுக்கு விதித்த கட்டளை அதி.2:18,19.
4. ஆண்டவருடைய சினத்தின் மிலாற்றினால் உண்டான சிறுமை அதி.3:1 - 21.
5. நம்பிக்கையோடு அவரைத் தேடும்போது உண்டாகும் தேவ இரக்கங்கள், மனந்திரும்பி ஜெயத்தை ஏறெடுத்தல் பற்றிய விளக்கங்கள் அதி.3:22- 66.
6. சீயோன் குமாரத்தியின் அக்கிரமத்துக்கு வரும் தண்டனை அதி.4:1 - 22.
7. இஸ்ரவேலின் ஜெயம் அதி.5:1 - 22.

எசேக்கியேல் (கர்த்தர் பலப்படுத்துகிறார்)

இவன் பெரிய தீர்க்கதரிசிகளில் ஒருவன். சாதோக்கின் சந்ததியான பூசி யென்னும் ஆசாரியனுடைய குமாரன் (எசே. 1:3)

நேபுகாத்நேச்சார் பாபிலோனுக்கு கி.மு. 597-ல் சிறைகொண்டு போனவர்களில் ஒருவன். (2 இராஜா. 2:10-16).

கேபார் நதியருகே தெலாபீப் நாட்டிலே தங்கியிருந்த சிறையாக்கப்பட்ட யூதருக்குள் ஏறக்குறைய 2 வருஷமாக இவன் ஊழியஞ் செய்தான். (எசே. 3:15-17)

எசேக்கியேலுக்கு ஒரு வீடிருந்தது. மனைவியும் இருந்தாள். (எசே. 3:24; 8:1; 24:18).

அவனொரு தீர்க்கதரிசியாக மாத்திரமல்ல; ஒரு போதகனுமாயிருந்தான். (எசே. 33:6-16)

எசேக்கியேல் ஏழு விசை "கர்த்தருடைய கரம் என்மேல் பலமாக இருந்தது" என்று (எசே. 1:3; 3:14, 22:8; 1:33; 22:37; 1:40: 1) லும், வேறு இடங்களில், "கர்த்தருடைய வார்த்தை எனக்குண்டாகி" என்றும் குறிக்கிறான்.

எசேக்கியல், தானியேல், அப்போஸ்தலனாகிய யோவான் என்பவர்களைப் போல் பிற தேசங்களி லிருந்து, காட்சிகளாலும், தரிசனங்களாலும் வெளிப்படுத்தல் பெற்று, தீர்க்கதரிசனம் உரைத்தான்.

ஆசிரியர் : எசேக்கியேல்

காலம் : கி.மு. 593 க்கும் 557 க்கும் நடுவில்

இப்புத்தகத்தில் 48 அதிகாரங்களும் 1273 வசனங்களும் உள்ளன.

புத்தகத் தொகுப்பு :

1. இஸ்ரவேலருக்கான தேவனுடைய செய்திகள் அதி.1:1-24:27.
2. புறஜாதியாருக்கான தேவனுடைய செய்திகள் அதி.25:1-32:32.
3. இஸ்ரவேலருக்கான ஆறுதலின் செய்திகள் அதி.33:1-48:3.

முக்கிய சம்பவங்களின் தொகுப்புகள் :

1. கர்த்தருடைய மகிமையின் சாயல், எசேக்கியல் இஸ்ரவேலரிடத்தில் அனுப்பப்படுதல், எருசலேமிற்கு விரோதமான தீர்க்கதரிசன இஸ்ரவேலரின் பர்வதங்களுக்கு விரோதமான தீர்க்கதரிசனம்.

2. எசேக்கியல் தேவதரிசனத்தில் எருசலேமின் உள்வாசலின் நடையில் விடப்படுதல், எருசலேமின் அழிவு, கேபார் நதியண்டையில் காணப்பட்ட தரிசனத்தை திரும்பவும் காணுதல். இஸ்ரவேலருக்கு எதிரான தரிசனம், இஸ்ரவேலின் தீர்க்கதரிசிகளுக்கு விரோதமான தீர்க்கதரிசனம் பற்றிய விளக்கங்கள். 8 முதல் 13 அதிகாரங்கள்.

3. எருசலேமின்மேல் வரப்பண்ணின தீங்கு, எருசலேமின் அருவருப்புகள், இஸ்ரவேல் வம்சத்தாருக்கு சொல்லப்பட்ட

விடுகதையும், உவமையும், இஸ்ரவேல் பிரபுக்களின் பேரில் பாடின புலம்பல், கர்த்தரிடத்தில் விசாரிக்கும்படி மூப்பர்கள் வருதல் பற்றிய விளக்கங்கள் 14 முதல் 20 அதிகாரங்கள்.

4. இஸ்ரவேல் தேசத்துக்கு விரோதமான தீர்க்கதரிசனம், எருசலேம் சோரம்போகுதல், பாபிலோன் ராஜா எருசலேமில் பாளயமிறங்குதல், அம்மோன் புத்திரருக்கு விரோதமான தீர்க்கதரிசனம் பற்றிய விளக்கங்கள் 21 முதல் 25 அதிகாரங்கள்.

5. தீருவுக்குவிரோதமான தீர்க்கதரிசனம், பார்வோனுக்கு விரோதமான தீர்க்கதரிசனம், இஸ்ரவேலருக்கு சொல்லப்பட்ட கர்த்தருடைய வார்த்தைகள் பற்றிய விளக்கங்கள் 26 முதல் 33 அதிகாரங்கள்.

6. மேய்ப்பருக்கு விரோதமான தீர்க்கதரிசனம்,சேயீர் மலைக்கு விரோதமான தீர்க்கதரிசனம், இஸ்ரவேல் மலைகளுக்கு உண்டான தீர்க்கதரிசனம், எலும்புகள் நிறைந்த பள்ளத்தாக்கு, கோகுக்கு எதிரான தீர்க்கதரிசனம் பற்றிய விளக்கங்கள் 24 முதல் 39 அதிகாரங்கள்.

7. தேவதரிசனத்தில் இஸ்ரவேல் தேசத்துக்குக் கொண்டுபோகுதல், கோத்திரங்களின் நாமங்கள் பற்றிய விளக்கங்கள் 40 முதல் 48 அதிகாரங்கள்.

தானியேல்

பெரிய தீர்க்கதரிசிகளில் ஒருவன். சத்திய வேதத்தில் இவன் மாத்திரம் "நீ மிகவும் பிரியமாவன்" எனப்படுகிறான்.

யோயாக்கீம் ராஜாவின் நாட்களில், நேபுகாத்நேச்சார் எருசலேமைப் பிடித்தபோது, ராஜ குடும்பத்தைச் சேர்ந்த சௌந்தரியமான நான்கு வாலிபரை பாபிலோனுக்குக் கொண்டு போனான். அவர்களில் தானியேல் ஒருவன். இவன் அங்கே கல்தேயக் கல்வியில் பயிற்சி கொடுக்கப்பட்டபின், ராஜ அரமனையில் உத்தியோகம் செய்தான்.

பாபிலோனிய ராஜ்யம் எழுபது வருஷமாக நிலை நின்றது. தானியேல் அதன் துவக்க முதல் அழிவு மட்டும் அங்கேயிருந்தான்.

தானியேல் ஊழியஞ் செய்த ராஜாக்களாவன:-

நேபோபிலாசர்	கி.மு. 625-604
நேபுகாத்நேச்சார்	கி.மு. 606-561
ஏவில் மெரோதாக்	கி.மு. 561-560
நேரித்தில் சார்	கி.மு. 559-536
லாபஸ் மாதுக்	கி.மு. 536
நேபோ நிதாஸ்	கி.மு. 555-536
பெல்ஷாத்சார்	

ஆகவே, தானியேல் நேபுகாத்நேச்சாரின் முதலாம் வருஷம் தொடங்கி, பாபிலோன் ராஜ்யத்தின் வீழ்ச்சியின் பின்பு, பெர்சிய ராஜ்ய காலத்திலும், பெர்சிய ராஜாவாகிய கோரேசின் மூன்றாம் வருஷம் வரை, அதாவது, கி.மு.

606-534 வரை ஊழியஞ்செய்தான். இஸ்ரவேல் சிறைபோன காலம் தொடங்கி, அவர்கள் திரும்பிப் போய், இரண்டு வருஷமாகும் மட்டும் உயிரோடிருந்தான்.

இந்தப் புஸ்தகத்தில் மூன்று முக்கியமான தீர்க்க தரிசினங்களுண்டு. ஒன்று, இயேசு கிறிஸ்துவின் முதலாம் வருகை. அதுநிறைவேறிற்று. (தானி. 9:24; மத். 1:25). மற்றது, நான்கு உலக ராஜ்யங்கள் ஒன்றன் பின்னொன்று வருமென்பது. அதுவும் நிறைவேறிற்று. அவைகளின் பின் அழியாத பரலோக ராஜ்யம் ஏற்படுத்தப்படுமென்பது. இனிமேல் நிறைவேற வேண்டியது.

ஆசிரியர் : தானியேல்

காலம் : கி.மு. 530க்கு முன்.

இப்புத்தகத்தில் 12 அதிகாரங்களும் 357 வசனங்களும் உள்ளன.

புத்தகத் தொகுப்பு :

1. நேபுகாத்நேச்சாரின் ராஜ்யம் அதி.1:1-4:37.
2. பெல்ஷாத்சாரின் ராஜ்யமும் அவனுடைய முடிவும், தரியுவின் ராஜ்யமும் அதி.5:1-28.
3. தானியேல் கண்ட 3 தரிசனங்கள் அதி.7:1-12:13.

முக்கிய சம்பவங்களின் தொகுப்புகள் :

1. ராஜசமூகத்தில் நால்வர், நேபுகாத்நேச்சாரின் சொப்பனம், தானியேலுக்கு மறைபொருளை வெளிப் படுத்துதல் 1, 2 அதிகாரங்கள்.

2. பொற்சிலையை பணிந்து கொள்ளாததினால் அக்கினி சூளையில் போடப்படுதல், அக்கினி சூளைக்கு தப்புவிக்கப்படுதல், சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்பவர்களை பாபிலோன் தேசத்தில் உயர்த்துதல் 3 வது அதிகாரம்.

3. இரண்டாவது தரிசனத்தினிமித்தம் நேபுகாத்நேச்சார் தேவனைப் புகழ்ந்து மகிமைப்படுத்துதல் 4 வது அதிகாரம்.

4. பெல்ஷாத்சாருக்கு விரோதமாக எழுதப்பட்ட எழுத்தின் கையுறுப்பும், அவன் கொலைசெய்யப்படுதலும் 5 வது அதிகாரம்.

5. சிங்கக் கெபியில் தானியேல் தப்புவிக்கப்படுதல் 6 வது அதிகாரம். தானியேல் கண்ட முதல் தரிசனம், இரண்டாவது தரிசனம் 6 முதல் 8 அதிகாரங்கள்.

6. தானியேலின் விண்ணப்பம், காபிரியேல் தானியேலுக்கு தரிசனத்தின் இரகசியத்தை அறிவித்தல் பற்றிய விளக்கங்கள் 9 வது அதிகாரம்.

7. தானியேலின் 3 வது தரிசனம் மற்றும் உயிர்த்தெழுதலைக் குறித்த இரகசியங்கள் 10 முதல் 12அதிகாரங்கள்.

சிறிய தீர்க்கதரிசிகள் - ஓசியா

ஓசியா வட ராஜ்யத்தின் தீர்க்கதரிசி. ஓசியா என்பதன் அர்த்தம் "இரட்சிப்பு". இஸ்ரவேலின் பத்துக் கோத்திரங்கள் பிரிந்து, வட ராஜ்யமான போதே, யெரொபெயாமின் கீழ் பொற்கன்றுகுட்டி வணக்கம் தொடங்கிற்று. ஏறக்குறைய 200 வருஷத்துக்குப் பின், ஓசியா தன் தீர்க்கதரிசன ஊழியத்தைத் துவங்கின வேளையில், இஸ்ரவேலர் தேவனை விட்டு அதிகத் தூரமாகியிருந்தார்கள்.

அவர்கள் சோரம் போனதற்கு அடையாளமாக, ஒரு சோர ஸ்திரீயைச் சேர்த்துக்கொள்ளும்படி கர்த்தர் ஓசியாவுக்குச் சொன்னபடி அவன் செய்தான். பிற்பாடு, பிள்ளைகள் பிறந்த போது, அவர்களுக்கு அடையாளப் பெயர்கள் கொடுக்கப்பட்டன. ஒரு பிள்ளையின் பெயர் லோருகாமா, "இஸ்ரவேல் ராஜ்யம் ஒழிந்து போகும்; தேவன் இரக்கம் செய்யார்" என்பது அதன் பொருள். மற்றப் பிள்ளையின் பெயர் லோகம்மி. அர்த்தம் "அவர்கள் தேவனுடைய ஜனமாயிருப்பதில்லை". ஆகிலும் அந்த நாட்களில் இஸ்ரவேல் ராஜ்யம் இரண்டாம் யெரொபெயாமின் கீழ் சிறப்படைந்திருந்தது.

கர்த்தருடைய பார்வையில், ஜனங்களில் இருந்த பாவங்களைக் குறித்து ஓசியா பேசுகிறான். தேசத்தில் உண்மையில்லை. தேவனைப் பற்றும் அறிவும் இல்லை. பொய் சொல்லி, கொலை செய்து, திருடி, விபசாரம்பண்ணி, ஜனங்கள் மிஞ்சிப் போகிறார்கள். இதினிமித்தம் தேசம் புலம்பும் என்கிறான். (ஓசி 4:1-3)

ஜனங்கள் கர்த்தரிடம் திரும்பும்படி வாதாடுகிறான். "கர்த்தர் நீதியை வருஷிக்கு மட்டும் அவரைத் தேடுங்கள்; அவரிடம் திரும்புங்கள். தயவையும் நியாயத்தையும் கைக்கொண்டு, இடைவிடாமல் தேவனை நம்பிக்கொண்டிருங்கள்" என்கிறான். (ஓசி. 10:12; 12:6)

கர்த்தரிடம் திரும்பினால், அவர் இரக்கங் காட்டுவார். ''எப்பிராயீமே, நான் உன்னை எப்படிக் கைவிடுவேன்?''... என் பரிதாபங்கள் ஏகமாய்ப் பொங்குகிறது என்று கர்த்தர் சொல்லுகிறார். (ஓசி 11:8)

ஓசியாவின் வேண்டுதலுக்கும் தூண்டுதலுக்கும் ஜனங்கள் இணங்கவில்லை, மனதைக் கடினப்படுத்திக் கொண்டார்கள். எப்படியிருந்தாலும் கடைசி நாட்களில் தேவன் அவர்கள் சீர்கேட்டைக் குணமாக்குவார். மனப் பூர்வமாய் சிநேகிப்பார். "இஸ்ரவேல் லீலிப் புஷ்பம் போல் மலருவான்... அவன் நிழலில் குடியிருக்கிறவர்கள் திரும்புவார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார் " என்றான். (ஓசி. 14:3-7) "அக்காலத்தில் நீ என்னை ஆண்டவன்" என்று சொல்லாமல், "என் புருஷன்" என்று சொல்லுவாய். (ஓசி. 2:16)

பிற்பாடு ஓசியாவின் நாட்களிலேயே இஸ்ரவேல் ராஜ்யம் முடிவடைந்தது. ஜனங்கள் சிறைப்பட்டு, அசீரியாவுக்குக் கொண்டு போகப்பட்டார்கள். (2இராஜா. 17:6; 18:9-11)

ஆசிரியர் : ஓசியா

காலம் : கி.மு. 750க்கும் 725க்கும் நடுவில்.

இந்நூலின் செய்தி : இஸ்ரவேலரின் விக்கிரக ஆராதனைக்கு விரோதமான (எதிரான) தேவனுடைய கடுமையான எச்சரிப்பு.

இப்புத்தகத்தில் 14 அதிகாரங்களும் 197 வசனங்களும் உள்ளன.

புத்தகத் தொகுப்பு :

1. ஓசியாவின் குடும்ப வரலாறு அதி.1:1-3:5.
2. இஸ்ரவேலரின் உண்மையற்ற நிலை அதி.4:1-13:16.
3. இஸ்ரவேலர் மனஸ்தாபப்படுதலும், தேவனிடம் மனந்திரும்புதலும் அதி.14:1-9.

முக்கிய சம்பவங்களின் தொகுப்புகள் :

1. யூதாவின்குற்றம், தண்டனை, இரட்சிப்பு, இஸ்ரவேல் புத்திரர் கடைசிநாட்களில் கர்த்தரைத் தேடி வருதல் 1 முதல் 3 அதிகாரங்கள்.

2. இஸ்ரவேலின் அறிவில்லாத செயலினால் சோரம் போகுதல், இஸ்ரவேலின்மேல் வந்த நியாயவிசாரிப்பு பற்றிய விளக்கங்கள் 4, 5 அதிகாரங்கள்.

3. இயேசுவின் வருகையைக் குறித்த தீர்க்கதரிசனம் 6 வது அதிகாரம்.

4. இஸ்ரவேலின் இரண்டகத்தினால் அவர்களுக்கு வரும் நிந்தை 7வது அதிகாரம்.

5. இஸ்ரவேல் நியாயப்பிரமாணத்துக்கு விரோதமாக துரோகம் பண்ணுதல், இஸ்ரவேல் தேவனைவிட்டு சோரம் போகுதல் இஸ்ரவேலின் பாவம் பற்றிய விளக்கங்கள் 8 முதல் 10 அதிகாரங்கள்.

6. இஸ்ரவேலுக்காக கர்த்தர் பரிதபித்தல், தேவன் நீதியைச் சரிக்கட்டுதல் 11, 12 அதிகாரங்கள்.

7. இஸ்ரவேலின் இருதய மேட்டிமையினால் கர்த்தரை மறந்துபோகுதல், இஸ்ரவேலை விட்டு தேவகோபம்நீங்குதல் 13, 14 அதிகாரங்கள்.

யோவேல்

"யோவேல்" என்பதன் அர்த்தம் "கர்த்தர் தேவன்" இவன் யூதா தேசத்து தீர்க்கதரிசி. சிறைபோன காலத்துக்கு முன் ஊழியம் செய்தான். "பெத்துவேலின் குமாரன்" என்பதே இவனைப் பற்றிக் குறித்துள்ளது.

இவன் அமத்சியா அல்லது உசியா ராஜாவின் நாட்களில் தீர்க்கதரிசனம் உரைத்தான். யோனா, ஆமோஸ், ஓசியா என்னும் தீர்க்கதரிசிகளும் இவன் காலத்தில் இருந்தார்கள்.

ஆசிரியர் : யோவேல்

காலம் : கி.மு. 830

இப்புத்தகத்தில் 3 அதிகாரங்களும் 73 வசனங்களும் உள்ளன.

புத்தகத் தொகுப்பு :

1. கர்த்தருடைய நாள் அதி.1:1-2:17.
2. யூதேயாவின் இரட்சிப்பு அதி.2:18-2:32.
3. கர்த்தர் சகல ஜாதிகளோடு வழக்காடுதலும், யூதா மற்றும் எருசலேமின் சிறையிருப்பை திருப்புதல் அதி.3:1-21.

முக்கிய சம்பவங்களின் தொகுப்புகள் :

1. உபவாச நாளை நியமித்து கர்த்தரைத் தேட வேண்டும் என்ற கட்டளை 1 வது அதிகாரம்.
2. கர்த்தருடைய நாளைக் குறித்த செய்திகள் அதி.2:1.

3. பலத்த ஜாதியைக் குறித்த இரகசியங்கள் அதி.2:2-11.
4. இஸ்ரவேலின் ஜெபம், தேவனுடைய ஆசீர்வாதம், இரட்சிப்பு பற்றிய விளக்கங்கள் அதி. 2:12-27.
5. ஆவியை ஊற்றுவேன் என்ற தீர்க்கதரிசனம் அதி.2:28-32.
6. கர்த்தர் சகல ஜாதிகளோடும் வழக்காடுதல் அதி.3:1-15.
7. இஸ்ரவேலுக்குக் கர்த்தர் அரணாயிருத்தல் அதி.3:16-21.

ஆமோஸ்

ஆமோஸ் என்பதன் அர்த்தம் "கர்த்தர் தாங்குகிறார்."

இவன் பெத்லகேமுக்குத் தெற்கேயிருந்த தெக்கோவா ஊரான். ஆடு மேய்ப்பனாயிருந்தவன். தீர்க்கதரிசன ஊழியத்துக்கு அழைக்கப்பட்டு, யூதாவிலிருந்து பத்துக் கோத்திரத்தாருக்கு கர்த்தருடைய வார்த்தைகளைக் கூறினான்.

ஆசிரியர் : ஆமோஸ்

காலம் : கி.மு. 760க்கும் 750க்கும் நடுவில்

இப்புத்தகத்தில் 9 அதிகாரங்களும் 146 வசனங்களும் உள்ளன.

புத்தகத் தொகுப்பு :

1. புறஜாதியாரின் நாடுகளுக்கு எதிரான தேவனுடைய அறிவிப்புகள் அதி. 1:1-2:16.
2. இஸ்ரவேலருக்கான தேவனுடைய ஆலோசனையும் சிறையிருப்பைப் பற்றிய முன்னறிவிப்பும் அதி.3:1-6:14.
3. நியாயத்தீர்ப்பைக் குறித்த பரலோக தரிசனங்களும், இஸ்ரவேலின் எதிர்கால நம்பிக்கையும் அதி.7:1-9:15.

முக்கிய சம்பவங்களின் தொகுப்புகள் :

1. ஜனாங்களின் பாதகங்களினிமித்தம் அவர்களுக்கு வரக்கூடிய தண்டனைகள் அதி.1:1 - 2:16

2. இஸ்ரவேலுக்கு விரோதமாக கர்த்தர் சொல்லிய வசனங்கள், சிருஷ்டிகரைப் பற்றிய செய்திகள் 3, 4 அதிகாரங்கள்.
3. கர்த்தரைத் தேட வேண்டும் என்ற கட்டளை 5வது அதிகாரம்.
4. இஸ்ரவேலை ஒடுக்க ஒரு ஜாதி எழும்பும் என்ற தீர்க்கதரிசனம் 6 வது அதிகாரம்.
5. ஆமோஸ் தூக்குநூலைக் காணுதலும், இஸ்ரவேலுக்கு விரோதமான தீர்க்கதரிசனமும் 7 வது அதிகாரம்.
6. உபத்திரவக் காலத்தில் உண்டாகப்போகிற வசனம், பஞ்சத்தைப் பற்றிய செய்திகள் 8 வது அதிகாரம்.
7. பாவமுள்ள ஜாதிகளுக்கு விரோதமாக கர்த்தருடைய கண்கள் வைக்கப்படுதலும், இஸ்ரவேலின் சிறையிருப்பைத் திருப்புதலும், 9 வது அதிகாரம்.

ஒபதியா

ஒபதியா என்பதன் அர்த்தம் "கர்த்தரின் ஊழியன்". இவன் யூதாவிலிருந்தவன். இவனுக்குக் கிடைத்த தரிசனம் ஏதோமின் அழிவைக் குறித்தது.

ஏதோமியர் ஏசாவின் சந்ததியார். ஆனாலும், எப்போதும் யூதருக்கு விரோதமாயிருந்தார்கள். எருசலேம் பாபிலோனியரால் அழிக்கப்பட்டபோது, இவர்கள் அவர்களுக்கு உதவியாயிருந்தது மாத்திரமல்ல, அதினிமித்தம் சந்தோஷித்துக் களிகூர்ந்தார்கள். (புல. 4:21-22) அதற்குப்பிரதிபலனாக, இவர்கள் மேலும் தேவ தண்டனை வருமென்று ஒபதியா கூறுகிறான். "உன் சகோதரன் யாக்கோபுக்கு நீ செய்த கொடுமையின் நிமித்தம், நீ முற்றிலும் சங்கரிக்கப்பட்டுப் போவாய்" (ஒப. 1:10; 15-16) அவ்விதமே எருசலேம் சுட்டெரிக்கப்பட்டு, நாலு வருஷத்துக்குள், இவர்கள் உதவி செய்த பாபிலோனியர் தாமே ஏதோமையும் அழித்தார்கள். (கி.மு.582) எருசலேம் அழிக்கப்பட்டதோடு இவர்களுடைய சரித்திரம் முடிவடைந்தது. மீந்திருந்தவர்கள் யூதேயாவின் தென்பாகத்தில் 400 வருஷக் காலமாயிருந்து, இஸ்ரவேலருக்கு விரோதிகளாயிருந் தார்கள். கி.மு. 126-ல் யோவான் ஏற்கானு என்பவன் அவர்களைக் கீழ்ப்படுத்தினான். அதன்பின் யூதரோடு சேர்ந்து கலந்து கொண்டார்கள்.

கி.மு. 63-ல் ரோமர் பாலஸ்தீனாவைக் கைப்பற்றின போது, ஏதோமியனாகிய ஏரோதை, யூதாவை ஆளும்படி ஏற்படுத்தினார்கள்.

ஏதோமின் தேசமாகிய இதுமேயாவுக்கு வரப்போகிற அழிவைப் பற்றி ஏசாயாவும் கூறினான். (ஏசா. 34:5-10)

ஆசிரியர் : ஒபதியா

காலம் : கி.மு. 587-586

ஒரு அதிகாரங்கொண்ட இப்புஸ்தகத்தில் 21 வசனங்கள் உள்ளன.

புத்தகத் தொகுப்பு :

1. ஏதோமியரின் இருதயத்தின் அகந்தையும் ஏசாவின் உணர்வில்லாத நிலையும் அதி.1:1-9.
2. ஏசா சங்கரிக்கப்படுதலின் காரணங்கள் அதி.1:10-16.
3. யாக்கோபின் வம்சத்தார் சுதந்தரங்களைச் சுதந்தரித்துக் கொள்ளுதல் அதி.1:17-21.

முக்கிய சம்பவங்களின் தொகுப்புகள் :

1. ஏதோமைக் குறித்து கர்த்தர் சொல்லுகிற காரியம் அதி.1:1-6.
2. ஏசாவின் உணர்வில்லாத நிலை அதி.1:8-9.
3. ஏசா சங்கரிக்கப்படுதல் அதி.1:10.
4. ஏசா செய்த கொடுமையான காரியங்கள் அதி.1:11-16.
5. ஏசா பட்சிக்கப்படுதல் அதி.1:18.
6. சுதந்தரங்களை சுதந்தரித்துக் கொள்ளுதல் அதி.1:19,20.
7. இரட்சகர்களின் வருகை 21 வது வசனம்.

யோனா

அதன் பொருள் புறா. இவன் செபுலோன் கோத்திரத்து அமித்தாவின் குமாரன். வட ராஜ்யத்தான். இரண்டாம் யெரொபெயாமின் நாட்களில் தீர்க்கதரிசன ஊழியஞ் செய்தான். யெரொபெயாம் இஸ்ரவேலின் எல்லைகளைத் திரும்ப சேர்த்துக் கொள்வதற்கு இவன் உதவி செய்தான். (2இராஜா. 14:25)

இப்புஸ்தகத்தின் நோக்கம், அக்காலத்திலிருந்த எண்ணத்தின்படி, தேவன் இஸ்ரவேலருக்காக மாத்திரம் கிரியை செய்கிறார் என்பது தப்பிதமென்றும், அவர் புறஜாதியர் மேலும் பிரியமாயிருந்து, கிருபை செய்கிறாரென்றும் காட்டுவதாகும்.

ஆசிரியர் : யோனா

காலம் : கி.மு. 790-798க்கு இடையில்

இப்புத்தகத்தில் 4 அதிகாரங்களும் 48 வசனங்களும் உள்ளன.

புத்தகத் தொகுப்பு :

1. யோனா ஓடிப்போகுதலும், யோனாவின் ஜெபமும் அதி.1 :1-2:10.
2. யோனாவின் பிரசங்கம் அதி.3:1-10.
3. யோனா கற்றுக் கொண்ட பாடம் அதி.4:1-11.

முக்கிய சம்பவங்களின் தொகுப்புகள் :

1. யோனா கர்த்தருடைய சமுகத்தை விட்டு விலகுதலும் சமுத்திரத்தில் கொந்தளிப்பு உண்டாகுதலும் 1 வது அதி. 1 : 1-13.
2. யோனாவை சமுத்திரத்தில் போடுதல், மீன் விழுங்குதல் அதி.1:14-17.
3. யோனாவின் முதல் ஜெபமும் 2 வது ஜெபமும் அதி.2:1-9.
4. மீன் யோனாவை கக்கிவிடுதல் அதி.2:10.

5. யோனாவின் பிரசங்கம் அதி.3:1-4.
6. நினிவே ஜனாங்களின் மனந்திரும்புதலும் தேவனுடைய மனஸ்தாபமும் அதி.3:5-10.
7. யோனாவின் 3 வது ஜெபமும், கர்த்தர் யோனாவை மனமடிவுக்கு நீங்கலாக்குதலும் 4 வது அதிகாரம்.

மீகா

மீகா தீர்க்கதரிசி. யூதாவிலுள்ள மொரேசா ஊரான். யூதா ராஜாக்களாகிய யோதாம், ஆகாஸ், எசேக்கியா என்பவர்களின் நாட்களிலும், இஸ்ரவேல் ராஜாக்களாகிய பெக்கா, ஓசியா என்பவர்களின் நாட்களிலும் தீர்க்கதரிசனம் உரைத்தான். (மீகா. 1:1; எரே. 26:18). இவனுடைய நாட்களில் வடராஜ்யத்தில் ஓசியாவும், தென் ராஜ்யத்தில் ஏசாயாவும் இருந்தார்கள்.

இவனைப் பற்றியும், இவனுக்குக் கிடைத்த அழைப்பைப் பற்றியும் வேறொன்றும் சொல்லப்பட வில்லை. இவன் எருசலேம், சமாரியா, என்னும் இரண்டு தலை நகரங்கள் மேல் வரப்போகிற தேவ தீர்ப்பை வற்புறுத்திக் கூறினான். ஜனங்களுடைய பாகால் வணக்கம், பொருளாசை, கொடுமையான செய்கைகள், ஆகியவற்றைக் குறித்துக் கண்டித்தான். (மீகா. 2:1-3; 3:1-4)

ஆசிரியர் : மீகா

காலம் : கி.மு. 739க்கும் 687க்கும் இடையில்

இப்புத்தகத்தில் 7 அதிகாரங்களும் 105 வசனங்களும் உள்ளன.

புத்தகத் தொகுப்பு :

1. இஸ்ரவேலின் மேலும், யூதேயாவின் மேலும் வரப்போகிற நியாத்தீர்ப்பு அதி.1:1-3:12.
2. இஸ்ரவேல் மற்றும் யூதேயாவின் நம்பிக்கை அதி.4:1 -5:15

3. இஸ்ரவேலருக்கு எதிரான கர்த்தரின் கண்டனமும் தேவனுடைய செயலும் அதி. 6:1-7:20.

முக்கிய சம்பவங்களின் தொகுப்புகள் :

1. பாவங்கள், மீறுதல்களினிமித்தம் உண்டாகிற தண்டனைகள் 1 வது அதிகாரம்.
2. இஸ்ரவேலின் தீமையான செய்கைகளும், இயேசு கிறிஸ்துவைக் குறித்த தீர்க்கதரிசனமும் 2 வது அதிகாரம்.
3. மோசம்போக்குகிற தீர்க்கதரிசிகளுக்கு விரோதமாக கர்த்தருடைய வார்த்தை 3 வது அதிகாரம்.
4. சீயோன் குமாரத்தியைக் குறித்த செய்திகள் 4 வது அதிகாரம்.
5. இயேசுகிறிஸ்துவின் வருகையைக் குறித்த தீர்க்கதரிசனமும் நீதியைச் சரிக்கட்டுதலும் 5 வது அதிகாரம்.
6. கர்த்தர் இஸ்ரவேலரோடே வழக்காடுதல் 6 வது அதிகாரம்.
7. சத்துருக்களை வெட்கம் சூழுதல் 7 வது அதிகாரம்.

நாகூம்

நாகூம் என்பதன் பொருள் "தேற்றுகிறவன்". இவன் எல்கோசா ஊரான். (நாகூ. 1:1) கப்பர்நாகூம் என்பது நாகூமின் ஊர் என்ற கருத்துள்ளது.

இவனுக்கு அசீரியாவின் தலைநகரமாகிய நினிவே யைப் பற்றித் தரிசனம் கிடைத்தது. யோனாவுக்கும் இதற்கு 150 வருஷத்துக்கு முன் நினிவேயைக் குறித்துள்ள தூது கிடைத்தது. அது இரக்கமுள்ள தூது. ஆனால் நாகூமுக்குக் கிடைத்த தூது, தேவ தண்டனைக்கடுத்தது. தேவன் என்ன முறையில் ஜனங்களை நடத்துகிறாரென்பது இதில் விளங்குகிறது. முதலாவது இரக்கம், பின்பு தண்டனை.

செப்பனியாவும் நினிவேக்கு விரோதமாக தீர்க்க தரிசனம் உரைத்தான். (செப். 2:13-15)

யோனா நினிவேக்குப் போய் பிரசங்கம் பண்ணி, 50 வருஷத்துக்குள், அசீரியர் இஸ்ரவேலரை அழித்துப் போட்டார்கள். அதன் பின்பும் 100 வருஷமாக நினிவே செழிப்பாயிருந்தது.

நாகூமின் நாட்களில் இஸ்ரவேலர் அசீரியரால் கொடுமையாக நடத்தப்பட்டார்கள். இஸ்ரவேலரைத் தேற்றும்படி, நாகூம் ஆறுதல் சொன்னான்.

நினிவே 1100 வருஷங்களாக பலத்த ராஜ்யமாயிருந்தது. ஜனங்களுடைய துஷ்ட நடத்தையும், கொடூரக் கிரியைகளும் அதிகரித்தது. நாகூம், தேவ தண்டனை வரக் காலமாயிற்று என்று சொல்லி, அவர்கள் மேல் வரப்போகிற அழிவைக் குறித்து முன்னறிவித்தான்.

ஆசிரியர் : நாகூம் (இளைப்பாறுகிறவன்)

காலம் : கி.மு. 663க்கும் 612க்கும் இடையில்

இப்புத்தகத்தில் 3 அதிகாரங்களும் 47 வசனங்களும் உள்ளன.

புத்தகத் தொகுப்பு :

1. தேவனுடைய குணாங்கள் அதி.1:1-7.
2. நினிவேக்கு தேவனுடைய வாக்குத்தத்தங்கள் அதி.1:12-15.
3. நினிவேயின் நியாயத்தீர்ப்பு அதி.2:1 - 3:19.

முக்கிய சம்பவங்களின் தொகுப்புகள் :

1. தேவனுடைய குணாதிசயங்கள் அதி.1:1-7.
2. துன்மார்க்கனுக்கு வரும் தண்டனை அதி.1:8-15.
3. மகிமையை திரும்பிவரப்பண்ணுதல் அதி.2:1, 2.
4. நினிவேயின் வேதனை அதி.2:8-13.
5. நினிவே பாழாக்கப்படுதல் அதி.3:1-7.
6. நினிவேயின் செழிப்பு அதி.3:8, 9.
7. நினிவே பட்சிக்கப்படுதல் அதி.3:10-19.

ஆபகூக்

ஆபகூக் என்பதன் பொருள் "தழுவுதல்".

இவன் சிறிய தீர்க்கதரிசிகளில் எட்டாம் ஆள். இவனைப் பற்றிய காரியங்கள் திட்டமாய் சொல்லப்படவில்லை.

இவன் யோவாகாஸ், யோயாக்கீம் என்பவர்களின் நாட்களில் தீர்க்கதரிசனம் உரைத்தான். எரேமியாவும் அந்நாட்களில் இருந்தான். எருசலேமை நூறு வருஷக் காலமாய் பயமுறுத்திக் கொண்டிருந்த நினிவே, நாகூம் தீர்க்கதரிசி முன்னறிவித்த பிரகாரம், பாழாய்ப் போயிற்று. கல்தேயர் அசீரியாவைக் கீழ்ப்படுத்தின பின், யூதேயா தேசத்தையும் கைப்பற்றி, ஜனங்களை சிறைக் கொண்டு போயிருந்தார்கள். இது யூதா செய்த தீமைகளுக்காக அவர்கள்மேல் விழுந்த தேவ தண்டனையென்று ஆபகூக்குக்குத் தெரிந்தது.

ஆசிரியர் : ஆபகூக்

காலம் : கி.மு. 650க்கு முன்.

இப்புத்தகத்தில் 3 அதிகாரங்களும் 56 வசனாங் களும் உள்ளன.

புத்தகத் தொகுப்பு :

1. ஆபகூக்கின் முதல் கேள்வியும் தேவனுடைய பதிலும் அதி.1:1 - 11.
2. ஆபகூக்கின் 2 வது கேள்வியும் தேவனுடைய பதிலும் அதி.1:12 - 2:20.

3. ஆபகூக்கின் ஜெபம் அதி.3:1 - 3:29

முக்கிய சம்பவங்களின் தொகுப்புகள் :

1. நியாயம் புரட்டப்படுதல் அதி.1:4.
2. கல்தேயரென்னும் கொடிதும் வேகமுமான ஜாதியாரின் முடிவு அதி.1:5 - 11.
3. நீதிமானுக்காக பரிதபித்தல் அதி.1:12 - 17.
4. தரிசனத்திற்கு காத்திருத்தல் அதி.2:1 - 3.
5. அகங்காரியானவனுடைய முடிவுகள் அதி.2:4-19.
6. பரிசுத்த ஆலயத்திலிருக்கிற கர்த்தர் அதி. 2:20.
7. ஆபகூக்கின் விண்ணப்பம் 3 வது அதிகாரம்.

செப்பனியா

செப்பனியா என்பதன் பொருள் "கர்த்தர் காக்கிறார்". இந்தத் தீர்க்கதரிசி ராஜ வம்சத்தவன். யூதா ராஜாவாகிய எசேக்கியாவின் சந்ததியான்.

இவன் யோசியா ராஜாவின் நாட்களில் தன் ஊழியத்தைத் துவங்கின பொழுது, யோசியா சிறு வயதுள்ளவனாயிருந்ததினால், சீர்திருத்தங்கள் செய்யத் தொடங்கவில்லை.

ஆசிரியர் : செப்பனியா

காலம் : கி.மு. 640 க்கும் 609 க்கும் இடையில்

இப்புத்தகத்தில் 3 அதிகாரங்களும் 53 வசனங்களும் உள்ளன.

புத்தகத் தொகுப்பு :

1. செப்பனியாவுக்கு கர்த்தருடைய வார்த்தை உண்டாகுதல் அதி.1 : 1.
2. யூதேயாவின் மேலும், புறஜாதியாரின் மேலும் வரவிருக்கும் தேவனுடைய நியாயத்தீர்ப்பு அதி.1:2 - 3:8.
3. மீந்திருப்போரின் மீட்பு அதி.3:9 - 20.

முக்கிய சம்பவங்களின் தொகுப்புகள் :

1. கர்த்தரைத் தேடாமலிருப்பதினால் உண்டாகிற சங்காரம், இயேசுவின் மூன்றாம் வருகையின்

போது உண்டாகிற அழிவு பற்றிய விளக்கங்கள்
அதி. 1:1-1:18.
2. தேவனைத் தேட மனிதர்களுக்கு உண்டான தேவ ஆலோசனை மற்றும் சிறையிருப்பைத் திருப்புதல் அதி. 2:1-2:7.
3. தேவ ஜனத்தை நிந்திப்பவர்களுக்கு உண்டாகும் தண்டனை அதி. 2:8-15.
4. வேதத்திற்கு அநியாயஞ்செய்தல் 3:1-4.
5. நியாயத்தை விளங்கப்பண்ணுகிற தேவன் 3:5.
6. ஜாதிகளை தண்டித்தலும் பூமியின் அழிவும் 3:6-8.
7. தேவ ஜனங்களுக்கு உண்டான கர்த்தருடைய வாக்குத்தத்தம் 3:9-20.

ஆகாய்

ஆகாய் என்பதன் பொருள் "மகிழ்ச்சி". இஸ்ரவேலர் பாபிலோனில் சிறையிருந்த நாட்களில், இவன் பிறந்து, பின்பு செருபாபேலோடு எருசலேமுக்குப் போனான்.

அங்கே தேவாலயம் கட்டப்படத் தொடங்கித் தடைப்பட்ட போது, இவன் தீர்க்கதரிசனம் உரைத்தான். சிறையிருப்புக்குப்பின் தோன்றின முதல் தீர்க்கதரிசி இவனே. கோரேஸ் கி.மு. 538-ல் இஸ்ரவேலர் திரும்பிப் போகலாமென்ற கட்டளை பிறப்பித்தபோது, இவன் செருபாபேலோடு புறப்பட்டுப் போனான். எருசலேமுக்கு வந்தவுடனே, பலிபீடம் கட்டி, பலி செலுத்தி, ஆலயங் கட்டுகிறதற்கு அஸ்திபாரமும் போட்டார்கள். சமாரியர் வந்து, அந்த வேலையில் உதவி செய்யக் கேட்டபோது, யூதர் சம்மதிக்கவில்லை. அப்பொழுது, வேலையைத் தடைப்படுத்தும்படி அர்தசஷ்டாவுக்கு அறிவித்தார்கள். அவனுடைய கட்டளையினிமித்தம், கட்டுமான வேலை பதினாறு வருஷம் நிறுத்தப்பட்டது. (எஸ்றா 4:5, 24) ஜனங்கள் ஏற்ற காலம் இன்னும் வரவில்லையென்று, தங்களுக்கு மச்சுபாவப்பட்ட வீடுகளைக் கட்டத் தொடங்கினார்கள். (ஆகா. 1:4). பின்பு ஆகாயும் சகரியாவும் ஜனங்களைத் தைரியப்படுத்தி, ஆலய வேலையைச் செய்து முடிக்கும்படி ஏவினார்கள். அப்படியே வேலை செய்ய ஆரம்பித்து நாலு வருஷத்தில் முடித்தார்கள் எஸ்றா 5-ம், 6-ம் அதிகாரங்களில் இதைக் குறித்து விஸ்தரிக்கப் பட்டுள்ளது.

ஆசிரியர் : ஆகாய்

காலம் : கி.மு. 520.

இப்புத்தகத்தில் 2 அதிகாரங்களும் 38 வசனங்களும் உள்ளன.

புத்தகத் தொகுப்பு :

1. ஆலயப்பணிக்கான அழைப்பும், செருபாபேலும் ஜனங்களும் அதி.1 : 1 - 15.
2. ஆலயத்தின் மகிமை அதி.2 : 1 - 9.
3. ஜனங்களின் சுத்திகரிப்பும், செருபாபேலுக்கான வாக்குத்தத்தமும் அதி.2:10 - 23.

முக்கிய சம்பவங்களின் தொகுப்புகள் :

1. மனிதனின் ஏமாற்றமான நிலைமை மற்றும் தேவனுடைய விருப்பம் அதி.1:1-8
2. தேவஆலயத்தைக் குறித்த உணர்வு இல்லாத வேளையில் மனிதனுக்கு ஏற்படும் வறட்சி அதி.1:9 - 11. தேவனுக்கு பயந்து ஆலயத்தை கட்டுதல் பற்றிய விளக்கங்கள் அதி.1:9-15.
3. தேவன் மனிதர்களை திடப்படுத்துதல் அதி.2:3, 4.
4. வானம், பூமி, சமுத்திரத்தை அசைத்தலும், இயேசுவின் வருகையும் அதி.2:6, 7.
5. ஆலயத்தின் மகிமை அதி.2:9.
6. மனிதர்களின் தீட்டும் தேவனுடைய தண்டனையும் அதி.2:10 - 22.
7. செருபாபேலுக்கான வாக்குத்தத்தம் அதி.2:23.

சகரியா

சகரியா என்பதன் பொருள் “கர்த்தர் நினைவு கூருகிறார்” ஆகாய் என்பவனைப் போல் இவனும் சிறையிருப்புக் காலத்தில் பிறந்து, செருபாபேலோடு எருசலேமுக்குப் போனான்.

எருசலேமுக்குத் திரும்பிப் போன யூதர் தேவாலயம் கட்டத் தொடங்கி, வேலை தடைபட்டதினிமித்தம் அதைரியப்பட்டு, அவரவர் வீடுகளைக் கட்ட ஆரம்பித்தார்கள்.

அப்பொழுது, சகரியாவுக்குத் தரிசனங்கள் கிடைத்ததினிமித்தம், அவன் ஜனங்களை ஏவி, ஆலய வேலையைச் செய்யும்படிச் சொன்னான். (சக. 1:6; 3:3; எஸ்றா. 3:2-10)

சகரியா சொன்ன போதனைகள் அவனுக்குத் தரிசனங்கள் மூலம் வெளிப்படுத்தப்பட்டன.

ஆசிரியர் : சகரியா

காலம் : கி.மு. 520க்கும் 480க்கும் மத்தியில்

இப்புத்தகத்தில் 14 அதிகாரங்களும் 211 வசனங்களும் உள்ளன.

புத்தகத் தொகுப்பு :

1. எட்டு தரிசனங்கள் அதி.1:1 - 8:23.
2. முதலாம் தீர்க்கதரிசனம் 9 முதல் 11 அதிகாரங்கள்.
3. 2-ம் தீர்க்கதரிசனம் 12 முதல் 14 அதிகாரங்கள்.

முக்கிய சம்பவங்களின் தொகுப்புகள் :

1. கர்த்தரின் வைராக்கியம், சிவப்பு குதிரைகள், நான்கு கொம்புகளின் இரகசியாங்கள் பற்றிய விளக்கங்கள் 1 வது அதிகாரம்.
2. எருசலேமை அளத்தல், கர்த்தருடைய ஏழு கண்கள் பற்றிய விளக்கங்கள் 2, 3 அதிகாரங்கள்.
3. பொன்குத்துவிளக்குகள், இரண்டு ஒலிவமரங்கள், புஸ்தகச்சுருள், மரக்கால் முதலானவைகளின் இரகசியாங்கள் பற்றிய விளக்கங்கள் 4, 5 அதிகாரங்கள்.
4. நாலு இரதங்கள், யோசுவா முடிசூட்டப்படுதல் பற்றிய விளக்கங்கள் 6 வது அதிகாரம்.
5. இருதயத்தை வைரமாக்குதல், சத்திய நகரம் பற்றிய விளக்கங்கள் 7, 8 அதிகாரங்கள்.
6. மேசியாவின் வருகை, மேய்ப்பருக்கு விரோதமான கர்த்தருடைய கோபம் 9, 10 அதிகாரங்கள்.
7. முப்பது வெள்ளிக்காசு, மெகித்தோன் பள்ளத்தாக்கின் புலம்பல், தரிசனம் சொல்லுதல், மேய்ப்பனை வெட்டுதல், மூன்றாம் வருகை, ஆயிரவருட அரசாட்சி பற்றிய விளக்கங்கள் 11 முதல் 14 அதிகாரங்கள்.

மல்கியா

மல்கியா என்பதன் பொருள் "என் தூதன்". இந்தப் பெயர் ஒரு பொதுப் பெயராய் அல்லது இவனுடைய சொந்தப் பெயராயிருக்கலாம்.

கி.மு. 536-ல் இஸ்ரவேலரில் ஒரு கூட்டம் திரும்பி, எருசலேமுக்குப் போனார்கள். ஆகாய், சகரியா என்பவர்களின் ஏவுதலின்படி தேவாலயம் கி.மு. 520-516ல் கட்டி முடிந்தது. அறுபது வருஷத்துக்குப் பின்பு, கி.மு. 457-ல் எஸ்றா வந்து சீர்திருத்தங்கள் செய்தான். பதின் மூன்று வருஷத்துக்கப் பிறகு, கி.மு. 444-ல் நெகேமியா வந்து பட்டணத்து அலங்கங்களைக் கட்டினான்.

சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்து 100 வருஷங்களுக்குப் பின் மல்கியா தோன்றினான். சிறையிருப்பின் பயனாக ஜனங்கள் விக்கிரகாராதனையை முற்றிலும் விட்டு விட்டனர். ஆனால், நெகேமியா, எஸ்றா என்பவர்களால் செய்யப்பட்ட சீர்திருத்தங்கள் அற்றுப் போயின. ஜனங்கள் திரும்பவும் பழைய ஜீவியத்தைத் தொடங்கி விட்டார்கள். தேவனின் உண்மையான வணக்கத்துக்குப் பதிலாக, தப்பிதமான கொள்கை, கோட்பாடுகள் வழங்கின.

தமது குமாரனுடைய பிறப்புக்காக தேவன் தெரிந்தெடுத்து, ஆயத்தப்படுத்தி வந்த ஜாதி, துன்மார்க்க வழக்கங்களாலும், அந்நிய ஜாதிப் பெண்களை விவாகம் செய்ததாலும், சீர்கெட்ட நிலைக்கு வந்தது. இப்படிப்பட்ட விவாக சம்பந்தங்கள் கர்த்தர் பார்வையில் அருவருப்பானதென்று தீர்க்கதரிசி கூறுகிறான். ஏனெனில், இவ்வித விவாகஞ் செய்வதற்காக தங்கள் சொந்த

மனைவிகளைத் தள்ளி விட்டார்கள். இந்தச் செய்கைகள் யூதர், அஞ்ஞான பழக்க வழக்கங்களுக்குட்படக் காரணமாயிற்று. ஆகவே, அப்படிப்பட்ட ஸ்திரீ களைத் தள்ளிவிடும்படி எஸ்றா சொல்லுகிறான். (எஸ்றா. 10:10-12; மல். 2:11-16)

எபிரெயருடைய விவிலிய நூலின் கடைசிப் புஸ்தகத்தில் "நீங்கள் தேடுகிற ஆண்டவர் இதோ, வருகிறார்" (மல்.3:1) என்று மேசியாவின் வருகையைக் குறித்துத் தீர்க்கதரிசன வார்த்தையாய்ச் சொன்னபின், 400 வருஷ காலமாக அமைதியாயிருநததும், அதன்பின், இயேசு கிறிஸ்துவின் பிறப்பைப் பற்றிய செய்தியோடு புதிய ஏற்பாடு ஆரம்பித்ததும், கர்த்தருடைய ஒழுங்கின்படியே நடந்ததென்பது கவனிக்கத்தக்கதாகும். "இதோ, கர்த்தருடைய பெரிதும் பயங்கரமுமான நாள் வருகிறதற்கு முன்னே நான் உங்களிடத்திற்கு எலியா தீர்க்கதரிசியை அனுப்புகிறேன்" என்று கர்த்தர் சொல்லுகிறாரென்றதோடு இந்தப் புஸ்தகம் முடிகிறது. (மல். 4:5)

ஆசிரியர் : மல்கியா

காலம் : கி.மு. 430.

இப்புஸ்தகத்தில் 4 அதிகாரங்களும் 55 வசனங்களும் உள்ளன.

புத்தகத் தொகுப்பு :

1. தேவனுடைய உடன்படிக்கையின் அன்பு அதி. 1:1 - 1:5.
2. இஸ்ரவேலின் உண்மையற்ற தன்மை கண்டிக்கப் படுதல் அதி.1:6 - 2;16.
3. கிறிஸ்துவின் இரண்டாம் வருகை அதி.2:17 - 4:6.

முக்கிய சம்பவங்களின் தொகுப்புகள் :

1. கீழ்ப்படியாதவர்களைக் குறித்த தேவனுடைய அங்கலாய்ப்பு 1 வது அதிகாரம்.
2. சத்திய வேதத்தைக் குறித்த இரகசியங்கள் மற்றும் ஆசாரியனுடைய வாயில் வேதம் பற்றிய விளக்கங்கள் அதி.2:1-9.
3. உடன்படிக்கைக்கு துரோகம் அதி.2:10-17.
4. இயேசுவின் வருகை அதி. 3:1-7.
5. மனுஷன் தேவனை வஞ்சித்தல் அதி.3:8-15.
6. ஞாபக புஸ்தகம் பற்றிய விளக்கங்கள் அதி.3:16-18.
7. எலியா தீர்க்கதரிசியை அனுப்புதல் 4வது அதிகாரம் நீதியின் சூரியன் உதித்தல் பற்றிய விளக்கங்கள்.

கால நிரூபண ஒழுங்கு

புதிய ஏற்பாட்டுப் புஸ்தகங்கள்

புஸ்தகம்	காலம்
யாக்கோபு	கி.பி. 45
மாற்கு	கி.பி. 50
1, 2, தெசலோனிக்கேயர்	கி.பி. 51;53
1, 2, கொரிந்தியர்	கி.பி. 55-57
கலாத்தியர்	கி.பி. 58
ரோமர்	கி.பி. 59
மத்தேயு	கி.பி. 60
லூக்கா	கி.பி. 62
எபேசியர்	கி.பி. 62
கொலோசேயர்	கி.பி. 63
பிலேமோன்	கி.பி. 62
பிலிப்பியர்	கி.பி. 64
1, 2 பேதுரு	கி.பி. 64-67
அப்போஸ்தலர்	கி.பி. 65-80
எபிரெயர்	கி.பி. 66
யூதா	கி.பி. 66
1 தீமோத்தேயு	கி.பி. 66
தீத்து	கி.பி. 66
2 தீமோத்தேயு	கி.பி. 66
வெளிப்படுத்துதல்	கி.பி. 96
யோவான் சுவிசேஷம்	கி.பி. 96
1, 2, 3 யோவான் நிருபங்கள்	கி.பி. 95-98

இயேசுவின் ஜீவியம்

ஆரம்பம் : முப்பது வருஷம். லூக் 1-2:52
மத் 1-2:23; யோவா. 1:1-18

ஊழியம் : 3 1/2 வருஷம்
துவக்கம் : மாற். 1:1-13; லூக் 3:4-4; 13;
மத். 3:1-4: 11; யோவா. 1:19, 2:12.
யூதேயாவில் : யோவா. 2:13; 4:42
கலிலேயாவில் :
மத். 12-14; யோவா. 4:14; 5:47;
லூக். 6:12; 19:17; 12:15; 15:20; 6:1-71;
மாற். 7:24, 9:50; லூக். 9:18-50;
மத். 15:21; 18:35; யோவா 7:1; 8:59,
பெரேயாவில் : மாற். 10:1-52; லூக். 9:51;
லூக். 19:28; மத் 19:1-20; 34;
யோவா 9:1-12; 11

கடைசி
நாட்கள் : மாற். 11:1-15; 47.
லூக். 19:29-23; 56; மத். 21:1-27; 69;
யோவா. 12:12-19; 42.
உயிர்த்தெழுந்தபின் : மாற். 16:1-20;
லூக். 23:56-24; 53; மத். 2:1-30;
யோவா. 20:1-21:13

இவைகள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கையையும், போதனைகளையும் வெளிப்படுத்துகின்றன. மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் ஆகிய இந்நான்கு சுவிசேஷங்களும் ஒருபோதும் ஒன்றுக்கொன்று முரண்பட்டிருப்பதில்லை.

மாறாக ஒன்றோடொன்று இணைந்தே உள்ளன. ஒவ்வொரு சுவிசேஷமும் இயேசு கிறிஸ்துவினுடைய வாழ்க்கையின் ஒவ்வொரு பாகங்களையும் வெளிப்படுத்துகின்றன. இவை பல்வேறுபட்ட மக்கள் கூட்டங்களுக்காக எழுதப்பட்டவை. சுவிசேஷங்களைப் படிக்கும்போது யாருக்காக இவை எழுதப்பட்டன என்பதைக் கூட நாம் கவனிக்க வேண்டியதாக இருக்கிறது.

புதிய ஏற்பாட்டையும் நான்காகப் பிரிக்கலாம்

1. சுவிசேஷங்கள் (மத்தேயு முதல் யோவான் வரை)
2. வரலாற்றுப் புத்தகம் (அப்போஸ்தலருடைய நடபடிகள்)
3. நிரூபங்கள் (ரோமர் முதல் யூதா வரை)
4. தீர்க்கதரிசன புத்தகம் (வெளிப்படுத்தின விசேஷம்)

மத்தேயு எழுதின சுவிசேஷம்

மத்தேயு என்பதன் அர்த்தம், "கர்த்தரின் கொடை",

அல்பேயுவின் குமாரனாகிய லேவி. (மாற். 2:14; லூக். 5:27) பின்பு அப்போஸ்தலனும் சுவிசேஷகனுமானான்.

இயேசு நடந்து போகும்போது, ஆயத் துறையில் உட்கார்ந்திருந்த மத்தேயுவைக் கண்டு, "எனக்குப் பின் சென்று வா" என்றார். எனவே, அவன் எழுந்து அவருக்குப் பின் சென்றான்.

அப்பொழுது, அவன் தன் வீட்டிலே ஒரு பெரிய விருந்துபண்ணினான். (மாற். 2:15; லூக். 5:29) இதைப்பற்றி மத்தேயு தானே தன் சுவிசேஷத்தில் குறிப்பிடாதிருப்பதில், அவனுடைய தாழ்மை விளங்குகிறது.

இச்சுவிசேஷத்தை முதலாவது எபிரெய பாஷையில் எழுதி, பின்பு கி.பி. 60-ல் கிரேக்கு பாஷையில் வெளியிட்டதாகத் தெரிகிறது. மத்தேயு யூதருக்கென்று தன் சுவிசேஷத்தை எழுதினதினிமித்தம், அவர்களுடைய ஆகமத்திலிருந்தே, இயேசுவின் தேவத்துவத்தையும், ராஜத்துவத்தையும் எடுத்துக்காட்டியிருக்கிறான். இயேசு உலகத்துக்கு வந்த காலத்தில், அவரைப் பற்றி பழைய ஏற்பாட்டில் சொல்லப் பட்டவைகளை யூதர் தப்பிதமாக விளங்கி, இயேசு வரும்போது, தங்களுக்கு இவ்வுலக மேன்மையும், ராஜரீக முதன்மையும் கிடைக்குமென்று எதிர்பார்த்திருந்தனர். அவர் வந்தபோது, தமது ராஜ்யம் இவ்வுலகத்துக்குரியதல்ல, ஆவிக்குரியதென்று சொல்லவே, அவரை விரோதித்து கடைசியில் சிலுவையிலறைந்து கொன்றார்கள்.

யூதர் செய்த தப்பிதங்களை உணர்த்தவும், இயேசுதான் தீர்க்கதரிசனங்களில் கூறப்பட்ட மேசியா என்பதைக் காட்டவும், மத்தேயு இச்சுவிசேஷத்தை எழுதினான்.

ஆசிரியர் : ஆயக்காரனாக இருந்த மத்தேயு. இவன் 12 அப்போஸ்தலர்களில் ஒருவனாகவும் இருந்தான்.

காலம் : கி.பி. 65க்கும் கி.பி. 70க்கும் நடுவில்

நோக்கம் : இயேசு கிறிஸ்துவே மேசியா என்று யூதர்களுக்கு வெளிப்படுத்துவதே இப்புத்தகத்தின் நோக்கமாகும்.

இப்புத்தகத்தில் 28 அதிகாரங்களும், 1071 வசனாங்களும் உள்ளன. பத்தொன்பது பழைய ஏற்பாட்டு மேற்கோள்களும் உள்ளன.

புத்தகத் தொகுப்பு :

1. இயேசுவின் பிறப்பும் வளர்ப்பும் அதி.1:1-2:28.
2. இயேசுவின் ஊழியம் அதி.3:1-25:46.
3. இயேசுவின் பாடுகள், மரணம் அடக்கம்பண்ணப்படுதல் மற்றும் உயர்த்தெழுதல்.

முக்கிய சம்பவங்களின் தொகுப்புகள் :

1. இயேசுவின் பிறப்பு, வளர்ப்பு, இயேசு ஞானஸ்நானம் பெறுதல் மற்றும் இயேசு சோதிக்கப்படுதல் 1 முதல் 4 அதிகாரங்கள் வரை.
2. இயேசுவின் உபதேசங்களும், உவமைகளும் 5 முதல் 13 அதிகாரங்கள் வரை.
3. யோவான் ஸ்நானனின் மரணமும் பரிசேயரின் குற்றச்சாட்டும் 14, 15 அதிகாரங்கள்.

4. யோனா தீர்க்கதரிசியின் அடையாளமும் இயேசு மறுரூபமாகுதலும் 16, 17 அதிகாரங்கள்.
5. இடறல்களைக் குறித்த இயேசுவின் போதனை பரிசேயர் இயேசுவை சோதித்தல் மற்றும் இ யே சு தன்னுடைய மரணம் அடக்கம் உயிர்த்தெழுதலைக் குறித்து சீஷர்களுக்குச் சொல்லுதல் 18 முதல் 20 அதிகாரங்கள் வரை.
6. இயேசு கழுதைக்குட்டியின் மேல் செல்லுதல் உவமைகள், போதனைகள், உலகத்தின் முடிவு பற்றிய விளக்கம் 21 முதல் 24 அதிகாரங்கள் வரை .
7. பத்து கன்னிகைகள், பஸ்காவை புசித்தல் யூதாஸ் காட்டி கொடுத்தல், பேதுரு மறுதலித்தல், இயேசுவின் மரணம் அடக்கம், உயிர்த்தெழுதல் பற்றிய விளக்கம் 25 முதல் 28 அதிகாரங்கள் வரை.

மாற்கு எழுதின சுவிசேஷம்

எருசலேமிலிருந்த ஒரு கிறிஸ்தவ ஸ்திரீயாகிய மரியாள் என்பவளின் மகன். இவன் யோவான் மாற்கு எனப்பட்டான். பர்னபாவுக்கு மருமகன் முறையானவன். பவுலின் முதற்பிரயாணத்தில் மாற்கும் பர்னபாவும் பவுல் கூடப் போனார்கள். (அப். 12:12). ஆனால் மாற்கு பெர்கே மட்டும் போய்த் திரும்பி விட்டான். இதினிமித்தம் இரண்டாம் பிரயாணத்தில், பவுல் இவனைக் கூட்டிக் கொண்டு போக சம்மதியாததால், பவுலும் பர்னபாவும் ஊழிய வேலையில் பிரிந்து போக நேரிட்டது. பர்னபா மாற்குவை தனக்கு உதவியாகத் தெரிந்து கொண்டு, சீப்புரு தீவுக்குப் போனான். (அப். 15:36-40).

பின், மாற்கு பவுலோடு ஒப்புரவாகி, கொலோசேய சபைக்கு அனுப்பப்பட்டான். (கொலோ. 4:10)

இயேசு கெத்செமெனேத் தோட்டத்தில் பிடிக்கப்பட்டுப் போகையில், அவர் பின்னே போனவனும், தன் போர்வையைப் போட்டுவிட்டு ஓடின வாலிபனும், இந்த மாற்கு என்று தெரிகிறது.

நான்கு சுவிசேஷங்களில் இதுவே முதலில் எழுதப்பட்டது. மாற்கு இச்சுவிசேஷத்தை ரோமாபுரியி லிருந்து ரோமருக்கென்றெழுதினான். ரோமாபுரி, பாபிலோனென்று (1 பேது. 5:13)-ல் குறிக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர் : மாற்கு (யோவான் என்னும் மறுபெயர் கொண்டவர்)

காலம் : கி.பி.50க்கும் கி.பி. 60க்கும் நடுவில்

நோக்கம் : புறஜாதியாருக்கு இயேசு கிறிஸ்துவை மனித குமாரனாக அறிமுகப்படுத்துதல் அல்லது

வெளிப்படுத்துதல் மற்றும் விசுவாசிகளுக்கு பாடுகளால் பூரணரான கிறிஸ்துவைச் சுட்டிக்காட்டுதல்.

இந்நூலில் 16 அதிகாரங்களும், 678 வசனங்களும் 4 பழைய ஏற்பாட்டு மேற்கோள்களும் உள்ளன.

புத்தகத் தொகுப்பு :

1. இயேசுவின் ஊழியத்தின் ஆரம்பம் அதி.1:1-1:13.
2. கலிலேயா மற்றும் யூதேயாவில் இயேசுவின் ஊழியம் அதி.1:14-10:52.
3. இயேசுவின் பாடுகளும் உயிர்த்தெழுதலும் அதி.11:1-16:20.

முக்கிய சம்பவங்களின் தொகுப்புகள் :

1. இயேசு ஞானஸ்நானம் பெறுதல், திமிர்வாதக்காரன் குணமாகுதல், 12 பேரை தெரிந்து கொள்ளுதல் பற்றிய விளக்கங்கள் 1 முதல் 3 அதிகாரங்கள்.
2. உவமைகள், பிசாசு பிடித்தவன் சுகமாகுதல் ஜெப ஆலயத்தில் உபதேசம் பற்றிய விளக்கங்கள் 4 முதல் 6 அதிகாரங்கள் வரை.
3. கொன்னை வாயையுடைய செவிடன் குணமாகுதல், 7 அப்பங்களை நாலாயிரம் பேருக்குப் பங்கிடுதல் இயேசு மறுரூபமாகுதல் பற்றிய விளக்கங்கள் 7 முதல் 9 அதிகாரங்கள் வரை.
4. இயேசுவின் போதனைகள், இயேசு அத்திரமரத்தை சபித்தல் உவமைகள் பற்றிய விளக்கங்கள் 10 முதல் 12 அதிகாரங்கள் வரை.
5. கடைசி காலத்தைக் குறித்த எச்சரிப்பும் பந்தியை ஆசரித்தலும் 13, 14 அதிகாரங்கள்.
6. இயேசுவைக் காட்டி கொடுத்தல் 14 வது அதிகாரம்.
7. இயேசுவின் மரணமும் உயிர்த்தெழுதலும் 15, 16 அதிகாரங்கள்.

"பிரியமான வைத்தியனாகிய லூக்கா" என்றும், "என் உடன் வேலையாள்" என்றும் பவுல் இவனைக் குறித்துச் சொல்லுகிறான். (கொலோ. 4:14; 2தீமோ. 4:11; பிலே. 24)

(லூக். 1:2) லிருந்து, லூக்கா இயேசுவின் ஊழியத்தைக் கண்ணாலே காணவில்லை என்று தெரிகிறது.

பவுல், (கொலோ. 4:14)ல் லூக்காவை விருத்தசேதனம் பெற்றவர்களோடு சேர்த்தெழுதாமல், புறஜாதியாரான எப்பாப்பிரா, தேமா, இவர்களோடு சேர்த்தபடியால், இவனும் ஒரு புற ஜாதியான் என்று எண்ண வேண்டும்.

துரோவா பட்டணத்தில் பவுல் இவனை முதன் முதல் சந்தித்ததாக (அப். 16:10) ல் "நாங்கள்" என்று சொல்லியிருக்கிறதிலிருந்து தெரிய வருகிறது. இவன் ஒரு கிரேக்கனும், கல்விமானுமாயிருந்தான். (லூக். 1:1-4)

இவன் பிறந்த ஊர் திட்டமாகத் தெரியாத போதிலும், அந்தியோகியாவில் பிறந்தானென்று சொல்லப்படுகிறது. பவுல் ரோமாபுரியில் சிறைப்பட்டிருந்தபொழுது, கொலோசெயருக்கும், பிலேமோனுக்கும் எழுதின நிருபங்களில், இவனைப் பற்றியும் குறித்திருக்கிற படியால், இவனும் அவனோடிருந்ததாகத் தெரிகிறது.

பவுல் இரண்டாம் முறை சிறைச்சாலையிலிருந்த போதும், லூக்கா அவனோடிருந்ததாக கி.பி. 64-ல் எழுதப்பட்ட (2தீமோ 4:11) லிருந்து அறியலாம். ஆகவே,லூக்கா அவனுடைய கடைசி நேரம் வரை

கிட்டதட்ட ஒன்பது வருஷக் காலம் பவுலோடு இருந்ததாகத் தெரிகிறது.

இதன்பின், லூக்கா தேவ ஊழியஞ் செய்து வந்தானென்றும், கடைசியில் கிரேக்க தேசத்தில், 84 வயதில் மரித்தான் என்றும் சொல்லப்படுகிறது.

லூக்கா பவுலோடும், மற்ற ஊழியக்காரரோடும் ஐக்கியப் பட்டிருந்ததினாலும், எருசலேம், செசரியா முதலிய இடங்களுக்கு இவனும் போனபடியாலும், இயேசுவைக் குறித்தும், முதற் சீஷருடைய செய்கைகளைக்குறித்தும் இவனுக்கு நன்றாக அறியக் கூடியதாக இருந்தது. அவனே (லூக். 1:2)ல் “நாங்கள் முழு நிச்சயமாய் நம்புகிற சங்கதிகள், ஆரம்ப முதல் கண்ணாரக் கண்டு, வசனத்தைப் போதித்தவர்களிடம் பெற்ற சரித்திரம்” என்று சொல்லுகிறான்.

பவுல் செசரியாவில் காவலிலிருந்த நாட்களில் லூக்கா தன் சுவிசேஷத்தையும், பவுல் ரோமாபுரியிலிருக்கையில், அப்போஸ்தலர் நடபடிகளையும், லூக்கா எழுதினதாகத் தெரிகிறது.

லூக்கா இச்சுவிசேஷத்தை எழுதினது தெயோப்பிலுவுக்கு என்று குறித்திருந்தும், மற்றவர்களுக்கும் பிரயோஜனமாயிருக்கும் படியே எழுதியுள்ளான்.

கிறிஸ்துவினால் வரும் இரட்சிப்பு சகல மனுஷ ஜாதியாருக்குமுரியது என்பதைக் காட்டும்படி, அவருடைய வம்ச வரலாற்றை மத்தேயு சொன்னது போல் ஆபிரகாமிலிருந்தல்ல, ஆதாமில் இருந்தே குறித்துள்ளான். மேலும், அவர் ஊழியஞ் செய்த காலத்தில் புற ஜாதியாருக்குக் கொடுத்த போதனைகளும், செய்த

அற்புதங்களும் இச்சுவிசேஷத்தில் முக்கியமாக விவரிக்கப் பட்டுள்ளன.

ஆசிரியர் : பவுலின் நண்பனும், உடன் உழியனுமான வைத்தியனாகிய லூக்கா.

காலம் : கி.பி. 70 க்கும் கி.பி. 80 க்கும் நடுவில்

நோக்கம் : இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கை வரலாற்றை ஒழுங்குபடுத்தி அவரை தேவகுமாரனாக புற ஜாதிகளுக்கு வெளிப்படுத்துவது.

இதில் 24 அதிகாரங்களும் 1151 வசனங்களும், 6 பழைய ஏற்பாட்டு மேற்கோள்களும் உள்ளன.

புத்தகத் தொகுப்பு :

1. இயேசுவின் பிறப்பும் கலிலேயாவில் ஊழியமும் 1:1-9:50.
2. யூதேவில் ஊழியங்கள் 9:51-13:21.
3. யோர்தான் சமவெளியில் ஊழியங்கள் 13:22-24:53.

முக்கிய சம்பவங்களின் தொகுப்புகள் :

1. இயேசுவின் பிறப்பு, வளர்ப்பு மற்றும் யோவான் ஸ்நானனின் எச்சரிப்பு 1 முதல் 3 அதிகாரங்கள்.
2. இயேசுவானவர் சோதிக்கப்படுதல், கெனெசரேத்துக் கடலில் இயேசுவின் அற்புதம், ஜெப ஆலயத்தில் இயேசுவின் அற்புதம், நூற்றுக்கு அதிபதியின் வேலைக்காரன் சுகமாகுதல், இயேசுவின் பாதத்தில்

பரிமள தைலத்தைப் பூசுதல் பற்றிய விளக்கங்கள் 4 முதல் 7 அதிகாரங்கள்.

3. காற்றையும், கடலையும் அதட்டுதல், 12 வருடம் பெரும்பாடுள்ள ஸ்திரீ சுகமாகுதல், சீஷர்களுக்கு அதிகாரம் கொடுத்தல், 70 பேரை நியமித்தல், நல்ல பங்கை தெரிந்தெடுத்தல், ஜெபம்பண்ண கற்றுக் கொடுத்தல் இயேசுவின் எச்சரிப்பு வார்த்தைகள், உவமைகள் பற்றிய விளக்கங்கள் 8 முதல் 19 அதிகாரங்கள்.
4. 10 குஷ்டரோகிகள் சுத்தமாகுதல், சகேயு இயேசுவை காணுதல் 17 வது அதிகாரம், 19ம் அதிகாரம்.
5. உயிர்த்தெழுதலின் இரகசியங்கள் 20 வது அதிகாரம் மற்றும் ஏழை விதவையின் 21வது அதிகாரம் காணிக்கை.
6. பஸ்காவைப் புசித்தல், இயேசு காட்டி கொடுக்கப்படுதல், இயேசுவின் பாடுகள், மரணம் பற்றிய விளக்கங்கள் 22, 23 அதிகாரங்கள்.
7. உயிர்த்தெழுதல் பற்றிய விளக்கங்கள் 24 வது அதிகாரம்.

யோவான் எழுதின சுவிஷேசம்

பவுல் மனுஷ ஜாதியாரை யூதர், கிரேக்கர், தேவனுடைய சபை என மூன்று பிரிவாகக் குறித்திருக்கிறான். (1 கொரி. 10:32, 33) மத்தேயு யூதருக்கென்றும், மாற்குவும், லூக்காவும். புற ஜாதியாருக்கென்றும் தங்கள் சுவிசேஷங்களை எழுதினார்கள். யோவான் தேவ சபைக்கென்று எழுதினான்.

யோவான் இச்சுவிசேஷத்தை தன் கடைசி நாட்களில், எபேசுவிலிருந்து கிரேக்க பாஷையில், எல்லா விசுவாசிகளுக்கும் வேண்டிய ஆவிக்குரிய தேவைகளை முன்னிட்டு எழுதியுள்ளான்.

இயேசுவுக்கு அன்பாயிருந்த சீஷனாகிய யோவானே இதை எழுதினான் என அவனே சொல்லுகிறான். (யோவா. 21:24) இதை எழுதின நோக்கத்தையும் அவனே குறிக்கிறான். "இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கும்படியாகவும், விசுவாசித்து, அவருடைய நாமத்தினாலே நித்திய ஜீவனை அடையும்படியாகவும்", இவைகள் எழுதப்பட்டிருக்கிறது. (யோவா. 20:31)

இயேசு தேவனுடைய குமாரனென்ற நிலையைக் காட்டும்படி எழுதினபடியால், யோவான் அவருடைய வம்ச வரலாறு, பிறப்பு, பிள்ளைப் பருவம், வளர்ச்சி, ஞானஸ்நானம், பிசாசினால் சோதிக்கப்பட்டது. கெத்செமெனேயில் வியாகுலமடைந்தது ஆகியவை களைக் குறித்து ஒன்றும் குறிக்கவில்லை.

இன்னும் மற்ற சுவிசேஷகரால் குறிக்கப்படாத விஷயங்களாகிய மறுபடி பிறப்பது, ஜீவ தண்ணீர், ஜீவ அப்பம், நல்ல மேய்ப்பன், உலக ஒளி என்பவைகளைப் பற்றி இயேசு செய்த பிரசங்கங்களும், அவர் சீஷரோடு கடைசியாய்ப் பேசின பேச்சுகளும், அவர் ஜெபமும், யோவானால் மாத்திரம் எழுதப்பட்டுள்ளன.

ஆசிரியர் : யோவான் (அப்போஸ்தலர்களில் ஒருவர்)

காலம் : கி.பி. 85 க்கும் கி.பி. 90 க்கும் நடுவில்

நோக்கம் : இயேசு கிறிஸ்துவைத் தேவனாக வெளிப்படுத்துவது.

இச்சுவிசேஷத்தில் 21 அதிகாரங்கள், 878 வசனங்கள், 6 பழைய ஏற்பாட்டு மேற்கோள்கள் உள்ளன.

புத்தகத் தொகுப்பு :

1. இயேசுவின் ஊழியம் அதி.1:1-11:57.
2. இயேசுவின் பாடுகளும் மரணமும் அதி.12:1-19:42.
3. உயிர்த்தெழுதலும் சீடர்களை அனுப்புதலும் அதி.20:1-21:25.

முக்கிய சம்பவங்களின் தொகுப்புகள் :

1. இயேசுவின் மகிமையும், யோவான் ஸ்நானன் இயேசுவை அறிமுகப்படுத்துதலும் 1 வது அதிகாரம்.
2. இயேசுவின் ஊழியம், கானா ஊர் கல்யாணம், பிதாவின் அன்பு, சமாரியா ஸ்திரீ, பெதஸ்தாகுளம், ஐந்து அப்பம், 2 மீன், தேவாலயத்தில் இயேசுவின் உபதேசம், சத்தியத்தினால் விடுதலை பிறவிக்

குருடன் பார்வையடைதல், நல்ல மேய்ப்பன், லாசரு உயிர்த்தெழுதல், கழுதைக் குட்டியின் மேல் ஏறி இயேசு பவனி வருதல், பரிமளதைலத்தை பூசுதல், சீஷர்களின் கால்களை கழுவுதல் பற்றிய விளக்கங்கள் 2 முதல் 13 அதிகாரங்கள் வரை.

3. ஆவியானவரைக் குறித்த செய்திகள் 14 முதல் 16 அதிகாரங்கள்.
4. இயேசுவின் ஜெபம் 17 வது அதிகாரம்.
5. இயேசுவை பிடித்தலும், பேதுரு இயேசுவை மறுதலித்தலும் 18 வது அதிகாரம்.
6. இயேசுவின் மரணமும் அடக்கமும் 19 வது அதிகாரம்.
7. இயேசுவின் உயிர்த்தெழுதல், திபேரியாக் கடலில் இயேசு தன்னை வெளிப்படுத்துதல் பற்றிய விளக்கங்கள் 21 வது அதிகாரம்.

அப்போஸ்தலர் நடபடிகள்

இந்தப் புஸ்தகம் பரிசுத்த ஆவியானவரின் நடபடிகள் என்று சொல்லத்தகும்.

சுவிசேஷத்தை எழுதின, "பிரியமான வைத்தியனாகிய" லூக்காவே இதையும் எழுதினான். சுவிசேஷத்தில் கர்த்தர் மனுஷரின் இரட்சிப்புக்காக செய்தவைகளைப் பற்றியும், "நடபடிகளில்" பரிசுத்த ஆவியானவரால் தொடர்ச்சியாய்ச் செய்தவைகளைப் பற்றியும், லூக்கா குறிக்கிறான்.

கிறிஸ்தவ சபை தொடங்கின நாட்களின் சரித்திரமே இப்புஸ்தகத்தில் முக்கியமாய் காணப்படுகிறது.

இப்புஸ்தகம் சுவிசேஷங்களுக்கும் நிரூபங்களுக்கும் இடையில் வருவதற்கு பல நியாயங்களுண்டு. இது சுவிசேஷங்களுக்குத் தொடர்ச்சியாயும், நிரூபங்களுக்குத் தொடக்கமாயும் இருக்கின்றது. அத்தோடு கிறிஸ்தவ மார்க்க ஆரம்பத்தைக் குறித்து அறிவது நமக்கு அதிக அவசியமானது. கி.பி. 30 முதல் சுவிசேஷம் எருசலேமிலிருந்து ரோமாபுரிக்கு போனது எப்படி என்பதை இதில் காணலாம். இதைவிட யூதரிலிருந்து தொடங்கின இந்த மார்க்கம் படிப்படியாக புறஜாதியாருக்குள் பரம்பினதைக் குறித்து இப்புஸ்தகமே வெளியிடுகிறது. ஆசியாவில் உற்பத்தியான மார்க்கம், சில வருஷங்களுக்குள் ஐரோப்பிய சீர்திருத்தத்துக்கு இசைவானதெப்படி? ரோம சுதந்தரம் பெற்ற யூதனாகிய பவுல் என்பவனாலே இவைகள் நடைபெற்றன. இவைகளை விவரித்து எழுதினவன் புற ஜாதியானான லூக்கா. ஆகவே உலகம் முழுவதும் கிறிஸ்தவ மார்க்கம் பரம்பின விதத்தை இப்புஸ்தகம் குறிப்பிடுகின்றது.

ஆசிரியர் : மருத்துவனாகிய லூக்கா

காலம் : கி.பி. 63

நோக்கம் : திருச்சபை வளர்ச்சி

இந்நூலில் 28 அதிகாரங்களும் 1007 வசனங்களும், 15 பழைய ஏற்பாட்டு மேற்கோள்களும் உள்ளன.

புத்தகத் தொகுப்பு :

1. இயேசுவானவர் எடுத்துக்கொள்ளப்படுதலும் யோவேலினால் உரைக்கப்பட்ட தீர்க்கதரிசனம் நிறைவேறுதலும் அதி.1:1-2:47.
2. பாலஸ்தீனாவில் திருச்சபை வளர்ச்சி அதி.3:1-12:25.
3. அந்தியோகியாவிலிருந்து ரோமாபுரி வரை திருச் சபை வளர்ச்சி அதி.13:1-28:30.

முக்கிய சம்பவங்களின் தொகுப்புகள் :

1. இயேசுவானவர் எடுத்துக்கொள்ளப்படுதல், மத்தியாவை தேர்ந்தெடுத்தல், யோவேலினால் உரைக்கப்பட்ட தீர்க்கதரிசனம் நிறைவேறுதல், சப்பாணி குணமாகுதல் பற்றிய விளக்கங்கள் 1 முதல் 4 அதிகாரங்கள் வரை.

2. அனனியா சப்பிராளின் மரணம், அப்போஸ்தலர்களை பொதுவான சிறைச்சாலையில் வைத்தல், கிரேக்கர்களின் முறுமுறுப்பு, ஸ்தேவானுடன் தர்க்கம் பண்ணுதல் பற்றிய விளக்கங்கள் 5 முதல் 7 அதிகாரங்கள் வரை.

3. எருசலேம் சபைக்கு துன்பம் வருதல், சமாரியாவில் சுவிசேஷம், எத்தியோப்பியனாகிய மந்திரி மனந்திரும்புதல், இயேசுவானவர் சவுலை சந்தித்தல், ஐனேயா குணமாகுதல், தபீத்தாளை உயிரோடு எழுப்புதல் பற்றிய விளக்கங்கள் 8, 9 அதிகாரங்கள்.

4. கொர்நேலியுவின் வீட்டில் பேதுரு, புறஜாதிகளுக்கு மனந்திரும்புதலை அருளிச்செய்தல், சிறைச்சாலை யிலிருந்த பேதுரு விடுவிக்கப்படுதல், சபையை துன்பப்படுத்தின ஏரோதின் மரணம் பற்றிய விளக்கங்கள் 10 முதல் 12 அதிகாரங்கள்.

5. பவுலின் ஊழியங்கள், மூப்பர்களை ஏற்படுத்துதல், லீதியாளின் இருதயம் திறக்கப்படுதல், சிறைச்சாலைக் காரனின் குடும்பம் மனந்திரும்புதல், நற்குணசாலிகளான பெரோயா பட்டணத்தார், ஆக்கில்லா, பிரிஸ்கில்லாவின் ஊழியங்கள், பவுலின் கச்சை, உறுமால்களின் மூலம் குணம், ஐத்திகுவை உயிரோடு எழுப்புதல் பற்றிய விளக்கங்கள் 13 முதல் 20 அதிகாரங்கள்.

6. பவுலின் பாடுகளைக் குறித்த தீர்க்கதரிசனம் நிறைவேறுதல் கப்பல் யாத்திரையில் பவுல் பற்றிய விளக்கங்கள் 21-27 அதிகாரங்கள்.

7. ரோமாபுரியில் பவுல் 28 வது அதிகாரம்.

நிரூபங்கள்

சத்திய வேதத்தில் 21 நிரூபங்களுண்டு. இவைகளில் பதின்மூன்று அப்போஸ்தலனாகிய பவுல் என்பவனால் எழுதப்பட்டது.

பவுல் தர்ஷீஸ் தேசத்து யூதன். தொடக்கத்தில் சவுல் என்பது இவனுடைய பெயர்; பென்யமீன் கோத்திரத்தான்; ஒரு பரிசேயன். தர்ஷீஸ் கல்லூரியில் கல்வி பயின்ற பின் எருசலேமில் கமாலியேல் என்னும் வித்துவானிடம் கற்றான். (அப். 22:3)

ஸ்தேவானைக் கல்லெறிந்தவர்களின் வஸ்திரங்களைப் பவுல் பாதுகாத்தான் என்பதே இவனைக் குறித்து வேதாகமத்தில் முதன் முதல் குறித்துள்ளது. (அப். 7:58)

அதன்பின் பவுல் கிறிஸ்தவர்களைத் துன்புறுத்துவதற்காகத் தமஸ்குவுக்குப் போனான். வழியிலே இவனுக்கு தேவதரிசனங்கிடைத்து, குணப்பட்டு, அனனியா என்பவனால் ஜெபிக்கப்பட்டு, தமஸ்கு சபையால் ஏற்றுக் கொள்ளப்பட்டான். (அப். 9:1-25)

பவுல் மூன்று சுவிசேஷ பிரயாணங்களில் எருசலேமிலிருந்து அந்தியோகியாவுக்கும், சீப்புரு தீவு வழியாய் துருக்கி, ஆசியாவுக்கும் போனான். ஐரோப்பாவுக்கும் போனதாகத் தெரிகிறது.

இவனுடைய பிரயாணங்களில் கூடப் போனவர்கள் பர்னபா, யோவான், என்னும் மாற்கு, சீலா, லூக்கா என்பவர்கள்.

இவனோடு கூட தீமோத்தேயுவும், தீத்துவும், ஊழியம் செய்தார்கள். சீப்புரு தீவுக்குப் போன பின்னரே சவுல்

என்னப்பட்ட இவன் பவுல் என்ற ரோம பெயரால் அழைக்கப்பட்டான். (அப். 13:9, 13)

அநேக சபைகளுக்கும், கிட்டிய சிநேகிதருக்கும் நிரூபங்கள் எழுதினான். அவைகளில் பதின்மூன்று புதிய ஏற்பாட்டைச் சேர்ந்தவை.

இவன் தைரியமாய் இயேசுவைக் குறித்துப் பிரசங்கித்ததினிமித்தம் யூதரால் அதிகம் துன்புறுத்தப்பட்டான். அநேகம் தடவைகளில் பிடிக்கப்பட்டு, காவலில் வைக்கப்பட்டான். பல நியாயாதிபதிகள் முன் விசாரிக்கப்பட்டான். அகிரிப்பா ராஜாவும், தேசாதிபதிகளாகிய பேலிக்ஸ், பெஸ்து என்பவர்களும் இவனை நியாயம் விசாரித்தார்கள். (அப். 24-26). கடைசியில் பவுல் ராயனுக்கு அபயமிட்டான். (அப். 25:10-12). ரோமாபுரிக்கு ராயனிடம் போனபின் விசாரித்தவைகள் (அப். 27-28) ல் விவரிக்கப் பட்டுள்ளன.

ரோமாபுரியில் இரண்டு வருஷங்கள் ஒரு வாடகை வீட்டிலிருந்து சிநேகிதரை ஏற்றுக்கொண்டு, அவனைக் காண வந்தவர்களுக்குப் பிரசங்கித்தான். ஒரு போர்ச் சேவகன் அவனோடிருந்தான். (அப். 28:16)

அந்நாட்களில் எபேசு, கொலோசே சபையாருக்கும், பிலேமோனுக்கும் நிரூபங்களை எழுதினான். (எபே. 3:1; கொலோ. 4:3; பிலே. 1)

கடைசியில் கி.பி. 67-ம் வருஷம் நேரோ (Nero) ராயன் நாட்களில் இரத்த சாட்சியாய் மரித்தான்.

பவுல் வேறு நிரூபங்களாகிய ரோமர், கொரிந்தியர், கலாத்திரயர், பிலிப்பியர், தீமோத்தேயு, தீத்து என்பவற்றையும் எழுதினான்.

உலகத்துக்கு சுவிசேஷத்தை வியாக்கியானம் பண்ணுவதற்காக தேவன் பவுலைத் தெரிந்தார். ரோமருக்கெழுதின நிரூபத்தில் அது பூரணமாய் விவரித்துரைக்கப்பட்டுள்ளது.

பவுல் இந்த நிரூபத்தை எழுதி, மூன்று வருஷங்கள் சென்றபின், ரோமாபுரிக்குப் போனான். அங்கிருந்த சபை பெந்தெகோஸ்தே நாளில் எருசலேமுக்குப் போயிருந்த ரோமரால் ஆரம்பிக்கப்பட்டிருக்கலாம். (அப். 2:10). அதன்பின் இருபத்தெட்டு (28) வருஷ காலமாக வேறிடங்களிலிருந்து பவுல் மூலமாகக் குணப்படுத்தப் பட்டவர்களுங்கூட ரோமாபுரிக்கு போயிருந்தார்கள்.

கிறிஸ்து மார்க்கம் யூதரிலிருந்து தொடங்கினபடியால், புற ஜாதியார் கிறிஸ்தவர்களாகும்போது, யூத சடங்காசாரங்களைக் கைக்கொள்ள வேண்டுமென்ற ஒரு பிரச்சனை அக்காலத்தில் ஆரம்பமாயிற்று. அப்படிப் பட்டவர்கள் விருத்தசேதனம் பெற வேண்டுமென்று யூதத்தலைவர் பிடிவாதமாய் நின்றார்கள்.

ஆனால், பவுல், தேவனுக்கு முன் நீதிமானாகிறது மோசேயின் பிரமாணத்தைக் கைக்கெள்வதினாலல்ல. கிறிஸ்துவின் மேலுள்ள விசுவாசத்தினாலே அப்படி ஆக வேண்டும் என்று கூறினான்.

பவுல் ரோமருக்கு எழுதின நிரூபம் அவனுடைய ஆறாவது நிரூபமாயிருந்தும், வேதாகமத்தில் அதற்கு முதலிடம் கொடுக்கப்பட்டுள்ளது. இந்த நிரூபம் வேத சாஸ்திரத்துக்கிசைந்ததாயும், ஒழுங்காயும், கிரமமாயும்,

எழுதப்பட்டிருக்கிறதினால் அப்படிச் செய்யப்பட்டதெனத் தெரிகிறது.

தம் மூன்றாம் சுவிசேஷப் பிரயாணத்தில் பவுல் கொரிந்துவிலிருந்து இதை எழுதினான். அங்கிருந்து எருசலேமுக்குப் போன வேளையில், உண்டான கலகத்தில் பவுல் காக்கப்பட்டு, பின்பு ரோமாபுரிக்கு அனுப்பப்பட்டான்.

பவுல் கிரேக்க பாஷையில் இதை எழுதினான். லத்தீன், ரோமாபுரியில் உத்தியோகஸ்தருக்கடுத்த பாஷையாயிருந்தும், கிரேக்க ஜனங்களுக்குள் கிரேக்க பாஷை அதிகமாய் வழங்கிற்று.

ஆசிரியர் : அப்போஸ்தலனாகிய பவுல்

காலம் : கி.பி. 57

மூன்றாவது மிஷனரிப் பயணத்தின்போது இது எழுதப் பட்டது.

இந்த நிருபத்தில் 16 அதிகாரங்களும், 433 வசனங்களும், 38 பழைய ஏற்பாட்டு மேற்கோள்களும் உள்ளன.

புத்தகத் தொகுப்பு :

1. நீதிமான்களாக்கப்படுதலின் அவசியமும், நீதிமான்களாக்கப்பட்டவர்களுக்குரிய பதவிகளும் அதி.1:1-8:39.
2. நீதிமான்களாக்கப்படுதல் - இஸ்ரவேலரைப் பொறுத்தமட்டில் அதி.9:1-11:36.
3. நீதிமான்களாக்கப்படுதல் நடைமுறை வாழ்க்கையில் அதி.12:1 - 16:26.

முக்கிய சம்பவங்களின் தொகுப்புகள் :

1. சத்தியத்தை அறிந்திருந்தும் அதற்குக் கீழ்ப்படியாதவர்களின் முடிவுகள் 1 வது அதிகாரம்.
2. நியாயப்பிரமாணத்திற்கு கீழ்ப்படிய வேண்டும், நியாயப்பிரமாணமும், விசுவாசப் பிரமாணமும், ஆபிரகாமின் விசுவாசம், விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுதல், ஜீவனுடைய ஆவியின் பிரமாணம், குமாரனின் சாயல் விசுவாசத்தினால் உண்டாகும் நீதி பற்றிய விளக்கங்கள் 2 முதல் 9 அதிகாரங்கள்.
3. இரட்சிக்கப்படுவதற்கான வழிகள் பற்றிய விளக்கங்கள் 10, 11 அதிகாரங்கள்.
4. புத்தியுள்ள ஆராதனை 12 வது அதிகாரம்.
5. மேலான அதிகாரத்திற்குக் கீழ்ப்படிய வேண்டும், புசித்தல் பற்றிய விளக்கங்கள் 13, 14 அதிகாரங்கள்.
6. சுவிசேஷத்தின் சம்பூரண ஆசிர்வாதம், தர்மசகாயம், புறஜாதிகளைக் குறித்த செய்திகள் பற்றிய விளக்கங்கள் 15 வது அதிகாரம்.
7. எச்சரிப்பும் வாழ்த்துக்களும் 16 வது அதிகாரம்.

கொரிந்து

கிரேக்க தேசத்திலுள்ள பிரதான பட்டணம். கி.மு. 46 ல் அகுஸ்து ராயன் (Augustus Caesar) அதைத் திரும்பக் கட்டி எழுப்பி, அகாயா நாட்டின் தலைநகரமாக்கினான்.

கி.பி. 50-ல் பவுல் தன் இரண்டாம் பிரயாணத்தில், மக்கெதோனியாவிலிருந்து கொரிந்துவுக்குப் போய், யூதராகிய ஆக்கில்லா, பிரிஸ்கில்லா என்பவர்களுடன் தங்கியிருந்து, சுவிசேஷத்தைப் பிரசங்கித்தான். அவர்கள் வீட்டில் ஒரு சபை உண்டாயிற்று. அந்நாட்களில் சீலாவும் தீமோத்தேயும் மக்கெதோனியாவிலிருந்து அவ்விடம் போனார்கள். (1 தெச. 3:6). பவுல் ஜெப ஆலயத்தில் பிரசங்கித்துக் கொண்டிருக்கும் நாட்களில், யூதரால் விரோத முண்டானபோது, அத்தேசத்தானாகிய யுஸ்து என்பவனின் வீட்டிலிருந்து பிரசங்கித்தான். அநேக ஜனங்களும், ஜெப ஆலயத் தலைவனான கிறிஸ்புவும், ஞானஸ்நானம் பெற்றார்கள். (1 கொரி 1:14, 15).

இராத்திரியில் கர்த்தர் பவுலுக்குத் தரிசனமாகி, அவனைத் தைரியப்படுத்தினார். அவன் ஒரு வருஷமும் ஆறுமாதமும் தங்கியிருந்து, உபதேசம் பண்ணினான். (அப் 18:9-11).

யூதர்கள் பவுலைப் பிடித்து, கல்லியோன் என்கிற அதிபதி முன் கொண்டு போன போது, அவன் விசாரணை பண்ணாமலிருந்தான். (அப். 18:12-17).

பவுல் அங்கே பதினெட்டு மாதங்கள் தங்கியிருந்து, ஊழியஞ் செய்தபின் புறப்பட்டுப் போனான்.

கொரிந்தியருக்கு எழுதின நிரூபங்கள்

அநேக நாள் சென்றபின் பவுல் எபேசு பட்டணத்துக்குப் போனான். (அப். 18:1-19). அங்கேயிருக்கும் போது, பவுலுக்கு மனவருத்தம் உண்டாக்கத்தக்க காரியங்கள் கொரிந்து சபையில் நடைபெறுகிறதாக ஒரு கடிதம் வந்தது. (1கொரி. 7:1) அந்தச் சபையைச் சேர்ந்தவர்கள் நாலு பகுதியாய்ப் பிரிந்து கொண்டார்கள். ஒரு பகுதியார் பவுலையும், இன்னொரு பகுதி பேதுருவையும், மூன்றாம் பகுதி அப்பொல்லோவையும் மீதியானவர்கள் கிறிஸ்துவையும் பின்பற்றுகிறவர்களாகச் சொல்லிக் கொண்டாரகள் என்றும் அந்தக் கடிதத்தில் எழுதப்பட்டிருந்தது.

அத்தோடு, சபையைச் சேர்ந்த சிலர் துன்மார்க்க நடையுள்ளவர்களென்றும், தேவ ஆராதனை தப்பிதமான விதமாய் நடத்தப்படுகிறதென்றும், உயிர்தெழுதலைப் பற்றித் தவறான கொள்கைகளிருக்கிறதென்றும், செய்திகள் பவுலுக்குக் கிடைத்தது. இன்னும் இராப்போஜன ஆராதனை ஒழுங்காக நடத்தப்படவில்லையென்றும், இராப்போஜனத் தோடு விக்கிரகங்களுக்குப் படைத்தவைகளைப் புசித்தார் களென்றும் பவுலுக்கு அறிவிக்கப்பட்டது.

உடனே, பவுல் இந்த தப்பிதங்களைக் கண்டித்து குறைகளைத் திருத்தும் நோக்கத்தோடு, இந்த முதலாம் நிரூபத்தை எழுதினான். அதில் தப்பிதங்களை வெளியாய்ச் சொல்லி, கொடுக்க வேண்டிய தண்டனைகளை விவரித்து, வேண்டிய புத்திமதிகளைக் கூறி, எல்லாவற்றையும் தெளிவாய் வரைந்திருக்கிறான்.

இந்த நிரூபத்தை அனுப்பினபின் அதில் சொல்லப் பட்டவைகளை கொரிந்து சபையார் எவ்விதமாய் ஏற்றுக்

கொள்வார்களென்று பவுலுக்கு மனதில் குழப்பம் உண்டாயிற்று. எழுதின நிரூபத்துக்கு மறுமொழி கிடைப்பதற்கு முன்னால், பவுல் மக்கெதோனியாவுக்குப் போய், தீத்துவை அங்கே சந்தித்தான். அவனிடமிருந்து தன்னுடைய நிரூபத்தை கொரிந்து சபையார் மரியாதையாக ஏற்றுக் கொண்டார்களென்றும், பவுல் சொன்னபடி நடந்தார்களென்றும் கேள்விப்பட்டு, அவன் சந்தோஷப்பட்டு, இரண்டாம் நிரூபத்தை மக்கெதொனியாவிலிருந்து கி.பி. 57-ல் எழுதினான்.

இந்த நிரூபத்திலும் சபையிலுள்ள தப்பிதங்கள் முற்றாய்ச் சரிப்பட வேண்டுமென்று திரும்பவும் எழுதி, தான் இப்படி எழுதுவது அவர்களில் தனக்கிருக்கிற அன்பினிமித்தமே என்றும், திரும்ப தான் அவர்களிடம் போகுமுன் எல்லாம் திருத்தமாக வேண்டும் என்றும் சொல்லுகிறான்.

தான் அவர்களெல்லர் மேலும் அன்பாயிருக்கிறதைக் காட்டும் நோக்கமாய், பாவஞ் செய்த அந்த மனுஷனுக்கு மன்னித்து, திரும்பவும் அவனைச் சபையில் சேர்த்துக் கொள்ளும்படிச் சொல்லுகிறான்.

மேலும், பவுல் தன்னுடைய அழைப்பைப் பற்றியும், அப்போஸ்தல அதிகாரத்தைப் பற்றியும் கூறிய பின், தேவ ஆசீர்வாதம் சொல்லி, இந்த நிரூபத்தை முடிக்கின்றான்.

1 கொரிந்தியர்

ஆசிரியர் : அப்போஸ்தலனாகிய பவுல்

காலம் : கி.பி. 55

இந்நிரூபத்தில் 16 அதிகாரங்கள், 437 வசனங்கள் 9 பழைய ஏற்பாட்டு மேற்கோள்கள் உள்ளன.

புத்தகத் தொகுப்பு :

1. சபையின் பிரச்சனைகள் அதி.1:1-6:20.
2. ஆராதனைக்குரிய கட்டளைகள் அதி.7:1-14:40.
3. உயிர்த்தெழுதலுக்கான போதனைகள் அதி.15:1-16:24.

முக்கிய சம்பவங்களின் தொகுப்புகள் :

1. விவாகத்திற்கான யோசனைகள் அதி.1:1-7:40.
2. நடைமுறை வாழ்க்கைக்கான அறிவுரைகள் அதி.8:1-11:1.
3. வரங்கள் அதி.12:1-12:31.
4. கட்டளைகள் அதி.11:2-11:34.
5. அன்பின் செய்தி அதி.13:1-13:13.
6. உயிர்த்தெழுதலின் செய்தி அதி.15:1-15:58.
7. தர்மபணத்தைக் குறித்த கட்டளை அதி.16:1- 24.

2 கொரிந்தியர்

ஆசிரியர் : அப்போஸ்தலாகிய பவுல்

காலம்: கி.பி. 55

இந்நிரூபத்தில் 13 அதிகாரங்கள், 257 வசனங்கள், 7 பழைய ஏற்பாட்டு மேற்கோள்கள் உள்ளன.

புத்தகத் தொகுப்பு :

1. பவுல் தனது அழைப்பையும், உழியங்களையும் பற்றி விவரித்தல் அதி.1:1–7:16.
2. கொடுத்தலைப் பற்றிய போதனை அதி. 8:1–9:15.
3. பவுலின் அப்போஸ்தல பதவியைப் பற்றிய தர்க்கம் அதி. 10:1 – 13:14.

முக்கிய சம்பவங்களின் தொகுப்புகள் :

1. விசுவாசத்தில் நிலைத்திருத்தலும், வாசனையைக் குறித்த இரகசியங்களும் 1, 2 அதிகாரங்கள்.
2. மரணத்திற்கேதுவான ஊழியமும், ஆவிக்குரிய ஊழியமும் 3 ம் அதிகாரம்.
3. மகிமையான சுவிசேஷத்தின் ஒளியும், நித்திய கன மகிமையும் 4ம் அதிகாரம்.
4. ஒப்புரவாக்குதலின் ஊழியமும், நித்திய வீட்டைக் குறித்த இரகசியங்களும் 5ம் அதிகாரம்.
5. உபத்திரவத்தில் மேன்மை பாராட்டுதலும், தேவனுக்கேற்ற துக்கமடைதலும் 6, 7 அதிகாரங்கள்.
6. தர்ம ஊழியம் மற்றும் கர்த்தரால் புகழப்படுதல் பற்றிய விளக்கங்கள் 8 முதல் 10 அதிகாரங்கள்.
7. சபையைக் குறித்த கவலை, மூன்றாம் வானத்தி லுள்ள பரதீசுவின் இரகசியம், பவுலின் புத்திமதிகள் பற்றிய விளக்கங்கள் 11 முதல் 13 அதிகாரங்கள்.

கலாத்தியர்

சின்ன ஆசியாவின் ஒரு பகுதி. கி.மு. 278-ல் கலாத்தியர் என்னும் ஒரு ஜாதி கருங்கடலுக்கப்பாலிருந்து வந்து, இந்த பகுதியில் குடியேறினார்கள். ரோமருடைய அரசாட்சிக் காலத்தில் இவர்களுக்குச் சுயாதீனமிருந்தது. பிற்பாடு புதிய ஏற்பாட்டு நாட்களில், ரோமருடைய ஆளுகைக்குட்பட்டார்கள். இக்கோனியா, லீஸ்திரா, தெர்பை என்னும் பட்டணங்கள் இவர்களுக்கு உரியவை.

கலாத்தியருக்கு எழுதின நிரூபம்

புதிய ஏற்பாட்டு நாட்களில் கலாத்தியா ரோமருடைய அரசாட்சிக்குக் கீழிருந்த ஒரு நாடு. தெர்பை, லீஸ்திரா, இக்கோனியா, பிரிகியா முதலிய பட்டணங்கள் இதைச் சேர்ந்தவைகள்.

பவுல் கி.பி. 45-48 ல் இவ்விடங்களில் பிரசங்கம் பண்ணினதால், சபைகள் ஏற்பட்டன. பின்பு, தன் இரண்டாம், மூன்றாம் சுவிசேஷப் பிரயாணங்களிலும் இந்தச் சபைகளைச் சந்தித்தான். (அப். 16:1-6; 18:23).

அங்கிருந்த கிறிஸ்தவர்கள் விக்கிரகாராதனைக்கார ராயிருந்து, சுவிசேஷத்தைக் கேட்டு, குணப்பட்டார்கள். யூதமார்க்க சடங்காச்சாரங்களைப் பற்றி, அறியாதிருந் தார்கள். சில யூத சமயத் தலைவர் அவர்களிடம் போய், இரட்சிக்கப்படுவதற்கு யூத மார்க்க ஆசாரங்களைக் கைக்கொள்ள வேண்டுமென்று போதித்தார்கள். எனவே, அதையும் ஏற்றுக் கொண்டார்கள். அதனால் கிறிஸ்து மார்க்கத்தை யூதருடைய கட்டுப்பாடுகளிலிருந்து, விடுவிப்பதே பவுலுடைய நோக்கமாயிருந்தது.

ஆசிரியர் : அப்போஸ்தலனாகிய பவுல்

காலம் : கி.பி. 51 க்கும் 53க்கும் நடுவில்

இந்நூலில் 6 அதிகாரங்கள், 149 வசனங்கள், 4 பழைய ஏற்பாட்டு மேற்கோள்கள் உள்ளன.

புத்தகத் தொகுப்பு :

1. பவுல் தனது அப்போஸ்தல பதவியை வெளிப்படுத்துதல் அதி.1:1 - 2:21.
2. விசுவாசத்தினாலே நீதிமானாக்கப்படுதல் அதி.3:1-4:31.
3. அன்பினால் ஊழியஞ்செய்தல் அதி.5:1-6:18.

முக்கிய சம்பவங்களின் தொகுப்புகள் :

1. இயேசு கிறிதுஸ்வினால் வெளிப்படுத்தப்பட்ட சுவிசேஷம் 1 வது அதிகாரம்.
2. விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுதல் 2 வது அதிகாரம்.
3. நியாயப்பிரமாணமும், விசுவாசமும் 3 ம் அதிகாரம்.
4. இயேசு கிறிஸ்துவின் மூலம் தேவனுடைய சுதந்தரமாக மாறுதல் 4 வது அதிகாரம்.
5. மாம்சத்தின் கிரியைகள் அதி.5:19-21.
6. ஆவியின் கனிகள் அதி.5:22-26.
7. சிலுவையின் மேன்மை 6 வது அதிகாரம்.

எபேசு

இது துருக்கி, ஆசியாவிலுள்ள ஒரு முக்கியப் பட்டணம். கி.மு. 133 தொடங்கி, இது ரோம ஆதீனத்துக்குள்ளாயிருந்தது. அநேக விசேஷக் கட்டடங்களிருந்தன. பெயர் பெற்ற தியானாள் (Diana) கோவில் கி.மு. 365-ல் கட்டப்பட்டு, உலகத்திலுள்ள அதிசயங்களில் ஒன்றாயிருந்தது. தியானாளைப் பூச்சக்கரம் சேவித்ததாகச் சொல்லியுள்ளது. (அப். 19:27).

அநேகம் யூதரும் அங்கே இருந்தார்கள். கிறிஸ்து மார்க்கமும், ஆக்கில்லா, பிரிஸ்கில்லா என்பவர்களால் கொண்டு போகப்பட்டது. பவுல் இரண்டாம் பிரயாணத்திலே, அங்கே போய் சில நாட்கள் மாத்திரம் இருந்தான். (அப். 18:19-21) மூன்றாம் பிரயாணத்தில் இரண்டு வருஷம் தங்கியிருந்தான். (அப். 19:8-10) அநேக விரோதிகள் அவனை எதிர்த்து நின்றார்கள்.

"எபேசுவிலே துஷ்ட மிருகங்களுடனே போராடினேன்" என்கிறான். (1கொரி. 15:32) பவுல் போனபின், தீமோத்தேயு அங்கே சுவிசேஷ ஊழியஞ் செய்தான்.

பின்பு, யோவான் அப்போஸ்தலன் அப்பகுதிகளில் இருந்த ஏழு சபைகளுக்குத் தலைவனாயிருந்தான். அதன்பின், இப்பட்டணம் கி.பி. 14-ம் நூற்றாண்டில் துருக்கியரால் முற்றிலும் பாழாக்கப்பட்டது.

கொலோசேயருக்கு எழுதின நிருபத்துக்கும், இதற்கும் முக்கிய ஒப்பனையுண்டு. பவுல், கொலோசேயர், பிலேமோன் நிருபங்களை எழுதிய பின், சபைகளுக்குப் பொதுவான நிருபம் ஒன்று எழுத விரும்பி, இதை

எழுதியதாகத் தெரிகிறது. இதில், "எபேசியருக்கென்று" குறித்திருக்கவில்லை என்று சொல்லுகிறார்கள்.

கிறிஸ்துவினால் சபைக்கு வரக்கூடிய மகிமையை கூறுவது சபைக்குள்ள கடமையென்றும், சபையானது ஐக்கியம், ஒற்றுமை, அன்பு, பரிசுத்தம், ஆகிய இவைகளில் வளர வேண்டும் என்றும் பரிசுத்த பவுல் வற்புறுத்தி எழுதியிருக்கிறான்.

எபேசியருக்கு எழுதின நிரூபம்

அப்போஸ்தலனாகிய பவுல் ரோமாபுரியில் காவலிலிருந்த நாட்களில் எழுதின நான்கு நிரூபங்களில் ஒன்று இது. எபேசியருக்கெழுதின நிரூபம் எனக் குறிக்கப்பட்டிருந்தும், ஆசியாவிலுள்ள மற்ற சபைகளுக்கென்றும் பவுல் எழுதினதாகத் தெரிகிறது.

பவுல் தன் இரண்டாம் சுவிசேஷப் பிரயாணத்தில் எபேசுவுக்குப் போய், சில நாள் தங்கியிருந்து பிரசங்கித்தான். மறுபடி மூன்றாம் பிரயாணத்தில் அங்கே போய், இரண்டு வருஷம் சபையாரோடு தங்கியிருந்து, சுவிசேஷ ஊழியம் செய்ததினால், அநேகர் குணப்பட்டார்கள். அதினிமித்தம் தியானாள் கோவிலின் சொரூபத்தை வெள்ளியினால் செய்து, விற்பனை செய்த தட்டாரின் தொழில் நஷ்டப்பட்டது. அப்பொழுது தெமேத்திரியு என்பவனும் அவனைச் சேர்ந்தவர்களும் கலகம் உண்டாக்கினதினிமித்தம், பவுல் அவ்விடத்தை விட்டுப் போக நேர்ந்தது. (1-ம் அதி.) கிருபையும் சமாதானமும் உண்டாவதாக என்று சொல்லி, பவுல் இந்த நிரூபத்தைத் துவக்குகிறான்.

ஆசிரியர் : அப்போஸ்தலனாகிய பவுல்

காலம் : கி.பி. 60

இந்நிரூபத்தில் 6 அதிகாரங்கள், 155 வசனங்கள், 3 பழைய ஏற்பாட்டு மேற்கோள்கள் உள்ளன.

புத்தகத் தொகுப்பு :

1. கிறிஸ்துவின் மகிமையும் பவுலின் ஜெபமும் அதி. 1:1-1:23.

2. தேவனுடைய திட்டத்தை நோக்கிய படிகள் அதி.2:1-3:21.
3. தேவனுடைய நோக்கம் நடைமுறை வாழ்க்கையில் அதி.4:1-6:24.

முக்கிய சம்பவங்களின் தொகுப்புகள் :

1. பிதாவாகிய தேவனுடைய சித்தம், பரிசுத்த ஆவியானவரின் முத்திரை, சரீரமான சபைக்கு தலையாகிய கிறிஸ்து பற்றிய விளக்கம் அதி.1:1-1:23.
2. பொதுவான இரட்சிப்பும், மூலைக்கல்லாகிய இயேசு கிறிஸ்துவும் 2 வது அதிகாரம்.
3. கிறிஸ்துவின் இரகசியத்தை வெளிப்படுத்துதல் 3-ம் அதிகாரம்.
4. சபை பக்திவிருத்தி அடைதல் 4 வது அதிகாரம்.
5. கிறிஸ்துவின் ராஜ்யமும், சபையைக் குறித்த இரகசியங்களும் 5வது அதிகாரம்.
6. குடும்பத்திற்கான ஆலோசனைகள் அதி.6:1-9.
7. போராட்டங்களை ஜெயிப்பதற்கான வழிகள் அதி.6:10 - 6:24.

பிலிப்பி பட்டணம்

மக்கெதோனியாவின் பிலிப்பு என்பவன் இப்பட்டணத்தை கி.மு. 360-ல் கைப்பற்றி, சீர்ப்படுத்தி, அரணித்தான். பொற்சுரங்கங்கள் அங்கேயிருந்ததால், பொற்காசுகள் அதிகமாய் வழங்கிற்று.

கி.மு. 168-ல் ரோமர் இதைத் தங்கள் வசமாக்கினார் கள். கி.மு. 31-ல் நடந்த யுத்தத்தில், ஒக்டேவியன் (Octavian) என்பவன் அந்தோனி, கிளியோபத்திரா என்பவர்களைத் தோற்கடித்து, இப்பட்டணத்தைக் கைப்பற்றினான். அதன்பின் அது நாகரீகத்தில் பேர் பெற்றது. பிலிப்பிப் பட்டணவாசியின் உரிமை, மேன்மையாயிருந்தது. பவுலும் தன் நிரூபத்தில், "பிலிப்பியரே!" என்று குறிக்கிறான். (பிலி. 4:15).

பவுல் அவ்விடம் போய், பிரசங்கித்த நாட்களில் கலகம் உண்டாகி, காவலில் போடப்பட்டு, விடுதலைப் பெற்று, புறப்பட்டுபோனபின், திரும்பவும் அங்கே போயிருந்ததாகத் தெரிகிறது. (அப். 20:1, 6:1, தீமோ. 1:3, 4).

பிலிப்பியருக்கு எழுதின நிரூபம்

ரோமாபுரியில் காவலிலிருந்த நாட்களில் பவுல் இந்த நிரூபத்தை எழுதினான். சிலர், அவன் எபேசுவில் காவலிலிருந்து எழுதினான் என்று எண்ணுகிறார்கள்.

பவுல் தனது இரண்டாம் சுவிசேஷப் பிரயாணத்தில் சீலாவோடு துரோவாவுக்குப் போயிருக்கும்போது, ஒரு தரிசனம் கண்டான். மக்கெதோனியா தேசத்தான் ஒருவன் வந்து, தன்னை மக்கெதோனியாவுக்கு வந்து உதவி செய்யும்படிக் கேட்டதாக இருந்தது. உடனே புறப்பட்டு, பிலிப்பி பட்டணத்துக்கு வந்து, அங்கே சில நாட்கள் தங்கியிருந்தார்கள்.

அந்நாட்களில், லீதியாளும், சிறைச்சாலைக்காரனும் குணப்பட்டார்கள். ஒரு சபை ஸ்தாபிக்கப்பட்டது. இதுவே ஐரோப்பாவில் முதல் முதல் உண்டான சபை.

ஆசிரியர் : அப்போஸ்தலனாகிய பவுல்

காலம் : கி.பி. 60

இந்நிரூபத்தில் 4 அதிகாரங்கள், 104 வசனங்கள், 1 பழைய ஏற்பாட்டு மேற்கோள் ஆகியவை உள்ளன.

புத்தகத் தொகுப்பு :

1. துதியும், ஜெபமும் அதி 1:1-1:11.
2. பவுலின் தனிப்பட்ட விஷயங்கள் மற்றும் எச்சரிப்புகள் அதி. 1:12-4:1.
3. புத்திமதிகள் அதி.4:2-4:23.

முக்கிய சம்பவங்களின் தொகுப்புகள் :

1. சுவிசேஷத்திற்காகப் பாடுபடுதல் 1 வது அதிகாரம்.
2. கிறிஸ்துவின் கீழ்ப்படிதல் அதி.2:1-2:11.
3. பூரண இரட்சிப்பு அதி.2:12.
4. தீமோத்தேயு, எப்பாபிராதீத்துவைக் குறித்த பவுலின் சாட்சி அதி.2:19-2:30.
5. எச்சரிப்பும், பவுலின் வாழ்க்கையும் 3 வது அதிகாரம்.
6. சந்தோஷம் மற்றும் தேவசமாதானத்தைக் குறித்த செய்திகள் அதி.4:1-4:10.
7. குறைவுகளை நிறைவாக்குதலின் இரகசியங்கள் அதி.4:11-4:23.

கொலோசெயருக்கு எழுதின நிருபம்

கொலோசே சின்ன ஆசியாவிலுள்ள பிரிகியாவில் இருந்த ஒரு பூர்வீகப் பட்டணம்.

பெந்தகோஸ்தே நாளில் எருசலேமுக்குப் போயிருந்த இப்பட்டணத்து ஜனங்களின் முயற்சியால் ஒரு சபை கொலோசேயில் ஏற்பட்டது. (அப். 2:10). பவுல் கொலோசேக்குப் போனதாகத் தெரியவில்லை.

ரோமாபுரியில் பவுல் காவலிலிருக்கும் போது, இச்சபையில் ஊழியஞ் செய்து கொண்டிருந்த எப்பாப்பிரோதீத்து அவனைக் காணப் போய், சபையாருக்குள் இருந்த தப்பிதமான கொள்கை, போதனை ஆகியவைகளைப் பற்றிச் சொன்னான். தப்பான போதனையுள்ள போதகர்கள் அங்கே போய், பொய்யான சுவிசேஷத்தைப் பிரசங்கித்ததாக அறிவித்தான். சிருஷ்டிப்பு வேலையிலும், மீட்பு விஷயத்திலும், தேவதூதரும் பங்கெடுத்தார்கள் என்றும், அவர்களும் வணக்கத்துக்குப் பாத்திரரென்றும், அப்போதகர்கள் போதித்ததாகக் கூறினான். இதைக் கேட்டுப் பவுல் இந்த நிருபத்தை எழுதினான்.

இந்நிருபம் எபேசியர், பிலேமோன் என்பவர்களுக்கு எழுதிய நிருபங்களோடு தீகிக்கு, ஒநேசிமு என்பவர்களின் கையில் கொடுத்து அனுப்பப்பட்டது.

ஆசிரியர் : அப்போஸ்தலனாகிய பவுல்

காலம் : கி.பி. 60

இந்நிருபத்தில் 4 அதிகாரங்கள், 95 வசனங்கள் உள்ளன.

புத்தகத் தொகுப்பு :

1. கிறிஸ்துவின் மேன்மையும், சபைக்கான பவுலின் பாடுகளும் அதி.1:1-2:7.
2. கிறிஸ்துவுக்குள்ளான சுயாதீனமும், தவறான போதனைகளுக்கு எதிரான எச்சரிப்பும் அதி.2:8-2:23.
3. பரிசுத்த ஜீவியத்திற்கான பிரமாணங்கள் அதி.3:1-4:19.

முக்கிய சம்பவங்களின் தொகுப்புகள் :

1. சுவிசேஷத்தினால் உண்டாகும் நம்பிக்கையின் இரகசியம் 1 வது அதிகாரம்.
2. விசுவாசத்தின் உறுதி அதி.2:1-2:12.
3. இயேசு சிலுவையில் வெற்றிச் சிறந்தார் அதி.2:13-2.
4. பழைய மனுஷன், புதிய மனுஷன் குறித்த பிரமாணம் அதி.3:1-3:17.
5. கீழ்ப்படிதலின் இரகசியங்கள் அதி.3:19-3:23.
6. ஜெபத்திற்கான போதனைகள் அதி.4:1-4:9.
7. வாழ்த்துச் சொல்லுதல் அதி.4:10-4:18.

தெசலோனிக்கேயருக்கு எழுதின முதலாம் நிருபம்

தெசலோனிக்கே பவுலுடைய நாட்களில் மக்கெதோனியாவின் தலைநகரம். தற்காலத்தில் அது துருக்கியை சேர்ந்த "சாலோனிக்கா".

மகா அலெக்சாந்தரின் சகோதரியாகிய, "தெசலோனிக்கா" என்பவளின் பேர் இந்தப் பட்டணத்துக்கு கி.மு. 315-ல் கொடுக்கப்பட்டது. ரோமர் இந்தப் பட்டணத்தை மக்கெதோனியாவின் தலைநகராமாக்கினார்கள். அங்கே யூதருடைய ஜெப ஆலயம் இருந்ததினால், அநேக யூதர் இருந்ததாகத் தெரிகிறது. (அப். 17:1)

விசுவாசியாத யூதர்கள் பவுலுக்கும் சீலாவுக்கும் விரோதமாய் அமளியுண்டாக்கி, யாசோனுடைய வீட்டை வளைந்து கொண்டார்கள். யாசோனும் மற்றவர்களும் ஜாமீன் கொடுத்து, பவுலையும், சீலாவையும் விடுதலை பண்ணி, பெரோயாவுக்கு அனுப்பி விட்டார்கள்.

பவுல் தெசலோனிக்கே சபைக்கு இரண்டு நிருபங்களை எழுதினான். அவன் எழுதின நிருபங்களெல்லாவற்றிலும் இதுவே முதலாவது எழுதப்பட்டது.

ஆசிரியர் : அப்போஸ்தலனாகிய பவுல்

காலம் : கி.பி. 51

இந்நிருபத்தில் 5 அதிகாரங்கள், 89 வசனங்கள் உள்ளன.

புத்தகத் தொகுப்பு :

1. அப்போஸ்தல பதவியின் தர்க்கம் அதி.1:1-3:13.
2. சபைக்கான புத்திமதிகள் அதி.4:1-5:22.
3. ஆவி, ஆத்துமா, சரீரத்தைப் பாதுகாத்தல் மற்றும் வாழ்த்து சொல்லுதல் பற்றிய விளக்கங்கள் அதி.5:23 - 5:28

முக்கிய சம்பவங்களின் தொகுப்புகள் :

1. வசனத்தைப் பின்பற்றுதல் அதி.1:5, 6.
2. சுவிசேஷத்தைப் பிரசங்கித்தல் அதி.2:9.
3. நற்செய்தி சொல்லுதல் 3 வது அதிகாரம்.
4. தேவசித்தமும், வேசிமார்க்கத்திற்கு விலகுதலும் அதி. 4:8.
5. சகோதர சிநேகம் அதி.4:9.
6. கிறிஸ்துவின் 2 ம் வருகை அதி.5:8.
7. ஆவி, ஆத்துமா, சரீரம் குற்றமற்றதாகக் காக்கப்படுதல் அதி.5:23.

தெசலோனிக்கேயருக்கு எழுதின இரண்டாம் நிருபம்

முதலாம் நிருபம் எழுதி, சில மாதங்களுக்குப் பின், இதையும் கொரிந்துவிலிருந்து பவுல் எழுதினான்.

தெசலோனிக்கே சபையின் திருத்தத்திற்காக இன்னும் சில காரியங்களைக் குறித்து எழுத பவுல் ஏவப்பட்டான்.

ஆசிரியர் : அப்போஸ்தலனாகிய பவுல்

காலம் : கி.பி. 51

இந்நிருபத்தில் 3 அதிகாரங்கள, 47 வசனங்கள் உள்ளன.

புத்தகத் தொகுப்பு :

1. தண்டனைகள் அதி.1:1-1:12.
2. உபதேசங்கள் அதி.2:1-2:17.
3. கட்டளைகள் அதி.3:1-3:18.

முக்கிய சம்பவங்களின் தொகுப்புகள் :

1. அன்பும், விசுவாசமும் அதி. 1:1-1:4.
2. கீழ்ப்படியாதவர்களுக்கு வரும் தண்டனை அதி.1:6-12.
3. இயேசு கிறிஸ்துவின் வருகை அதி.2:1-2:6.
4. அக்கிரமத்தின் இரகசியம் அதி.2:7-2:12.
5. கர்த்தருடைய வசனம் மகிமைப்படுதல் அதி.3:1, 2.
6. கட்டாயம் வேலை செய்ய வேண்டும் அதி.3:18.
7. அழைப்பும் தெரிந்து கொள்ளுதலும் அதி.2:13, 14.

தீமோத்தேயு

தீமோத்தேயு, லீஸ்திரா ஊரானாகிய ஒரு வாலிப கிறிஸ்தவன். (அப். 16:1). இவன் தாய் ஒரு யூத ஸ்திரீ, தகப்பன் கிரேக்கன். பவுல் தன்னுடைய முதலாம் பிரயாணத்தில் அங்கே போன வேளையில், இவர்களுடைய வீட்டில் தங்கியிருந்தான். அப்பொழுது இவனுக்கு வயது 16. சிறு வயது முதல் இவனுடைய பாட்டி லோவிசாளிடத்திலும், தாய் ஐனிக்கேயாளிடத்திலும் மார்க்க விஷயங்களில் போதிக்கப்பட்டவன். (2தீமோ. 1:5) மூப்பராகிய சங்கத்தார் இவன்மேல் கைகளை வைத்து, இவனை தேவ ஊழியத்துக்கு ஒப்புக் கொடுத்தார்கள். (1தீமோ. 4:14) இவனுடைய தகப்பன் கிரேக்கனாயிருந்தபடியால், யூதரைச் சம்மதமாக்கும்படி, பவுல் இவனுக்கு விருத்த சேதனம்பண்ணினான்.

பவுல், இவனை முதலாவது கொரிந்துவுக்கு அனுப்பினான். (1 கொரி. 4:17) பின்பு, எபேசு பட்டணம் போய், ஊழியஞ் செய்யும்படி ஒழுங்கு செய்தான். (1 தீமோ. 1:4) இவைகளை விட, தீமோத்தேயு, ஆசியா, மக்கெதோனியா, கிரேக்கு முதலிய தேசங்களிலுள்ள சபைகளிலும் ஊழியஞ் செய்ததாக பவுல் எழுதின நிருபங்களிருந்து தெரிய வருகிறது. (ரோம. 16:21; 2 கொரி. 1:1; பிலி. 1:1; பிலே. 1) பவுல் தன் மரணம் சமீபிப்பதை அறிந்தபோது தீமோத்தேயுவை வரவழைத்தான். (2 தீமோ 4:9-21).

தீமோத்தேயுவும் காவலில் வைக்கப்பட்டு, விடுதலை பெற்றதாகத் தெரிகிறது. (எபி. 13:23).

பிலிப்பி பட்டணத்துக்குப் பவுல் போன இரண்டு தடவைகளிலும், தீமோத்தேயு அவனோடு கூடப் போனான். (அப். 16:1; 17:14; 2 கொரி 1:1) பின்பு, ஊழியத்தில் அவனுடைய உத்தம குணத்தை அறிந்திருக்கிறீர்களென்று பவுல் பிலிப்பியருக்கு எழுதினான். (பிலி. 2:22).

பவுல் மரித்தபின், இவன் அநேக வருஷங்களாக எபேசு சபையில் கண்காணியாயிருந்து, கடைசியாக இரத்த சாட்சியாக மரித்தானென்று சொல்லப்படுகிறது.

தீமோத்தேயுக்கு எழுதின நிரூபங்கள்

பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதின இரண்டு நிரூபங்களும், தீத்துவுக்கு எழுதிய நிரூபமும் "மேய்ப்பருக்குரிய நிரூபங்கள்" என்று அழைக்கப் படுகின்றன.

முதல் நிரூபத்தை, தீமோத்தேயு எபேசுவிலிருக்கும் போது, பவுல் மக்கதொனியாவிலிருந்து எழுதுகிறான். (1 தீமோ. 1:3) ரோமாபுரியில் காவலிலிருந்து, பவுல் தன் கடைசி வார்த்தைகளை இரண்டாம் நிரூபத்தில், தீமோத் தேயுவுக்கு எழுதினான்.

இம்மூன்று நிரூபங்களிலும், முக்கியமாகச் சபையின் ஒழுங்குகளைப் பற்றியும், மூப்பருக்கும், போதகர்களுக்கும் இருக்க வேண்டிய தகுதி, இலட்சணங்கள் முதலியவைகளைப் பற்றியும் குறித்துள்ளான்.

1 தீமோத்தேயு

தொடக்கத்தில் கிறிஸ்தவ சபைகளை அப்போஸ்தலர் நடத்தி வந்தார்கள். வர வர சபைகள் அதிகரித்த போது, அவைகளின் ஒழுங்கு, விசுவாசம், பிரமாணம், திருத்தம் ஆகியவைகளைக் கவனிக்கிறதற்கு வேறே ஆட்களை நியமிக்க வேண்டியதாயிற்று. அவர்களுக்கு வேண்டிய வெளிப்பாடுகளும் தேவையாயிற்று. அப்படிப்பட்ட போதனை. 1 தீமோத்தேயுவிலும், தீத்துவிலும் கொடுக்கப் பட்டுள்ளது. "தேவனுடைய வீட்டிலே நடக்க வேண்டிய வகையை நீ அறியும்படி இவைகளை உனக்கு எழுதுகிறேன்" என்று பவுல் சொல்லுகிறான். (1 தீமோ. 3:15).

1, 2 தீமோத்தேயுவும், தீத்துவும் போதக நிருபங்கள் என்ற பெயரில் அழைக்கப்படுகின்றன. சபைப் போதகர்களுக்கு அவசியமான ஆலோசனைகள் இதில் பெரும்பான்மை யாகக் காணப்படுவதே இதன் காரணம்.

ஆசிரியர் : அப்போஸ்தலனாகிய பவுல்

காலம் : கி.பி. 63 க்கும் கி.பி. 65க்கும் இடையில்

இந்நிருபத்தில் 6 அதிகாரங்கள் 113 வசனங்கள் உள்ளன.

புத்தகத் தொகுப்பு :

1. கள்ளப்போதகர்களுக்கு எதிரான எச்சரிப்பு அதி.1:1-1:11.
2. பவுலின் வாழ்க்கையில் வெளிப்பட்ட தேவகிருபை அதி.1:12-1:20.
3. சபை நடத்துவது தொடர்பான போதனைகள் அதி.2:1-6:22.

முக்கிய சம்பவங்களின் தொகுப்புகள் :

1. நியாயப்பிரமாணம் விதிக்கப்பட்டிருப்பதற்கான காரணங்கள் 1 வது அதிகாரம்.
2. ஜெபத்தின் இரகசியங்களும், பிதாவாகிய தேவனுடைய சித்தமும் அதி.2:1-8.
3. ஸ்திரீகளின் அலங்கரிப்பு பற்றிய விளக்கங்கள் அதி.2:9-15.
4. கண்காணியானவனுக்கான ஆலோசனைகள் அதி.3:1-15.
5. சீர்கேடான பேச்சுகளுக்கு விலக வேண்டுவது பற்றிய விளக்கங்கள் 4 வது அதிகாரம்.
6. விதவைகளைக் குறித்த விதிகள் அதி.5:1-25.
7. தெய்வத்தைக் குறித்த இரகசியங்களும் ஐசுவரியத்தைக் குறித்த இரகசியங்களும் 6-வது அதிகாரம்.

2 தீமோத்தேயு

பவுல் மனதை உருக்கத்தக்கதான இந்தக் கடிதத்தை தான் இரத்த சாட்சியாக மரிக்கு முன், பிரியமுள்ள குமாரனாகிய தீமோத்தேயுவுக்கு எழுதினான். (2 தீமோ. 4:6-8).

இந்த நிரூபமும், 2 பேதுரு, 2, 3 யோவான் நிரூபங்களும், கடைசி நாட்களில் உண்டாகும் சமய நிலைத் தவறுதல் காலத்தில், தேவனுடைய உண்மையான ஊழியர் நடந்து கொள்ள வேண்டிய மாதிரியையும், கொடுக்க வேண்டிய சாட்சிகளையும் குறிக்கின்றன.

அக்காலத்திலேயே, சபைகளின் பின் வாங்குதல் ஆரம்பித்துவிட்டது. "ஆசியா நாட்டிலிருக்கிற யாவரும் என்னை விட்டு விலகினார்கள்" என்று பவுல் கூறுகிறான். (2தீமோ. 1:15).

ஆசிரியர் : அப்போஸ்தலனாகிய பவுல்

காலம் : கி.பி. 63 க்கும் கி.பி. 65 க்கும் இடையில்

இந்த நிரூபத்தில் 4 அதிகாரங்கள், 83 வசனங்கள் உள்ளன.

புத்தகத் தொகுப்பு :

1. தீமோத்தேயுவைக் குறித்த பவுலின் கரிசனைளும் ஆலோசனைகளும் அதி.1:1-2:26.
2. கடைசி காலத்தைப்பற்றிய முன்னறிவிப்பு அதி. 3:1-3:17

3. பவுலின் இறுதி வார்த்தைகளும், வாழ்த்துக்களும் அதி.4:1-4:22.

முக்கிய சம்பவங்களின் தொகுப்புகள் :

1. விசுவாசத்தைக் குறித்த பவுலின் சாட்சி அதி.1:1-8.
2. பவுலின் அழைப்பு அதி.1:9-18.
3. சுவிசேஷத்தினிமித்தம் கட்டப்படுதலும், தீமோத்தேயு விற்கான சிறப்பான ஆலோசனைகளும் அதி.2:1-26.
4. கடைசி காலத்தைப்பற்றிய முன்னறிவிப்பு அதி.3:1-9.
5. வேதவாக்கியங்களைக் குறித்த இரகசியங்கள் அதி.3:10-3:17.
6. பவுலின் இறுதி வார்த்தைகள் அதி.4:1-18.
7. வாழ்த்துச் சொல்லுதல் அதி.4:19-22.

தீத்து

தீத்து ஒரு கிரேக்க கிறிஸ்தவன். பவுல், இவன் உத்தம குமாரனென்கிறபடியால், இவனுடைய குணப்படுத்தலுக்குப் பவுல் காரணமாயிருக்கலாம். (தீத். 1:1)

புற மதத்திலிருந்து வந்த கிறிஸ்தவர்கள் விருத்தசேதனம் அடைய வேண்டுமோ, என்பதைத் தீர்மானிக்கும்படி, பவுலும் மற்றவர்களும் அந்தியோகியாவிலிருந்து எருசலேமுக்குப் போகும்போது, தீத்துவும் அவர்களோடு கூட போனான். (அப் 15:2) அங்கே சபையார் கூடி அப்படிச் செய்வது அவசியமில்லையென்று தீர்மானித்துக் கொண்டார்கள். ஆகவே, தீத்துவும் விருத்தசேதனம் பெறவில்லை. (கலா. 2:1-3)

இதன்பின், கொரிந்து சபையிலிருந்த குறைகளைச் சரிபடுத்தும்படி பவுல் இவனை அனுப்பினான். (2 கொரி. 7:13) தீத்து கொரிந்துவுக்குப் போய், திரும்பி வர தாமதித்ததினால், பவுல் துரோவாப் பட்டணத்திலிருந்து மக்கெதோனியாவுக்குப் போய், அங்கே அவனைச் சந்தித்து, கொரிந்துச் சபையின் செய்திகளைக் கேட்டறிந்து, சந்தோஷப்பட்டான். (2 கொரி. 7:6-7)

கொரிந்தியருக்கு எழுதிய இரண்டாம் நிருபத்தை, பவுல் தீத்து கையில் கொடுத்தனுப்பினான். (2 கொரி. 8:16-18) கிரேத்தாவுக்குப் போன சமயத்தில், பவுல் தீத்துவை அங்குள்ள குறைவுகளை நிவர்த்தி செய்யும்படி விட்டுப் போனான். (தீத். 1:5)

பின்பு, இவைகளைப்பற்றி ஒரு நிருபம் எழுதினான். (தீத். 1:6; 3:11) பவுல் இரண்டாம் முறை காவலில் வைக்கப்பட்

போது, இவனும் அவனோடு கூட இருந்தான். பின்பு, இவன் தல்மாத்தியா நாட்டிற்குப் போயிருந்தான். (2 தீமோ. 4:10)

தீத்து, பவுலின் விசேஷ நம்பிக்கையுள்ள ஒரு உதவிக்காரன். (2கொரி 8:23).

பவுல் மரித்தபின். தீத்து கிரேத்தா சபையின் கண்காணியாயிருந்து, அங்கே மரித்ததாகத் தெரிகிறது.

தீத்துவுக்கு எழுதின நிருபம்

இரண்டாம் முறைக் காவலில் வைக்கப்படுமுன், பவுல் மக்கெதோனியாவுக்குப் பிரயாணமாய்ப் போகும்போது, நிக்கபோலியாவிலிருந்து கி.பி. 67-ல் இந்த நிருபத்தை கிரேத்தா தீவிலிருந்த தீத்துவுக்கு எழுதினான். இதில் அநேக புத்திமதிகள் கொடுக்கப்பட்டன. அவையாவன:-

மூப்பரில் காணப்பட வேண்டிய இலட்சணங்கள், கிரேத்தா தீவின் பொய்ப் பிரசங்கிமார், கிறிஸ்தவர்கள் நடந்து கொள்ள வேண்டிய முறைகள், கிறிஸ்தவ போதனை, எச்சரிப்புகள் என்பவைகளே.

ஆசிரியர் : அப்போஸ்தலாகிய பவுல்

காலம் : கி.பி. 63 க்கும் கி.பி. 65 க்கும் இடையில்.

இந்நிருபத்தில் 3 அதிகாரங்கள், 46 வசனங்கள் உள்ளன.

புத்தகத் தொகுப்பு :

1. மூப்பர்களைப் பற்றிய போதனை அதி.1:1-1:16.
2. சபையைப் பற்றிய போதனை அதி.2:1-3:8.
3. ஆவிக்குரிய கடமைகள் அதி.3:9-3:15.

முக்கிய சம்பவங்களின் தொகுப்புகள் :

1. நித்திய ஜீவனைக்குறித்த வாக்குத்தத்தம் அதி.1:3.
2. மூப்பரை ஏற்படுத்துதல் அதி.1:5-9.
3. ஆரோக்கியமான உபதேசம் அதி.1:9-2:1.

4. முதிர்வயதினர் மற்றும் பாலிய வயதினருக்கான ஆலோசனைகள் அதி.2:2-2:8.
5. வேலைக்காரர்களுக்கான புத்திமதிகள் அதி.2:9-2:15.
6. கீழ்ப்படிதலின் அவசியங்கள் அதி.3:1-3:8.
7. வேதப்புரட்டுகளை விட்டு விலக ஆலோசனை அதி.3:9-3:15.

பிலேமோனுக்கு எழுதின நிருபம்

பிலேமோன் கொலோசே பட்டணத்துக் கிறிஸ்தவன். பவுல் இவனைக் குணப்படுத்தியிருக்கலாம்.

இவன் காணி, பூமியுள்ள செல்வாக்கானவன். அவனுடைய வீட்டில் சபை கூடினதாகத் தெரிகிறது. ஒநேசிமு பிலேமோனின் அடிமை. அவன் தன் எஜமானுடைய பணத்தைக் களவெடுத்துக் கொண்டு, ரோமாபுரிக்குப் போனான். பவுல் அங்கே காவலில் இருக்கும்போது, ஒநேசிமு பவுலைக் கண்டுபிடித்து, அவனிடம் போயிருந்த போது, கிறிஸ்தவனானான்.

பவுல் அவனைத் தனக்கு உதவியாக வைத்திருக்க விரும்பியும், அது சரியல்ல என்றெண்ணி, ஒரு நிருபம் எழுதி, ஒநேசிமு மூலம் பிலேமோனுக்கு அனுப்பினான். அதில், அவனை ஒரு அடிமை போலல்ல ஒரு சகோதரன் போல் ஏற்றுக்கொள்ளும்படி கேட்கிறான்.

இந்த நிருபம் ஒன்றே, பவுல் தனி ஆளுக்கெழுதின வைகளில் மீந்திருந்தது. இதில் ஒநேசிமு எடுத்த பணத்துக்கு பவுல், தான் உத்தரவாதியென்று, "அதை என் கணக்கிலே வைத்துக்கொள்ளும்" என்கிறான். (பிலே 18)

ஒநேசிமுவை விடுதலைப் பண்ணுமென்றெழுதாமல், அவனைச் சகோதரனைப் போல ஏற்றுக் கொள்ளும் என்றே பவுல் கேட்கிறான்.

இரட்சிப்பின் விதை, இந்நிருபத்தில் காணப்படுகிறது. ஒநேசிமு, தான் களவெடுத்த பணத்தைக் கொடுக்க இயலாதிருக்கையில், பவுல் அதை ஏற்றுக் கொண்டது அவன் விடுதலை பெறுவதற்கு ஏற்றதாயிருந்தது.

அவ்விதமே, பாவியாகிய மனுஷனின் பாவக் கடனைக் கிறிஸ்து கொடுத்துத் தீர்த்ததால், அவன் விடுதலை பெறக்கூடும்.

ஒநேசிமு பின்பு பெரோயா சபையின் தலைவனாய் இருந்தானெனச் சொல்லப்படுகிறது.

ஆசிரியர் : அப்போஸ்தலாகிய பவுல்

காலம் : கி.பி. 60

இப்புத்தகத்தில் ஒரு அதிகாரம் கொண்ட 25 வசனங்கள் உள்ளன.

புத்தகத் தொகுப்பு :

1. நன்றியும், ஜெபமும் 1 முதல் 7 வசனங்கள்.
2. ஒநேசிமுவிற்கான பரிந்துரை 8 முதல் 21 வசனங்கள்.
3. வாழ்த்தும், ஆசீர்வாதமும் 22 முதல் 25 வசனங்கள்.

முக்கிய சம்பவங்களின் தொகுப்புகள் :

1. அன்பின் செய்திகள் 1 முதல் 4 வசனங்கள்.
2. விசுவாசத்தின் அந்நியோன்யம் 6 முதல் 13 வசனங்கள்.
3. ஜெபத்தைக் குறித்த செய்திகள் 5ம் வசனம்.
4. ஐக்கியத்தின் செய்திகள் 17ம் வசனம்.
5. நன்மையான காரியம் 14 முதல் 16 வசனம்.
6. உள்ளத்தை இளைப்பாறப்பண்ணுதல் 18 முதல் 22 வசனங்கள்.
7. வாழ்த்து சொல்லுதல் 23 முதல் 25 வசனங்கள்.

எபிரெயருக்கு எழுதின நிரூபம்

ஆக்கியோன் - இது யாரால் எழுதப்பட்டதென்று குறிக்கப்படவில்லை. பவுல், லூக்கா, அப்பொல்லோ, பர்னபா என்பவர்களில் ஒருவன் எழுதியிருப்பான் என்பது உத்தேசம். எழுதின காலமும் நிச்சயிக்கக் கூடாதது. ஆனால், எருசலேமின் அழிவைப் பற்றிக் குறிப்பிடாததினால், கி.பி. 70க்கும் முன் எழுதப்பட்டிருக்க வேண்டும்.

இதன் நோக்கம், வேதாகமத்தில் மற்ற எந்தப் பகுதிகளைப் பார்க்கிலும், கிரியையினால் இரட்சிப்படைய லாமென்ற லேவியரின் பிரமாணத்தை, யூதக் கிறிஸ்தவர்கள் முற்றிலும் விட்டுவிட வேண்டுமென்பதே. இயேசு கிறிஸ்துவின் பிராயச்சித்தப்பலியின் மேல் விசுவாசம் வைப்பதினாலேயே, இரட்சிப்பு வருமென்பதை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

கிறிஸ்தவர்களாயிருந்த இந்த யூதர், இயேசு கிறிஸ்துவின் நம்பிக்கை வைத்தும், மோசேயின் பிரமாணத்தையும் கைக்கொள்ள வேண்டுமென்று எண்ணினார்கள். அப்படி அவர்கள் வைராக்கியமாயிருந்த காரியம், அப்போஸ்தலர் நாட்களிலேயே தொடங்கிற்று. யாக்கோபு அதைக் குறித்துப் பவுலுக்குச் சொன்னான். (அப். 21:20-21)

ஆசிரியர் : அப்போஸ்தலனாகிய பவுல் என்று பொதுவாக நம்பப்படுகிறது.

காலம் : கி.பி. 70க்கு முன்

இந்நிருபத்தில் 13 அதிகாரங்கள், 303 வசனங்கள், 28 பழைய ஏற்பாட்டு மேற்கோள்கள் உள்ளன.

புத்தகத் தொகுப்பு :

1. தேவனுடைய மேன்மையும் இறுதியான வெளிப்பாடும் அதி. 1:1–1:4.
2. இயேசு கிறிஸ்துவின் மேன்மையும், ஊழியமும் அதி.1:5–10:39.
3. விசுவாசத்தைக் கற்றுக்கொள்ள வேண்டியதின் அவசியம் அதி.11:1–13:25.

முக்கிய சம்பவங்களின் தொகுப்புகள் :

1. பிதாவின் மேன்மை பற்றிய விளக்கங்கள் 1 வது அதிகாரம்.
2. உபத்திரவத்தில் பூரணப்படுதல் பற்றிய விளக்கங்கள் 2 வது அதிகாரம்.
3. இளைப்பாறுதலில் பிரவேசித்தல் பற்றிய விளக்கங்கள் 3, 4 அதிகாரங்கள்.
4. பிரதான ஆசாரியனைக் குறித்த இரகசியங்கள் 5 முதல் 10 அதிகாரங்கள்.
5. விசுவாசத்தின் விளக்கங்கள் 11 வது அதிகாரம்.
6. தகப்பனின் சிட்சை பற்றிய விளக்கங்கள் 12 வது அதிகாரம்.
7. சகோதர சிநேகத்தில் நிலைத்திருத்தல் பற்றிய விளக்கங்கள் 13 வது அதிகாரம்.

யாக்கோபு எழுதின பொதுவான நிருபம்

அப்போஸ்தலனாகிய யாக்கோபு இவன் சின்ன யாக்கோப்பு என்றும் அழைக்கப்பட்டார் (மாற்கு 15 : 40) இவன் எருசலேம் சபைக்கு தலைவனாய் இருந்தான் (அப். 15 : 13, அப். 21 : 18 கலா. 1 : 19) இவன் அப்போஸ்தலனாகிய யூதாவின் சகோதரன் (லூக்கா. 6 : 16 யூதா. 1.) இவனுடைய தாயின பெயர் கிலெயோப்பா மரியாள் ; இவள் இயேசுவின் தாயாகிய மரியாளின் சகோதரி. (யோவான். 19 : 25, மாற்கு 15 : 40)

இந்த நிருபம் குறிப்பிட்ட சபைக்கென்றல்ல, கிறிஸ்தவர்களுக்குப் பொதுவாக எழுதப்பட்டு, பொதுவான நிருபம் எனப்படுகிறது. ஆனாலும், சிதறியிருந்த யூதக் கிறிஸ்தவர்களையே நோக்கியது. இவர்கள் விசுவாசியாத யூதர்களாலும், மற்றவர்களாலும் துன்புறுத்தப்பட்டார்கள். அப்படித் துன்புறுத்தல் வரும்போது, அது அவர்கள் விசுவாசத்தைச் சோதிக்க வருகிறதென்றறிந்து, பொறுமையோடு சகிக்க வேண்டுமென்று யாக்கோபு குறிப்பிடுகிறான்.

ஆசிரியர் : இயேசு கிறிஸ்துவின் சகோதரனாகிய யாக்கோபு.

காலம் : கி.பி. 50

இந்நிருபத்தில் 5 அதிகாரங்கள், 108 வசனங்கள், 2 பழைய ஏற்பாட்டு மேற்கோள்கள் உள்ளன.

புத்தகத் தொகுப்பு :

1. சோதனைகள் 1:1–1:18.
2. நியாயப்பிரமாணம் 1:19–5:12.
3. ஊழியம் 5:13–5:20.

முக்கிய சம்பவங்களின் தொகுப்புகள் :

1. சோதனைகள் அதி.1:2-1:18.
2. மெய்பக்தியும், மெய்விசுவாசமும் அதி. 1:19-2:26.
3. மெய்வாழ்க்கையும் மெய்ஞானமும் அதி.3:1-3:18.
4. மனந்திரும்புதல் அதி.4:1-4:12.
5. அடைக்கலமும் நம்பிக்கையும் அதி.4:13-5:11.
6. சாட்சியும் குணமாகுதலும் அதி.5:12-5:18.
7. மெய் ஊழியம் அதி.5:19, 20.

பேதுரு

பேதுரு என்றால் "கல்" என்று அர்த்தம். இவன் யோனாவின் மகன். அந்திரேயாவின் சகோதரன். யோவான் ஸ்நானனின் சீஷனாயிருந்து, பின்பு இயேசுவின் சீஷனானான்.

முதலாவது, பெத்சாயிதாவில் மீன் பிடிகாரனாயிருந்து, பின்பு கப்பர்நகூமிலும் அந்தத் தொழில் செய்தான். (மத் 8:5, 14; யோவா 1:44)

இயேசு அவனுக்குக் "கேபா" எனப் பெயரிட்டார். (யோவா. 1:42). அவன் பலவித பெலவீனமுள்ளவனும், நாணலைப் போல அசையும் சுபாவம் உள்ளவனுமாய் இருந்தும், "நீ கேபா என்னப்படுவாய்" என்று கர்த்தர் சொன்னது, அவனில் தாம் உருவாக்கப் போகும் கல்லின் சுபாவத்தை வெளிப்படுத்துகிறது.

அவன் சிமியோன், சீமோன், சீமோன் பேதுரு, யோனாவின் மகனாகிய சீமோன் என்றும் அழைக்கப் பட்டான்.

கலிலேயாவில் ஊழியஞ் செய்த நாட்களிலேயே இயேசு அவனை அப்போஸ்தல ஊழியத்துக்கு அழைத்தார். (மத். 4:18, 19)

பொதுவாய் இவனுடைய பெயர் அந்திரேயாவின் பெயரோடு சேர்த்துக் குறித்துள்ளது. (மத் 10:2)

பேதுரு அஃவசரமான குணமுள்ளவனும், அன்பு மாறாதவனும், முதன்மை தேடினவனும், வழக்கமாகப் பன்னிருவருக்காகப் பேசினவனுமாயிருந்தான்.

பிலிப்புச் செசரியாவில், இயேசு அவனுடைய மனதை அறியும்படி கேட்ட கேள்விக்கு மறு உத்தரவு கொடுத்தான். (மத் 16:13-17).

அவனும் யாக்கோபு, யோவான் என்பவர்களோடு இயேசு மறுரூபமான வேளையில் கூட இருந்தான். (மத் 17:1-8)

தன் கால்களைக் கழுவாதபடி இயேசுவைத் தடை செய்யப் பார்த்தான். (யோவா. 13:6-8) இயேசுவைப் பிடித்தபோது, மல்குஸ் என்பவனின் வலது காதை வெட்டினான். (யோவா. 18:10)

இயேசு கடலின் மேல் நடந்த சமயத்தில், பேதுருவும் அப்படிச் செய்யத் துணிந்தான். (மத் 14:25-31)

இயேசு விசாரணை செய்யப்பட்ட தருணத்தில், பேதுரு அவரை மூன்று தரம் மறுதலித்தான். இயேசு இதைக் குறித்து அவனுக்கு முன்னறிவித்திருந்தார். (மத் 26:33-35; 69-75).

இயேசு உயர்த்தெழுந்த பின்பு, பேதுரு அற்புதங்கள் செய்து, சுவிசேஷத்தைப் பிரசங்கித்தான். பெந்தெகொஸ்தே நாளில் பலமான பிரசங்கம் செய்தான். (அப். 2:14-38)

ஏரோது, அகிரிப்பா, பேதுருவைக் காவலில் வைத்தபோது தேவதூதனால் விடுவிக்கப்பட்டான். (அப் 12:1-17).

கடைசி நாட்களில் பேதுரு ரோமாபுரிக்குப் போன வேளையில், நேரோ ராயனால் சிலுவையிலறையப் பட்டான். பேதுருவின் வேண்டுதலின்படி, தலைகீழாய் சிலுவையிலறையப்பட்டான் என்று தெரிகிறது. கி.பி. 68.

மாற்கு தன் சுவிசேஷத்தை எழுதுவதற்குப் பேதுருவிடம் உதவி பெற்றான்.

பேதுரு இரண்டு நிரூபங்கள் எழுதினான். மேலும் இவனைப் பற்றி வேதாகமத்தில் குறித்துள்ள சில சம்பவங்களாவன:-

இவனுடைய மாமியார் சுகமடைந்தது. (மத். 8:14) அனனியா, சப்பீராள் என்பவர்கள் இவனால் கண்டிக்கப் பட்டது. (அப். 5:1-11) கொர்நேலியு வீட்டில் இவன் செய்தவை. (அப். 10:34-48). இவனுக்குக் கிடைத்த தரிசனம். (அப். 10:11-16).

பேதுரு எழுதின பொதுவான முதலாம் நிருபம்

பேதுரு இந்நிருபத்தை ரோமாபுரியிலிருந்து எழுதினான். இது ஆசியாவில் சிதறியிருந்த யூதருக்கும் புறஜாதிக் கிறிஸ்தவர்களுக்கும் எழுதப்பட்டது. அந்நாட்களில் நேரோ ராயன் கிறிஸ்தவர்களைத் துன்புறுத்தினான். கி.பி. 64-67ல் கிறிஸ்தவர்கள் அக்கிரமக்காரரென்று சொல்லி, புறஜாதியார் அவர்களுக்கு விரோதமாகப் பேசினார்கள். (1 பேது. 2:12)

அவர்களுக்கு ஆறுதலும் தேறுதலும் உண்டாகும்படி பேதுரு இந்நிருபத்தை வரைந்தான்.

ஆசிரியர் : அப்போஸ்தலனாகிய சீமோன் பேதுரு

காலம் : கி.பி. 67- கி.பி. 68

இப்புத்தகத்தில் 5 அதிகாரங்கள், 105 வசனங்கள், 5 பழைய ஏற்பாட்டு மேற்கோள்கள் உள்ளன.

புத்தகத் தொகுப்பு :

1. துதி அதி.1:1-1:12.
2. பரிசுத்தத்திற்கான அழைப்பு மற்றும் அதிகாரங்களுக்கு கீழ்படிதல் அதி.2:13-3:7.
3. கடமைகளும் நோக்கமும் அதி.3:8-5:14.

முக்கிய சம்பவங்களின் தொகுப்புகள் :

1. ஜீவனுள்ள நம்பிக்கையும், ஆத்தும இரட்சிப்பும் அதி.1:1-1:9.

2. அழிவில்லாத வித்து அதி.1:23.
3. ஞானப்பாலின் இரகசியங்கள் அதி.2:3.
4. தேவசித்தமும் கீழ்ப்படிதலும் அதி.2:15-3:7.
5. இயேசு காவலிலுள்ள ஆவிகளுக்கு பிரசங்கித்தல் அதி.3:19, 20.
6. பாடுகளுக்கு பங்காளிகள் அதி.4:13-19.
7. வாடாத கிரீடம் மற்றும் நித்திய மகிமை அதி.5:2-5:14.

2. அழிவில்லாத வித்து அதி.1:23.
3. ஞானப்பாலின் இரகசியங்கள் அதி.2:3.
4. தேவசித்தமும் கீழ்ப்படிதலும் அதி.2:15-3:7.
5. இயேசு காவலிலுள்ள ஆவிகளுக்கு பிரசங்கித்தல் அதி.3:19, 20.
6. பாடுகளுக்கு பங்காளிகள் அதி.4:13-19.
7. வாடாத கிரீடம் மற்றும் நித்திய மகிமை அதி.5:2-5:14.

பேதுரு எழுதின பொதுவான இரண்டாம் நிருபம்

முதலாம் நிருபம் எழுதினவர்களுக்கே பேதுரு இதையு ரோமாபுரியிலிருந்து தான் மரிக்கிறதற்கு சமீபத்தி எழுதினான். (2 பேது. 3:1) "என் கூடாரத்தை விட்டுப் போவ சீக்கிரத்தில் நேரிடும்" என்கிறான் (2 பேது. 1:13).

"சகோதரரே, உங்கள் அழைப்பையும் தெரிந் கொள்ளுதலையும் உறுதியாக்கும்படி ஜாக்கிரதை யிருங்கள்". (2 பேது. 1:10). இதுவே பேதுருவி எச்சரிக்கை.

பேதுருவின் முதலாம் இரண்டாம் நிருபங்களுக் இடையிலுள்ள வித்தியாசம்.

முதலாம் நிருபத்தில் நம்பிக்கை, இரண்டாவதில் அறி என்பவை முக்கிய விஷயங்கள்.

முதலாம் பேதுரு, துன்பத்தை அநுபவிக் கிறிஸ்தவர்கள் இயேசு அடைந்த பாடுகளைத் தங்களு முன் மாதிரியாக வைக்க வேண்டுமென்பதும்.

இரண்டாவது பேதுரு, விசுவாசிகள் பொ போதனைகளால் ஏமாற்றப்படாமல், இயேசு இரண்டா வருவதை எதிர்பார்த்து, அதற்கு ஆயத்தமாக வேண் என்பதுமாகும்.

இவ்விரண்டு நிருபங்களிலும், ஜலப்பிரளயத் பற்றியவை. சிலபேர் மாத்திரம் இரட்சிப்படை தேவனுடைய நீடிய பொறுமை. வேத வாக்கியங்க

உண்மை ஆகியவைகளைப் பற்றிக் குறிக்கப்பட்டுள்ளன. (1 பேது. 3:2; 2பேது 2:5)

ஆசிரியர்: அப்போஸ்தலனாகிய சீமோன் பேதுரு

காலம் : கி.பி. 67- கி.பி. 68

இந்நிரூபத்தில் 3 அதிகாரங்கள், 61 வசனங்கள் உள்ளன.

புத்தகத் தொகுப்பு :

1. கிருபையில் வளருதல் மற்றும் சத்தியத்தின் மேலுள்ள ஆதாரம் அதி.1:1-1:21.
2. கள்ளப் போதகர்களுக்கு எதிரான எச்சரிப்பு அதி.2:1-2:22.
3. கிறிஸ்துவின் 2ம் வருகையும் 3ம் வருகையும் அதி.3:1 - 3:18.

முக்கிய சம்பவங்களின் தொகுப்புகள் :

1. வாக்குத்தத்தங்கள் அதி.1:4.
2. தீர்க்கதரிசனங்களின் வசனம் அதி.1:19.
3. கள்ளத்தீர்க்கதரிசிகள், கள்ளப்போதகர்கள் பற்றிய விளக்கங்கள் அதி.2:1.
4. சத்திய மார்க்கம், நீதியின் மார்க்கம் பற்றிய விளக்கங்கள்அதி. 2:2-2:21.
5. ஆக்கல், காத்தல், அழித்தல் பற்றிய விளக்கங்கள் அதி.3:5-7.
6. 2-ம் வருகை, 3ம் வருகை பற்றிய விளக்கங்கள் அதி.3:8-12.
7. புதியவானம், புதியபூமி, இரட்சிப்பு பற்றிய விளக்கங்கள் அதி.3:13-3:18

அப்போஸ்தலனாகிய யோவான்

அப்போஸ்தலனாகிய யோவான் செபதேயுவின் மகன், யாக்கோபின் சகோதரன். (மாற். 1:19) இவனுடைய தாய் சலோமே என்பவள் (மத். 27:56; மாற். 15:40) இவன் இயேசுவுக்கு மிகவும் அன்பாய் இருந்த சீஷன் (யோவான். 19 : 26 யோவான். 20 : 2) இவனுடைய சகோதரனாகிய யாக்கோபு இரத்த சாட்சியாக மரித்த முதல் அப்போஸ்தலனாவான். (அப். 12 : 2)

செபதேயுவுக்கு கூலியாட்கள் இருந்தார்கள். (மாற். 1:20) சலோமே தன் ஆஸ்திகளால் இயேசுவுக்கு ஊழியஞ் செய்தாள். (லூக். 8:3) இவைகளிலிருந்து அவர்கள் செல்வாக்குள்ளவர்கள் எனத் தெரிகிறது.

யோவான் ஸ்நானன் சொன்னதைக் கேட்டு, இயேசுவுக்குப் பின் சென்ற சீஷர் இருவரில் இவனும் ஒருவன். (யோவா. 1:35-37).

யாக்கோபும், யோவானும் வலைகளைப் பழுது பார்த்துக் கொண்டிருக்கையில், இயேசு அவர்களை அழைத்தவுடனே, அவருக்குப் பின் சென்றார்கள். (மாற். 1:19-20) பின்பு, அவர்களை அப்போஸ்தலராக்கினார். (மத். 10:2).

இவ்விருவரும் இடி முழக்க மக்கள் என்று அர்த்தங் கொள்ளும் "பொவனெர்கேஸ்" என்று பெயரிடப்பட்டார்கள். (மாற். 3:17)

யோவான் எவ்வளவு காலம் அங்கே இருந்தான்? எப்பொழுது அவ்விடத்திலிருந்து போனான்? எங்கே போனான் என்று நிச்சயமாய்ச் சொல்ல முடியாது.

தெரிகிறது. வெளிப்படுத்தல் புஸ்தகமும், நிரூபங்கள் மூன்றும் சுவிசேஷமும் யோவானால் எழுதப் பட்டுள்ளன.

பிற்காலத்தில், இவன் எபேசு சபையில் மூப்பனாயிருந்து, ஊழியஞ் செய்ததாகச் சொல்லுகிறார்கள். மேலும், இவன் ரோமராயனாகிய திராஜன் (Trajan) (கி.பி. 98-117) அரசாண்டபோது, இருந்தானென்றும் தெரிகிறது. வயோதிப நாட்களில் இவனைக் கிறிஸ்தவ ஆராதனைக்குக் கொண்டு போனார்கள் என்றும், அத்தருணங்களில் இவன்; "என் சிறு பிள்ளைகளே! ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்" என்று சபையாருக்குச் சொல்வது வழக்கம் என்றும் சொல்லப் படுகிறது.

முதல் அப்போஸ்தலரில், யோவான் மாத்திரம் இயற்கையான மரணமடைந்ததாகத் தெரிய வருகிறது.

யோவான் எழுதின முதலாம் நிருபம்

இந்நிருபத்தில் 21 தடவைகளில் இயேசு தேவனுடைய குமாரன் என்று குறிக்கப்பட்டுள்ளது. ஆகவே, இயேசுவின் தெய்வீகமும், தேவனுக்கும் இயேசுவுக்கும் இடையிலுள்ள சம்பந்தமும் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

ஆசிரியர் : அப்போஸ்தலனாகிய யோவான்

காலம் : கி.பி. 85

இந்நிருபத்தில் 5 அதிகாரங்கள், 105 வசனங்கள் உள்ளன.

புத்தகத் தொகுப்பு :

1. கிறிஸ்தவ வாழ்க்கையும், பிதா குமாரனோடு உள்ள ஐக்கியமும் அதி. 1:1-2:28.
2. கிறிஸ்தவ வாழ்க்கையும் தெய்வீக சுவிகாரப் புத்திர அனுபவமும் அதி. 2:29-4:6.
3. கிறிஸ்தவ வாழ்க்கையும் கிறிஸ்துவுக்கு ஒப்பான வாழ்க்கையும் அதி.4:7-5:21.

முக்கிய சம்பவங்களின் தொகுப்புகள் :

1. ஐக்கியம் பற்றிய விளக்கங்கள் 1 வது அதிகாரம்.
2. பாவமன்னிப்பு, சத்திய அபிஷேகம், அறிக்கை யிடுதல் பற்றிய விளக்கங்கள் 2 வது அதிகாரம்.

3. அன்பு கூருதலும், நிலைத்திருத்தலும் 3 வது அதிகாரம் (4:3).
4. அன்பு கூருதல், நிலைத்திருத்தல், உலகத்தை ஜெயித்தல் பற்றிய விளக்கங்கள் 4 வது அதிகாரம்.
5. தேவ சாட்சியை ஏற்றுக்கொள்ளுதல் அதி.5:9-11.
6. விசுவாசம் 5:13-15.
7. பாவத்துக்கு விலகி தன்னை காத்துக்கொள்ளுதல் அதி.5:16-21.

யோவான் எழுதின மூன்றாம் நிருபம்

கிறிஸ்தவ சத்தியமே இந்த நிரூபத்தின் முக்கிய விஷயம். தொடக்கத்திலும், முடிவிலும் யோவான் இதைப் பற்றிக் குறிப்பிடுகிறான். (3யோவா. 3, 12)

அக்காலத்தில் ஒரு சபைக்குத் தலைவனாயிருந்த தியாத்திரேப்பு என்பவனுக்கு யோவான் ஒரு நிருபம் எழுதியும், அவன் அதைக் கவனிக்கவில்லை. அது மாத்திரமல்ல ; யேவான் அனுப்பின ஆட்களையும் அவன் ஏற்றுக்கொள்ளவில்லை. அவர்களை ஆசரித்தவர்களை யும் சபையிலிருந்து நீக்கிப் போட்டான்.

ஆனபடியால், அச்சபையிலிருந்த காயு என்பவனுக்கு இந்தக் கடிதத்தை யோவான், ஒரு அப்போஸ்தலன் போலல்ல, ஒரு மூப்பன் எழுதுவதுபோல் எழுதுகிறான். காயு என்று பெயருள்ள மூன்று பேர் புதிய ஏற்பாட்டில் காணப்படுகிறார்கள். ஆனல் இந்தக் காயு பவுல் குணப்படுத்தினவனும், அவன் வீட்டில் சபைகூடினது என்று குறிக்கப்பட்டவனுமானவன். (2கொரி. 1:1, 15; ரோம. 1:2) யோவான் இவனை நான்குமுறை "பிரியமானவனே" என்றழைக்கிறான். (3 யோவா. 1, 2, 5, 11)

அவன் உணமையாய்த் தேவனைப் பின்பற்று கிறவர்களுநகு உதவி செய்து, அவர்களை ஏற்றுக் கெள்வதற்காக அவனை மெச்சிப் பேசுகிறான்.

தெமேத்திரியு என்பவனிடம் இக்கடிதத்தைக் கொடுத்தனுப்பினதாகத் தெரிகிறது. இவனைப் பற்றி யோவான் புகழ்ந்து எழுதுகிறான். "சத்தியத்தாலும்

நற்சாட்சி பெற்றவன்" (3 யோவா. 12) என்பதில் சத்தியம் ஒரு ஆள்போல் வழங்கியுள்ளது.

இரண்டாம் நிருபத்தில், சமயநிலைத் தவறுதல் காலத்தில் ஒரு விசுவாசி நடந்து கொள்ள வேண்டிய முறையைப் பற்றியும், மூன்றாவதில், அப்படிப்பட்ட காலத்தில் விசுவாசிக்கு இருக்கும் உத்தரவாதத்தையும் குறிக்கிறான்.

இந்நிருபத்தில் :-

1. காயு திடப்படுத்தப்படுகிறான். (3யோவா. 5-8)
2. தியோத்திரேப்பு தண்டனைக்குட்படுத்தப் படுகிறான். (3யோவா. 9-10)
3. தெமேத்திரியு புகழப்படுகிறான். (3யோவா. 11-12)

ஆசிரியர் : அப்போஸ்தலனாகிய யோவான்

காலம் : கி.பி. 85க்கும் 95க்கும் இடையில்

இந்நிருபத்தில் ஒரு அதிகாரம் கொண்ட 14 வசனங்கள் உள்ளன.

புத்தகத் தொகுப்பு :

1. காயு திடப்படுத்தப்படுதல் 1 முதல் 8 வசனங்கள்.
2. தியோத்திரேப்பு தண்டனைக்குட்படுதல் 9, 10 வசனங்கள்.
3. தேமேத்திரியு புகழப்படுதல் 11 முதல் 14 வசனங்கள்.

முக்கிய சம்பவங்களின் தொகுப்புகள் :

1. சத்தியத்தின் படி நேசித்தல் 1 வது வசனம்.
2. சுகமாயிருத்தல் 2 வது வசனம்.
3. உண்மையான அன்பு 3 வது வசனம்.
4. சத்தியத்தில் நடந்து கொள்ளுதல் 4 முதல் 7 வசனங்கள்.
5. சத்தியத்திற்கு உடன் வேலையாட்கள் 8 முதல் 11 வசனங்கள்.
6. சத்தியத்திற்கு சாட்சி 12 வது வசனம்.
7. வாழ்த்துதல் 13, 14 வசனங்கள்.

அப்போஸ்தலனாகிய யூதா. அப்போஸ்தலனாகிய யாக்கோபின் சகோதரன் (சின்ன யாக்கோபு) (லூக். 6:16 யூதா.) இவருடைய தாயின் பெயர் கிலெயோப்பா மரியாள். இவள் இயேசுவின் தாயாகிய மரியாளின் சகோதரி (யோவான். 19:25. மாற்கு 15:40)

யூதா பொதுவான இரட்சிப்பைக் குறித்து எழுத யோசித்து, எழுதத் தொடங்கி, அந்நாட்களில் எழும்பின வேத புரட்டரைப் பற்றி எழுத ஏவப்பட்டான்.

ஆசிரியர் : இயேசு கிறிஸ்துவின் சகோதரனாகிய யூதா

காலம் : கி.பி. 65க்கும் கி.பி. 80க்கும் இடையில்

இந்நிருபத்தில் ஒரு அதிகாரம் கொண்ட 25 வசனங்களும், 1 பழைய ஏற்பாடு மேற்கோளும் உள்ளன.

புத்தகத் தொகுப்பு :

1. நிருபத்தின் நோக்கம் 1 முதல் 4 வசனங்கள்.
2. கள்ளப்போதகர்களுக்கு எதிரான எச்சரிப்பு 5 - 16 வசனங்கள்.
3. விசுவாசிகளுக்கான புத்திமதி 17-25 வசனங்கள்.

முக்கிய சம்பவங்களின் தொகுப்புகள் :

1. பொதுவான இரட்சிப்பு 1-3 வசனங்கள்.
2. விசுவாசம் 3 ம் வசனம்.

3. மறுதலித்தல் 4 வது வசனம்.
4. எதிர்த்துப் பேசுதல் 11-12 வசனங்கள்.
5. தூஷித்தல் 5-10 வசனங்கள்.
6. மார்க்கந்தப்பி அலைகிற நட்சத்திரங்கள் மற்றும் நியாயத்தீர்ப்பு 13-16 வசனங்கள்.
7. விசுவாசிகளுக்கான புத்திமதி 17-25 வசனங்கள்.

யோவானுக்கு வெளிப்படுத்தின விசேஷம்

இப்புஸ்தகம், "வெளிப்படுத்தல்" என்பதிலிருந்து, இது ஒரு தீர்க்கதரிசன புஸ்தகம் எனத் தெரிகிறது.

தேவன் இதிலுள்ளவைகளை, இயேசு கிறிஸ்துவுக்கு ஒப்புவித்து, அவர் தமது தூதன் மூலம் யோவானுக்கு வெளிப்படுத்தி, அவன் எழுதுகிறான். (வெளி 1:1)

இந்த யோவான் இயேசுவுக்கு அன்பான சீஷனாயிருந்த அப்போஸ்தலனானவன்.

ரோம ராயனாகிய டொமிஷியன் (Domitian) என்பவன் கிறிஸ்தவர்களைத் துன்புறுத்தின நாட்களில், இந்த யோவான் பத்மு தீவுக்கு அனுப்பப்பட்டிருந்தான். அங்கே இந்த தரிசனம் அவனுக்குக் கிடைத்தது. அடுத்த வருஷம், கி.பி. 96-ல் அவன் விடுதலையாக்கி எபேசுவுக்குப் போயிருக்கும் போது, இப்புஸ்தகத்தை எழுதினான்.

ஆசிரியர் : அப்போஸ்தலனாகிய யோவான்

காலம் : கி.பி. 95

இப்புத்தகத்தில் 22 அதிகாரங்கள், 404 வசனங்கள் உள்ளன.

புத்தகத் தொகுப்பு :

1. கண்டவைகள் 1வது அதிகாரம்.
2. இருக்கிறவைகள் 2, 3 அதிகாரங்கள்.
3. இனி சம்பவிப்பவைகள் 4 முதல் 22 அதிகாரங்கள்.

முக்கிய சம்பவங்களின் தொகுப்புகள் :

1. நட்சத்திரங்கள், குத்துவிளக்குகளின் இரகசியம் சபையின் எச்சரிப்பு பற்றிய விளக்கங்கள் 1 முதல் 3 அதிகாரங்கள்.
2. பரலோக சிங்காசனம் மற்றும் ஏழு முத்திரைகளின் இரகசியங்கள் 4 முதல் 8:1 .
3. ஏழு எக்காளங்களும் ஏழு கோப கலசங்களும் 8:2-16:21.
4. மகா பாபிலோன் 17:1 - 19:5.
5. ஆட்டுக்குட்டியானவரின் கல்யாணமும், ஆயிரவருட அரசாட்சியும் 19:6 - 20:6.
6. சாத்தானின் முடிவு 20:7 - 20:10.
7. வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்பு, புதியவானம் புதிய பூமி, புதிய எருசலேம் பற்றிய விளக்கங்கள் 20:11 - 22:21.

சிறந்தவைகளில் சிறந்தது
சத்திய வேதமே
என்பதற்கான காரணங்கள்

இந்த பரிசுத்த வேதாகமத்தின் தீர்க்கதரிசன வசனங்களை வாசிக்கிறவனும், கேட்கிறவர்களும், இதில் எழுதியிருக்கிறவைகளைக் கைக்கொள்ளுகிறவர்களும் பாக்கியவான்கள். (வெளி. 1:3).

இந்த வார்த்தைகளைக் கேட்டு, இவைகளின்படி செய்கிறவன் எவனோ, அவனே தன் வீட்டைக் கன்மலையில் மேல் கட்டின புத்திமான். (மத். 7:24). தேவனுடைய வார்த்தைகளைக் கேட்டு அதைக் காத்துக் கொள்கிறவர்களே அதிக பாக்கியவான்கள். (லூக். 11:28).

நாத்திகர் கூட்டமொன்றில் என்னதான் பேசுகின்றார்கள் என்று கவனிக்க தேவ ஊழியர் ஒருவர் சென்றிருந்தார். தங்களுடைய புத்தகங்கள் மற்றும் பிரசுரங்களை ஒருவர் உயர்த்திப் பேசிக்கொண்டிருந்தார். இந்த ஊழியரை அறிந்திருந்த ஒருவர் வேதப்புத்தகத்தை மட்டுப்படுத்தும் படிக்கு அதை எல்லா புத்தகங்களுக்கும் அடியில் கொண்டு போய் வைத்தார். தேவ ஊழியர் அங்கே கூடியிருந்த அனைவரையும் நோக்கி, எல்லா புத்தகங்களுக்கும் ஆதாரம் வேதப் புத்தகமே என்று எனது நண்பர் செய்து காட்டினார் என்றார். ரோஷம் அடைந்த அந்த நாத்திகரோ வெடுக்கென்று வேதப் புத்தகத்தை அடியிலிருந்து உருவி எல்லாப் புத்தகத்திற்கும் மேலாக வைத்தார். ஊழியரும் விடுவதாக இல்லை. சகல புத்தகங்களையும் விட வேதமே

உயர்ந்தது என்று கூறினார். உலகில் எந்த புத்தகத்தையும் விட உயர்ந்ததும், உன்னதமானதும் வேதப் புத்தகமே. ஏனெனில் கர்த்தரே இதன் ஆசிரியர். கிறிஸ்துவே இதன் மையம். பரிசுத்த ஆவியானவரே இதன் ஆக்கியோன். நீங்களும் நானும் இதைப் பின்பற்றுவதால் பரிசுத்தமாக்கப்பட்டு நம்மைப் பரலோகம் சேர்ப்பதே இதன் இலக்கு.

இந்த வேத வாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள். அவைகளால் உங்களுக்கு நித்திய ஜீவன் உண்டு. இயேசு கிறிஸ்துவைக் குறித்து சாட்சி கொடுக்கிறவைகளும் அவைகளே (யோவா. 5:39). மேலும் வேதத்தைக் கேளாதபடி தன் செவியை விலக்குகிறவனுடைய ஜெபமும் அருவருப்பானதே (நீதி. 28:9). சத்தியத்தை அறியுங்கள், சத்தியமே உங்களை விடுதலையாக்கும். (யோவா. 8:32). மேலும் இயேசு கிறிஸ்துவைத் தள்ளி அவருடைய வார்த்தைகளை ஏற்றுக் கொள்ளாதவனை இதே வேத வசனங்களே கடைசி நாளில் நியாயந்தீர்க்கும் (யோவா 12:48). வானமும் பூமியும் ஒழிந்து போகும். ஆனால் இந்த பரிசுத்த வேதாகமத்தின் வார்த்தைகளோ ஒழிந்து போவதில்லை. (மத். 24:35). மேலும் வேதாகமத்தின் பல சிறப்புகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

1. பாப்பிரஸ் என்ற நாணலை கிரேக்கர்கள் பேப்பராக பயன்படுத்தினர். இந்த பாப்பிரஸ் Biblos என்ற துறைமுகத்திலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டது. புத்தகம் என்று அர்த்தங்கொள்ளும் Bibilo என்ற பதத்திலிருந்து தான் Bible என்ற வார்த்தை வந்தது. ஒரு புத்தகத்திற்கு புத்தகம் என்ற பெயரையுடைய ஒரே புத்தகம் பரிசுத்த வேதாகமமே.

2. 66 புத்தகங்கள் இதில் அடங்கியுள்ளன. பழைய ஏற்பாடு 39, புதிய ஏற்பாடு 27.

3. கி.மு. 1500 லிருந்து கி.பி. 100 வரை இது எழுதி முடிக்கப்பட்டது. அதாவது எழுதி முடிக்க 1600 வருடங்கள் ஆயின. இதனோடே 40 சந்ததிகளின் காலம் கடந்து சென்றுள்ளது.

4. 40 பேர் எழுதியுள்ள இந்த 66 புத்தகங்களுக்குள் எந்த கருத்து வேறுபாடும் கிடையாது.

5. Bible ஆசியா, ஐரோப்பா, ஆப்பிரிக்கா ஆகிய மூன்று கண்டங்களில் எழுதப்பட்டுள்ளது.

6. உலகில் முதன் முதலில் கூட்டன்பர்க் அச்சு இயந்திரத்தில் அச்சடிக்கப்பட்டது பரிசுத்த வேதாகமமே. இதன் 21 பிரதிகள் இன்றும் உள்ளன். இதன் ஒரு பிரதி நியூயார்க்கில் உள்ள General Technological Seminary இல் உள்ளது. அச்சடிப்பில் எப்பொழுதும் இருப்பது வேதாகமமேயாகும்.

7. அரசியல்வாதியான மோசே, ஆடு மேய்த்த தாவீது, இராணுவ தளபதியாகிய யோசுவா, பானபாத்திரக்காரனாகிய நெகேமியா, பிரதம மந்திரியாகிய தானியேல், பாக்டர் லூக்கா, இராஜாவாகிய சாலமோன், வரிவசூலித்த மத்தேயு, யூத ரபியாகிய பவுல், மீன் பிடித்த பேதுரு போன்றவர்களின் வார்த்தைகள் உண்டு. ஆனால் இதன் உண்மையான ஆசிரியர் பரிசுத்த ஆவியானவரே. (2தீமோ . 3:16).

8. உலகிலேயே மிகவும் விலையுயர்ந்த புத்தகம் கூட்டன்பர்க் அச்சகத்தில் அச்சடிக்கப்பட்ட கோடாக்ஸ் ஷைனாதுக்ஸ் என்ற வேதாகமத்தின் பிரதியாகும். இதன் விலை ஒரு இலட்சம் டாலராகும்.

9. இதுவரை 25,000-த்திற்கும் மேற்பட்ட அதிகமான இடங்களில் மேற்கொள்ளப்பட்ட புதைப்பொருள் ஆராய்ச்சிகள் யாவும் வேதத்திற்கு ஆதாரமாகவே உள்ளது. ஒன்று கூட வேதாகமத்திற்கு மாறுபட்ட கருத்தைக் கூறவில்லை என்று "Nelson Glucek" என்கின்ற ஆராய்ச்சியாளர் கூறுகின்றார்.

10. Readers Digest 17 மொழிகளிலும், Guinness Book of World Records 23 மொழிகளிலும், காரல்மார்க்ஸின் தத்துவங்கள் 112 மொழிகளிலும், லெனினின் புரட்சி 216 மொழிகளிலும், Walt Dinsey - யின் கார்ட்டூன் கதைகள் 267 மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. ஆனால் Bible ஒன்று தான் 2000 மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. தற்போதும் ஒவ்வொரு 13 நாட்களுக்கு ஒரு முறை புதிய ஏற்பாட்டின் ஒரு பகுதி மொழிபெயர்க்கப்பட்டுக் கொண்டே இருக்கிறது.

11. ஒரு புத்தகத்தின் கையெழுத்து பிரதிகளைக் கொண்டுதான் அதன் தரம் கணக்கிடப்படும். புதிய ஏற்பாட்டிற்கு கிடைத்திருக்கும் கையெழுத்துப் பிரதிகள் 24, 633. அதற்கு அடுத்தபடியாக வரும் ஓமருடைய இலியட்டுகள் வெறும் 643 கையெழுத்து பிரதிகளே உள்ளன.

12. வேதமே உலகத்தில் உள்ள எல்லா இன, ஜாதி மக்களுக்கும் ஏற்ற போதனைகளைத் தருகின்றது. சிறுவர் முதல் முதியோர்வரை எல்லோருக்கும் இது போதிக்கின்றது.

13. 1906 ம் ஆண்டு டிசம்பர் 4ல் முதல் வானொலி ஒலிபரப்பு செய்யப்பட்டபோது லூக்கா சுவிசேஷத்தில் உள்ள கிறிஸ்துமஸ் வாழ்த்துகள் ஒலிபரப்பப்பட்டது.

14. 6,000த்திற்கும் மேற்பட்ட சரித்திர நிகழ்ச்சிகளை வேதம் தன்னில் அடக்கியுள்ளது.

15. முதன் முதலில் வானவெளியில் ஃபோர்மன் என்ற வானவெளி வீரர் 1968-ம் ஆண்டு ஆதியாகமம் 1:1-ல் உள்ள ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார் என்று வாசித்தார்.

16. இன்று உலகில் அதிகமாக விற்பனையாகும் புத்தகம் வேதாகமம் ஆகும். Revised Standard Version-னின் முதற்பதிப்பே 10 இலட்சமாகும். அச்சடித்த வேதாகமம் மட்டும் ஒன்றன் மேல் ஒன்றாக அடுக்கினால் அது இமயமலையின் உயரத்தைக் கூட தாண்டுமாம்.

17. மற்ற புத்தகங்கள் யாவும் மூளைக்குப் பேசுகின்றன. ஆனால் வேதாகமே நமது இருதயத்திற்கு பேசப்பட்டதாகும்.

18. சர் ஜான் லெபக் தலைமையில் உலகத்தில் தலைசிறந்த 100 புத்தகங்களைத் தேர்ந்தெடுத்த போது அதில் முதலாவது இடத்தைப் பெற்ற புத்தகம் வேதாகமே ஆகும்.

19. ஒரே மொழியில் பலமுறை மொழிப்பெயர்க்கப்பட்ட புத்தகம் வேதாகமமே. தமிழில் மட்டும் மூன்று முறை மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

20. எபிரெய, கிரேக்க மொழிகளினின்று மொழிபெயர்க் கப்பட்டும், மூலத்திலுள்ள பொருள், சுவை குறைய வில்லை. Kings James Version கி.பி. 1611-ல் வெளியிடப்பட்டது. ஆயினும் இன்றும் பலராலும் விரும்பி படிக்கப்படுகின்றது.

21. உலகத்தில் முதல் நீள தந்தி புதிய ஏற்பாடு ஆகும். அது நியூயார்க்கிலிருந்து சிகாகோவிற்கு அனுப்பப்பட்டது.

22. மரணத்திற்குப் பின் என்ன? என்கிற கேள்விக்கு இது விடை தருகின்றது.

23. விடை வரலாறை முறைப்படி தெரிவிக்கும் புத்தகம் வேதாகமம் ஆகும்.

24. பரிசுத்த வேதாகமமோ நடக்கப் போகிறவற்றையும் கூறுகின்றது.

25. இதில் உள்ள சம்பவங்களை சரித்திர ரீதியாகவும், புவியியல் ரீதியாகவும் நிரூபிக்க முடியும்.

26. இதில் உள்ள கருத்துக்கள் விஞ்ஞானத்திற்கு ஒத்துப்போகின்றன. மாறுபாடு கிடையாது.

27. 1947-ல் சவக்கடல் அருகில் உள்ள KUMRON என்று சொல்லப்படுகின்ற மலைக் குகைகளில் Bible-ன்

மூலப்பிரதிகள் யாவும் கிடைக்கப்பெற்றன (எஸ்தர் சரித்திரம் தவிர). எனவே இந்த வேதாகமத்தினுடனே கூட்டவும், குறைக்கவும், கற்பனைகளைப் புனையவும் கூடாது.

28. உலகில் உள்ள 75% விஞ்ஞானிகள் இந்த வேதாகமத்தை நம்பி ஏற்று கொண்டவர்களே.

29. எத்தனையோ எதிர்ப்புகளையும் தாங்கி, தாண்டிச் சென்றது இந்த வேதாகமம் ஆகும்.

1) நீரோ, டயோக்கிளிசியன், ஜூலியன் போன்ற ரோம பேரரசர்களால் வேதாகமத்தை வைத்திருந்தோர் கொடுமைப்படுத்தப்பட்டுக், கொல்லப்படடனர். ஆனால் அவர்கள் அழிந்தனர். கி.பி. 313-ல் கான்ஸ்டன்டைன் என்ற ரோம பேரரசன் மூலமாக 50 கையெழுத்து பிரதிகள் எடுக்கப்பட்டன.

2) பிரஞ்சு நாட்டைச் சேர்ந்த வால்டேர் என்னும் நாத்திகன் இன்னும் 100 ஆண்டுகளில் பரிசுத்த வேதாகமம் அழிந்து விடும் என்றான். கி.பி. 1788-ல் அவன் இறந்து போனான். ஆனால் 50 வருடங்களுக்குள்ளாக ஜெனிவா வேதாகம சங்கம் அவனுடைய வீட்டையே விலைக்கு வாங்கி, அவனுடைய அச்சு இயந்திரத்திலேயே Bible அச்சிட்டு வெளியிட்டனர்.

3) தேவன் இல்லையென்ற இங்கர்சால் தன்னுடைய நாத்திக நண்பனான Lew Wallace-I-டம் இயேசு கிறிஸ்து தேவனல்ல, சாதாரண மனிதனே என்று நிரூபிக்கும்படி புத்தகம் எழுதச் சொன்னார். ஆராய்ச்சியில் மூழ்கி அவன்

கண்டுபிடித்து இயேசுவே மெய்யான தேவன் எனபதாகும். அவர் எழுதின புத்தகம் தான் 9 ஆஸ்கர் பரிசு பெற்ற படமாக ஓடுகின்ற BENHUR ஆகும்.

30. உலகில் உயர்ந்த மனிதர்களுக்கு வழிகாட்டி யாகவும் விளங்குவது வேதாகமமே.

1) விக்டோரியா மகாராணியார் - இங்கிலாந்தின் வெற்றிக்குக் காரணம் வேதாகமமே.

2) ஐந்தாம் ஜார்ஜ் - உலகத்தில் ஒரு சிறந்த பொருள் உண்டென்றால் அது பைபிள்.

3) மகாத்மா காந்தி - எத்திசையில் செல்வது என்று நான் குழப்பமடையும் போதெல்லாம் புதிய ஏற்பாடே எனக்கு வழிகாட்டியது.

4) சார்லஸ் டிக்கன்ஸ் - புதிய ஏற்பாடே உலகத்தின் சிறந்த புத்தகமாக, என்றும் திகழும்.

5) 100 முறை முழங்காலில் நின்று வேதத்தை வாசித்த ஜார்ஜ் முல்லர் இன்னும் அதிசயங்களைக் காண்கிறேன்.

6) அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி ரோனால்ட் ரீகன்-பரிசுத்த வேதாகமத்தின் இரு அட்டைகளுக்கும் நடுவே மனிதனுடைய எல்லா பிரச்சனைகளுக்கும் தீர்வு உண்டு.

7) கி.பி. 1461-1564 வரை வாழ்ந்த பௌதிக மேதை கலிலியோ - பைபிளும், இயற்கையும் கடவுளின்

சொல்லால் உருவானவை. பைபிள் பரிசுத்த ஆவியானவரின் ஏவுதலால் எழுதப்பட்டது.

8) விஞ்ஞானத்தின் தந்தை என்றழைக்கப்பட்ட ராபர்ட் பாயில் - பரிசுத்த வேதாகமம் தத்துவ ரீதியானது. அது இயற்கை விதிகளுக்கு ஒத்தது.

9) சர் ஐசக் நியூட்டன் - இந்த சுவிசேஷத்தை உலகின் எந்த சக்தியாலும் அழிக்க முடியாது.

10) கவிஞர் கண்ணதாசன் - நான் எழுதின இறவாக் காவியம் இயேசு காவியமே.

அநேகமாயிரம் பொன் வெள்ளியைப் பார்க்கிலும் நீர் விளம்பின வேதமே, எனக்கு நலமென்றான் தாவீது (சங். 119:72). இந்த வேதத்திலுள்ள அதிசயங்களையெல்லாம் நாம் காணும்படி கர்த்தர் நம் கண்களை திறப்பாராக (சங். 119:18). சீயோன் பேதுருவைப் போல ஆண்டவரே, யாரிடம் போவோம், நித்திய ஜீவ வசனங்கள் உம்மிடத்திலே உண்டே, என்று அவரையே பற்றிக் கொள்வோம் (யோவா 6:68). திருவசனத்தை கேட்கிறவர்களாய் மாத்திரமல்ல, அதன்படி செய்கிறவர்களாகவும் மாறுவோமாக (யாக். 1:22).

உம்முடைய வேதம் என் மனமகிழ்ச்சி என்கிறார் தாவீது (சங் 119:174). இந்த ஆங்கில HOLY BIBLE-ல் 35,66,480 எழுத்துக்களும் 8,10,667 வார்த்தைகளும் 31,175 வரிகளும், 1,189 அதிகாரங்களும் 66 புத்தகங்களும் அடங்கியுள்ளன. இந்த பரிசுத்த வேதாகமத்தின் மிகப் பெரிய அதிகாரம் 119-ம் சங்கீதம்

ஆகும். மிகவும் சிறிய அதிகாரம் 117-ம் சங்கீதமே. 118-ம் சங்கீதத்தின் 8-ம் வசனமே வேதத்தின் மைய வசனமாகும். ஏசாயா 8-ம் அதிகாரம் 1-ம் வசனத்தின் பெயரே வேதத்தில் உள்ள பெரிய பெயர் ஆகும். இதில் 18 எழுத்துக்கள் உள்ளன. கர்த்தர் என்ற வார்த்தை மாத்திரம் 1,855 முறை வருகிறது. ஏசாயா 37-ம் அதிகாரமும் 2 இராஜாக்கள் 19-ம் அதிகாரமும் ஒன்றுபோலவே இருக்கின்றது. மற்றும் 18-ம் சங்கீதமும் 2 சாமுவேல் 22-ம் அதிகாரமும் ஒன்றே. எஸ்தர் 8-ம் அதிகாரம் 9-ம் வசனமே ஆங்கில வேதத்திலுள்ள மிகப்பெரிய வசனம். யோவான் 11-ம் அதிகாரம் 35-ம் வசனமே ஆங்கில வேதாகமத்தின் மிகச் சிறிய வசனமாகும். "ஜீவ அப்பம் நானே" என்ற வசனமே சிறிய வசனமாகும். எஸ்றா. 7:21-ல் "J" என்ற எழுத்தைத் தவிர மீதியுள்ள ஆங்கில எழுத்துகள் யாவும் வருகின்றன. அப்போஸ்தலர் 26-ம் அதிகாரம் படிப்பதற்கு மிக எழுச்சியூட்டும் இடமாகும்.

எஸ்தர் புத்தகத்தில் தேவனென்றோ, கர்த்தரென்றோ ஒரு வார்த்தை கூட இல்லை. இந்த பரிசுத்த வேதாகமமே மனிதனுக்கு அறிவையும், ஞானத்தையும் போதிக்கின்றது. இந்த பரிசுத்த வேதாகமமே தேவனுடைய இருதயத்தின் நினைவையும், மனிதனுடைய நிலையையும், இரட்சிப்பின் வழியையும், பாவியின் நியாயத்தீர்ப்பையும், விசுவாசிகளின் நித்திய மகிழ்ச்சியையும் தெளிவாக விவரிக்கின்றது. நம் பாதைக்கு வெளிச்சத்தையும் ஆத்துமாவிற்கு உணர்வையும், ஆவிக்கு மகிழ்ச்சியையும் இந்த பரிசுத்த வேதாகமமே கொடுக்கின்றது. (சிறுவன் என்ற வார்த்தை 6 தடவையும், சிறுமி என்ற வார்த்தை 7 தடவையும் வருகின்றது). இயேசு கிறிஸ்துவே இந்த வேதாகமத்தின் மையப் பொருள் ஆவார்.

சொல் அறிமுகம்- பரிசேயர்

பாபிலோன் சிறையிருப்பைத் தொடர்ந்து தேவனுடைய வசனத்திற்கு முதலிடம் கொடுத்து வாழ்கிற ஒரு சிறிய கூட்ட யூதர்கள் உருவானார்கள். ஹாசிடிம் (உண்மையுள்ள மக்கள்) என்ற பெயரில் இவர்கள் முதலில் அறியப்பட்டனர். இவர்களிலிருந்துதான் பரிசேயர் என்ற குழு உருவானது. பரிசேயன் என்ற சொல்லுக்கு வேறுபட்டவன் என்று பொருள். பொதுமக்களிலிருந்தும் வேறுபட்டவர்களாக தேவனுடைய வசனத்திற்கு எழுத்தின்படியே கீழ்படிவதற்காக தங்களை தனிமைப்படுத்திக் கொண்டவர்கள். பரிசேயர்களின் வாழ்க்கை முறைகளின்படி சீகேம் பரிசேயர், இடறிவிழுகின்ற பரிசேயர், இரத்தம் சிந்துகின்ற பரிசேயர், கவசம் அணிகின்ற பரிசேயர், அன்புகூருகிற பரிசேயர் என்று ஏழு குழுக்களாக இவர்கள் பிரிக்கப்பட்டு இருந்தனர் என யூதர்களின் தல்மூதுகள் கூறுகின்றன. ஆவியின் அழிவின்மை, தூதர்களின் ஆள்தன்மை, மரித்தோரின் உயிர்த்தெழுதல் ஆகியவற்றை இவர்கள் விசுவாசிக்கிறவர்களாக இருந்தனர். மக்கள் மத்தியில் அதிக செல்வாக்கு உடையவர்களாக இவர்கள் விளங்கினர்.

சதுசேயர்

இவர்களுடைய துவக்கத்தைப் பற்றி அறுதியிட்டுக் கூறுவது இயலாது. எனினும் கி.மு. 144 முதல் இவர்களை வரலாற்றில் காணலாம். பழைய ஏற்பாட்டு ஆசாரியனாக இருந்த சாதுக் என்பவனின் பரம்பரையில் வந்தவர்கள் இவர்கள். இவர்களில் பெரும்பகுதியினர் செல்வந்தர்களும் ஆசாரிய குடும்பத்தைச் சார்ந்தவர்களுமாய் இருந்தனர். அரசியல் துறையில் இவர்களின் செல்வாக்கு தாக்கம் மிக அதிகமாக இருந்தது. உயிர்த்தெழுதல், தூதர்கள், பிசாசுகள், நியாயத்தீர்ப்பு, பாரம்பரியங்கள் ஆகியவற்றில் இவர்கள் நம்பிக்கையில்லாதவர்களாய் இருந்தனர். கி.பி. 70க்கு பின் இவர்களைப் பற்றிய எந்தவித குறிப்பும் வரலாற்றில் கிடைக்கவில்லை.

செலோத்தியர் (தீவிரவாதிகள்)

யூதக்கூட்டங்களிலும் கர்த்தருடைய பணிகளிலும் அதிக தீவிரமும் வைராக்கியமும் உள்ளவர்களாய் இவர்கள் இருந்தனர். ரோமப் பேரரசைக் கவிழ்த்துவிட்டு தாவீதின் சிங்காசனத்தை மீண்டும் ஸ்தாபிப்பதற்காக தொடர்ச்சியான புரட்சிகளையும் போர்களையும் நடத்திக் கொண்டிருந்தவர்கள் இவர்கள். இவர்கள் எப்பொழுதுமே ரோமப் பேரரசிற்கு சிம்ம சொப்பமாக விளங்கினர். விருத்த சேதனமற்ற புறஜாதியாருக்கு தேவனுடைய மக்களான இஸ்ரேலரை ஆட்சிசெய்ய யாதொரு உரிமையும் இல்லை என்று இவர்கள் ஆணித்தரமாக நம்பியிருந்தது மட்டுமல்ல, அதையே மக்களுக்குப் போதித்தும் வந்தனர்.

சமாரியர்

கி.மு. 722 -ல் சமாரியாவின் வீழ்ச்சிக்குப் பின் அசீரிய சிறையிருப்பிற்குக் கொண்டு செல்லப்பட்ட இஸ்வேலருக்குப் பதிலாக சமாரியாவில் குடியேற்றப்பட்டவர்களே இவர்கள். புறஜாதியாரும் அங்கே எஞ்சியிருந்த இஸ்ரவேலரும் கலப்பு விவாகம் செய்து கொண்டதன் விளைவாக உருவான மக்கள் கூட்டமே சமாரியர். யூதர்கள் இவர்களை தேவனுடைய ஜனமாக அங்கீகரிக்கவோ அல்லது இவர்களோடு எவ்விதத் தொடர்போ வைத்திருக்கவில்லை. பழைய ஏற்பாட்டின் முதல் 5 புத்தகங்களை மட்டும் தேவவசனமாக ஏற்றுக்கொண்டிருந்த இவர்கள், கெர்சிம் மலையில் தேவாலயத்தைக் கட்டி ஆராதனை செய்து வந்தனர். யூதர்கள் எருசலேமில் ஆலயம் கட்டி ஆராதித்து வந்தனர். யூதர்களால் வெறுக்கப்பட்ட ஒரு கூட்டமே சமாரியர்.

எப்பிக்கூரியர்

கி.மு. 341 முதல் கி.மு. 270 வரை அத்தேனே பட்டணத்தில் வாழ்ந்திருந்த ஒரு தத்துவ ஞானியைப் பின்பற்றியவர்களே இவர்கள். எப்பிகூரல் (இன்பம் அனுபவிப்பதே சொர்க்கம்) என்பதே இவர்களது தத்துவம். பூமிக்குரிய வாழ்க்கைக்கும், வாழ்க்கையின் சுகபோகங்களுக்கும் அளவுக்கு அதிகமான முக்கியத்துவம் கொடுத்து, தேவனைப் பின்னால் எறிந்துவிட்டு வாழ்ந்தவர்களே இவர்கள். புசிப்போம், குடிப்போம், இன்பமாய் இருப்போம் என்ற கொள்கைக்கு முதலிடம் கொடுத்து வாழ்ந்தவர்கள் (அப். 17:18-ல் இவர்களைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளதைக் காணலாம்).

ஸ்டோயிக்கர்

அத்தேனேயிலுள்ள ஸ்டோயிக்கா நகரத்தில் வாழ்ந்திருந்த செனோ (கி.மு. 335 முதல் கி.மு. 253 வரை) என்ற தத்துவ ஞானிதான் இந்த கொள்கையின் தோற்றுவிப்பாளர். பிரபஞ்சத்தில் உள்ள அனைத்தையும் இயக்குகின்ற சக்தியை லோகாஸ் என்றும், இயற்கையின் விதிமுறைகளுக்கேற்ப வாழ்ந்தால் மனுஷீகமான எல்லா துக்கங்களிலிருந்தும் விடுதலை அடையலாம் என்றும் இவர்கள் கற்பித்து வந்தனர் (அப்.17:18ல் இவர்களைப் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது).

சனகெரீப் சங்கம்

பழைய ஏற்பாட்டுக் காலத்தில் யூதர்களின் சமூ சமய மற்றும் சகல காரியங்களையும் இயக் கொண்டிருந்தது இந்த சனகெரீப் சங்கமே ஆகும். 7 அங்கத்தினர்களைக் கொண்ட இச்சங்கத்தில் ஒரு ம பிரதான ஆசாரியனும், 24 ஆசாரியர்களும், 2 மூப்பர்களும், 22 நியாயசாஸ்திரிகளும் இருந்தனர். இயே கிறிஸ்துவின் காலத்தில் எருசலேமிலிருந்த தேவாலயத்தி தென்புறத்தில் இருந்த ஒரு அறையில்தான் இவர்க கூடிவந்தனர். மரண தண்டனையைத் தவிர மற்ற எல்லா தண்டனைகளையும் வழங்கக் கூடிய அனுமதி இவர்களுக் இருந்தது. இச்சங்கத்தின் சார்பில் ஏதாவது தீர்மான எடுக்கவேண்டுமானால் குறைந்தது 23 பேராவது கூடியிருக்க வேண்டும். கி.பி. 70 க்குப் பின் இச்சங்கம் தன் மதிப்பை இழந்துவிட்டது.

ஜெபஆலயம் (சினகாக்)

பழைய ஏற்பாட்டில் ஜெப ஆலயங்களைப் பற்றிய எவ்வித குறிப்பும் இல்லை. பாபிலோன் சிறையிருப்பைத் தொடர்ந்து தான் ஜெப ஆலயங்கள் உருவாயின. 10 யூத ஆண்கள் இருந்தால் ஒரு ஜெப ஆலயத்தை ஆரம்பிக்க அனுமதி இருந்தது. புதிய ஏற்பாட்டில் ஜெப ஆலயங்களைப் பற்றி அதிகம் காணலாம். நியாயப் பிரமாணத்தைக் கற்பதற்கும், ஆராதனை செய்வதற்கும் கட்டப்பட்ட ஜெப ஆலயங்களில், பலிகள் செலுத்த அனுமதிக்கப் பட்டிருக்கவில்லை. ஜெப ஆலயங்களில் பெண்களுக்கென தனி இருப்பிடங்கள் திரைச்சீலைக்குப் பின்னால் ஒழுங்குபடுத்தப்பட்டு இருந்தன. இந்த ஜெப ஆலயங்கள் நீதிமன்றங்களாகவும் செயல்பட்டு வந்தன.

நியாய சாஸ்திரிகள்

மோசேயின் நியாயப்பிரமாணத்தை நக எடுப்பதற்காகவும், கற்பதற்காகவும், கற்பிப்பதற்காகவு வியாக்கியானம் செய்வதற்காகவும் பிரித்தெடுக்கப்பட்டிருந்த ஒரு சிறப்பான கூட்டமே இவர்கள். இயேசு கிறிஸ்துவின் காலத்தில் நியாயசாஸ்திரிகள் மக்களிடையே சிறப்பான இடத்தைப் பெற்றிருந்தனர்.

அர்த்தமு தேவி (தியானாள்)

சின்ன ஆசியாவிலுள்ள எபேசு நகரத்தில் அர்த்தமு தேவியினுடைய கோவில் இருந்தது. ஜுயல்ஸிற்கும் லெக்டோவிற்கும் மகளாகப் பிறந்த தியானாள் தேவதையாக வணங்கப்பட்டு வந்தாள். அசாதாரண உயரமும் சுற்றளவும் கொண்ட 100 தூண்களின் மேல் இத்தேவதையின் கோவில் கட்டப்பட்டு இருந்தது.

அளவுகள்

1. நீள அளவுகள்

நீள அளவுகளை முழம், கையளவு, சாண், விரற்கடை அளவு என்று பழைய ஏற்பாடு பிரித்துக் கூறுகின்றது.

முழம்	-	0.5 மீட்டர்
சாண்	-	23 செண்டி மீட்டர்
கையளவு	-	8 செண்டி மீட்டர்

புதிய ஏற்பாட்டில் முழம் 45 செண்டி மீட்டராக கணக்கிடப்படுகிறது. (அப்.27:28)

2. தூர அளவுகள்

பழைய ஏற்பாட்டில் நீண்ட தூரம் என்பது சாதாரண அளவில் நிர்ணயிக்கப்படவில்லை. 3 நாள் தூரம் (ஆதி.30:36), 7 நாள் தூரம் என்றுதான் குறிப்பிடப் படுகின்றன.

புதிய ஏற்பாட்டில் நாழிகை என்பது 202.50 மீட்டர் தூரமாகும். ஓய்வுநாள் தூரம் என்பது 2000 முழத்திற்குச் சற்றே குறைவானதாகும்.

3. முகத்தல் அளவுகள்

பாத்திரங்கள் மூலம் அளக்கின்ற அளவை இவை குறிக்கின்றன.

- 1 ஓமர் (ஹயர்) - 10 எப்பா (220 லிட்டர்)
- 1 எப்பா - 10 ஓமர் (22 லிட்டர்)
- 1 செயா - 6 கப் (7.3 லிட்டர்)
- 2 ஓபர் - 2 லிட்டர்
- 1 கப் - 1 லிட்டர்

4. திரவ அளவுகள்

•பெத்	–	22 லிட்டர்
•ஹின்	–	1.6 பெத் (4 லிட்டர்)
•லோக்	–	1.73 ஹீன்(0.3 லிட்டர்)

5. எடை அளவுகள்

•1 தாலந்து	–	60 மினா (மானே) 34 கி.கிராம்
•1 மினா	–	50 சேக்கல் (0.6 கி.கிராம்)
•1 சேக்கல்	–	2 பெக்கா (11.5 கிராம்)
•1 பெக்கா	–	10 கேரா (5.5 கிராம்)
•1 கேரா	–	0.6 கிராம்

எபிரெயர் கால அட்டவணை

எபிரெயம்		ஆங்கிலம்
1.	ஆபிப் (நிசான்)	மார்ச்-ஏப்ரல்
2.	சீன்	ஏப்ரல் - மே
3.	சீவான்	மே- ஜுன்
4.	தம்மூஸ்	ஜுன்-ஜுலை
5.	அப்	ஜுலை- ஆகஸ்ட்
6.	ஏலூாஸ்	ஆகஸ்ட் - செப்டம்பர்
7.	ஏதானியம்	செப்டம்பர்- அக்டோபர்
8.	பூல்	அக்டோபர்-நவம்பர்
9.	கிஸ்லேவ்	நவம்பர்-டிசம்பர்
10.	தேபேத்	டிசம்பர் - ஜனவரி
11.	செபாத்	ஜனவரி-பெப்ரவரி
12.	ஆதார்	பெப்ரவரி - மார்ச்

மூன்று வருடம் கூடும்போது 13-வது மாதமாக ஆதார் 2 என்றொரு மாதம் கூடுதலாக காலண்டரில் சேர்க்கப்பட்டிருக்கிறது.

ஆங்கிலம் மற்றும் தமிழ் கால அட்டவணை

	ஆங்கிலம்	தமிழ்
1.	ஜனவரி	மார்கழி- தை
2.	பிப்ரவரி	தை - மாசி
3.	மார்ச்	மாசி- பங்குனி
4.	ஏப்ரல்	பங்குனி-சித்திரை
5.	மே	சித்திரை-வைகாசி
6.	ஜூன்	வைகாசி- ஆனி
7.	ஜூலை	ஆனி-ஆடி
8.	ஆகஸ்ட்	ஆடி -ஆவணி
9.	செப்டம்பர்	ஆவணி- புரட்டாசி
10.	அக்டோபர்	புரட்டாசி-ஐப்பசி
11.	நவம்பர்	ஐப்பசி-கார்த்திகை
12.	டிசம்பர்	கார்த்திகை-மார்கழி

சத்தியமுத்தீ

பண்டிதர்கள் பொதுவாக தீயை மூன்றாகப் பிரித்து உள்ளனர்.

1.காருகபத்தியம் - தலைமுறை தலைமுறையாக நிரந்தரமாக உள்ளது.

2.தட்சிணாக்கினீயம்-முந்தின தீயிலிருந்து பற்றிக் கொண்டு, வீட்டிலேயே எரியவேண்டியது.

3.ஆகவனீயம் - வீட்டிலிருந்து வெளியே எடுத்துச் சென்று எரியவேண்டியது.

வேதாகமத்தை ஆராயும்போது இந்த முத்தீ தேவனையும், வசனத்தையும், மனிதனையும், ரட்சிப்பையும், சபையையும், சீஷனையும், வருகையையும் குறிக்கின்றது.

காருகபத்தியம் பிதாவாகிய நித்திய தீயையும், தட்சிணாக்கினீயம் இயேசுவாகிய சுவிஷேசத் தீயையும், ஆகவனீயம் பரிசுத்தாவியானவரின் ஊழியத்தீயையும் குறிக்கின்றது.

இந்த முத்தீ நமது ஆவி, ஆத்துமா, சரீரத்தில்; தனிப்பட்ட குடும்ப, ஊழிய வாழ்க்கையில், எரியவேண்டிய இரகசியங்களைத் தொடர்ந்து படிக்கலாம். நீங்கள் எரிய விரும்புகிறீர்களா.

பழைய ஏற்பாடு வெளிச்சத்தில் ஆரம்பிக்கிறது. (ஆதி. 1:3)

புதிய ஏற்பாடு வெளிச்சத்தில் முடிவடைகிறது. (வெளி.22:16)

வேதாகம கணிதத்தின் ஏழு படிகள்

ஆதியிலேயே வார்த்தை இருந்தது. அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது. அந்த வார்த்தை தேவனாயிருந்தது. (யோவா.1:1)

1. தேவன் வார்த்தையாக இருக்கிறார்.
(யோவா.1:1:1, யோவா.1:1)

2. தேவன் எல்லாவற்றையும் வார்த்தையாகிய கிறிஸ்துவைக் கொண்டு செயல்படுத்துகிறார்.
(எபி. 1:2, 3; எபி,11:3)

3. வார்த்தையாகிய கிறிஸ்துவின் மூலம் ஆக்கல், காத்தல், அழித்தல் நடைபெறுகிறது.
(எபி.1:3; 11 பேது, 3:5-7)

4. ஆக்கல், காத்தல், அழித்தல் தேவ குணத்தினால் சிருஷ்டிக்கப்படுகிறது. (நீதி.3:19, 20; நீதி. 8:1, 27-29)

5. தேவஞானம் என்பது வேத கணிதமாயிருக்கிறது.
(யோபு 28:12, 23-29)

6. வேத கணிதம் மூன்று சாட்சிகளின் வழியாக இயங்குகிறது. (11 கொரி, 13:1; யாத்,20:11)

7. மூன்று சாட்சிகள் என்பது மூன்றாக பிரிந்து ஏழாக பெருகுகின்றது. (ஆதி.2:2:3; யோபு.1:2 , 3)

தேவன் வார்த்தையாக இருக்கிறார். வார்த்தையாகிய கிறிஸ்துவின்மூலம் எல்லாவற்றையும் செய்கிறார். அவர் மூலமாகவே ஆக்கல், காத்தல், அழித்தல் நடைபெறுகிறது. அவைகள் தேவ ஞானத்தில் செயல்படுகின்றது. தேவ ஞானம் என்பது வேத கணிதமாகும். அவை மூன்று சாட்சியின் வழியாக இயங்குகிறது. தேவ கணிதம் என்பது மூன்றாக பிரிந்து ஏழாக பெருகுவதாகும்.

நடமாடும் வேதாகமம் - ஏழு படிகள்

1. ஆத்துமாவில் வேதம் (சங். 37;31, சங்.119:44 , 77)

அவனுடைய தேவன் அருளிய வேதம் அவன் இருதயத்தில் இருக்கிறது; அவன் நடைகளில் ஒன்றும் பிசகுவதில்லை. (சங்.37:31)

2. ஆவியில் வேதம் (மல். 2:6, 7; சங், 119:104,172)

சத்தியவேதம் அவன் வாயில் இருந்தது; அவனுடைய உதடுகளில் அநியாயம் காணப்படவில்லை; அவன் என்னோடே சமாதானமும் யதார்த்தமுமாய்ச் சஞ்சரித்து, அநேகரைஅக்கிரமத்தினின்று திருப்பினான். மல்.2:6

3.சரீரத்தில் வேதம் (சங்.149:8, சங்,119:48, 100)

அவர்கள் வாயில் கர்த்தரை உயர்த்தும் துதியும், அவர்கள் கையில் இருபுறமும் கருக்குள்ள பட்டயமும் இருக்கும். (சங் 149:8).

4. தனிப்பட்ட வாழ்க்கையில் வேதம். (சங். 19:7, 119:92).

அநேகமாயிரம் பொன் வெள்ளியைப் பார்க்கிலும், நீர் விளம்பின வேதமே எனக்கு நலம். (சங். 119:72).

5.குடும்ப வாழ்க்கையில் வேதம்.(சங். 78:5; 89:0-2).

அவர் யாக்கோபிலே சாட்சியை ஏற்படுத்தி, இஸ்ரவேலிலே வேதத்தை ஸ்தாபித்து, அவைகளைத் தங்கள் பிள்ளைகளுக்கு அறிவிக்கும்படி நம்முடைய பிதாக்களுக்கு கட்டளையிட்டார். (சங். 78:5).

6. வேலை வாழ்க்கையில் வேதம்.

(ஆதி, 39:9; சங் 119:36, 69).

இந்த வீட்டிலே என்னிலும் பெரியவன் இல்லை; அவருடைய மனைவியாயிருக்கிறபடியால் உன்னைத் தவிர வேறொன்றையும் அவர் எனக்கு விலக்கி வைக்கவில்லை; இப்படியிருக்க, நான் இத்தனை பெரிய பொல்லாங்குக்கு உடன்பட்டு, தேவனுக்கு விரோதமாய்ப் பாவம் செய்வது எப்படி என்றான்.(ஆதி.39:9, நீதி. 62:23).

7. ஊழியவாழ்க்கையில் வேதம்.

(சங். 94.13; 119:136; நீதி 6:23).

சிட்சித்து, உம்முடைய வேதத்தைக் கொண்டு போதிக்கிற மனுஷன் பாக்கியவான். (சங். 94:13).

நாம் நடமாடும் வேதமாக மாற இவ்வேழு நிலை(புழி)களிலும், வேதத்தைக் கைக்கொண்டு ஜீவிக்கும் பொழுது, எந்தச் சூழ்நிலையிலும் நம்முடைய நடைகளாகிய கிரியைகள் பிசகாமல், கிறிஸ்துவின் அடிச்சுவடுகளில் நம்மை நிறுத்தும் என்பது உறுதி.

தேவசித்தம் - ஏழு படிகள்

1. தேவன் முன்னறிந்தார்.

தம்முடைய குமாரன் அனேக சகோதரருக்குள்ளே முதற்பேறானவராயிருக்கும் பொருட்டு, தேவன் எவர்களை முன்னறிந்தாரோ அவர்களைத் தமது குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு முன் குறித்திருக்கிறார்.(ரோ. 8:29, ரோ. 11:2, 1 பேது 1:2).

2. தேவன் முன்குறித்தார்.

(ரோ. 8:29, 30; எபே. 1:,12).

3. தேவன் அழைத்துமிருக்கிறார்.

(ரோ. 8:30, 1 பேது. 1:15; 1 தேச 2:11).

4. தேவன் நீதிமான்களாக்கியுமிருக்கிறார்.

(ரோ. 8:30; 1 கொரி 6:11; தீத். 3:6).

எவர்களை முன் குறித்தாரோ அவர்களை அழைத்துமிருக்கிறார்.

எவர்களை அழைத்தாரோ அவர்களை நீதிமான்களாக்கியுமிருக்கிறார்.

எவர்களை நீதிமான்களாக்கினாரோ அவர்களை மகிமைப்படுத்தியுமிருக்கிறார். (ரோ. 8:30).

5. தெரிந்துகொண்டார்.

(ரோ. 8:33; வெளி. 17:14; 1 பேது .1:2).

தேவன் தெரிந்து கொண்டவர்கள் மேல் குற்றஞ்சாட்டுகிறவன் யார், தேவனே அவர்களை நீதிமான்களாக்குகிறவர். (ரோ. 8;33).

6. உண்மையுள்ளவர்கள்.

(வெளி. 17:14; 1 தீமோ 3:11; 1 பேது. 5:12).

இவர்கள் ஆட்டுக்குட்டியானவருடனே யுத்தம் பண்ணுவார்கள்; ஆட்டுக்குட்டியானவர் கர்த்தாதி கர்த்தரும் ராஜாதி ராஜாவுமாயிருக்கிறபடியால் அவர்களை ஜெயிப்பார்; அவரோடு கூட இருக்கிறவர்கள் அழைக்கப்பட்டவர்களும் தெரிந்து கொள்ளப்பட்டவர்களும் உண்மையுள்ளவர் களுமாய் இருக்கிறார்கள் என்றான். (வெளி. 17:14).

7. மகிமைப்படுத்தியுமிருக்கிறார்.

(ரோ. 8:30; 1 தேச.2:11; பிலி. 4:19).

எவர்களை முன்குறித்தாரோ அவர்களை அழைத்துமிருக்கிறார். எவர்களை அழைத்தாரோ அவர்களை நீதிமான்களாக்கியுமிருக்கிறார். எவர்களை நீதிமான்களாக்கினாரோ அவர்களை மகிமைப்படுத்தியு மிருக்கிறார். (ரோ. 8:30).

தேவனுடைய சித்தத்தின்படி தேவன் நம்மை பரலோகத்திலே முன்னறிந்திருக்கிறார். தாயின் கர்ப்பத்தில்

முன்குறித்திருக்கிறார். ஏற்ற வேளையிலே அழைத்துமிருக்கிறார். தமது குமாரனுடைய இரத்தத்தினாலே நம்முடைய குற்றங்களை நீக்கி நீதிமான்களாக்கியுமிருக்கிறார். தேவன் தம்முடைய வேலைக்காகத் தெரிந்துகொள்கிறார். அந்த வேலையில் உண்மையுள்ளவர்களை மகிமைப்படுத்தியும் இருக்கிறார்.

1. உணர்வுகள் (1 இரா. 3:12; உபா. 32:28; எரே 4:22).

உன் வார்த்தைகளின் படி செய்தேன், ஞானமும் உணர்வுமுள்ள இருதயத்தை உனக்குத் தந்தேன்; இதிலே உனக்குச் சரியானவன் உனக்குமுன் இருந்ததுமில்லை, உனக்குச் சரியானவன் உனக்குப்பின் எழும்புவதுமில்லை. (1 இரா. 3:12).

2. எண்ணங்கள் (நீதி. 19:21; ஓசி.8;12; சக.11:5).

மனுஷனுடைய இருதயத்தின் எண்ணங்கள் அநேகம்; ஆனாலும் கர்த்தருடைய யோசனையே நிலைநிற்கும். (நீதி. 19:21).

3. நினைவுகள் (ஆதி. 6:5; எரே. 6:19; எரே. 11:2).

மனுஷனுடைய அக்கிரமம் பூமியிலே பெருகினது என்றும், அவன் இருதயத்து நினைவுகளின் தோற்றமெல்லாம் நித்தமும் பொல்லாததே என்றும், கர்த்தர் கண்டு.(ஆதி. 6:4).

4. சிந்தனைகள்
(லூாக். 5:22; மத் 12;25; லூாக்.2:34).

இயேசு அவர்கள் சிந்தனைகளை அறிந்து அவர்களை நோக்கி: உங்கள் இருதயங்களில் நீங்கள் சிந்திக்கிற தென்ன? (லூாக். 5:22).

5. **யோசனைகள்**

(எஸ்றா 7:27; எரே. 9:17; 7:24).

எருசலேமிலுள்ள கர்த்தருடைய ஆலயத்தை அலங்கரிக்க, இப்படிப்பட்ட யோசனையை ராஜாவின் இருதயத்தில் அருளி, ராஜாவுக்கும் அவருடைய மந்திரிமாரிகளுக்கும் ராஜாவின் கைக்குள்ளான பலத்த எல்லா மகாப்பிரபுக்களுக்கும் முன்பாக எனக்கு தயவு கிடைக்கப் பண்ணின எங்கள் பிதாக்களின் தேவனாகிய கர்த்தருக்கு ஸ்தோத்திரம். (எஸ்றா. 7:27).

6. **சித்தம்**

(911 பேதுரு.1:21; எஸ்றா. 5:17; யோசு. 24:10).

தீர்க்கதரிசனமானது ஒரு காலத்திலும் மனுஷனுடைய சித்தத்தினாலே உண்டாகவில்லை; தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டு பேசினார்கள். (2 பேது. 1:21).

7. **இருதயம்.** (சங். 24;4; மத் 5:8; மத் 9:4).

கைகளில் சுத்தமுள்ளவனும் இருதயத்தில் மாசில்லாதவனுமாயிருந்து, தன் ஆத்துமாவை மாயைக்கு ஒப்புக் கொடாமலும், கபடாய் ஆணையிடாமலும் இருக்கிறவனே. (சங்.24:4).

தேவன் மனிதனின் ஆத்துமாவில் ஏழு வித நிலைகளை வைத்திருக்கிறார். அந்த ஆத்துமாவில் உணர்வுள்ளது. அவை எண்ணங்களாக மாறுகிறது. எண்ணங்கள் நினைவாக மாறுகிறது. நினைவுகள்

ஆவியின் - ஏழு படிகள்

1.வாய். (சங்.10:7; 106:33; 1 சாமு 1:12).

அவன் வாய் சபிப்பினாலும் கபடத்தினாலும் கொடுமையினாலும் நிறைந்திருக்கிறது: அவன் நாவின்கீழ் தீவினையும் அக்கிரமும் உண்டு. (சங். 10:7).

2. நாவு. (நீதி. 15:4; யோபு 27:3; 2 சாமு. 23:2).

ஆரோக்கியமுள்ள நாவு ஜீவவிருட்சம்; நாவின் மாறுபாடோ ஆவியை நொறுக்கும். (நீதி. 15:4).

3.மூச்சு. (சங். 102:5; அப். 7:34; யாத் 2:24).

என் பெருமூச்சின் சத்தத்தினால், என் எலும்புகள் என் மாம்சத்தோடு ஒட்டிக்கொள்ளுகிறது. (சங். 102:5).

4. பேச்சு. (1 கொரி. 2:5; யோபு 19:18; யோசு. 6:10).

என் பேச்சும் என் பிரசங்கமும் மனுஷ ஞானத்திற்குரிய நயவசனமுள்ளதாயிராமல், ஆவியினாலும் பெலத்தினாலும் உறுதிப்படுத்தப்பட்டதாய் இருந்தது. (1 கொரி, 2:5).

5.பிராணன். (சங். 31:10; யோபு. 7:7; ஆதி. 19:19)

என் பிராணன் சஞ்சலத்தினாலும், என் வருஷங்கள் தவிப்பினாலும் கழிந்து போயிற்று: என் அக்கிரமத்தினாலே என் பெலன் குறைந்து, என் எலும்புகள் உலர்ந்து போயிற்று. (சங்., 31:10).

6. ஆவி. (யோபு. 7:11; மல். 2:16; ஆதி. 45:27)

ஆகையால் நான் என் வாயை அடக்காமல், [illegible] ஆவியின் வேதனையினால் பேசி, என் ஆத்து[illegible] கசப்பினால் அங்கலாய்ப்பேன். (யோபு 7:11).

7.எலும்பு. (எசே. 37:5; பிர. 11:5; ஆதி. 50:2[illegible])

கர்த்தராகிய ஆண்டவர் இந்த எலும்புகளை [illegible] இதோ, நான் உங்களுக்குள் ஆவியைப் பிரவே[illegible] பண்ணுவேன். அப்பொழுது உயிரடைவீர்கள். (எசே[illegible])

தேவன் மனிதனின், ஆவியில் ஏழுவித நி[illegible] வைத்திருக்கிறார். அந்த ஆவியில் [illegible] வார்த்தைகளுள்ளது. அவை நாவாகவும், மூச்[illegible] முள்ளது. மூச்சு பேச்சை வெளிப்படுத்துகிறது. [illegible] பிராணனோடு, ஆவியோடும் எலும்புகளில் இருக்[illegible] வேதத்தில் ஆவியின் ஏழுபடிகளைக் குறித்து விள[illegible] வருகின்றது.

1. **அவயவங்கள்.**
(யோபு. 18:13; யோபு. 17:7; சங். 139:16).

அது அவன் அங்கத்தின் பலத்தைப் பட்சிக்கும்; பயங்கரமான மரணமே அவன் அவயவங்களைப் பட்சிக்கும். (யோபு. 18:13).

2.**கரங்கள் (ஏசா. 29:23; மத். 15:2; மத் 17: 22).**

அவன் என் கரங்களின் செயலாகிய தன் பிள்ளைகளை தன் நடுவிலே காணும்போது, என் நாமத்தைப் பரிசுத்தப்படுத்துவார்கள்; யாக்கோபின் பரிசுத்தரை அவர்கள் பரிசுத்தப்படுத்தி, இஸ்ரவேலின் தேவனுக்குப் பயப்படுவார்கள்.(ஏசா.29:23).

3. **கிரியைகள். (எபி.2:7; லூாக். 1:22; மத். 16:27).**

அவனை தேவதூதரிலும் சற்றுச் சிறியவனாக்கினீர்; மகிமையினாலும் கனத்தினாலும் அவனுக்கு முடிசூட்டி, உம்முடைய கரத்தின் கிரியைகளின்மேல் அவனை அதிகாரியாக வைத்து, சகலத்தையும் அவனுடைய பாதங்களுக்குத் கீழ்ப்படுத்தினீர் என்று சொன்னான். (எபி. 2:7).

4.செய்கை. (ரூத். 2:12; மத். 7:23; லூக். 1:22).

உன் செய்கைக்குத்தக்க பலனைக் கர்த்தர் உனக்குக் கட்டளையிடுவாராக் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருடைய செட்டைகளின்கீழ் அடைக்கலமாய் வந்த உனக்கு அவராலே நிறைவான பலன் கிடைப்பதாக என்றான். (ரூத். 2:12).

5.நடத்தை
(1 பேது.1:18; யோவா.10:3; 1 தீமோ 3:4)

உங்கள் முன்னோர்களால் பாரம்பரியமாய் நீங்கள் அனுசரித்துவந்த வீணான நடத்தையினின்று அழிவுள்ள வஸ்துக்களாகிய வெள்ளியினாலும் பொன்னினாலும் மீட்கப்படாமல். (1 பேது. 1:18).

6. இரத்தம். (ஆதி. 9:4; மத் 16: 17; எபி. 12: 24).
மாம்சத்தை அதின் உயிராகிய இரத்தத்தோடே புசிக்க வேண்டாம். (ஆதி. 9:4).

7. மாமிசம் (சரீரம்).
(லேவி. 17:14; யோபு. 7:5; சங். 136;25).

சகல மாம்சத்துக்கும் இரத்தம் உயிராயிருக்கிறது. இரத்தம் ஜீவனுக்கு சமானம்; ஆகையால் எந்த மாம்சத்தின் இரத்தத்தையும் புசிக்கவேண்டாம்; சகல மாம்சத்தின் உயிரும் அதின் இரத்தந்தானே; அதைப் புசிக்கிற எவனும் அறுப்புண்டுபோவான் என்று இஸ்ரவேல் புத்திரருக்குச் சொன்னேன். (லேவி.17:14)

சத்திய தேவன்

1. பிதா சத்தியம்.

(ஏசா. 65:16; யோவா. 7:28; 1 யோவா. 5:20).

அதினாலே பூமியிலே தன்னை ஆசீர்வதிக்கிறவன் சத்திய தேவனுக்குள் தன்னை ஆசீர்வதிப்பான்; பூமியிலே ஆணையிடுகிறவன் சத்திய தேவன் பேரில் ஆணையிடுவான்; முந்தின இடுக்கண்கள் மறக்கப்பட்டு, அவைகள் என் கண்களுக்கு மறைந்து போயின. (ஏசா.65:16).

2. குமாரன் சத்தியம்

(யோவா. 14:6; 1 யோவா 5:20; மத். 22:16).

அதற்கு இயேசு; நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான். (யோவா.14:6)

3.பரிசுத்த ஆவியானவர் சத்தியம்

(யோவா.16:13; யோவா. 14:17; யோ. 5:6).

சத்திய ஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்; அவர் தம்முடைய சுயமாய் பேசாமல், தாம் கேள்விப்பட்டவைகள் யாவையுஞ்சொல்லி, வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார். (யோவா.16:13).

தேவன் ஒருவரேயென்று வேதம் தெளிவு படுத்துகின்றது. தெய்வீகத்திற்கு, மூன்றுசாட்சிகள் வருகிறது. அவையாவன பிதாவாகிய தேவன், குமாரனாகிய இயேசு, பரிசுத்த ஆவியானவராகிய தேவன், இம்மூன்று சாட்சிகளுமே ஒரே தேவனைத் தான் குறிக்கிறது.

1. எழுத்துக்கள் சத்தியம் (தானி.10:21; யோவா.7:15; ரோம.2:27).

சத்திய எழுத்திலே கண்டிருக்கிறதை நான் உனக்குத் தெரிவிப்பேன். உங்கள் அதிபதியாகிய மிகாவேலைத் தவிர என்னோடே கூட அவர்களுக்கு விரோதமாய் பலங் கொள்ளுகிற வேறொருவரும் இல்லை. (தானி.10:21).

2. வார்த்தைகள் சத்தியம் (2 சாமு. 7:28; மத் 4:4; மாற். 10:24).

இப்போதும் கர்த்தராகிய ஆண்டவரே. நீரே தேவன்; உம்முடைய வார்த்தைகள் சத்தியம்; தேவரீர் உமது அடியானுக்கு இந்த நல்விசேஷங்களை வாக்குத்தத்தம் பண்ணினீர். (2 சாமு.7:26).

3. வசனம் சமூலம் சத்தியம் (யோவா.17:17; சங். 119:160,142)

உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்த மாக்கும்; உம்முடைய வசனமே சத்தியம். (யோவா.17:17).

தேவன் சத்தியமாய் இருக்கிறார். தேவனுடைய வேதத்திலுள்ள எழுத்துக்கள் சத்தியமும், எழுத்துக்கள் சேர்ந்த வார்த்தைகள் சத்தியமும், வார்த்தைகள் சேர்ந்த வசனங்கள் சத்தியமுமாய் இருக்கிறது.

கூட்டுதல், குறைத்தல், புரட்டுதல்

1. தேவ வசனத்தை கூட்டுதல்.
(ஆதி. 2:17; ஆதி. 3: 1,3).

ஆனாலும், தோட்டத்தின் நடுவில் இருக்கிற விருட்சத்தின் கனியைக் குறித்து, தேவன் நீங்கள் சாகாதபடிக்கு அதைப் புசிக்கவும், அதைத் தொடவும் வேண்டாம் என்று சொன்னார் என்றாள். (ஆதி. 3:3).

2. தேவ வசனத்தை குறைத்தல்
(ஆதி;. 2:16; ஆதி. 3:1,2)

ஸ்திரீ சர்ப்பத்தைப் பார்த்து, நாங்கள் தோட்டத்திலுள்ள விருட்சங்களின் கனிகளைப் புசிக்கலாம் .(ஆதி. 3:2).

3. தேவ வசனத்தை புரட்டுதல்
(ஆதி. 2;9,17; ஆதி. 3:3)

ஆனாலும் தோட்டத்தின் நடுவில் இருக்கிற விருட்சத்தின் கனியைக் குறித்து, தேவன் நீங்கள் சாகாதபடிக்கு அதைப் புசிக்கவும் அதைத் தொடவும் வேண்டாம் என்று சொன்னார் என்றாள். (ஆதி.3;3).

ஆதி தாயாகிய ஏவாள் தேவ வசனத்தைக் கூட்டி, குறைத்து, புரட்டினாள். தேவ வசனத்தைக் கூட்டுதல், குறைத்தல், புரட்டுதல் என்பது தேவனுக்கு விரோதமான குற்றமாகும். வேத வசனத்தைக் கூட்டினால் இந்தப் புஸ்தகத்தில் எழுதியிருக்கிற வாதைகளைத் தேவன் கூட்டுவார் என்று வேதம் தெளிவாகக் கூறி நம்மை எச்சரிக்கிறது.

தேடுதலின் இரகசியங்கள்.

1.தேவனைத் தேடுகிற உணர்வு
(சங். 14:2; சங். 53: 2; ரோம. 3:11).

தேவனைத் தேடுகிற உணர்வுள்ளவன் உண்டோ என்று பார்க்க, கர்த்தர் பரலோகத்திலிருந்து மனுபுத்திரரைக் கண்ணோக்கினார்.

2. வேதத்தைத் தேடி வாசியுங்கள்.
(ஏசா. 34:16; யோவா, 1:1; மத் 4:4).

கர்த்தருடைய புஸ்தகத்திலே தேடி வாசியுங்கள்; இவைகளில் ஒன்றும் குறையாது; இவைகளில் ஒன்றும் ஜோடில்லாதிராது; அவருடைய வாய் இதைச் சொல்லிற்று; அவருடைய ஆவி அவைகளைச் சேர்க்கும். (ஏசா. 34:16).

3. தேடுகிறவர்களை அவர் கைவிடுவதில்லை.
(சங். 9:10; சங் 22:26; சங். 34:10)

கர்த்தாவே, உம்மைத் தேடுகிறவர்களை நீர் கைவிடுகிறதில்லை; ஆதலால், உமது நாமத்தை அறிந்தவர்கள் உம்மை நம்பியிருப்பார்கள். (சங்.9:10).

தேவனுடைய வார்த்தையிலே அவரைத் தேடி வாசிக்க வேண்டும். இவ்விதமாக அவரைத் தேடுகிறவர்களை தேவன் கைவிடுவதில்லை.

ஆராய்தலின் இரகசியங்கள்.

1. கர்த்தர் ஆராய்ந்து அறிகின்றார். (சங் 139:1,2).

கர்த்தாவே, நீர் என்னை ஆராய்ந்து, அறிந்திருக்கிறீர். (சங் 139:1).

2. வேதவாக்கிங்களை ஆராய்ந்து பாருங்கள் (யோவா. 5:39; அப். 17:11).

வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்; அவைகளால் உங்களுக்கு நித்திய ஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே, என்னைக் குறித்துச் சாட்சி கொடுக்கிறவைகளும் அவைகளே. (யோவா. 5:39).

3. ஆராய்ச்சி செய்வதினால் நற்குணசாலிகளா வோம். (அப். 17:11; 1 கொரி 2:15)

அந்தப் பட்டணத்தார் மனோவாஞ்சையாய் வசனத்தை ஏற்றுக்கொண்டு, காரியங்கள் இப்படி யிருக்கிறதா என்று தினந்தோறும் வேதவாக்கியங்களை ஆராய்ந்து பார்த்ததினால், தெசலோனிக்கேயில் உள்ளவர்களைப் பார்கிலும் நற்குணசாலிகளா யிருந்தார்கள். (அப். 17:11).

வேத வசனத்தை ஆராய்ந்து அறிய வேண்டும். கர்த்தர் மனிதனை ஆராய்ந்து அறிகின்றார். நாம் வேதத்தை ஆராய்ந்து அறியும் பொழுது தேவனை அறிந்து நற்குணசாலிகளா யிருப்போம்.

தியானித்தலின் இரகசியங்கள்

1. வேதத்தில் பிரியமாயிருக்க வேண்டும். (சங் 1:1,2; சங், 119:40, 97)

கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான். (சங் 1:2).

2. வேதத்தை தியானம் செய்ய வேண்டும். (சங். 1:2 சங். 119:78,99).

அகங்காரிகள் என்னைப் பொய்களினால் கெடுக்கப்பார்த்த படியால் வெட்கப்பட்டுப் போவார்கள். நானோ உமது கட்டளைகளைத் தியானிப்பேன். (சங். 119:78).

3. இருதயத்தில் அக்கினி (பாக்கியவான்) (சங் 1:3; சங் 39:3; லூக். 24:32).

என் இருதயம் எனக்குள்ளே அனல் கொண்டது; நான் தியானிக்கையில் அக்கினி மூண்டது. அப்பொழுது என் நாவினால் விண்ணப்பம் செய்தேன். (சங். 39:3).

வார்த்தை ஆராய்ச்சி - சந்தோஷம்

1. **சாதாரண அர்த்தம் :** நீ போய் உன் ஆகாரத்தைச் சந்தோஷத்துடன் புசித்து, உன் திராட்சரசத்தை மனமகிழ்ச்சியுடன் குடி; தேவன் உன் கிரியைகளை அங்கீகாரம் பண்ணியிருக்கிறார். (பிர.9:7)

2. **ஆவிக்குரிய அர்த்தம் :** என்னுடைய சந்தோஷம் உங்களில் நிலைத்திருக்கும்படிக்கும், உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும் படிக்கும், இவைகளை உங்களுக்குச் சொன்னேன். (யோவா. 15:11).

3. **இரகசிய அர்த்தம் :** அதுபோல, மனந்திரும்ப அவசியமில்லாத தொண்ணூற்றொன்பது நீதிமான்களைக் குறித்துச் சந்தோஷம் உண்டாகிறதைப் பார்க்கிலும், மனந்திரும்புகிற ஒரே பாவியினிமித்தம் பரலோகத்தில் மிகுந்த சந்தோஷம் உண்டாயிருக்கும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். (லூக்.15:7).

சந்தோஷம் என்ற வார்த்தைக்குள் மறைந்து காணப்படும் மூன்றுவித அர்த்தங்களை ஆராய்ந்து அறிய வேண்டும்.

1. சரீர சம்பந்தமான ஆகாரம் மனதிற்கு சந்தோஷத்தைத் தரும்.

2. இயேசு (வார்த்தை) இருதயத்தில் சந்தோஷத்தைத் தருகிறார்.

3. பாவியின் மனந்திரும்புதலினால் பரலோகத்தில் நித்திய சந்தோஷம் உண்டாகிறது.

வசன ஆராய்ச்சி

அப்பொழுது மரியாள் விலையேறப் பெற்ற களங்கமில்லாத நளதம் என்னும் தைலத்தில் ஒரு இராத்தல் கொண்டுவந்து, அதை இயேசுவின் பாதங்களில் பூசி, தன் தலை மயிரால் அவருடைய பாதங்களைத் துடைத்தாள்; அந்த வீடு முழுவதும் தைலத்தின் பரிமளத்தினால் நிறைந்தது.(யோவா. 12:3).

1.மைய வார்த்தை : நளதம் (தைலம்)

2.மைய பொருள்கள் :
அ. விலையேறப் பெற்ற
ஆ. களங்கமில்லாத
இ. பரிமளம்
ஈ. கொண்டு வந்து
உ. பூசி
ஊ. துடைத்தாள்
எ. நிறைந்தது.

3.மைய பாத்திரங்கள்:
அ. மரியாள் தன் தலை மயிரால்
ஆ. இயேசுவின் பாதங்கள் அவருடைய

ஒரு வசனத்தைத் திறக்க மையக் குறியீட்டு வார்த்தை முக்கியம். நளதம் எப்படிப்பட்டது? அதனை எப்படி உபயோகிக்க வேண்டும்? என்பதனை மையப்பொருள் வெளிப்படுத்துகிறது. மரியாள், இயேசு மைய பாத்திரங்கள். மரியாள் தைலம் பூசி இயேசுவின் மரண வாசனையை வெளிப்படுத்தினாள்.

அதிகார ஆராய்ச்சி

சங்கீதம் 16-ம் அதிகாரம்

1. மைய வார்த்தை	: சுதந்தரம் (3முறை) 5, 5, 6ல் வசனங்கள்
2. மைய வசனம்	: அ. ஆகையால் என் இருதயம் பூரித்தது. ஆ. என் மகிமை களிகூர்ந்தது.
3. மையச் செய்தி	: சத்திய தேவனாகிய கர்த்தரே நம்முடைய சுதந்தரமுமாய் இருக்கிறார்.

அதிகார ஆராய்ச்சியை மூன்று பிரிவாக செய்ய வேண்டும்.

1. பொருளுள்ள ஒரு மைய வார்த்தை மூன்றுமுறை வரும். 2. அதிகாரத்திலுள்ள ஒரு வசனம் மைய வசனமாகத் தெரிந்தெடுத்து அதனை மூன்று கருப்பொருளாகப் பிரிக்கவேண்டும். கண்டுபிடித்த மைய வார்த்தையை தேவனோடு இணைத்து. தியானித்து, 3. மைய செய்தியினை எழுத வேண்டும்.

1. சத்தியத்தை தேடுகிற உணர்வு
(எரே. 5:1, 3; சங். 15:2)

நியாயஞ்செய்கிற மனுஷனை கண்டுபிடிப்பீர்களோ என்றும், சத்தியத்தைத் தேடுகிறவன் உண்டோ என்றும், எருசலேமின் தெருக்களிலே திரிந்து பார்த்து, விசாரித்து, அதன் வீதிகளிலே தேடுங்கள்; காண்பீர்களானால் அதற்கு மன்னிப்புத் தருவேன். (எரே. 5:1).

2. சத்தியத்தை தியானிக்கிற யோசனை
(ஏசா. 38:18; சங். 119: 97, 148)

பாதாளம் உம்மைத் துதியாது, மரணம் உம்மைப் போற்றாது; குழியில் இறங்குகிறவர்கள் உம்முடைய சத்தியத்தைத் தியானிப்பதில்லை.(ஏசா.38:18).

3. சத்தியத்தை சினேகிக்கிற இருதயம்
(சங். 8:19, 119:97,165).

உமது வேதத்தில் நான் எவ்வளவு பிரியமாயிருக்கிறேன். நாள் முழுவதும் அது என் தியானம். (சங். 119:97)

சத்தியமாகிய தேவனைத் தேடுகின்ற உணர்வு, தியானிக்கின்ற யோசனை, சிநேகிக்கின்ற இருதயம் நமக்குத் தேவை. இவைகளை நாம் செய்யும் பொழுது நம்முடைய ஆத்துமா சத்திய ஆத்துமாவாகும்.

1.சத்திய வாய் (நீதி. 12:17,19 சங் 119:43).

சத்தியவாசகன் நீதியை வெளிப்படுத்துவான், பொய் சாட்சிக்காரனோ வஞ்சகத்தை வெளிப்படுத்துவான். (நீதி. 12:17).

2. சத்திய நாவு (ஏசா. 59:3,4; சங். 15:2)

உத்தமனாய் நடந்து, நீதியை நடப்பித்து, மனதாரச் சத்தியத்தைப் பேசுகிறவன்தானே. (சங். 15:2).

3. சத்திய வார்த்தை (நீதி. 22:20; அப் . 26:25)

அதற்கு அவன் : கனம் பொருந்திய பெஸ்துவே, நான் பயித்தியக்காரனல்ல, சத்தியமும் சொஸ்த புத்தியுமுள்ள வார்த்தைகளைப் பேசுகிறேன். (அப். 26:250

சத்திய ஆவியை அடைய வாயிலே, நாவிலே சத்தியம் காணப்படவேண்டும். நாம் அனுதினமும் சத்திய வாசகனாக விளங்கவேண்டும். வாயின் வார்த்தைகள் சத்தியமாயிருக்க வேண்டும்.

1. சத்திய கைகள் (ஏசா.26:2; எபே. 4:15)

சத்தியத்தைக் கைக்கொண்டு வருகிற நீதியுள்ள ஜாதி உள்ளே பிரவேசிப்பதற்காக வாசல்களைத் திறவுங்கள். (ஏசா.26:6)

2. சத்திய அரை (எபே. 6:14; ஏசா. 11:5)

சத்தியம் என்னும் கச்சையை உங்கள் அரையில் கட்டினவர்களையும், நீதியென்னும் மார்க்கவசத்தைத் தரித்தவர்களாயும். (எபே. 6:14)

3.சத்திய கால்கள் (சங். 25:5,10; 3 யோவா. 1:4)

உம்முடைய சத்தியத்திலே என்னை நடத்தி, என்னைப் போதித்தருளும்; நீரே என் இரட்சிப்பின் தேவன், உம்மை நோக்கி நாள் முழுவதும் காத்திருக்கிறேன். (சங்.25:5)

சத்திய வேத வசனங்களைக் கைக்கொண்டு நடக்கிற கைகள், கால்கள் நமக்கு வேண்டும், மேலும் சரீரத்தின் தீமைக்கு எதிர்த்து போராடி வாழ சத்தியத்தை அரையிலே கட்டிக்கொள்ள வேண்டும்.

1. பிதாவாகிய தேவன்
(யோவா. 6:57; யாக். 1:17; யோ.17:25)

ஜீவனுள்ள பிதா என்னை அனுப்பினது போலவும், நான் பிதாவினால் பிழைத்திருக்கிறது போலவும், என்னைப் புசிக்கிறவனும் என்னாலே பிழைப்பான், (யோவா. 6:57)

2. குமாரனாகிய தேவன்
(1 யோ. 4:15; லூக். 5:24; லூக். 18:37)

இயேசுவானவர் தேவனுடைய குமாரனென்று அறிக்கை பண்ணுகிறவன் எவனோ அவனில் தேவன் நிலைத்திருக்கிறார். அவனும் தேவனில் நிலைத்திருக்கிறான். (1 யோ.4:15).

3.பரிசுத்த ஆவியானவராகிய தேவன்
(எபி. 12:9; யோ. 14:16; எபி. 9:14).

அன்றியும், நம்முடைய சரீரத்தின் தகப்பன்மார்கள் நம்மைச் சிட்சிக்கும்போது, அவர்களுக்கு நாம் அஞ்சி நடந்திருக்க, நாம் பிழைக்கத்தக்கதாக ஆவிகளின் பிதாவுக்கு வெகு அதிகமாய் அடங்கி நடக்கவேண்டுமல்லவா? (எபி.12:9).

தேவன் ஒருவரேயென்று வேதம் தெளிவுபடுத்துகின்றது. அந்த தேவனுடைய தெய்வீகத்திற்கு, மூன்று சாட்சிகள் உண்டு. அவையாவன பிதாவாகிய தேவன், குமாரனாகிய இயேசு, பரிசுத்த ஆவியானவராகிய தேவன். இம்மூன்று சாட்சிகளுமே ஒரே தேவனையே குறிக்கிறது.

1. கேருபீன்கள். சேராபீன்கள். நான்கு ஜீவன்கள் (ஏசா. 6:2; எசே. 10:1; வெளி. 4:6)

சேராபீன்கள் அவருக்கு மேலாக நின்றார்கள்; அவர்களின் ஒவ்வொருவனுக்கும் அவ்வாறு செட்டைகளிருந்தன; அவனவன் இரண்டு செட்டைகளால் தன் தன் முகத்தை மூடி, இரண்டு செட்டைகளால் தன் தன் கால்களை மூடி, இரண்டு செட்டைகளால் பறந்து. (ஏசா. 6:2)

2. இருபத்து நான்கு மூப்பர்கள் (வெளி. 4:10; வெளி. 5:8; யாத். 19:7)

இருபத்து நான்கு மூப்பர்களும் சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கிறவருக்கு முன்பாக வணக்கமாய் விழுந்து, சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறவரைத் தொழுது கொண்டு, தங்கள் கிரீடங்களைச் சிங்காசனத்திற்கு முன்பாக வைத்து; (வெளி. 4:10).

3. ஆயிரமாயிரமான தேவதூதர்கள், பரமசேனை (வெளி. 5:11; எபி. 12:22; ஆதி. 32:2)

பின்னும் நான் பார்த்தபோது, சிங்காசனத்தையும் ஜீவன்களையும் மூப்பர்களையும் சூழ்ந்திருந்த அநேக தூதர்களுடைய சத்தத்தைக் கேட்டேன்; அவர்களுடைய இலக்கம் பதினாயிரம் பதினாயிரமாகவும், ஆயிரமாயிர மாகவும் இருந்தது. (வெளி. 5:11)

தேவதூதர்களைக் குறித்து வேதத்தில், 1. கேரூபீன்கள், சேராபீன்கள், நான்கு மிருக ஜீவன்கள் என்றும், 2. இருபத்து நான்கு மூப்பர்கள் என்றும், 3. ஆயிரமாயிரமான தேவதூதர்கள், பரம சேனைகள் என்றும் மூன்று விதங்களில் கூறப்பட்டுள்ளது .

1. வலுசர்ப்பம்
(எசே. 2:14; ஏசா. 14:11-14; ஆதி. 3:1)

நீ காப்பாற்றுகிறதற்காக அபிஷேகம் பண்ணப்பட்ட கேருப்; தேவனுடைய பரிசுத்த பர்வதத்தில் உன்னை வைத்தேன்; அக்கினிமயமான கற்களின் நடுவே உலாவினாய். (எசே. 28:14)

2. அந்திக் கிறிஸ்து
(1 யோவா. 4:2; 1 தெச. 2:4; 1 யோவா. 2:[illegible])

தேவ ஆவியை நீங்கள் எதினாலே அறியலாமென்றால்; மாம்சத்தில் வந்த இயேசு கிறிஸ்துவை அறிக்கை பண்ணுகிற எந்த ஆவியும் தேவனால் உண்டாயிருக்கிறது (1 யோவா. 4:2)

3. கள்ளத்தீர்க்கதரிசி
(மத். 7:15; வெளி. 19:20; வெளி. 20:10)
கள்ளத் தீர்க்கதரிசிகளுக்கு எச்சரிக்கையாயிருங்கள்; அவர்கள் ஆட்டுத்தோலைப் போர்த்துக் கொண்டு உங்களிடத்தில் வருவார்கள்; உள்ளத்திலோ அவர்கள் பட்சிக்கிற ஓநாய்கள். (மத். 7:15).

பிசாசுவத்தைக் குறித்து மூன்றாக வேதம் கூறுகிறது அவைகள் வலுசர்ப்பம், இவன் பிதாவாகிய தேவனுக்கு விரோதமாகச் செயல்படுகிறவன்; அந்தி கிறிஸ்து, இவன்

குமாரனாகிய தேவனுக்கு விரோதமாகச் செயல்படுகிறவன்; கள்ளத்தீர்க்கதரிசி, இவன் பரிசுத்த ஆவியானவராகிய தேவனுக்கு விரோதமாகச் செயல்படுகிறவன். ஆகவே தெய்வீகத்திற்கு விரோதமாக செயல்படுவதால் பிசாசு என்றழைக்கப்படுகின்றான்.

1. மண்ணை எடுத்து மனிதனின் சரீரத்தை சிருஷ்டித்தார். (ஆதி. 2:7; லேவி.17:11; நீதி. 5:11)

தேவனாகிய கர்த்தர் மனுஷனைப் பூமியின் மண்ணினாலேயே உருவாக்கி, ஜீவ சுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார். மனுஷன் ஜீவாத்துமாவானான். (ஆதி. 2:7)

2. மண்ணில் தண்ணீரைக் கலந்து ஆத்துமாவைச் சிருஷ்டித்தார். (ஆதி. 2:6; நீதி. 20:5; ஏசா. 58:11)

அப்பொழுது மூடுபனி பூமியிலிருந்து எழும்பி, பூமியெல்லாம் நனைத்தது. (ஆதி. 2:6).

3. மண் உருவத்தின் நாசியில் ஜீவசுவாசத்தை ஊதி மனிதனுடைய ஆவியைச் சிருஷ்டித்தார். (எரே. 18:4; ஆதி. 2:7; எசே. 37:9.10)

குயவன் வனைந்து கொண்டிருந்த மண்பாண்டம் அவன் கையிலே கெட்டுப் போயிற்று; அப்பொழுது அதைத் திருத்தமாய்ச் செய்யும்படிக்கு, தன் பார்வைக்குச் சரியாய்க் கண்டபடி குயவன் அதைத் திரும்ப வேறே பாண்டமாக வனைந்தான். (எரே . 18:4).

தேவன் மனிதனை உண்டாக்குகையில் அவர்களை மண்ணாகிய (அக்கினி), தண்ணீராகிய (மூடுபனி), ஜீவசுவாசமாகிய (காற்று) இவைகளைக் கொண்டு மனிதனின் ஆவி, ஆத்துமா, சரீரம் உண்டாக்கப்பட்டது.

குற்றத்தின் இரகசியங்கள்

1. ஆதிப்பெற்றோரின் மீறுதல்
(ஓசி. 6:7; யோபு. 31:33; ஆதி. 3:2)

அவர்களோ ஆதாமைப் போல் உடன்படிக்கையை மீறி, அங்கே எனக்கு விரோதமாய்த் துரோகம் பண்ணினார்கள். (ஓசி. 6:7).

2. ஆதி பெற்றோரின் அக்கிரமம்
(யோபு. 31:33; ஆதி 2:15; ஆதி. 3:2)

நான் ஆதாமைப் போல என் மீறுதல்களை மூடி, என் அக்கிரமத்தை என் மடியிலே ஒளித்து வைத்தேனோ? (யோபு. 31:33).

3. ஆதிப் பெற்றோரின் பாவம்.
(ஏசா. 43:27; ரோ. 5:12; ஆதி. 2:9)

உன் ஆதி தகப்பன் பாவஞ்செய்தான்; உனக்கு முன்னின்று பேசுகிறவர்களும் எனக்கு விரோதமாய்த் துரோகம் பண்ணினார்கள். (ஏசா. 43:27).

தேவன் மனிதனை உண்டாக்குகையில் அவனை குற்றமற்றவனாக உண்டாக்கினார். ஆனால் பிசாசின் வார்த்தைக்கு (பொய்க்கு) உட்பட்டு மனிதன் குற்றமுள்ளவனானான். ஆதிப் பெற்றோர் பாவம் மட்டும் செய்யவில்லை, மீறுதல், அக்கிரமம், பாவம் மூன்றும் அவர்களுடைய ஆத்துமா, ஆவி, சரீரத்தில் உண்டானது, இவை மூன்றும் தான் குற்றமென்று வேதம் தெளிவுபடுத்துகிறது. (யாத் 34:7).

1. இயேசுவின் பிறப்பிலே வார்த்தை இரத்தமாக மாறியது.
(1 யோவா. 5:6; யோவா. 1:1,14; 1 தீமோ, 3:16)

இயேசு கிறிஸ்துவாகிய இவரே ஜலத்தினாலும் இரத்தத்தினாலும் வந்தவர். ஜலத்தினாலே மாத்திரமல்ல, ஜலத்தினாலும் இரத்தத்தினாலும் வந்தவர். ஆவியானவர் சத்தியமாகையால், ஆவியானவரே சாட்சிகொடுக்கிறார். (1 யோவா. 5:6).

2. இயேசுவின் பிறப்பிலே வார்த்தை ஜலம். ஆத்துமாவாக மாறியது.
(1 யோவா. 5:6; யோபு. 14:9; மத். 20:34).

தண்ணீரின் வாசனையினால் அது துளிர்த்து, இளமரம் போலக் கிளைவிடும் . (யோபு. 14:9).

3. இயேசுவின் பிறப்பிலே வார்த்தை காற்றாக, ஆவியாக மாறியது
(மத் 1:18; லூக். 1:35; யோவா. 8:23).

இயேசு கிறிஸ்துவினுடைய ஜெனனத்தின் விவரமாவது: அவருடைய தாயாகிய மரியாள் யோசேப்புக்கு நியமிக்கப்பட்டிருக்கையில், அவர்கள் கூடிவருமுன்னே அவள் பரிசுத்த ஆவியினாலே கர்ப்பவதியானாள் என்று காணப்பட்டது. (மத். 1:18)

மனிதரின் குற்றத்தை நீக்க இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்னதாக தேவன் மனுஷ குமாரனை இப்பூமிக்கு அனுப்பினார். அவருடைய பிறப்பில் வார்த்தை இரத்தமாக, மாம்சமாக மாறியது. வார்த்தை தண்ணீராக (ஜலம்) ஆத்துமாவாக மாறியது. வார்த்தை காற்றாக(மூச்சு) மாறியது. இயேசுவின் பிறப்பில் இம்மூன்றும் மாரியாளின் வயிற்றில் கருவாக, ஜீவனாக உண்டானது.

1.பொதுவான இரட்சிப்பு
(யூதா. 3; அப் 4:12; லூக். 1:77)

பிரியமானவர்களே, பொதுவான இரட்சிப்பைக் குறித்து உங்களுக்கு எழுதும் படி நான் மிகவும் கருத்துள்ளவனாய் இருக்கையில், பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புக் கொடுக்கப்பட்ட விசுவாசத்திற்காக நீங்க்ள தைரியமாய்ப் போராட வேண்டும் என்று உங்களுக்கு எழுதி உணர்த்துவது எனக்கு அவசியமாய்க் கண்டது. (யூதா.3).

2.பூரண இரட்சிப்பு
(ஏசா.33:6; மத் 24:13; யூதா.22)

பூரணஇரட்சிப்பும் ஞானமும் அறிவும் உன் காலங்களுடைய உறுதியாய் இருக்கும்: கர்த்தருக்குப் பயப்படுதலே அதின் பொக்கிஷம். (ஏசா. 33:6)

3.நித்திய இரட்சிப்பு
(எபி. 9:28; 1 பேது. 1:5; எபே 1:14)

கிறிஸ்துவும் அநேகருடைய பாவங்களைச் சுமந்து தீர்க்கும் படிக்கு ஒரே தரம் பலியிடப்பட்டு, தமக்காகக் காத்துக்கொண்டு இருக்கிறவர்களுக்கு இரட்சிப்பை அருளும்படி இரண்டாந்தரம் பாவமில்லாமல் தரிசனமாவார். (எபி. 9:28).

ஒருவன் இயேசுவிடம் வரும்பொழுது, அவரை விசுவாசிக்கும் பொழுது, அவனுடைய கடந்தகால குற்றமாகிய அக்கிரமம், மீறுதல், பாவங்கள் நீங்கி, அவைகளிலிருந்து மன்னிக்கப்படுகிறான். இது பாவத் தண்டனையிலிருந்து இரட்சிக்கப்படுதல் அல்லது பொதுவான இரட்சிப்பு. தொடர்ந்து கிறிஸ்துவுக்குள் வளரும்பொழுது அவன் இவ்வுலகத்தில் இருக்கிற படியினால் பல போராட்டங்கள், பிரச்சனைகளை சந்திக்க நேரிடுகிறது. அவைகளிலிருந்து இரட்சிக்கப்பட்டுக் கொண்டிருக்கிற (பாவ வல்லமையிலிருந்து) இரட்சிப்பு பூரண இரட்சிப்பாகும். இயேசுவின் இரண்டாம் வருகையில் நமக்கு கொடுக்கப்படப் போகிற இரட்சிப்பு, எதிர்கால (அ) நித்திய இரட்சிப்பாகும். இது, பாவ உலகத்திலிருந்து இரட்சிக்கப்படுவதாகும்.

1. சீஷன் வெறுக்க வேண்டும்.
(மத் 16:24; லூாக். 14:26; லூாக். 14: 33).

அப்பொழுது, இயேசு தம்முடைய சீஷர்களை நோக்கி ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால், அவன் தன்னைத் தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக் கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன். (மத். 16:24).

2.சீஷன் தன் சிலுவையை அனுதினமும் எடுக்க வேண்டும்.
(லூாக். 9:23; ரோம. 9:1; பிலி.1:20)

பின்பு அவர் எல்லாரையும் நோக்கி ஒருவன் என் பின்னே வர விரும்பினால் அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை அனுதினமும் எடுத்துக் கொண்டு, என்னைப் பின்பற்றக் கடவன். (லூாக் 9:23).

3. சீஷன் அன்பாயிருக்க வேண்டும்
(யோவா.13:35; யோவா. 15:9; யோவா. 8:31)

நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால், அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லாரும் அறிந்து கொள்வார்கள் என்றார். (யோவா. 13:35).

ஒருவன் கிறிஸ்துவிடத்தில் வரும்பொழுது, அவன் விசுவாசியாகி பின்பு சீஷனாக மாறுகிறான். சீஷன் பின்பு இயேசுவுக்கு சீஷனாக மூன்று தகுதிகள் உள்ளது. தன்னைத்தான் வெறுக்கவேண்டும். தன் சிலுவையை அனுதினமும் எடுக்கவேண்டும். தேவனிடத்தில், அவருடைய வார்த்தையில் அன்பாயிருக்க வேண்டும், இவைகளே சீஷனின் தகுதியாகும். இப்படிச் செய்கிறவனே சீஷன்.

கிறிஸ்தவனைக் குறித்த இரகசியங்கள்

1.சீஷர்கள் கிறிஸ்தவர்கள் என அழைக்கப்பட்டனர். (அப்.11:26; அப் 20:30; அப். 21:16)

அவர்கள் ஒரு வருஷகாலமாய்ச் சபையோடே கூடியிருந்து, அநேக ஜனங்களுக்கு உபதேசம் பண்ணினார்கள். முதல் முதல் அந்தியோகியாவிலே சீஷர்களுக்குக் கிறிஸ்தவர்கள் என்கிற பேர் வழங்கிற்று. (அப்.11:26)

2. சாட்சியின் கிறிஸ்தவனாயிருத்தல். (அப்.26:28; அப் 24:24,25).

அப்பொழுது அகிரிப்பா பவுலை நோக்கி: நான் கிறிஸ்தவனாகிறதற்குக் கொஞ்சங்குறைய நீ என்னைச் சம்மதிக்கப்பண்ணுகிறாய் என்றான்.(அப்.26:28).

3.பாடுபடுகிற கிறிஸ்தவனாயிருத்தல் (1 பேது. 4:16; ரோ. 8:17; பிலி. 1:29).

ஒருவன் கிறிஸ்தவனாயிருப்பதினால் பாடுபட்டால் வெட்கப்படாமலிருந்து அதினிமித்தம் தேவனை மகிமைப்படுத்தக்கடவன். (1 பேது. 4:16).

சீஷர்களின் கூட்டத்தை சபையாக வேதம் கூறுகிறது. அந்த சபையில் ஜனங்கள் இருந்தார்கள். அவர்களுக்கு கிறிஸ்தவர்கள் என்று பேர் வழங்கிற்று. இவர்கள் கிறிஸ்துவுக்கு சாட்சிகளாகவும், மாதிரிகளாகவும் வாழ்ந்து பாடுகளையும் அனுபவித்தார்கள். இவர்களே கிறிஸ்தவர்கள் என்றழைக்கப்பட்டனர். பாடுபட நாம் ஆயத்தமா!

பரிசுத்த ஆவியானவரைக் குறித்த இரகசியங்கள்

1. பரிசுத்த ஆவியானவருடைய சமுகம் (சங். 51:11; 2 கொரி 3:17,18; கொரி. 12:1)

உமது சமுகத்தை விட்டு என்னைத் தள்ளாமலும், உமது பரிசுத்த ஆவியை என்னிடத்திலிருந்து எடுத்துக் கொள்ளாமலும் இரும் (சங். 51:1)

2.பரிசுத்த ஆவியானவருடைய ஆவி (ரோம. 8:26,27; எபே. 1:16; கொரி. 12:4)

அந்தப்படியே ஆவியானவரும் நமது பலவீனங்களில் நமக்கு உதவிசெய்கிறார். நாம் ஏற்றபடி வேண்டிக்கொள்ள வேண்டியதின்னதென்று அறியாமலிருக்கிறபடியால், ஆவியானவர் தாமே வாக்குக்கடங்காத பெருமூச்சுக்களோடு நமக்காக வேண்டுதல் செய்கிறார். (ரோ. 8:26)

3.பரிசுத்த ஆவியானவருடைய (சரீரம்) ஆள்தத்துவம் (ரோம. 8:16; எசே. 8:3; அப் 13:1)

நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம் என்று ஆவியானவர்தாமே நம்முடைய ஆவியுடனே கூடச் சாட்சி கொடுக்கிறார். (ரோ8:16)

பரிசுத்த ஆவியானவரின் சமுகம் என்பது அவருடைய ஆத்துமாவை குறிக்கிறது. பரிசுத்த ஆவியானவரின் ஆவியென்பது அவருடைய வாயைக் குறிக்கிறது. பரிசுத்த ஆவியானவரின் சரீரம் அவருடைய ஆள்தத்துவத்தைக் குறிக்கிறது.

சபையைக் குறித்த இரகசியங்கள்

1.பரலோக சபை
(சங் 82:1; எபி. 12:23; வெளி. 11:19)

தேவ சபையிலே தேவன் எழுந்தருளியிருக்கிறார்; தேவர்களின் நடுவிலே அவர் நியாயம் விசாரிக்கிறார். (சங். 82:1)

2.பழைய ஏற்பாட்டு சபை
(அப்.7:38; சங்.1:5; சங். 22:25)

சீனாய் மலையில் தன்னுடனே பேசின தூதனோடும் நம்முடைய பிதாக்களோடும் கூட வனாந்தரத்திலே சபைக்குள்ளிருந்தவனும், நமக்குக் கொடுக்கும்படி ஜீவவாக்கியங்களைப் பெற்றவனும் இவனே. (அப். 7:38)

3.புதிய ஏற்பாட்டு சபை
(எபே. 1:9; எபே. 5:30; 1 பேது 2:5)

காலங்கள் நிறைவேறும் போது விளங்கும் நியமத்தின் படி பரலோகத்தில் இருக்கிறவைகளும் பூலோகத்தில் இருக்கிறவைகளுமாகிய சகலமும் கிறிஸ்துவுக்குள்ளே கூட்டப்பட வேண்டுமென்று. (எபே. 1:9)

வேதம் சபையைக் குறித்து மூன்று பிரிவாக நமக்கு போதிக்கிறது. அவை பரலோக சபை, பழைய ஏற்பாட்டு சபை, புதிய ஏற்பாட்டு சபை என்பன. இவை மூன்றும் வெவ்வேறு காலகட்டத்தில் இருந்தாலும், வெவ்வேறு இடங்களிலிருந்தாலும் மூன்றுக்கும் ஒற்றுமையுள்ளது. இச்சபைகள் தேவனுடைய வார்த்தையை மையமாக வைத்தே செயல்படுகிறது.

1.பரிசுத்த ஆவியின் ஸ்நானம்
(மாற். 1:8; 1 கொரி, 10:2; யோபு. 8:2)

நான் ஜலத்தினால் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்தேன்; அவரோ பரிசுத்த ஆவியினால் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பார் என்று பிரசங்கித்தான். (மாற். 1:8)

2.அக்கினியின் ஸ்நானம்
(மத் 3:11; லூாக். 12:49, 50; எரே. 23:29)

மனந்திரும்புதலுக்கென்று நான் ஜலத்தினால் உங்களுக்கு ஞானஸ்நானங் கொடுக்கிறேன்; எனக்குப்பின் வருகிறவரோ என்னிலும் வல்லவராயிருக்கிறார். அவருடைய பாதரட்சைகளைச் சுமக்கிறதற்கு நான் பாத்திரன் அல்ல, அவர் பரிசுத்த ஆவியினாலும் அக்கினியினாலும் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பார். (மத்.3:11)

3. ஜலத்தின் ஸ்நானம் (லூாக். 3:16; எபே. 5:26)

யோவான் எல்லாருக்கும் பிரத்தியுத்தரமாக: நான் ஜலத்தினால் உங்களுக்கு ஞானஸ்தானங் கொடுக்கிறேன். என்னிலும் வல்லவர் ஒருவர் வருகிறார். அவருடைய பாதரட்சைகளின் வாரை அவிழ்க்கிறதற்கும் நான் பாத்திரன் அல்ல. அவர் பரிசுத்த ஆவியினாலும் அக்கினியினாலும் உங்களுக்கு ஞானஸ்தானங் கொடுப்பார். (லூாக். 3:16)

ஒரு மனிதன் கிறிஸ்துவுக்குள் வந்தபின் அவன் ஸ்நானம் பண்ணப்பட வேண்டும். அந்த ஸ்நானம் பரிசுத்த ஆவியின் (காற்று) ஸ்நானம், ஜலத்தின் ஸ்நானம் என்று மூன்று வகைப்படும். இவை நம்முடைய ஆவி, ஆத்துமா, சரீரத்தில் கிறிஸ்து கல்வாரி சிலுவையில் சிந்தின இரத்தம் (அக்கினி), தண்ணீர், காற்று (ஆவி) ஆகிய மூன்றினால் நமக்குக் கிடைக்கிறது. இந்த ஸ்நானத்தை கிறிஸ்துவின் வார்த்தையின் மூலம் நாம் பெற்றுக் கொள்ள வேண்டும்.

அபிஷேகத்தைக் குறித்த இரகசியங்கள்

1.பரலோகத்தில் அபிஷேகம்
(எசே. 28:14; நீதி. 8:23; எபி. 1:9)

நீ காப்பாற்றுகிறதற்காக அபிஷேகம் பண்ணப்பட்ட கேரூப்: தேவனுடைய பரிசுத்த பர்வதத்தில் உன்னை வைத்தேன். அக்கினி மயமான கற்களின் நடுவே உலாவினாய். (எசே. 28:14)

2.பழைய ஏற்பாட்டில் அபிஷேகம்
(யாத் 30:30; 1 சாமு. 15:17; இரா. 19:16

ஆரோனும் அவன் குமாரரும் எனக்கு ஆசாரிய ஊழியம் செய்யும்படிக்கு, நீ அவர்களை பரிசுத்தப்படுத்துவாயாக. (யாத். 30:30)

3.புதிய ஏற்பாட்டில் அபிஷேகம்
(2 கொரி. 1:21; 1 யோவா 2:27)

உங்களோடே கூட எங்களையும் கிறிஸ்துவுக்குள் ஸ்திரப்படுத்தி, நம்மை அபிஷேகம் பண்ணினவர் தேவனே. (2 கொரி. 1:21)

அபிஷேகம் என்பது தேவன் குறிப்பிட்ட வேலையை, ஊழியத்தை செய்வதற்கு வேண்டிய அதிகாரத்தைக் கொடுப்பதாகும். இவ்விதமாக பரலோகத்திலும், பழைய ஏற்பாட்டிலும், புதிய ஏற்பாட்டிலும் அபிஷேகம் பண்ணப்படுகிறார்கள்.

ஜீவ அப்பத்தைக் குறித்த இரசசியங்கள்

1. ஜீவ அப்பம் எடுக்கப்பட்டது

(மத் 2:5,6; லூாக். 2:11; மீகா. 5:2)

அதற்கு அவர்கள்: யூதேயாவிலுள்ள பெத்லகேமிலே பிறப்பார்; அதேனென்றால் (மத். 2:5)

2. ஜீவ அப்பம் ஆசீர்வதிக்கப்பட்டது

(மத். 3:14-17; மாற். 1:10,11)

அன்றியும், வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகி: இவர் என்னுடைய நேசகுமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன் என்று உரைத்தது. (மத். 3:17)

3. ஜீவ அப்பம் பிட்கப்பட்டது

(யோவா. 19:18,30,34)

ஆகிலும் போர்ச்சேவகரில் ஒருவன் ஈட்டியினாலே அவருடைய விலாவில் குத்தினான். உடனே இரத்தமும் தண்ணீரும் புறப்பட்டது. (யோவா. 19:34)

இயேசுவே ஜீவ அப்பம். அவர் பெத்லகேமில் பிறந்தார். பெத்லகேம் என்றால் அப்பத்தின் வீடு என்று பொருள். அந்த வீட்டிலிருந்து பிறந்தார். யோர்தான் நதியிலே அவர் ஞானஸ்நானம் பேற்று கரையேறின உடனே தேவனால் ஆசீர்வாதம் பெற்றார். ஊழியத்தில் ஆசீர்வாதம் காணப்பட்டது. அந்த ஜீவ அப்பம் கல்வாரி சிலுவையிலே பிட்கப்பட்டு, நொறுக்கப்பட்டு, நமக்காகக் கொடுக்கப்பட்டது. அந்த ஜீவ அப்பத்தைப் புசித்தால் நமக்கு ஜீவன் உண்டு

1.ஜீவ ஊற்று (சங். 36:9 ; நீதி 13:14; எரே. 2:12)

ஜீவ ஊற்று உம்மிடத்தில் இருக்கிறது. உம்முடைய வெளிச்சத்திலே வெளிச்சம் காண்கிறோம். (சங். 36:9)

2. ஜீவ தண்ணீர்
(யோவா. 4:10; நீதி 10:11; நீதி. 10:32)

இயேசு அவர்களுக்குப் பிரதயுத்திரமாக : நீ தேவனுடைய ஈவையும் தாகத்துக்குத் தா என்று உன்னிடத்தில் கேட்கிறவர் இன்னார் என்பதையும் அறிந்திருந்தாயானால், நீயே அவரிடத்தில கேட்டிருப்பாய், அவர் உனக்கு ஜீவத் தண்ணீரைக் கொடுத்திருப்பார் என்றார். (யோவா. 4:10)

3.ஜீவ நதி
(யோவா. 7:38; நீதி 16;22; யோபு . 28:28)

வேதவாக்கியம் சொல்லுகிறபடி என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத் தண்ணீருள்ள நதி புறப்படுகின்றது. இவை தேவனுடைய வார்த்தையைக் குறிக்கிறது. தேவனுடைய வார்த்தையை நாம் தேட, ஆராய, தியானிக்கும்போது நமக்குள் இவை மூன்றும் உண்டாகும்.

ஜீவ ஒளியைக் குறித்த இரகசியங்கள்

1. **சுவிசேஷ ஒளி**
(2 கொரி. 4:4; அப். 13:26; லூக். 2:30)

தேவனுடைய சாயலாயிருக்கிற கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்தின் ஒளி, அவிசுவாசிகளாகிய அவர்களுக்குப் பிரகாசமாயிராதபடிக்கு, இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் அவர்களுடைய மனதைக் குருடாக்கினான். (2 கொரி 4:4)

2. **அறிவாகிய ஒளி**
(2 கொரி. 4:6; கொலோ. 1:10; 2பேது. 3:18; பிலி 3:8)

இருளிலிருந்து வெளிச்சத்தைப் பிரகாசிக்கச் சொன்ன தேவன் இயேசு கிறிஸ்துவின் முகத்திலுள்ள தமது மகிமையின் அறிவாகிய ஒளியைத் தோன்றப்பண்ணும் பொருட்டாக, எங்கள் இருதயங்களிலே பிரகாசித்தார். (2 கொரி. 4:6)

3. **ஜீவ ஒளி**
(யோ. 8:12; ஏசா. 10:17; 1 யோவா 1:5)

மறுபடியும் இயேசு ஜனங்களை நோக்கி; நான் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன். என்னைப் பின்பற்றுகிறவன் இருளிலே நடவாமல் ஜீவ ஒளியை அடைந்திருப்பான் என்றார். (யோவா. 8:12)

இயேசுவே மெய்யான, எந்த மனுஷனையும் பிரகாசிப்பிக்கிற ஒளியாயிருக்கிறார். வேதத்தில் சுவிசேஷ ஒளி, அறிவாகிய ஒளி, ஜீவ ஒளி என்று மூன்று விதமான ஒளியைக் குறித்து எழுதப்பட்டுள்ளது. சுவிசேஷ ஒளி இயேசுவையும், அறிவாகிய ஒளி பரிசுத்த ஆவியான வரையும்,ஜீவ ஒளி பிதாவையும் குறிக்கின்றது. இவ்வொளி நமக்குள் வர தேவனுடைய வார்த்தையாகிய ஒளியை நாம் தேட, தியானிக்க, ஆராய வேண்டும்.

எலும்பைக் குறித்த இரகசியங்கள்

1. ஆதாமின் எலும்பு

(பிர 11:5; ஆதி 2:7; ஆதி. 2:21-23)

ஆவியின் வழி இன்னதென்றும், கர்ப்பவதியின் வயிற்றில் எலும்புகள் உருவாகும் விதம் இன்னதென்றும் நீ அறியாதிருக்கிறது போலவே, எல்லாவற்றையும் செய்கிற தேவனுடைய செயல்களையும் நீ அறியாய். (பிர. 11:5)

2.யோசேப்பின் எலும்பு

(ஆதி. 50:25; யாத். 13:19; யோசு. 24:32)

தேவன் உங்களைச் சந்திக்கும்போது, என் எலும்புகளை இவ்விடத்திலிருந்து கொண்டு போவீர்களாக என்றும் சொல்லி; யோசேப்பு இஸ்ரவேல் புத்திரரிடத்தில் ஆணையிடுவித்துக் கொண்டான். (ஆதி. 50:25)

3.இயேசுவின் எலும்பு

(1 கொரி. 15:45; யோவா 1:29; யோவா. 19:33)

அந்தப்படியே முந்தின மனுஷனாகிய ஆதாம் ஜீவாத்துமாவானான் என்றெழுதியிருக்கிறது; பிந்தின ஆதாம் உயிர்ப்பிக்கிற ஆவியானார். (1 கொரி. 15:45)

தேவன் தம்முடைய சுவாசமாகிய காற்றினால் மனிதனின் எலும்பை உண்டாக்கினார். அந்த எலும்பில் பிசாசின் வார்த்தையினால் அவனுக்கு சுகமில்லை. இதை நீக்க யோசேப்பின் எலும்பு அடையாளமாக, இயேசுவுக்கு மாதிரியாக, பழைய ஏற்பாட்டிலே காட்டப்பட்டுள்ளது. இயேசு கிறிஸ்துவின் விலா எலும்பிலிருந்து புறப்பட்ட இரத்தம், தண்ணீர், ஆவி ஒப்புக் கொடுக்கப்பட்டதன் மூலமாக பிசாசினால் உண்டான பிரச்னை நீக்கப்பட்டு, இயேசுவாகிய மணவாளனின் எலும்புக்கும் மாம்சத்துக்கும் உரியவர்களாக மணவாட்டியாகிய சபை இணைக்கப் பட்டிருக்கிறது.

கல்லைக்குறித்த இரகசியங்கள்

1. கல்லான தூதன்

(எசே. 28:13,14; சங் 23;1; சங் 82:10)

நீ தேவனுடைய தோட்டமாகிய ஏதேனில் இருந்தவன்; பத்மராகம், புஷ்பராகம், வைரம், படிகப்பச்சை, கோமேதகம், யஸ்பி, இந்திர நீலம், மரகதம், மாணிக்கம் முதலான சகலவித இரத்தினங்களும் பொன்னும் உன்னை மூடிக்கொண்டிருக்கிறது. நீ சிருஷ்டிக்கப்பட்ட நாளில் உன் மேளவாத்தியங்களும் உன் நாகசுரங்களும் உன்னிடத்தில் ஆயத்தப்பட்டிருந்தது.(எசே. 28:13)

2. கல்லான மனிதன்

(சங். 8:5; எபி. 2:7; ஆதி. 2:7)

நீர் அவனைத் தேவதூதரிலும் சற்று சிறியவனாக்கினீர்: மகிமையினாலும் கனத்தினாலும் அவனை முடிசூட்டினீர். (சங். 8:5)

3. கல்லான தெய்வம்

(ஏசா. 28:16; சங். 118:22; 1 பேது. 2:6)

ஆதலால் கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறதாவது: இதோ, அஸ்திபாரமாக ஒரு கல்லை நான் சீயோனிலே வைக்கிறேன். அது பரீட்சிக்கப்பட்டதும், விலையேறப் பெற்றதும், திட அஸ்திபாரமுள்ளதுமான மூலைக் கல்லாயிருக்கும், விசுவாசிக்கிறவன் பதறான். (ஏசா. 28:16)

தேவ தூதர்கள் கல்லினால் சிருஷ்டிக்கப்பட்டனர். அவர்களில் கேரூப் என்பவன் தீய சுபாவ கற்களால் தன்னை மூடிக்கொண்டிருக்கிறதாக (எசே. 28:1) வேதம் கூறுகிறது. மனிதன் மண்ணிலிருந்து உண்டாக்கப்பட்டான். அவனுடைய இருதயம் சதையாயிருந்ததை பிசாசு கல்லாக மாற்றினான். இதைப் போக்க இயேசு சிறிய விலையேறப்பெற்ற கல்லாக இவ்வுலகத்தில் வந்து, மரித்து அடக்கம் பண்ணப்பட்டு உயிர்த்து மனிதனின் கல்லான இருதயத்தை (தீய சுபாவத்தை) எடுத்துப்போட்டு, சதையான இருதயமாக மாற்றினார்.

1.பழைய ஏற்பாட்டு ஆசீர்வாதங்கள்
(ஆதி. 49:25; உபா 33:13-15)

உன் தகப்பனுடைய தேவனாலே அப்படியாயிற்று. அவர் உனக்குத் துணையாயிருப்பார். சர்வ வல்லவராலே அப்படியாயிற்று. அவர் உயர வானத்திலிருந்து உண்டாகும் ஆசீர்வாதங்களினாலும், கீழே ஆழத்தில் உண்டாகும் ஆசீர்வாதங்களினாலும், ஸ்தனங்களுக்கும் கர்பங்களுக்கும் உரிய ஆசீர்வாதங்களினாலும் உன்னை ஆசீர்வதிப்பார் . (ஆதி. 49:25)

2. புதிய ஏற்பாட்டு ஆசீர்வாதங்கள்
(எபே. 1:3; அப். 3:26; ரோம 15:9)

நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம். அவர் கிறிஸ்துவுக்குள் உன்னதங்களிலே ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத்தினாலும் நம்மை ஆசீர்வதித்திருக்கிறார். (எபே. 1:3)

3.நித்திய ஏற்பாட்டு ஆசீர்வாதங்கள்
(சங் 21:6; வெளி. 2:27, 28,7,10)

அவரை நித்திய ஆசீர்வாதங்களுள்ளவராக்குகிறீர்; அவரை உம்முடைய சமுகத்தின் மகிழ்ச்சியினால் பூரிப்பாக்குகிறீர். (சங் 21:6)

சத்தியவேதம் ஆசீர்வாதத்தை சாதாரண உலகப் பிரகாரமான ஆசீர்வாதம் (பழைய ஏற்பாட்டு), ஆவிக்குரிய ஆசீர்வாதம், நித்திய ஆசீர்வாதங்களென்று மூன்றாகப் பிரித்துள்ளது. பழைய ஏற்பாட்டு ஆசீர்வாதங்கள் பார்க்கக்கூடியவை, புதிய ஏற்பாட்டு ஆசீர்வாதங்கள் பார்க்க முடியாதவை (நமக்குள் உண்டாகும்). நித்திய ஏற்பாட்டு ஆசீர்வாதங்கள் நித்தியத்தில் ஜெயம் பெற்றவர்களுக்கு கொடுக்கப்படுபவை. இந்த மூன்று ஆசீர்வாதங்களையும் பெற தேவனுடைய வார்த்தையால் மாத்திரமே முடியும். இன்றே தேவனுடைய வார்த்தையை தேட, தியானிக்க, ஆராய ஆயத்தமா!

சோதனையைக் குறித்த இரகசியங்கள்

1.கண்களின் இச்சை

(1 யோவா 2:16; மத் 5:28; மாற். 7:22)

ஏனெனில் , மாம்சத்தின் இச்சையும், கண்களின் இச்சையும், ஜீவனத்தின் பெருமையுமாகிய உலகத்திலுள்ளவைகளெல்லாம் பிதாவினாலுண்டானவைகளல்ல. அவைகள் உலகத்தினாலுண்டானவைகள். (1 யோவா. 2:16)

2.ஜீவனத்தின் பெருமை

(1 யோவா. 2;16; மாற் 7:22 1 பேது 4:3)

களவுகளும், பொருளாசைகளும் துஷ்டத்தனங்களும், கபடும், காமவிகாரமும், வன்கண்ணும், தூஷணமும், பெருமையும், மதிகேடும் புறப்பட்டு வரும் (மாற். 7:22)

3. மாம்சத்தின் இச்சை

(1 யோவா. 2:16; ரோம. 6:12; கலா. 5:19)

ஆகையால், நீங்கள் சரீர இச்சைகளின்படி பாவத்திற்கு கீழ்ப்படியத்தக்கதாக, சாவுக்கேதுவான உங்கள் சரீரத்தில் பாவம் ஆளாதிருப்பதாக. (ரோம. 6:12)

ஒருவன் கிறிஸ்துவுக்குள் வந்து அவரை விசுவாசிக்கும் பொழுதும்,அவரில் நிலைத்திருக்கும் பொழுதும் அவன்

ஆசீர்வதிக்கப்படுகிறான். ஆசீர்வாதம் வந்தபின் அவன் கண்களின் இச்சை, ஜீவனத்தின் பெருமை, மாம்சத்தின் இச்சை என்ற மூன்றுவித சோதனைக்குட்படுகிறான். தேவன் பொல்லாங்கினால் சோதிக்கப்படுகிறவரல்ல. ஒருவனையும் அவர் சோதிக்கிறவருமில்லை. அவனவன் தன் தன் சுய இச்சையினாலேயே இழுக்கப்பட்டு, சிக்குண்டு சோதிக்கப்படுகிறான். இந்த சோதனையை கிறிஸ்துவின் வசனத்தினால் நாம் ஜெயிக்க வேண்டும்.(மத். 4:1-10; யாக். 1:13,14; வெளி. 12:11

பாடுகளைக் குறித்த இரகசியங்கள்

1. **பாடுகள்** (பிர. 3:10; மத் 6:34; 1 பேது 5:10)

மனுபுத்திரர் பாடுபடும்படி தேவன் அவர்களுக்கு நியமித்த தொல்லையைக் கண்டேன். (பிர 3:10)

2. **உபத்திரவம்** (சங். 34;17; சங், 119 ; 67,71)

நீதிமான்கள் கூப்பிடும்போது கர்த்தர் கேட்டு அவர்களை அவர்களுடைய எல்லா உபத்திரவங்களுக்கும் நீங்கலாக்கி விடுகிறார். (சங், 34:17)

3. **துன்பம்** (சங். 34:19; சங் 25:18; யோபு 19:22)

நீதிமானுக்கு வரும் துன்பங்கள் அநேகமாயிருக்கும் கர்த்தர் அவைகளெல்லாவற்றிலும் நின்று அவனை விடுவிப்பார். (சங் 34:19)

நாம் கிறிஸ்துவுக்குள் வளரும்போது பாடுகள், உபத்திரவங்கள், துன்பங்கள் நமக்கு உண்டாகும். வேதத்தில் கிறிஸ்து, சீஷர்கள், பரிசுத்தவான்களாகிய சபையார். அப்போஸ்தலர் போன்ற எல்லோருக்கும் பாடுகள், உபத்திரவங்கள், துன்பங்கள் உண்டாகியிருந்தன. இதற்கு இயேசு கிறிஸ்துவின் வாழ்வே நமக்கு முன்மாதிரியாக இருக்கின்றது. ஆகவே அவைகளை ஏற்றுக்கொண்டு, அழைத்தலின் பந்தய பொருளுக்காக இலக்கை நோக்கி தொடர்ந்து ஓடவேண்டியது அவசியம்.

1.ஆத்துமாவில் கனி

(கலா. 5:22; மத் 21;21; யோவா. 16:22; 1 பேது. 3:4)

ஆவியின் கனியோ, அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம். (கலா. 5:22)

2.ஆவியில் கனி

(கலா. 5:22:23; சங் 28: 3; யாக்.1:19; கலா. 6:1)

சாந்தம், இச்சையடக்கம், இப்படிப்பட்டவைகளுக்கு விரோதமான பிராமணம் ஒன்றுமில்லை. (கலா. 5:23

3.சரீரத்தில் கனி

(கலா 5:22,23; 1 யோவா 2:23; எபே. 4:32; 1 கொரி 9:25)

சாந்தம், இச்சையடக்கம், இப்படிப்பட்டவைகளுக்கு விரோதமான பிரமாணம் ஒன்றுமில்லை.(கலா. 5:23)

ஆவிக்குரிய மனிதர் என்று சொல்லிக்கொள்கிற ஒவ்வொருவரும் கனிக்கொடுக்கவேண்டியது அவசியமும் முக்கியமுமாய் இருக்கிறது. அவன் கிறிஸ்துவின் வார்த்தையில் நிலைத்திருந்து அவனுடைய ஆவியிலும், ஆத்துமாவிலும், சரீரத்திலும் கனி கொடுக்க வேண்டும். மனிதனை மரத்தோடு ஒப்பிட்டு வேதம் கூறுகிறது. (மத். 3:10) நல்ல மரமென்றால் கனியிருக்கவேண்டும் அல்லவா!. கனிகொடாத மரமெல்லாம் வெட்டுண்டு அக்கினியில் போடப்படும் என்று இயேசுவின் வசனம் எச்சரிக்கிறது.

1.ஆவி. (1 தெச. 5:23; 1 கொரி 6:11; யோவா 17:15)

சமாதானத்தின் தேவன் தாமே உங்களை முற்றிலும் பரிசுத்தமாக்குவாராக. உங்கள் ஆவி, ஆத்துமா, சரீரம், முழுவதும் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வரும்போது குற்றமற்றதாய் இருக்கும்படி காக்கப்படுவதாக. (1 தெச. 5:23)

2. ஆத்துமா (1 தெச. 5:23; எபே. 5:26; 1 பேது.1:5)

தாம் அதைத் திருவசனத்தைக் கொண்டு தண்ணீர் முழுக்கினால் சுத்திகரித்து, பரிசுத்தமாக்குகிறதற்கும். (எபே. 5:26)

3.சரீரம் (1 தெச.5:23; 1 யோவா.1:7; 1 யோவா. 5:17,18)

அவர் ஒளியிலிருக்கிறது போலவே நாமும் ஒளியிலே நடந்தால் ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருப்போம்; அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும். (யோவா. 1:7)

கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு முன்னதாக நாம் ஆயத்தமாக வேண்டும். நம்முடைய ஆவி, ஆத்துமா, சரீரம் இவை மூன்றும் கிறிஸ்துவின் வார்த்தையாகிய இரத்தம், தண்ணீர், காற்றினால் கழுவப்பட்டு எப்பொழுதும் குற்றமற்றதாயிருக்க வேண்டும். அப்பொழுதுதான் நாம் ஆயத்தமாயிருக்க முடியும். குற்றமற்றவர்களாக இருக்க குறையற்ற வேத வசனத்தைத் தேட, ஆராய, தியானிக்க நாம் ஆயததமா? (சங்.19;7)

1.இயேசு பரலோகத்தை விட்டு வானத்தில் தரிசனமாவார். (1 தெச 4:6; எபி. 9:28)

ஏனெனில், கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கிவருவார். அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள். (1 தெச.4:6)

2.பிரதான தூதனுடைய சத்தம், தேவ எக்காளம் (1 தெச. 4:16; மத் 25:6; மத் 24:31)

நடுராத்திரியிலே : இதோ, மணவாளன் வருகிறார். அவருக்கு எதிர்கொண்டுபோகப் புறப்படுங்கள் என்கிற சத்தம் உண்டாயிற்று. (மத் 25:6)

3.கிறிஸ்துவுக்குள் மரித்த, உயிரோடிருக்கிறவர்கள் எடுத்துக் கொள்ளப்படுவார்கள். (1 தெச.4:17; 2 கொரி.3:18;1 கொரி 15:51,52)

பின்பு உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டுபோக, மேகங்கள் மேல் அவர்களோடேகூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு, இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனேகூட இருப்போம். (1 தெச. 4:17)

இயேசுவின் இரண்டாம் வருகையில் அவர் பரலோகத்தைவிட்டு வானத்திலே தரிசனமாவார் என்று வேதம் கூறுகிறது. அவர் வருகையில் சத்தங்கள் உண்டாகும். அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்த மற்றும் உயிரோடிருக்கிற பரிசுத்தவான்கள் எடுத்துக் கொள்ளப் படுவார்கள். நாம் கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு ஆயத்தமாயிருக்கிறோமா? ஆம், ஆயத்தமாகுவோம்.

1.மணவாளன், மணவாட்டி
(1 கொரி 15:20; 1 தெச. 4:16,17)

அவனவன் தன்தன் வரிசையிலே உயிர்ப்பிக்கப் படுவான். முதற்பலனானவர் கிறிஸ்து; பின்பு அவர் வருகையில் அவருடையவர்கள் உயிர்ப்பிக்கப்படுவார்கள். (1 கொரி. 15:23)

2.தோழிகள், தோழருக்கு அடையாளமானவர்கள், தோழர்கள்
(மத். 25:6,8-11; வெளி. 6:9-11; ரோம 11:26; வெளி. 11:3,11; 7:4)

அவர் ஐந்தாம் முத்திரையை உடைத்தபோது, தேவ வசனத்தினிமித்தமும் தாங்கள் கொடுத்த சாட்சியினிமித்த மும் கொல்லப்பட்டவர்களுடைய ஆத்துமாக்களைப் பலிபீடத்தின் கீழே கண்டேன். (வெளி. 6:9)

3.உலகபிரகாசமான நீதிமான்கள், பாவிகள்
(2 பேது. 3:10,12; மத் 25:46; அப் 24:15; ரோம. 2:14,15)

நீதிமான்களும் அநீதிமான்களுமாகிய மரித்தோர் உயிர்த்தெழுந்திருப்பது உண்டென்று இவர்கள் தேவனிடத்தில் நம்பிக்கை கொண்டிருக்கிறதுபோல, நானும் நம்பிக்கை கொண்டிருக்கிறேன். (அப். 24:15)

மனிதன் தனது மரணத்துக்குப் பின்பு நியாயத்தீர்ப்பு பெறவேண்டியதாயிருக்கின்றது. நியாயந்தீர்க்கப்பட ஒவ்வொரு மனிதனும் உயிர்த்தெழவேண்டியுள்ளது. மனிதனுடைய உயிர்த்தெழுதலுக்கு வரிசைகள் உண்டு. இந்த வரிசையில் முதற்பலன் இயேசு கிறிஸ்து; இரண்டாவதாக கிறிஸ்துவுக்குள் மரித்த பரிசுத்தவான்களாகிய பழைய ஏற்பாட்டு, புதிய ஏற்பாட்டு மணவாட்டி கூட்டத்தார்; மூன்றாவதாக, கைவிடப்பட்டு உபத்திரவ காலத்தில் இரத்தசாட்சியாக மரிக்கின்ற பரிசுத்தவான்கள்; நான்காவதாக, இஸ்ரவேலரின் மனந்திரும்புதலுக்காக ஊழியம் செய்கின்ற பழைய ஏற்பாட்டு இரத்தசாட்சிகளான தோழருக்கு அடையாள மானவர்கள்; ஐந்தாவதாக இவர்களின் சாட்சி ஊழியத்தில் சுவிசேஷம் கேட்டு, மனந்திருமபி இரத்த சாட்சிகளாக மரித்து உயிர்த்தெழுகின்ற இஸ்ரவேலராகிய மணவாளனுடைய தோழர்கள்; ஆறாவதாக உலக முடிவுக்குப்பின் உலகப் பிரகாரமான நீதிமான்கள்; ஏழாவதாக, உலகப் பிரகாரமான பாவிகள், உயிர்த்தெழுவார்கள். இவ்விதமாக ஏழு வரிசையாக மூன்று பிரிவுகளாக உயிர்த்தெழுதல்கள் நடைபெறும்.

உபத்திரவ காலங்களைக் குறித்த இரகசியங்கள்

1.ஆயத்தமில்லாத கன்னிகைகள் (மத். 25:1, 7,8,10,11)

நடுராத்திரியிலே: இதோ, மணவாளன் வருகிறார், அவருக்கு எதிர்கொண்டு போகப் புறப்படுங்கள் என்கிற சத்தம் உண்டாயிற்று.

அப்பொழுது, அந்த கன்னிகைகள் எல்லாரும் எழுந்திருந்து, தங்கள் தீவட்டிகளை ஆயத்தப் படுத்தினார்கள்.

புத்தியில்லாதவர்கள் புத்தியுள்ளவர்களை நோக்கி: உங்கள் எண்ணெய்யில் எங்களுக்குக் கொஞ்சம் கொடுங்கள், எங்கள் தீவட்டிகள் அணைந்து போகிறதே என்றார்கள். (மத். 25:6-8)

2.தேவ வசனத்தினிமித்தம் சாட்சியின் ஜீவியம் (வெளி. 6:9; மத் 10:18)

அவர் ஐந்தாம் முத்திரையை உடைத்தபோது, தேவ வசனத்தினிமித்தமும் தாங்கள் கொடுத்த சாட்சியினி மித்தமும் கொல்லப்பட்டவர்களுடைய ஆத்துமாக்களைப் பலிபீடத்தின் கீழே கண்டேன். (வெளி. 6:9)

3.உபத்திரவகால இரத்த சாட்சிகள் (மத். 24:9; மத் 23:30-32, வெளி. 6:9)

அப்பொழுது உங்களை உபத்திரவங்களுக்கு ஒப்புக்கொடுத்து, உங்களைக் கொலைசெய்வார்கள்: என் நாமத்தினிமித்தம் நீங்கள் சகல ஜனங்களாலும் பகைக்கப்படுவீர்கள்.

இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்குப் பின்பு பூமியிலே பிசாசானவன் நேரடியாக தனது ஆளுகையைச் செய்வான். இந்த ஆளுகையின் காலங்களின் முதற்பகுதி உபத்திரவ காலம். கிறிஸ்துவின் வருகையில் எடுத்துக்கொள்ளப்பட ஆயத்தமில்லாதிருந்த கன்னிகைகள், சீஷர்கள் அக்காலத்திலே காணப்படுவார்கள். உபத்திரவகாலத்திலே அவர்கள் இயேசு கிறிஸ்துவுக்காக சாட்சியாக வாழ்ந்து, இரத்த சாட்சியாக மரிப்பார்கள்.

1. இஸ்ரவேலரின் இக்கட்டுக்காலம்
(எரே. 30:7,8; மத். 24:21; தானி 12;1)

ஐயோ! அந்த நாள் பெரியது; அதைப் போலொத்த நாளில்லை: அது யாக்கோபுக்கு இக்கட்டுக்காலம்; ஆனாலும் அவன் அதற்கு நீங்கலாகி இரட்சிக்கப்படுவான். (எரே. 30:7)

2. பழைய ஏற்பாட்டு இரத்த சாட்சிகள்
(சக. 4:3,14; வெளி. 11:3,4,7-10)

அவர்கள் தங்கள் சாட்சியைச் சொல்லி முடித்திருக்கும்போது, பாதாளத்திலிருந்தேறுகிற மிருகம் அவர்களோடே யுத்தம் பண்ணி, அவர்களை ஜெயித்து அவர்களைக் கொன்றுபோடும். (வெளி. 11:7)

3. இஸ்ரவேலருடைய இரத்தசாட்சி
(வெளி. 7:14; ரோம. 11:25-27)

அதற்கு நான்: ஆண்டவனே, அது உமக்கே தெரியும் என்றேன். அப்பொழுது அவன்: இவர்கள் மிகுந்த உபத்திரவத்திலிருந்து வந்தவர்கள்; இவர்கள் தங்கள் அங்கிகளை ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்திலே தோய்த்து வெளுத்தவர்கள். (வெளி. 7:14)

மகா உபத்திரவ காலம் இஸ்ரவேலருக்கு சம்பவிப்பதாகும். இது இஸ்ரவேலருக்கு இக்கட்டுக் காலமாகும். அப்பொழுது, பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகள் சுவிசேஷத்தை சாட்சியாக அறிவித்து இரத்த சாட்சிகளாக மரிப்பார்கள், இஸ்ரவேலரும் கிறிஸ்துவுக்காக இரத்த சாட்சிகளாக மரிப்பார்கள்.

1.மனைவியின் ஆயத்தம்
(வெளி. 19:7; வெளி. 21:9; பேது. 3:5)

நாம் சந்தோஷப்பட்டுக் களிகூர்ந்து அவருக்குத் துதி செலுத்தக்கடவோம். ஆட்டுக்குட்டியானவருடைய கலியாணம் வந்தது. அவருடைய மனைவி தன்னை ஆயத்தம் பண்ணினாள் என்று சொல்லக் கேட்டேன். (வெளி. 19:7)

2.சுத்தமும் பிரகாசமுமான மெல்லிய வஸ்திரம்
(வெளி. 19:8; மத் 22:12; எசே. 16:8-13)

சுத்தமும் பிரகாசமுமான மெல்லிய வஸ்திரம் தரித்துக் கொள்ளும்படி அவளுக்கு அளிக்கப்பட்டது: அந்த மெல்லிய வஸ்திரம் பரிசுத்தவான்களுடைய நீதிகளே.(வெளி. 19:8)

3.கலியாண விருந்து
(வெளி. 19:9; மத் 22:4, 9-12)

பின்னும், அவன் என்னை நோக்கி: ஆட்டுக் குட்டியானவரின் கலியாண விருந்துக்கு அழைக்கப் பட்டவர்கள் பாக்கியவான்கள் என்று எழுது என்றான். மேலும், இவைகள் தேவனுடைய சத்தியமான வசனங்கள் என்று என்னுடனே சொன்னான். (வெளி. 19:9)

ஆட்டுக்குட்டியானவருடைய கலியாணத்திற்கு மனைவியாகிய நாம் ஆயத்தமாயிருந்து, நம்முடைய ஆவி, ஆத்துமா, சரீரத்தில் தேவனுடைய வார்த்தையினால் குற்றமற்றவர்களாகக் காணப்பட்டு, கலியாண வஸ்திரத்தை அணிந்தால்தான் கலியாணத்திலே மணவாட்டியாகப் பங்கெடுக்க நாம் தகுதியுள்ளவர்களாக முடியும்.

1.பூமியில் அர்மெகதோன் யுத்தம்
(வெளி. 16:16; சக 14:1,4,5; அப் . 1:11,12)

அப்பொழுது எபிரேயு பாஷையிலே அர்மெகதோன் என்னப்பட்ட இடத்திலே அவர்களைக் கூட்டிச் சேர்த்தான். (வெளி. 16:16)

2.இயேசு கிறிஸ்து, பரிசுத்தவான்கள், பரம சேனை
(வெளி. 17:14; வெளி . 19:14-16; சக. 14:3)

இவர்கள் ஆட்டுக்குட்டியானவருடனே யுத்தம் பண்ணுவார்கள்: ஆட்டுக்குட்டியானவர் கர்த்தாதி கர்த்தரும் ராஜாதி ராஜாவுமாயிருக்கிறபடியால் அவர்களை ஜெயிப்பார். அவரோடு கூட இருக்கிறவர்கள் அழைக்கப்பட்டவர்களும் தெரிந்து கொள்ளப்பட்டவர்களும் உண்மையுள்ளவர்களுமாய் இருக்கிறார்கள் என்றான். (வெளி. 17:14)

3.அந்திக்கிறிஸ்து, கள்ளத்தீர்க்கதரிசி, பூமியின் இராஜாக்கள்.
(வெளி, 17:8-13; வெளி. 19:18-21)

நீ கண்ட மிருகம் முன்னே இருந்தது. இப்பொழுது இல்லை. அது பாதாளத்திலிருந்து ஏறிவந்து, நாசமடையப் போகிறது. உலகத்தோற்றமுதல் ஜீவபுஸ்தகத்தில் பேரெழுதப்பட்டிராத பூமியின் குடிகள், இருந்ததும், இராமற் போனதும், இனி இருப்பதுமாயிருக்கிற மிருகத்தைப் பார்த்து ஆச்சரியப்படுவார்கள் (வெளி.17:8)

மூன்றாவது உலக மகாயுத்தம் பூமியில் அர்மெகதோன் என்கிற இடத்தில் நடக்கும். அந்த யுத்தத்தில் இயேசு கிறிஸ்துவும், பரிசுத்தவான்களும், பரமசேனைகளும், அந்திகிறிஸ்துவோடும், கள்ளத்தீர்க்கதரிசியோடும், பூமியின் இராஜாக்களோடும் யுத்தம் செய்து இவர்களை ஜெயிப்பார்கள். அந்திக் கிறிஸ்துவும், கள்ளத்தீர்க்கதரிசியும், அக்கினியும், கந்தகமும் எரிகிற கடலிலேபங்கடைவார்கள். பூமியின் இராஜாக்கள் குதிரையின்மேல் ஏறினவருடைய பட்டயத்தினால் கொல்லப்படுவார்கள்.

1. இராஜாக்கள்
(வெளி. 1:6; வெளி. 20:4,6)

நம்மிடத்தில் அனபுகூர்ந்து, தமது இரத்தத்தினாலே நம்முடைய பாவங்களற நமமைக் கழுவி, நம்முடைய பிதாவாகிய தேவனுக்கு முன்பாக நம்மை ராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கின அவருக்கு மகிமையும் வல்லமையும் என்றென்றைக்கும் உண்டாயிருப்பதாக. (வெளி 1:6)

2. ஆசாரியர்கள்
(வெளி. 1:6; ரோ. 15:15; எபி. 9:6)

அப்படியிருந்தும், சகோதரரே, புறஜாதியராகிய பலி பரிசுத்த ஆவியினாலே பரிசுத்தமாக்கப்பட்டு, தேவனுக்குப் பிரியமான பலியாகும்படிக்கு, நான் தேவனுடைய சுவிசேஷ ஊழியத்தை நடத்தும் ஆசாரியனாயிருந்து புறஜாதிகளுக்கு இயேசு கிறிஸ்துவினுடைய ஊழியக்காரனாகும் பொருட்டு. (ரோ. 15:15)

3. பிரபுக்கள்
(சங், 45:16; லூக். 19:12; சங். 47;9)
உமது பிதாக்களுக்குப் பதிலாக உமது குமாரர் இருப்பார்கள்; அவர்களைப் பூமியெங்கும் பிரபுக்களாக வைப்பீர். (சங். 45:16)

ஆயிரம்வருட அரசாட்சியில் பங்குபெற நாம் மூன்றாம் உலகமகாயுத்தத்தில் இயேசுவோடு இருந்து யுத்தம் செய்பவர்களாகக் காணப்பட வேண்டியது அவசியம், அப்படிக் காணப்பட்டால் நாம் ஆயிரவருட அரசாட்சியில் இருப்பது நிச்சயம். அந்த அரசாட்சியில் நாம் ராஜாக்களாக ஆசாரியர்களாக, பிரபுக்களாக காணப்படுவோம். நாம் பூமியில் இயேசுவோடு கூட ஆயிரம் வருடம் அரசாளுவோம்.

கொம்பைக்குறித்த இரகசியங்கள்

1.ஆதாமின் கொம்பு
(ஆதி. 1:28; சங். 8:6; எபி. 2:7)

பின்பு தேவன் அவர்களை நோக்கி; நீங்கள் பலுகிப் பெருகி, பூமியை நிரப்பி, அதைக் கீழ்ப்படுத்தி, சமுத்திரத்தின் மச்சங்களையும் ஆகாயத்துப் பறவைகளையும், பூமியின் மேல் நடமாடுகிற சகல ஜீவஜந்துக்களையும் ஆண்டு கொள்ளுங்கள் என்று சொல்லி, தேவன் அவர்களை ஆசீர்வதித்தார். (ஆதி. 1:28)

2. பிசாசின் கொம்பு
(யோவா. 14:30; யோபு. 9:24; சங் 75;10)

இனி நான் உங்களுடனே அதிகமாகப் பேசுவதில்லை. இந்த உலகத்தின் அதிபதி வருகிறான். அவனுக்கு என்னிடத்தில் ஒன்றுமில்லை. (யோவா. 14:30)

3.நீதிமானின் கொம்பு
(சங்.75:10; லூக். 1:73-75; சங்.148:14)

துன்மார்க்கருடைய கொம்புகளையெல்லாம் வெட்டிப் போடுவேன்; நீதிமானுடைய கொம்புகளோ உயர்த்தப்படும். (சங்.75:10)

தேவன் மனிதனை உண்டாக்கி, அவனை பூமியில் உள்ளவைகளை ஆளும்படியாக வைத்திருந்தார். ஆனால்,

அந்த ஆளுகையை பிசாசு பறித்து தான் பூமியை ஆளுகிறவனாக மறைமுகமாயிருந்து துன்மார்க்கர் கையிலே விட்டு, அவன் அதிபதியாக இருக்கிறான். இதைமாற்ற எதிர்காலத்தில் துன்மார்க்கருடைய கொம்பை (ஆளுகைளை) வெட்டி நீதிமான்கள் ஆளும்படியாக அவர்களுடைய கொம்பு (ஆளுகை) உயர்த்தப்படும். நாம் நீதிமானாக மாற இயேசுவின் இரத்தத்தினால் மாத்திரமே முடியும். (ரோ. 3:24)

வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்பு

1. ஆத்துமா - எண்ணங்கள்
(பிர. 3;17; பிர. 11:9; யோபா. 12 :48)

சகல எண்ணங்களையும் சகல செய்கைகளையும் நியாயந்தீர்க்குங்காலம் இனி இருக்கிறபடியால் சன்மார்க்கனையும் துன்மார்க்கனையும் தேவன் நியாயந்தீர்ப்பார் என்று என் உள்ளத்தில் எண்ணினேன். (பிர. 3:17)

2. ஆவி வார்த்தைகள்
(மத் 12:36; ரோம. 14:12; கொரி. 4:4)

மனுஷர் பேசும் வீணான வார்த்தைகள் யாவையும் குறித்து நியாயத் தீர்ப்பு நாளிலே கணக்கொப்புவிக்க வேண்டும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். (மத். 12:36)

3. சரீரம் - கிரியைகள்.
(பிர. 3:17; பிர. 12;14; பேது. 1:17)

ஒவ்வொரு கிரியையும், அந்தரங்கமாக ஒவ்வொரு காரியத்தையும், நன்மையானாலும் தீமையானாலும், தேவன் நியாயத்திலே கொண்டுவருவார். (பிர. 12:14)

வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்பில் மனிதன் யாராக இருந்தாலும், நியாயத்தீர்ப்பில் நிற்க வேண்டும். மனிதனின் ஆவி, ஆத்துமா, சரீரத்தில் உண்டாகும் எண்ணங்கள், வார்த்தைகள், கிரியைகளின் படி நியாயந்தீர்க்கப்படுவோம் என்று வேதம் கூறுகிறது. ஆதலால், நம்முடைய ஆவி, ஆத்துமா, சரீரத்தில் எப்பொழுதும் தேவனைக்குறித்த எண்ணங்கள், (தியானம்) அவருடைய நாமத்தை அறிக்கையிடுதல், அவருடைய கட்டளைகளை கைக்கொள்ளுதல் அவசியம்.

நியாயத்தீர்ப்பின் புத்தகங்கள்

1.ஜீவ புத்தகம் (வெளி. 20:11,12; யாத். 32:32)

பின்பு, நான் பெரிய வெள்ளைச் சிங்காசனத்தையும், அதின்மேல் வீற்றிருக்கிறவரையும் கண்டேன்; அவருடைய சமுகத்திலிருந்து பூமியும் வானமும் அகன்று போயின, அவைகளுக்கு இடங்காணப்படவில்லை

.

மரித்தோராகிய சிறியோரையும் பெரியோரையும் தேவனுக்கு முன்பாக நிற்கக்கண்டேன்; அப்பொழுது புஸ்தகங்கள் திறக்கப்பட்டன. ஜீவ புஸ்தகம் என்னும் வேறொரு புஸ்தகமும் திறக்கப்பட்டது; அப்பொழுது அந்தப் புஸ்தகங்களில் எழுதப்பட்டவைகளின் படியே மரித்தோர் தங்கள் கிரியைகளுக்குத்தக்கதாக நியாயத் தீர்ப்படைந்தார்கள்.

2.ஆட்டுக்குட்டியானவருடைய ஜீவ புத்தகம் (வெளி. 21:27; வெளி.13:8; வெளி.20:12)

தீட்டுள்ளதும் அருவருப்பையும் பொய்யையும் நடப்பிக்கிறதுமாகிய ஒன்றும் அதில் பிரவேசிப்பதில்லை. ஆட்டுக் குட்டியானவரின் ஜீவபுஸ்தகத்தில் எழுதப்பட்டவர்கள் மாத்திரம் அதில் பிரவேசிப்பார்கள் .(வெளி. 21:27)

3.ஞாபக புத்தகம்
(மல்.3:16; வெளி.20:12; யோவா.14:26)

அப்பொழுது கர்த்தருக்குப் பயந்தவர்கள் ஒருவரோடொருவர் பேசிக் கொள்வார்கள்; கர்த்தர் கவனித்துக் கேட்பார்; கர்த்தருக்குப் பயந்தவர்களுக்காகவும் அவருடைய நாமத்தைத் தியானிக்கிறவர்களுக்காகவும் ஞாபகப் புஸ்தகம் ஒன்று அவருக்கு முன்பாக எழுதப்பட்டிருக்கிறது (மல். 3:16)

நியாயத்தீர்ப்பின்போது புஸ்தகங்கள் திறக்கப்படுமென்று என்று வேதம் தெளிவுபடுத்துகிறது. அந்தப் புஸ்தகங்கள் பிதாவுடைய ஜீவ புஸ்தகம், ஆட்டுக்குட்டியானவருடைய ஜீவ புஸ்தகம், பரிசுத்த ஆவியானவருடைய ஞாபக புஸ்தகம் என்பனவாகும். இப்புஸ்தகங்களில் எழுதியிருக்கிறபடி நாம் வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்பில் நியாயந்தீர்க்கப்படுவோம். ஆதலால் நாம் வேத புஸ்தகமாகிய சத்திய வேதத்தைத் தேடுவது, ஆராய்வது, தியானிப்பது அவசியமாகும்.

கிரீடங்களைக் குறித்த இரகசியங்கள்

1.ஜீவ கிரீடம்
(யாக் 1:12; வெளி. 2:20; ரோம. 16:10)

சோதனையைச் சகிக்கிற மனுஷன் பாக்கியவான்; அவன் உத்தமனென்று விளங்கினபின்பு கர்த்தர் தம்மிடத்தில் அன்பு கூருகிறவர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணின ஜீவ கிரீடத்தைப் பெறுவான். (யாக். 1:12)

2. மகிமையான கிரீடம்
(1 பேது. 5:4; பேது. 4:16; பேது 5:9,10)

அப்படிச் செய்தால் பிரதான மேய்ப்பர் வெளிப்படும் போது மகிமையுள்ள வாடாத கிரீடத்தைப் பெறுவீர்கள். (1 பேது. 5:4)

3. நீதியின் கிரீடம்
(2 தீமோ. 4:8; 1 பேது. 3:12; 1 யோவா. 3:7)

இதுமுதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது. நீதியுள்ள நியாயாதிபதியாகிய கர்த்தர் அந்நாளிலே அதை எனக்குத் தந்தருளுவார்; எனக்கு மாத்திரமல்ல, அவர் பிரசன்னமாகுதலை விரும்பும் யாவருக்கும் அதைத் தந்தருளுவார். (11 தீமோ. 4:8)

நாம் தேவனுடைய வார்த்தையைக் கொண்டு இவ்வுலகில் ஜெயம் பெற்ற ஜீவியம் கிடைக்கும்பொழுது, நமக்கு நித்தியத்தில் ஜீவகிரீடம், மகிமையான கிரீடம், நீதியின்கிரீடம் கொடுக்கப்படும் என்பது நிச்சயம். ஜெயம்பெற்ற வாழ்க்கை வாழ, தேவ வசனத்தை நமக்குள் கொண்டுவர தேவ வசனத்தைத் தேட, தியானிக்க, ஆராய வேண்டும்.

நித்தியத்தைக் குறித்த இரகசியங்கள்

1.அநாதி நித்திய பரலோகம் (யோவா.14:2; எபி. 12:22; வெளி.11:19)

என்பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு; அப்படியில்லாதிருந்தால், நான் உங்களுக்குச் சொல்லியிருப்பேன்; ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்போகிறேன். (யோவா. 14:2)

2.புதிய எருசலேமாகிய பரலோகம் (வெளி. 21:2,10; ஏசா. 65:17)

யோவானாகிய நான், புதிய எருசலேமாகிய பரிசுத்த நகரத்தைத் தேவனிடத்திலின்று பரலோகத்தை விட்டு இறங்கிவரக்கண்டேன்; அது தன் புருஷனுக்காக அலங்கரிக்கப்பட்ட மணவாட்டியைப் போல ஆயத்தமாக்கப்பட்டிருந்தது. (வெளி.21:2)

3.நித்தியமான நரகலோகம் (லூக்.16:24; நீதி.; 7:27; வெளி.19:20)

அப்பொழுது அவன்; தகப்பனாகிய ஆபிரகாமே,நீர் எனக்கு இரங்கி, லாசரு தன் விரலின் நுனியைத் தண்ணீரில் தோய்த்து, என் நாவைக் குளிரப்பண்ணும்படி அவனை அனுப்பவேண்டும்; இந்த அக்கினி ஜுவாலையில் வேதனைப்படுகிறேனே என்று கூப்பிட்டான். (லூக். 16:24)

நித்தியத்தைக் குறித்து வேதத்தில் மூன்றாக பகுக்கப்பட்டுள்ளது. அவை தேவன் இருக்கிற இடமாகிய பரலோகமும்; மணவாளனும், மணவாட்டியும் அவர்களுடைய கூட்டமும் இருக்கிற இடமாகிய புதிய எருசலேமும்; சாத்தானும் அவனுடைய கூட்டமாகிய அந்திக்கிறிஸ்து, கள்ளத்தீர்க்கதரிசி மற்றும் அவர்களால் மோசம்போன ஜனக்கூட்டம் இருக்கிற நித்திய நரகமுமாகக் காணப்படுகிறது.

மூன்று பரதீசுகளைக் குறித்த இரகசியங்கள்

1.பரலோக பரதீசு (எசே. 28:13; ஆதி. 13:10; யூதா. 6)

நீ தேவனுடைய தோட்டமாகிய ஏதேனில் இருந்தவன்; பத்மராகம், புஷ்பராகம், வைரம், படிகப் பச்சை, கோமேதகம், யஸ்பி, இந்திரநீலம், மரகதம், மாணிக்கம் முதலான சகலவித இரத்தினங்களும் பொன்னும் உன்னை மூடிக்கொண்டிருக்கிறது; நீ சிருஷ்டிக்கப்பட்ட நாளில் உன் மேளவாத்தியங்களும் உன் நாகசுரங்களும் உன்னிடத்தில் ஆயத்தப்பட்டிருந்தது. (எசே. 28:13)

2. வானத்தில் பரதீசு (2 கொரி. 12:2,3)

மேன்மை பாராட்டுகிறது எனக்கு தகுதியல்லவே; ஆகிலும் கர்த்தர் அருளிய தரிசனங்களையும் வெளிப்படுத்தல்களையும் சொல்லுகிறேன்.

கிறிஸ்துவுக்குள்ளான ஒரு மனுஷனை அறிவேன்; அவன் பதினாலு வருஷத்திற்கு முன்பே மூன்றாம் வானம் வரைக்கும் எடுக்கப்பட்டான். அவன் சரீரத்திலிருந்தானோ, சரீரத்திற்குப் புறம்பேயிருந்தானோ, அதை அறியேன், தேவன் அறிவார்.

அந்த மனுஷன் பரிதீசுக்குள் எடுக்கப்பட்டு மனுஷர் பேசப்படாததும் வாக்குக்கெட்டாததுமாகிய வார்த்தைகளைக் கேட்டானென்று அறிந்திருக்கிறேன் (2 கொரி. 2:1-3)

3.பாதாள பரதீசு
(லூக்.23:43; அப். 2:31; லூக்.16:22-26)

இயேசு அவனை நோக்கி: இன்றைக்கு நீ என்னுடனே கூடப்பரதீசிலிருப்பாய் என்று மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார் . (லூக். 23:43)

வேதத்திலே மூன்று வித பரதீசுவைப் பற்றிய குறிப்பு உள்ளது. பரதீசு என்றால் தோட்டத்தை, இளைப்பாறுகிற இடத்தைக் குறிக்கிறது. அவை பரலோகத்திலே பரதீசு, மூன்றாம் வானத்தில் பரதீசு, பாதாள பரதீசு என்று வேதம் தெளிவுபடுத்துகிறது. அங்கேயும (பாதாள பரதீசு) தேற்றப்பட்டு, இளைப்பாறுகிறார்கள். (லூக். 16:25; தானி. 12:13)

மூன்று இரவு மூன்று பகல் இயேசுவின் மரணத்திற்கும் உயிர்த்தெழுதலுக்கும் இடையில்

1. பெரிய ஓய்வுநாளுக்கு ஆயத்த நாள். (மத் 12:40; யோவா.19:31; மத் 27:62-64)

யோனா இரவும் பகலும் மூன்றுநாள் ஒரு பெரிய மீனின் வயிற்றில் இருந்தது போல, மனுஷகுமாரனும் இரவும் பகலும் மூன்றுநாள் பூமியின் இருதயத்தில் இருப்பார். (மத் 12:40)

2.பெரிய ஓய்வு நாள். (யோவா.19:31; லேவி.16:31-34)

அந்த நாள் பெரிய ஓய்வு நாளுக்கு ஆயத்த நாளாயிருந்தபடியினால், உடல்கள் அந்த ஓய்வு நாளிலே சிலுவைகளில் இராதபடிக்கு, யூதர்கள் பிலாத்துவினிடத்தில் போய், அவர்களுடைய காலெலும்புகளை முறிக்கும் படிக்கும், உடல்களை எடுத்துப் போடும்படிக்கும் உத்தரவு கேட்டுக்கொண்டார்கள். (யோவா. 19:31)

3.கற்பனையின்படியே வாராந்தர ஓய்வுநாள் (யோவா. 19:39,40; லூக். 23:55,56; மாற். 16:1,2,3,9)

திரும்பிப்போய், கந்தவர்க்கங்களையும் பரிமளத் தைலங்களையும் ஆயத்தம் பண்ணி, கற்பனையின்படியே ஓய்வுநாளில் ஓய்ந்திருந்தார்கள் (லூக். 23:56)

இயேசு கிறிஸ்து மனிதனுடைய குற்றங்களைத் தன் மீது ஏற்று பாவ நிவாரணபலியானார். அவர் தமது ஊழியத்தின் நாட்களிலே தமது மரணம், அடக்கம், உயிர்த்தெழுதலுக்கு மிடையே மூன்று நாட்கள் உண்டு என்று சொன்னார். இயேசு தமக்கு தீர்மானிக்கப்பட்டபடியே பஸ்காவின் நாளில் சிலுவையில் அறையப்பட்டார். அந்த நாளின் மாலையின் யூத கணக்கின்படி பெரிய ஓய்வுநாளுக்கு ஆயத்த நாள் ஆரம்பமானது. அந்த நாள் முடிவடைந்து பெரிய ஓய்வு நாள் அடுத்த மாலையிலே ஆரம்பமானது. அந்த நாளும் முடிவடைந்த அடுத்த மாலை வேளையிலே கற்பனையின் படியே வாராந்திர ஓய்வுநாள் ஆரம்பமானது. அந்தநாளும் முடிவடைந்து அடுத்த நாளின் மாலை வேளையில் வாரத்தின் முதல் நாள் ஆரம்பமானது. அந்த நாளின் அதிகாலையில் மகதலேனா மரியாளுக்கு உயிர்த்தெழுந்து தரிசனமானார். ஆயத்தநாள், பெரிய ஓய்வுநாள், வாராந்திர ஓய்வுநாள் இந்த மூன்று நாட்களில் மூன்று பகல்கள் உண்டு இயேசு சொன்னது சத்தியம்.

யோனாவின் மரணம்

1. யோனாவின் மரணம் (யோனா. 1:2-4,15; யோனா 2:3-6)

நீ எழுந்து மகா நகரமாகிய நினிவேக்குப் போய், அதற்கு விரோதமாகப் பிரசங்கி; அவர்களுடைய அக்கிரமம் என் சமுகத்தில் வந்து எட்டினது என்றார்.

அப்பொழுது யோனா கர்த்தருடைய சமுகத்தினின்று விலகி, தர்ஷீசுக்குப் போகிற ஒரு கப்பலைக்கண்டு, கூலிகொடுத்து, தான் கர்த்தருடைய சமுகத்தினின்று விலகும்படி, அவர்களோடே தர்ஷீசுக்குப் போகக் கப்பல் ஏறினான். (யோனா 1:2,3)

2.யோனாவின் அடக்கம் (யோனா. 1:17; யோனா. 2:7-9)

யோனாவை விழுங்கும்படி ஒரு பெரிய மீனைக் கர்த்தர் ஆயத்தப்படுத்தி யிருந்தார்; அந்த மீன் வயிற்றிலே யோனா இராப்பகல் மூன்று நாள் இருந்தான். (யோனா. 1:17)

3.யோனாவின் உயிர்த்தெழுதல் (யோனா.2:10; யோனா.3:1-4; யோனா.4:1-3)

கர்த்தர் மீனுக்கு கட்டளையிட்டார், அது யோனாவைக் கரையிலே கக்கிவிட்டது. (யோனா. 2:10)

யோனா ஒரு தீர்க்கதரிசியாவான். அவன் தேவனுடைய வார்த்தையைக் கேளாதபடி, அவருடைய சமுகத்திற்கு விலகி தர்ஷீசுக்கு ஓடிப்போனான். கர்த்தருடைய வார்த்தையைக் கேளாத எந்த தீர்க்கதரிசியும் கொல்லப்பட வேண்டும் என்று நியாயப்பிரமாணத்தில் உள்ளபடி யோனா மரிக்கவேண்டுவது தேவ சித்தமாகும். மூன்று நாள் இரவும் பகலும் மீனின் வயிற்றறைக் கல்லறையாக தேவன் ஆயத்தப்படுத்தி அதில் அவனுடைய சரீரம் வைக்கப்பட்டிருந்தது. பின்பு மூன்று நாள் கழித்து தேவன் மீனுக்கு கட்டளையிட்டார். மீன் யோனாவை கரையிலே கக்கியது. யோனா உயிரோடு எழுந்து நினிவேக்கு சென்றான்.

பரலோகம் மூன்றாம் வானத்தில் இல்லை

1.பூமி (ஒலிவமலை) (அப். 1:9-12; மத் 28:16)

பதினொரு சீஷர்களும், கலிலேயாவிலே இயேசு தங்களுக்குக் குறித்திருந்த மலைக்குப் போனார்கள். (மத். 28:16)

2.வானங்கள் வழியாக (மூன்று வானங்கள்) (எபி. 4:14; கொரி. 12:2; எபே. 4;10)

வானங்களின் வழியாய்ப் பரலோகத்திற்குப் போன தேவ குமாரனாகிய இயேசு என்னும் மகா பிரதான ஆசாரியர் நமக்கு இருக்கிறடியினால், நாம் பண்ணின அறிக்கையை உறுதியாய் பற்றிக் கொண்டிருக்கக் கடவோம். (எபி. 4:14)

3.பரலோகங்கள் (லூக். 24:51; மாற். 16:19; எபேசு. 4:8-10)

இவ்விதமாய்க் கர்த்தர் அவர்களுடனே பேசின பின்பு, பரலோகத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, தேவனுடைய வலது பாரிசத்தில் உட்கார்ந்தார். (மாற். 16:19)

தீபாவளியைக் குறித்த இரகசியங்கள்

1.பரலோக (சத்திய) தீபாவளி (வெளி.5:5,6)

அந்த சிங்காசனத்திலிருந்து மின்னல்களும் இடிமுழக்கங்களும் சத்தங்களும் புறப்பட்டன; தேவனுடைய ஏழு ஆவிகளாகிய ஏழு அக்கினி தீபங்கள் சிங்காசனத்திற்கு முன்பாக எரிந்துகொண்டிருந்தன. (வெளி. 4:5)

2.பழைய ஏற்பாட்டு (சத்திய) தீபாவளி (யாத் 27:20; யாத். 25:31; நீதி. 20:27)

குத்துவிளக்கு எப்பொழுதும் எரிந்து கொண்டிருக்கும்படி இடித்துப் பிழிந்த தெளிவான ஒலிவ எண்ணெய்யை உன்னிடத்தில் கொண்டுவரும்படி இஸ்ரவேல் புத்திரருக்குக் கட்டளையிடுவாயாக. (யாத் . 27;20)

3.புதிய ஏற்பாட்டு (சத்திய) தீபாவளி (வெளி. 1:12,20; வெளி 2:1; யோவா. 1:1,14,9)

என் வலதுகரத்தில் நீ கண்ட ஏழு நட்சத்திரங்களின் இரகசியத்தையும் ஏழு பொன் குத்துவிளக்குகளின் இரகசியத்தையும் எழுது; அந்த ஏழு நட்சத்திரங்களும் ஏழு சபைகளின் தூதர்களாம்; நீ கண்ட ஏழு குத்துவிளக்குகளும் ஏழு சபைகளாம். (வெளி 1:20)

தீபாவளி என்கிற வார்த்தை தவறாக உச்சரிப்பு. தீபாளி என்பதுதான் சரியான வார்த்தையாகும்;. தீபாளி என்றால் தீபங்களின் வரிசையாகும். பரலோக சபையில் தீபங்களின் வரிசையுள்ளது. பழைய ஏற்பாட்டு சபையில் (ஆசரிப்பு கூடாரம்) தீபங்களின் வரிசையுள்ளது. புதிய ஏற்பாட்டு சபையிலும தீபங்களின் வரிசையுள்ளது. நாம் ஒவ்வொருவரும் தீபங்களாக மாற மெய்யான ஒளியாகிய இயேசுவினிடத்தில் வரவேண்டும். அவர் எந்த மனுஷனையும் பிரகாசிப்பிக்கிற ஒளியாய் இருக்கிறார். வேத வசனமாகிய தீபத்தை நம்முடைய ஆவி, ஆத்துமா, சரீரத்தில் ஏற்ற வேண்டும். அதற்கு வேதத்தைத் தேட, ஆராய, தியானிக்க வேண்டும். இதுவே சத்திய தீபாவளி.

பக்ரீத்தைக் குறித்த இரகசியங்கள்

1.பரலோகத்திலே பக்ரீத்
(வெளி. 5:6; எபி. 9:23; வெளி. 19:13)

அப்பொழுது இதோ, அடிக்கப்பட்ட வண்ணமாயிருக்கிற ஒரு ஆட்டுக்குட்டி சிங்காசனத்திற்கும், நான்கு ஜீவன்களுக்கும், மூப்பர்களுக்கும் மத்தியிலே நிற்கக் கண்டேன். அது ஏழு கொம்புகளையும் ஏழு கண்களையும் உடையதாயிருந்தது. அந்தக் கண்கள் பூமியெங்கும் அனுப்பப்படுகிற தேவனுடைய ஏழு ஆவிகளேயாம். (வெளி. 5:6)

2.பழைய ஏற்பாட்டு பக்ரீத்
(ஆதி. 22:2,3,7,8,13)

ஆபிரகாம் தன் கண்களை ஏறெடுத்துப் பார்க்கும் போது, இதோ, பின்னாகப் புதரிலே தன் கொம்புகள் சிக்கிக்கொண்டிருந்த ஒரு ஆட்டுக்கடாவைக் கண்டான்; அப்பொழுது ஆபிரகாம் போய், கடாவைப் பிடித்து, அதைத்தன் குமாரனுக்குப் பதிலாகத் தகனபலியிட்டான். (ஆதி. 22:13)

3.புதிய ஏற்பாடு பக்ரீத்
(யோவா. 1:29,36; ஏசா. 53:6,7)

மறுநாளிலே யோவான் இயேசுவைத் தன்னிடத்தில் வரக்கண்டு; இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி . (யோவா. 1;29)

முஸ்லீம் சகோதரர்கள் பக்ரீத் பண்டிகையை வருடம் தோறும் கொண்டாடுவது வழக்கம். அந்தப் பண்டிகை இப்ராகிம் (ஆபிரகாம்) என்பவர் தம்முடைய மகனை பலியாகக் கொண்டுபோய் இறைவனுக்கு பலி கொடுப்பதற்கு அடையாளமாகக் கொண்டாடப்படுகிறது. உண்மையான பக்ரீத் என்பது பிதாவாகிய தேவன் தம்முடைய சொந்த குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை இவ்வுலகத்திற்கு அனுப்பினார். இவ்வுலகத்தாரின் குற்றத்திற்காக அவர் குற்றமற்றவராக வந்து, ஜீவித்து பாவமில்லாத பரிசுத்தராக வாழ்ந்தார். இப்ராஹிம் (ஆபிரகாம்) தன்னுடைய குமாரனுக்குப் பதிலாக ஒரு ஆட்டுக் கடாவை அடித்து இறைவனுக்குப் பலி செலுத்தினான். தேவ ஆட்டுக்குட்டியாக வந்த அவர் (இயேசு) கல்வாரி சிலுவையிலே பலி கொடுக்கப்பட்டார். அவருடைய இரத்தத்தின் மூலமாக எல்லோருக்கும் பாவ மன்னிப்பாகிய மீட்பு உண்டு என்பது சத்தியம். இதுவே (உண்மையான) சத்திய பக்ரீத் ஆகும்.

1.பிறப்பிலே நாமங்கள்
(ஏசா. 7:14; யோவா. 4:25; மத். 1:12)

ஆதலால் ஆண்டவர் தாமே உங்களுக்கு ஒரு அடையாளத்தைத் கொடுப்பார்; இதோ, ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள், அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவாள். (ஏசா. 7:14)

2.பிறப்பிலே ஆராதனைகள்
(லூக். 2:11,12,14,20; மத். 2:2; எபி. 1:6)

உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும், பூமியிலே சமாதானமும், மனுஷர்மேல் பிரியமும் உண்டாவதாக என்று சொல்லி, தேவனைத் துதித்தார்கள். (லூக். 2:14)

3.பிறப்பிலே காணிக்கைகள்
(மத் 2:11; யோவா. 19:39; சங் 141:2; சங். 72:10,15)

அவர்கள் அந்த வீட்டுக்குள் பிரவேசித்து, பிள்ளையையும் அதின் தாயாகிய மரியாளையும் கண்டு, சாஷ்டாங்கமாய் விழுந்து அதைப் பணிந்துகொண்டு, தங்கள் பொக்கிஷங்களைத் திறந்து, பொன்னையும் தூபவர்க்கத்தையும் வெள்ளைப் போளத்தையும் அதற்குக் காணிக்கையாக வைத்தார்கள். (மத்.2:11)

கிறிஸ்துவின் பிறப்பைக் குறித்து பழைய ஏற்பாட்டிலே தீர்க்கதரிசனங்கள் கூறப்பட்டுள்ளது. அதில் இம்மானுவேல் என்கிற அவருடைய நாமம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அவருடைய பிறப்பில் சாஸ்திரிகள் (கல்விமான்கள்), பரமசேனைகள் (பரலோகக் கூட்டத்தார்), மேய்ப்பர்கள் (பாமரர்கள்) என்ற மூன்று பிரிவினர் அவரை ஆராதித்தார்கள். அவருடைய பிறப்பில் பொன், வெள்ளைப் போளம், தூபவர்க்கம் என்ற மூன்றுவித காணிக்கைகள் வைக்கப்பட்டன. வெள்ளைப் போளம் இயேசுவை உலக மீட்பராக, இரட்சகராக வெளிப்படுத்துகிறது. தூபவர்க்கம் இயேசுவை பிரதானஆசாரியராக வெளிப்படுத்துகிறது. பொன் இயேசுவை ராஜாவாக வெளிப்படுத்துகிறது. இயேசு பாவத்திலும், அக்கிரமத்திலும், மீறுதலிலும் உள்ள மனிதர்களை இரட்சிக்கும்படி இவ்வுலகத்தில் வந்தார் (பிறந்தார்) என்பது சத்தியம்.

கிறிஸ்துமஸ் என்ற வார்த்தை முழு வேதாகமத்திலும் இல்லை. ஆதிசபையிலே கிறிஸ்துவின் பிறந்தநாளைக் கொண்டாடவும் கட்டளை இல்லை. யூதர்களுடைய வேதத்திலும் ஆதாரம் இல்லை. சரித்திரத்தில் முதலாம், இரண்டாம் நூற்றாண்டுகளிலும் கிறிஸ்துவின் பிறப்பு பண்டிகையாகக் கொண்டாடப்பட்டதாக ஆதாரங்கள் இல்லை. மூன்றாம் நூற்றாண்டில் கான்ஸ்டன்டைன் மன்னன் காலத்தில் பழங்கால ரோமானியர் விவசாயக் கடவுளான - சனி தெய்வமாகிய சாட்டர்னாலியா என்ற தெய்வத்தை - டிசம்பர் 17 முதல் 24 வரை குளிர்காலம் முடிவடைந்து கோடை ஆரம்பமானதை பண்டிகையாகக் கொண்டாடினார்கள். மேலும் டிசம்பர் 25-ல் நீனுாஸ் என்னும் சூரிய தேவதையின் பிறந்த நாளையும்

கொண்டாடினர். அந்த நாள் சூரியன் கடக ரேகையில் சுற்றி மகர ரேகைக்கு மீண்டும் திரும்பஆரம்பிக்கிற நாள். சிரியர் மித்ராஸ் என்னும் சூரியக் கடவுளையும் வணங்கி வந்தனர். இவைகளிலே பெண்களுக்குப் பண்டிகை கொண்டாட அனுமதி இல்லை. கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டவர்கள் ஆண், பெண் வித்தியாசமில்லாமல் டிசம்பர் 25ஐ கி.பி. 218-ல் கிறிஸ்துமஸ் பண்டிகையாகக் கொண்டாட அனுமதி பெற்று, கொண்டாடினர். இவ்விதமே கிறிஸ்துமஸ் பண்டிகை வந்தது. கிறிஸ்துவின் பிறப்பு நமக்கு இரட்சிப்பை அளிக்கிறது. அவருடைய நாமத்தை விசுவாசித்து இரட்சிக்கப்பட்டவர்களுக்குள் கிறிஸ்து உருவாக வேண்டும். அதாவது பிறக்க வேண்டும். கிறிஸ்மஸ் என்பது பாரம்பரியப் பண்டிகை. கிறிஸ்துவின் பிறப்பு வேதாகம சத்தியம்.

இயேசுவைக் குறித்த இரகசியங்கள்

1. இயேசு கிறிஸ்துவின் முதல் வருகையின் நோக்கங்கள்

A.

1. இயேசு கிறிஸ்து பாவிகளை இரட்சிக்க வந்தார் (1தீமோ 1:15; மத் 18:11; மாற் 15:29-31)
2. இயேசு கிறிஸ்து மீட்பராக மீட்கும்படியாக வந்தார் (லூக் 2:38; மத் 20:28; லூக் 24:21; லூக் 1:74)
3. இயேசு கிறிஸ்து விடுதலையாக்க வந்தார் (யோவா 8:34-36; லூக் 4:18; லூக் 23:25)

B.

1. இருளை நீக்க ஒளியாக வந்தார் (யோவா 1:4,5,9; யோவா 8:12)
2. அக்கினி ஞானஸ்நானங்கொடுக்க அக்கினியைப் போட வந்தார் (லூக் 3:16; லூக் 12:49; யோவா 19:34)
3. பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானங்கொடுக்க ஆவியை விட்டார் (மத் 3:11; மாற்கு 1:8; யோவா 7:39; யோவா 19:30)

C.

1. ஜீவனைக் கொடுக்க வந்தார் (மத் 20:28; மாற்கு 10:45; லூக் 23:46)
2. ஜீவன் உண்டாயிருக்க வந்தார் (யோவா 10:10; மாற் 10:45; யோவா 10:15)
3. ஜீவன் பரிபூரணப்படவும் வந்தார் (யோவா 10:10; யோவா 1:16; லூக் 4:22)

2. இயேசு கிறிஸ்துவின் பிறப்பைக் குறித்த இரகசியங்கள்

A.

1. மேய்ப்பர்கள் - படிக்காதவர்கள்
   (லூக் 2:8, 18, 20)
2. சாஸ்திரிகள் - கல்விமான்கள்
   (மத் 2:1, 10, 11)
3. தேவ தூதர்கள் - பரலோகத்தைச் சேர்ந்தவர்கள்
   (லூக் 2:9-14; எபி 2:6)

B.

1. இம்மானுவேல் - பிறப்பு
   (மத் 1:23; ஏசா 7:14; ஏசா 8:8)
2. கிறிஸ்து - ஊழியம்
   (மத் 2:4; மத் 16:16; யோவா 1:41)
3. இயேசு - மரணம்
   (யோவா 19:30, 34; லூக் 2:11; மத் 1:21; எபி 9:22)

C.

1. வெள்ளைப்போளம் - இரட்சகர்
   (மத் 2:11; உன் 3:6; யோவா 19:30)
2. தூபவர்க்கம் - பிரதான ஆசாரியர்
   (மத் 2:11; எபி 3:1; எபி 7:24; 25)
3. பொன் - ராஜாதி ராஜா
   (மத் 2:1; வெளி 17:14; வெளி 19:16)

3. இயேசு கிறிஸ்துவின் வளர்ப்பின் இரகசியங்கள்

A.

1. பால்
(ஏசா 7:22; லூக் 11: 27, 28)
2. வெண்ணை
(ஏசா 7:15, 22; நீதி 30:33)
3. தேன்
(ஏசா 7:15, 22; நீதி 24:13)

B.

1. ஞானத்தினால் நிறைந்தவர்
(லூக் 2:40; லூக் 42:52; யோவா 7:15, 16)
2. ஆவியில் பெலன் கொண்டார்
(லூக் 2:40, 52)
3. தேவ கிருபை அவர்மேல் இருந்தது
(லூக் 2:40, 52)

C.

1. எருசலேமில் இருந்து விட்டார்
(லூக் 2:41-44)
2. பிதாவுக்கடுத்தவைகளில் இருந்தார்
(லூக் 2:45-50)
3. நாசரேத்தூரில் கீழ்ப்படிந்திருந்தார்
(லூக் 2:51; மத் 2:23; மாற் 6:1)

4. இயேசு கிறிஸ்துவின் உவமைகளைக் குறித்த இரகசியங்கள்

A.

1. விதைக்கிறவன் ஒருவனைப் பற்றிய உவமை
(மத் 13:3-11; 18-23)
2. நல்ல விதையைப் பற்றிய உவமை
(மத் 13:24-30; 35-43)
3. கடுகு விதையைப் பற்றிய உவமை
(மத் 13:31-32; மாற் 4:31-33)

B.

1. நிலத்தில் புதைந்திருக்கிற பொக்கிஷத்தைப் பற்றிய உவமை
(மத் 13:44; ஏசா 33:6; நீதி 2:2-5)
2. நல்ல முத்துக்களை தேடுகிற வியாபாரியைப் பற்றிய உவமை
(மத் 13:45, 46; எண் 11:7; நீதி 4:7,8)
3. புளித்த மாவைப் பற்றிய உவமை
(மத் 13:33; லேவி 7:13; ரோம 11:16)

C.

1. கடலிலே போடப்படும் வலையைப் பற்றிய உவமை
(மத் 13:47-51)
2. புறதேசத்துக்குப் பிரயாணமாய்ப் போகிற ஒரு மனுஷனைப் பற்றிய உவமை
(மத் 25:14-30)
3. ஊழியக்காரரிடத்தில் கணக்குப் பார்க்கிற ஒரு ராஜாவைப் பற்றிய உவமை
(மத் 18:25-35)

5. இயேசு கிறிஸ்து தரும் சரீர சுகம், விடுதலையின் இரகசியங்கள்

A.

1. உள்ளத்தில் – வஸ்திரத்தைத் தொட்டால் சுகமாவேன் என்ற எண்ணம் (மத் 9:20-22)
2. ஆவியில் – வஸ்திரந்தொட்டால் சொஸ்தமாவேன் என அறிக்கை (மாற் 5:25-27)
3. சரீரம்–வஸ்திரத்தைத் தொட்டு (சுகம்) குணமடைந்தாள் (மாற் 5:28-34)

B.

1. பதினெட்டு வருஷமாய் பலவீனப்படுத்தும் ஆவியினிடத்தினின்று விடுதலை (லூக் 13:11-13)
2. விடுதலையாக்கப்பட்ட ஸ்திரீ தேவனை மகிமைப்படுத்தினாள் (லூக் 13:13-16)
3. மகிமையான செய்கையினிமித்தம் சகல ஜனங்களும் சந்தோஷப்பட்டார்கள் (லூக் 13:16, 17)

C.

1. பிசாசு அவனை விட்டுப் போகும்படி கட்டளையிட்டார் (லூக் 8:26-29)
2. பிசாசுகள் பன்றிக் கூட்டத்தில் போகும்படி உத்தரவிட்டார் (லூக் 8:30-33)
3. நீ வீட்டுக்குத் திரும்பிப் போய் தேவன் செய்தவைகளை அறிவி (லூக் 8:34-39)

6. அற்புதங்கள், அதிசயங்கள், அடையாளங்களின் இரகசியங்கள்

A.

1. கானாவூர் திருமணத்தில் திராட்சைரசம் குறைவுபட்டது (யோவா 2:1-3)
2. இயேசுவின் வார்த்தைக்கு கீழ்ப்படிந்தார்கள் (யோவா 2:3-8)
3. நல்ல ரசத்தைப் பெற்று இயேசுவினிடத்தில் விசுவாசம் (யோவா 2:9-11)

B.

1. ஐந்து அப்பங்களையும், இரண்டு மீன்களையும் எடுத்தார் (மத் 14:15-19)
2. வானத்தை அண்ணாந்து பார்த்து அதனை ஆசீர்வதித்தார் (மத் 14:19; பிர 5:2; சங் 123:2)
3. அப்பங்களைப் பிட்டு சீஷர்களிடம் கொடுத்தார் (மத் 14:19-21)

C.

1. இயேசுவின் மரணத்திற்கு அடையாளம் (மத் 12:38-40)
2. இயேசுவின் அடக்கத்திற்கு அடையாளம் (யோவா 2:18-21)
3. இயேசுவின் உயர்த்தெழுதலுக்கு அடைளாயம் (யோவா 6:29-32, 39,51-56)

7. இயேசு கிறிஸ்துவே நீதியும், பரிசுத்தமும், மீட்புமான இரகசியங்கள்

A.

1. நீதியாகிய கீழ்ப்படிதல்
(ரோம 6:16; மத் 3:15; 2 தெச 1:7)
2. நீதியாகிய அடங்குதல்
(1 தீமோ 3:16; 1 பேது 2:22,23)
3. நீதியாகிய தாழ்த்துதல்
(1 பேது 5:5; பிலி 2:6-8)

B.

1. இயேசுவினால் பரிசுத்தமாக்கப்படுதல்
(1 கொரி 1:31; யோவா 17:19; யோவா 17:17)
2. சத்தியத்தினாலே பரிசுத்தமாக்கப்படுதல்
(நீதி 16:6; மல் 2:6; 1 தெச 4:7)
3. வசனத்தினாலே பரிசுத்தமாக்கப்படுதல்
(யோவா 17:17; 1 தீமோ 4:5; சங் 119:11)

C.

1. நியாயப்பிரமாணத்தின் சாபங்களிலிருந்து மீட்பு
(கலா 3:13; 1 பேது 1:18, 19)
2. பாவமன்னிப்பாகிய மீட்பு
(ரோம 3:23; யோவா 1:29; எபே 1:7)
3. புத்திர சுவிகார மீட்பு
(ரோம 8:15, 23; எபே 1:6)

8. இயேசு கிறிஸ்துவைக்குறித்து நிறைவேறின பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனங்கள்

A.

1. ஒரு நட்சத்திரம் யாக்கோபிலிருந்து உதிக்கும்
   (எண் 24:17; மத் 2:2; வெளி 22:16)
2. சத்தியம் பூமியிலிருந்து முளைக்கும்
   (சங் 85:11; யோவா 1:1, 14; யோவா 14:6)
3. ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி
   (ஏசா 7:14; மத் 1:18,23)

B.

1. ஒரு தீர்க்கதரிசி
   (உபா 18:15; அப் 7:37; மத் 21:11)
2. சமாதானத்தைக் கூறி, நற்காரியங்களை சுவிசேஷமாய் அறிவிக்கிறார்
   (ஏசா 52:7; அப் 10:36; எபே 2:17)
3. அபிஷேகம் பண்ணப்பட்டவர் (மேசியா)
   (சங் 2:6; யோவா 1:41; அப் 10:38)

C.

1. (பாடுகள்) மரணம்
   (ஏசா 53:10; 1 பேது 2:21,23)
2. அடக்கம்
   (ஏசா 53:9; யோவா 19:40, 41, 42)
3. உயிர்த்தெழுதல்
   (யோபு 14:7-9; லூக் 24:25-27)

9. இயேசு கிறிஸ்து சிலுவையில் பேசின ஏழு வசனத்தின இரகசியங்கள்

A.

1. இயேசு கிறிஸ்துவை சிலுவையில் அறைந்தார்கள் (யோவா 19:16, 18; லூக் 23:33)
2. பிதாவே இவர்களுக்கு மன்னியும் (லூக் 23:34; ரோம 3:23; நீதி 19:11)
3. இன்றைக்கு என்னுடனேகூட பரதீசிலிருப்பாய் (லூக் 23:39-43)

B.

1. அதோ உன் மகன், இதோ உன் தாய் (யோவா 19:25-27)
2. (எல்லாம் முடிந்தது) தாகமாயிருக்கிறேன் (யோவா 19:28, 29; மத் 27:34)
3. என் தேவனே, என் தேவனே, ஏன் என்னைக் கைவிட்டீர் (மத் 27:46; மாற்கு 15:34; சங் 22:1)

C.

1. பிதாவை உமது கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன். (பிர 12:7; லூக் 23:46; யோவா 10:17,18)
2. முடிந்தது என்று சொல்லி, ஆவியை விட்டார் (யோவா 19:30; லூக் 23:46; மத் 27:50)
3. மரித்த பின்பு ஈட்டியினாலே விலாவிலே குத்தப்பட்டார் (யோவா 19:33-35)

10. இயேசுவின் மரணம், அடக்கம், உயிர்த்தெழுதலின் இரகசியங்கள்

A.

1. இயேசுவின் சரீரம்–மரணத்தில் இரத்தமாகச் சிந்தப்பட்டது
(யோவா 19:34; எபி 9:22; கொலோ 1:20)
2. இயேசுவின் ஆத்துமா–மரணத்தில் தண்ணீராக ஊற்றப்பட்டது
(ஏசா 53:17; யோவா 19:34; யோவா 4:10,14)
3. இயேசுவின் ஆவி–மரணத்தில் காற்றாக ஒப்புக் கொடுக்கப்பட்டது
(எசே 37:9; யோவா 19:30; ரோம 5:17)

B.

1. இயேசுவின் சரீரம் கல்லறையில் அடக்கம்பண்ணப்பட்டது
(லூக் 23:52; யோவா 19:41; லூக் 23:53)
2. இயேசுவின் ஆத்துமா பாதாளம் சென்றது
(அப் 2:27, 31; சங் 16:10)
3. இயேசுவின் ஆவி உயிர்ப்பிக்கப்பட்டு காவல், பரதீசுக்குச் சென்றது
(1 பேது 3:18,19,20; 1 பேது 4:6)

C.

1. இயேசுவின் ஆத்துமா உயிர்த்தெழுந்தது
(அப் 2:31; சங் 71:20; யோவா 21:14)
2. இயேசுவின் ஆவி உயிர்த்தெழுந்தது
(1பேது 3:18; மத் 28:9, 10)
3. இயேசுவின் சரீரம் உயிர்த்தெழுந்தது
(மத் 28:9; 17; லூக் 24:15)

11. மனிதனைக் குறித்த இரகசியங்கள்

A.

1. இருதயத்தில் உணர்ந்து
(உபா 29:4; ரோம 1:21; ரோம 2:5; மத் 13:23)
2. இருதயத்தின் எண்ணம்
(அப் 8:22; நீதி 20:18; 1 கொரி 7:40)
3. இருதயத்தில் சித்தம் (முடிவு)
(யோவா 7:17; எபே 5:17; 2 பேது 1:21)

B.

1. வாயின் வார்த்தை
(சங் 19:14; சங் 54:2; யோபு 7:11)
2. நாவின் வார்த்தை
(சங் 119:172; சங் 139:4; எரே 23:29)
3. வார்த்தையே ஆவி
(1 கொரி 12:15; நீதி 17:27; லூக் 23:46)

C.

1. சரீரத்தின் கரங்கள்
(1 கொரி 12:15; ஆதி 49:8; சங் 26:7)
2. சரீரத்தின் கிரியைகள்
(ரோம 8:13; யோபு 1:10; சங் 90:17)
3. சரீரத்தின் குணங்கள் (செம்மையானவன்)
(1 இராஜா 15:5; யோபு 1:1,8)

12. மனிதன் செய்த குற்றத்தைக் குறித்த இரகசியங்கள்

A.

1. கற்பனை - மீறுதல்
(2 நாளா 24:20; 2 இராஜா 17:34; எண் 15:31)
2. கற்பனை - அக்கிரமம்
(நெகே 9:16, 18; எஸ் 9:10)
3. கற்பனை - பாவம்
(2 இராஜா 17:19, 21; ஓசி 5:11; மத் 19:22)

B.

1. கட்டளை - மீறுதல்
(உபா 32:50; எண் 27:14; நெகே 1:8)
2. கட்டளை - அக்கிரமம்
(உபா 28:45; 1 இராஜா 18:18; ஏசா 24:5)
3. கட்டளை - பாவம்
(உபா 1:41, 43; 2 இராஜா 7:15)

C.

1. உடன்படிக்கை - மீறுதல்
(உபா 31:16; 2 இராஜா 18:12; ஓசி 8:1)
2. உடன்படிக்கை - அக்கிரமம்
(சங் 78:37; ஏசா 24:5; ஏசா 65:7)
3. உடன்படிக்கை - பாவம்
(யோசு 7:11; 2 சாமு 12:13; எரே 22:9)

13. சுவிசேஷத்தைக் குறித்த இரகசியங்கள்

A.

1. ஆபிரகாமுக்குச் சுவிசேஷம்
(கலா 3:8; ஆதி 12:3; ஆதி 22:18)
2. கர்த்தருடைய இரட்சிப்பைக் குறித்த சுவிசேஷம்
(சங் 96:2; 1 நாளா 16:23; யோனா 2:9; 3:4)
3. சமாதானத்தின் சுவிசேஷம்
(ஏசா 52:7; நாகூம் 1:15; ரோம 10:15)

B.

1. சிறுமைப்பட்டவர்களுக்கு சுவிசேஷம்
(ஏசா 61:1; லூக் 7:22; மத் 11:5)
2. தேவனுடைய ராஜ்யத்தின் சுவிசேஷம்
(மத் 4:23; லூக் 17:21; மத் 9:35)
3. கிறிஸ்துவினுடைய சுவிசேஷம்
(மாற் 1:1; 1 கொரி 15:3,4)

C.

1. இரட்சிப்பின் சுவிசேஷம்
(எபே 1:13; அப் 13:26; 2 தெச 2:14)
2. சாட்சியின் சுவிசேஷம்
(மத் 24:14; மாற் 16:15; கொலோ 1:23)
3. நித்திய சுவிசேஷம்
(வெளி 14:6; சங் 96:10, 13)

14. மனந்திரும்புதலைக் குறித்த இரகசியங்கள்

A.

1. இருதயம் குத்தப்படுதல் – உணர்த்தப்படுதல் – ஆத்துமா
(அப் 2:37; எபி 4:12; 2 பேது 3:9)
2. மனங்கசந்து அழுதல் – குற்றங்களுக்காக
(ஏசா 22:4; லூக் 22:62; மாற் 14:72)
3. உள்ளம் விசாரப்பட வேண்டும்–சீர்படும்படிக்கு
(சங் 38:18; 1 சாமு 1:16; பிர 7:3)

B.

1. அறிக்கை செய்ய வேண்டும்–ஒப்புரவாகுதல்–ஆவி
நீதி 28:13; தானி 9:20; 2 கொரி 5:20)
2. அறிக்கை செய்ததை விட்டு விலகுதல்–குற்றங்கள்
(நீதி 28:13; எபே 5:8; மாற் 1:5)
3. இரக்கம் பெறுவான்–தேவனுடன், மனுஷருடன்
(நீதி 28:13; தீத் 3:5; 1 தீமோ 1:16; தானி 1:9)

C.

1. இச்சை உண்டுபண்ணுகிற அவயங்களை–அழித்துப் போடுங்கள் – சரீரம்
(யாக் 4:1; ரோம 7:5; யூதா 23)
2. நீதிக்கு அடிமைகளாக அவயங்களை– ஒப்புக்கொடுங்கள்
(ரோம 6:13,18,19)
3. சரீரத்தை ஒடுக்கி–கீழ்ப்படுத்துகிறேன்
(1 கொரி 9:25; 27; ரோம 6:12)

15. தேவனுடைய இராஜ்யம், மறுபடியும் பிறத்தலைக் குறித்த இரகசியங்கள்

A.

1. தேவனுடைய இராஜ்யம் சுவிசேஷம்
(மத் 4:23; லூக் 16:16; அப் 10:36; மாற் 1:14)
2. தேவனுடைய இராஜ்யம் நற்செய்தி
(லூக் 8:1; லூக் 2:10; மாற் 1:14; ஏசா 52:7)
3. தேவனுடைய இராஜ்யம் உங்களுக்குள்
(லூக் 17:21; லூக் 12:31; மத் 6:33)

B.

1. தேவனுடைய இராஜ்யத்தைத் தேடுதல்–ஆத்துமா
(ரோம 14:17; ஏசா 34:16; சங் 34:14; நீதி 2:3,4)
2. தேவனுடைய இராஜ்யத்தை விசாரித்தல்–ஆவி
(லூக் 17:20; ரோம 10:20; சங் 24:6; எரே 5:1)
3. தேவனுடைய இராஜ்யத்தை நாடுதல்–சரீரம்
(1 நாளா 16:11; யோபு 5:8; நீதி 18:15)

C.

1. மறுபடியும் பிறத்தல்
(யோவா 3:3; 1 பேது 1:23; யாக் 1:18)
2. பிறந்த பின்பு வளர்தல்
(1 பேது 1:23; 1 பேது 2:3; லூக் 2:52)
3. வளர்ந்த பின்பு முதிர்தல்
(எபி 5:12-14; சங் 92:15)

16. மீட்பு, இரட்சிப்பைக் குறித்த இரகசியங்கள்

A.

1. பொதுவான இரட்சிப்பு
(யூதா 3; ரோம 10:9, 10; எபே 2:8)
2. பூரண இரட்சிப்பு
(ஏசா 33:6; 1 கொரி 1:18; பிலி 2:8)
3. நித்திய இரட்சிப்பு
(எபி 5:9; மத் 24:13; எபி 9:28)

B.

1. ஆத்துமாவில் இரட்சிப்பு
(1 பேது 1:9; யாக் 1:21; 2 கொரி 7:10)
2. ஆவியில் இரட்சிப்பு
(1 கொரி 5:5; ரோம 10:10)
3. சரீரத்தில் இரட்சிப்பு
(மத் 10:22; ரோம 10:12; நீதி 28:18)

C.

1. அக்கிரமத்திலிருந்து இரட்சிப்பு
(தீத் 2:14; எபி 8:12; எபே 2:1)
2. மீறுதலிலிருந்து இரட்சிப்பு
(சங் 32:1; சங் 65:3; ஏசா 44:22)
3. பாவத்திலிருந்து இரட்சிப்பு
(ரோம 8:2; 1 யோவா 1:7; வெளி 1:6)

17. சீஷனைக் குறித்த இரகசியங்கள்

A.

1. தன்னைத் தான் வெறுத்து
(மத் 16:24; மத் 4:19; யோவா 12:26)
2. தன் குடும்பத்தை வெறுத்து
(லூக் 14:26; மத் 10:37; மாற் 1:20)
3. தனக்கு உண்டானதை வெறுத்து
(லூக் 14:33; லூக் 18:22; கலா 5:24)

B.

1. தன் சிலுவையை அனுதினமும் எடுத்து
(லூக் 9:23; மாற் 8:34; மத் 10:38)
2. பாடுகளை ஏற்க வேண்டும்
(1 பேது 2:20; 1 பேது 4:16; பிலி 1:29)
3. மரணத்தில் மகிமைப்படுத்த வேண்டும்
(பிலி 1:20; 2 கொரி 7:3; யோவா 21:19)

C.

1. ஒருவரிலொருவர் அன்பாயிருத்தல்
(யோவா 13:35; 1 யோவா 4:20; யோவா 15:12,17)
2. தேவனிடம் அன்பாயிருத்தல்
(1 யோவா 5:3; ரோம 8:39; 1 யோவா 5:3)
3. கனி கொடுத்தல்
(யோவா 15:5; யோவா 15:8; கொலோ 1:10)

18. இயேசு கிறிஸ்துவினால் பெற
ஸ்நானத்தின் இரகசியங்கள்

A.

1. ஜலம்
(மத் 3:11; 1 கொரி 10:2)
2. இரத்தம்
(லூக் 8:16; லூக் 12:49, 50)
3. ஆவி
(மாற் 1:18; 1 கொரி 10:2)

B.

1. ஆத்துமா
(யோபு 15:16; எண் 19:12; எபே 5:26)
2. ஆவி
(சங் 32:2; யோவா 19:30; யோவா 15:3)
3. சரீரம்
(சங் 26:7; 1 யோவா 1:7; யோவா 1:1,4)

C.

1. ஜீவ ஊற்று
(சங் 36:9; நீதி 13:14; எரே 2:13)
2. ஜீவ தண்ணீர்
(யோவா 4:10; நீதி 10:11; நீதி 10:32)
3. ஜீவ நதி
(யோவா 7:38; நீதி 16:22; யோபு 28:28)

19. கிறிஸ்தவனைக் குறித்த இரகசியங்கள்

கிறிஸ்து சீஷர்களை உருவாக்கினார்
(மத் 4:19; மத் 10:1; லூக் 10:1)
சீஷர்கள் சீஷர்களை உருவாக்கினர்
(அப் 2:41; அப் 4:4; அப் 14:21)
சீஷர்கள் கிறிஸ்வர்கள் என அழைக்கப்பட்டனர்
(அப் 11:26, அப் 20: 30; அப் 21:16)

சாட்சி கூறுதல்
(அப் 26:22; அப் 23:11; அப் 22:15)
சத்தியமும், சொஸ்தபுத்தியுள்ள வார்த்தைகளை பேசுதல் (அப் 26:25; 1 தெச 2:3; 1 தெச 2:5)
சாட்சியின் கிறிஸ்தவனாயிருத்தல்
(அப் 26:28; அப் 24:24, 25)

மாம்சத்திலே பாடுபடுதல்
(1 பேது 4:2; எபி 13:12; எபி 2:18)
சுய ஜனங்களால் பாடுபடுதல்
(1 தெச 2:14; 1 பேது 3:14; 1 பேது 5:10)
பாடுபடுகிற கிறிஸ்தவனாயிருத்தல்
(1 பேது 4:16; ரோம 8:17; பிலி 1:29)

20. திருவிருந்து, இராபோஜனத்தைக் குறித்த இரகசியங்கள்

A.

1. இரத்தம் (தண்ணீர்) பானம்
   (1 கொரி 11:25, 26, 28; 1 கொரி 10:16; யோ19:34)
2. காற்று (ஆவி) சுவாசம்
   (யோவா 19:30; யோவா 6:63)
3. மாம்சம் (சரீரம்)-போஜனம்
   (1 கொரி 11: 24, 26,28; 1 கொரி 10:17)

B.

1. நினைவு கூரும்படி (தியானம்)
   (1 கொரி 11:24, 25; லூக் 22:19)
2. மரணத்தை (அறிவித்தல்) தெரிவிக்க வேண்டும்
   (1 கொரி 11:26; 1 கொரி 1:17,18)
3. பாத்திரமாயிருக்க வேண்டும்
   (1 கொரி 11:27-29; 2 கொரி 2:15-17; யோவா 6:51, 3)

C.

1. பலவீனம்
   (1 கொரி 11:30, 31)
2. வியாதியுள்ளவர்கள்
   (1 கொரி 11:30, 31)
3. நித்திரையடைந்திருக்கிறார்கள்
   (1 கொரி 11:30, 31)

21. இயேசு கிறிஸ்துவில் நிலைத்திருத்தலைக் குறித்த இரகசியங்கள்

A.

1. இயேசுவில் (வார்த்தையில்) நிலைத்திருக்க வேண்டும் (யோவா 15:4, 5, 7; யோவா 14:13, 14; 16:23)
2. இயேசுவின் அன்பில் நிலைத்திருக்க வேண்டும் (யோவா 15:9, 10, 12-14; யோவா 14:5, 21, 23)
3. இயேசுவின் சந்தோஷத்தில் நிலைத்திருக்க வேண்டும் (யோவா 15:11; யோவா 16:24; 1 யோவா 1:4)

B.

1. விசுவாசம் - ஆத்துமா (கேட்டு) (ரோம 10:17; 1 பேது 1:25; அப் 14:22)
2. நம்பிக்கை - ஆவி (உணர்ந்து) (1 கொரி 13:13; 1 கொரி 15:19; தீத் 3:6)
3. அன்பு - சரீரம் (புலன்) (1 யோவா 4:12; யோவா 15:9; எபி 13:1)

C.

1. நிலைத்திருந்து சீஷனாயிருத்தல் (யோவா 15:8, 16)
2. நிலைத்திருந்து மிகுந்த கனிகொடுத்தல் (யோவா 15:21, 5, 8)
3. நிலைத்திருந்து (ஜெபத்தில்) கேட்பதைப் பெற்றுக் கொள்ளுதல் (யோவா 15:5, 7, 16)

ம்!

22. புதிய ஏற்பாட்டு ஆசீர்வாதத்தைக் குறித்த இரகசியங்கள்

A.

1. உயிர்த்தெழுதலின் ஆசீர்வாதம்
(அப் 3:26; சங் 55:15; யாக் 3:8; யோவா 3:20)
2. சுவிஷேத்தின் சம்பூரண ஆசீர்வாதம்
(ரோம 15:29; ரோம 15:21; யோவா 1:12; கலா 2:14)
3. விசுவாச ஆசீர்வாதம்
(கலா 3:9; கலா 2:15; கலா 2:20; கலா 3:7)

B.

1. கிறிஸ்துவுக்குள்
(எபே 1:3; யோவா 1:1, 14)
2. உன்னதங்களில்
(எபே 1:3; எபே 2:7; லூக் 1:79)
3. ஆவிக்குரிய ஆசீர்வாதங்களினால் ஆசீர்வதிக்கப்படுதல்
(எபே 1:3; எபே 4:8)

C.

1. ஆத்துமாவில் பரிசுத்தம்
(2 கொரி 1:2; எபி 10:29; யாக் 4:8)
2. ஆவியில் உண்மை
(யோவா 8:14; 3 யோவா 3; வெளி 2:13)
3. சரீரத்தில் நீதி

23. கிறிஸ்துவின் சரீரமாகிய சபையின் இரகசியங்கள்

A.

1. நாம் ஒரே சரீரம்
(1 கொரி 10:17; 1 கொரி 12:12, 25)
2. கிறிஸ்துவின் சரீரம்
(1 கொரி 10:16;1 கொரி 12:27; எபே 5:30)
3. சரீரமாகிய சபைக்கு கிறிஸ்து தலை
(எபே 1:23; 1 கொரி 11:3; கொலோ 1:18)

B.

1. கண்கள்–இரத்தம்–ஒளி
(வெளி 3:18; நீதி 15:30; யோவா 19:34)
2. நாவு–ஆவி–வார்த்தை
(யாக் 3:6, 8; யோவா 19:30)
3. காதுகள்–தண்ணீர்–பரிசுத்தம்
(அப் 28:27; நீதி 20:5, யோவா 19:13; யோவா 14:19)

C.

1. ஆத்துமா–எண்ணங்கள்
(2 கொரி 10:5; பிலி 1:5; 2 தெச 3:15)
2. ஆவி–வார்த்தைகள்
(எபி 12:14; எபி 13:15; கொலோ 3:17)
3. சரீரம்–கிரியைகள்
(1 தெச 4:5; 1 தெச 2:10; ரோம 6:19)

24. கிறிஸ்து இயேசுவின் சாயலைக் குறித்த இரகசியங்கள்

A.

1. குமாரனுடைய சாயலில் மனுஷ சிருஷ்டிப்பு (ஆதி 1:26, 27; ஆதி 5:1)
2. ஆதாமின் சாயலில் மனித சந்ததி (சேத்) (ஆதி 5:3; ஆதி 4:25, 26)
3. மனித மண்ணின் சாயலானார்- பாவ மாம்ச சாயல் (1 கொரி 15:49; சங் 119:25; சங் 103:14)

B.

1. இயேசு (பாவ மாம்ச) மண்ணின் சாயலானார் (ரோம 8:3; பிலி 2:7, 8)
2. தேவனுடைய சாயலாயிருக்கிற கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷ ஒளி (2 கொரி 4:4, 5; 1 யோவா 2:8)
3. மண்ணின் சாயல் நீங்கி குமாரனாகிய சாயல் (ரோம 8:29; எபே 4:24; கொலோ 3:10)

C.

1. உணர்வில்லாத இருதயம் (இருள்) (ரோம 1:21; எபே 4:18, 19, 22)
2. கிறிஸ்துவின் முகத்திலுள்ள அறிவாகிய ஒளி (2 கொரி 4:6; பிலி 2:8; 2 பேது 3:18)
3. இருதயத்தில் பிரகாசம் (குமாரனின் சாயல்) (2 கொரி 4:6; 2 பேது 1:19; லூக் 24:32)

25. இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைக் குறித்த இரகசியங்கள்

A.

1. பரலோகத்திலிருந்து இயேசு இறங்கி வருவார் (யோவா 3:13; 1 தெச 4:16; அப் 1:11)
2. மத்திய ஆகாயத்திற்கு இயேசு வருவார் (1 தெச 4:16; எபி 9:28; 1 தெச 1:10)
3. மேகங்கள் மேல் எடுத்துக் கொள்வார் (1 தெச 4:17; மத் 24:30, 31; மத் 24:40)

B.

1. ஆரவாரம் (1 தெச 4:16; ஏசா 16:9, 10)
2. பிரதான தூதனுடைய சத்தம் (1 தெச 4:16; மத் 25:6)
3. தேவ எக்காளம் (1 தெச 4:16; மத் 24:31; 1 கொரி 15:52)

C.

1. பழைய ஏற்பாட்டு மரித்த பரிசுத்தவான்கள் (1 தெச 4:16; 1 கொரி 15:52; எபி 9:15)
2. புதிய ஏற்பாட்டு மரித்த பரிசுத்தவான்கள் (1 தெச 4:16; பிலி 3:21; 1 கொரி 15:52)
3. புதிய ஏற்பாட்டு உயிரோடிருக்கும் பரிசுத்தவான்கள் (1 தெச 4:17; 1 கொரி 1:2; 2 கொரி 1:9)

26. ஆட்டுக்குட்டியானவருடைய கலியாணத்தைக் குறித்த இரகசியங்கள்

A.

1. ஆட்டுக்குட்டியானவரின் கலியாணத்திற்கு அழைக்கப்பட்டவர்கள் (வெளி 19:9; மத் 22:2, 4)
2. ஆட்டுக்குட்டியானவரின் கலியாணத்திற்கு தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் (மத் 25:6, 10; மத் 22:14)
3. ஆட்டுக்குட்டியானவரின் கலியாணத்திலே உண்மையுள்ளவர்கள் (வெளி 17:14; மத் 25:21, 23)

B.

1. மணவாட்டியினுடைய தீவட்டி
(மத் 25:1, 4; ஏசா 62:1; ரோம 5:10)
2. மணவாட்டியின் எண்ணெய்
(மத் 25:4; யாக் 5:14; வெளி 19:14)
3. மணவாட்டியின் பாத்திரம்
(மத் 25:4; 2 தீமோ 2:21; சங் 23:5; சங் 116:13)

C.

1. மணவாளனாகிய இயேசு
(யோவா 3:29; மத் 25:1, 10)
2. மனைவியாகிய மணவாட்டி-பரிசுத்தவான்கள்
(வெளி 19:7; உன் 4:11; 2 கொரி 11:2)
3. தோழர்கள், தோழிகள், தோழருக்கு அடையாளமானவர்கள்
(யோவா 3:29; உன் 8:13; சங் 45:14; வெளி 11:3, 12)

27. இயேசு கிறிஸ்துவின் மூன்றாம் வருகையைக் குறித்த இரகசியங்கள்

A.

1. கர்த்தராகிய இயேசு வருவார் (அப் 1:11, 12; சக 14:4)
2. இயேசுவுடனே கூட பரிசுத்தவான்கள் வருவார்கள் (2 தெச 1:9; 1 தெச 3:13; சக 14:5)
3. அவர்களோடே கூட பரம சேனைகள் வரும் (வெளி 19:14; 2 தெச 1:8; மத் 25:31)

B.

1. மிருகமாகிய அந்தி கிறிஸ்து (வெளி 19:19-21)
2. கள்ளத்தீர்க்கதரிசி (வெளி 19:19-21)
3. பூமியினுடைய ராஜாக்களும் அவர்களுடைய சேனைகளும் (வெளி 19:19-21)

C.

1. அவபக்தியுள்ளவர்களை நியாயந்தீர்க்க வருவார் (தீத் 2:12; ரோம 1:18 சங் 96:13)
2. அவபக்தியுள்ளவர்களின் கடின பேச்சைக் கண்டிக்க வருவார் (2 தீமோ 2:16; யூதா 15; ரோம 11:26)
3. அவபக்தியான கிரியைகளினிமித்தம் நியாயத்தீர்ப்பைக் கொடுக்க வருவார் (யூதா 14; 2 பேது 2:6; சங் 75:10)

28. கிறிஸ்துவின் ஆயிரம் வருட அரசாட்சியைக் குறித்த இரகசியங்கள்

A.

1. இயேசு கிறிஸ்து சீயோனிலே ராஜாதி ராஜாவாயிருப்பார் (அப் 1:11, 12; சக 14:4)
2. இயேசு கிறிஸ்து ஆயிரம் வருட அரசாட்சி செய்வார் (வெளி 20:4; சங் 72:8; சங் 110:1-3)
3. பூமி முழுதும் இயேசு கிறிஸ்துவின் மகிமையினால் நிறைந்திருக்கும் (சங் 72:19; ஏசா 40:5; 66:11)

B.

1. பரிசுத்தவான்களுக்கு ராஜ்ஜியத்தைச் சுதந்தரமாகத் தருவார் (மத் 25:34; தானி 7:18; லூக் 12:32)
2. பரிசுத்தவான்களை சிங்காசனத்திலே வீற்றிருக்கச் செய்வார் (வெளி 20:4; லூக் 22:30; 2 தீமோ 2:12)
3. பரிசுத்தவான்களுக்கு நியாயத்தீர்ப்புக் கொடுக்கும் அதிகாரம் அளிப்பார்
(வெளி 20:4; லூக் 22:30; 1 கொரி 6:2)

C.

1. ராஜாக்கள்
(வெளி 1:6; வெளி 5:10; 2 தீமோ 2:12)
2. ஆசாரியர்கள்
(வெளி 1:6; வெளி 5:10; வெளி 20:6)
3. பிரபுக்கள்
(சங் 45:16; சங் 47:9)

29. ஆட்டுக்குட்டியானவரின் ஜீவபுஸ்தகத்தைக் குறித்த இரகசியங்கள்

A.

1. ஆட்டுக்குட்டியானவர் உண்மையின்படி நியாயந்தீர்ப்பார் (சங் 7:8; சங் 7:8)
2. ஆட்டுக்குட்டியானவர் சத்தியத்தின்படி நியாயந்தீர்ப்பார் (வெளி 19:1; யோவா 8:16; வெளி 16:7)
3. ஆட்டுக்குட்டியானவர் நீதியின்படி நியாயந்தீர்ப்பார் (வெளி 19:1; பிர 3:17; சங் 119:62)

B.

1. ஜெயங்கொள்ளுகிறவனுடைய பெயர் ஆட்டுக்குட்டியானவரின் புஸ்தகத்திலிருக்கும் (வெளி 21:7; வெளி 3:53; வெளி 13:8)
2. பிதாவுக்கும், அவருடைய தூதருக்கும் முன்பாக அறிக்கை செய்வேன் (வெளி 3:5; மத் 10:32; லூக் 12:8, 9)
3. நித்தியத்திலே பலன்கள் அளிக்கப்படும் (வெளி 3:5; வெளி 21:7, 6)

C.

1. அருவருப்பை நடப்பிக்கிறவர்களின் பெயர்கள் கிறுக்கிப் போடப்படும் (வெளி 21:27; சங் 69:28; யாத் 32:33)
2. பொய்யர்கள் புதிய எருசலேமுக்குள் பிரவேசிப்பதில்லை (வெளி 21:27; வெளி 22:15; சங் 7:4)
3. தீட்டுள்ளவர்கள் நித்திய பலன்களைப் பெறுவதில்லை (வெளி 21:27; ஏசா 35:8; 1 கொரி 6:9,10)

30. புதிய எருசலேமைக் குறித்த இரகசியங்கள்

A.

1. புதிய எருசலேமுக்கு ஆலயம் (ஆட்டுக்குட்டியானவர்) (வெளி 21:22; வெளி 21:24; எபி 1:3)
2. தேவனுடைய மகிமையே அதைப் பிரகாசிப்பித்தது (வெளி 21:10, 23; வெளி 22:5)
3. புதிய எருசலேமுக்கு ஆட்டுக்குட்டியானவரே விளக்கு (வெளி 21;23; வெளி 22:5; 2 சாமு 22:29)

B.

1. ஆட்டுக்குட்டியானவரின் ஜீவபுஸ்தகத்தில் எழுதப் பட்டவர்கள் அதில் பிரவேசிப்பார்கள் (வெளி 21:27; வெளி 3:12; மத் 25:23)
2. இரட்சிக்கப்படுகின்ற ஜனங்கள் அதின் வெளிச்சத்திலே நடப்பார்கள் (வெளி 21:24; சங் 27:1; சங் 36:9)
3. ஜெயங்கொள்ளுகிறவன் எல்லாவற்றையும் சுதந்தரிப்பான் (வெளி 21:7; வெளி 3:21;2:7)

C.

1. இயேசு கிறிஸ்துவின் சமுகத்தை தரிசித்து அவரை சேவிப்பார்கள் (வெளி 22:4; வெளி 19:5)
2. இயேசுவின் நாமம் அவர்களுடைய நெற்றிகளில் இருக்கும் (வெளி 22:4; வெளி 7:3; வெளி 3:12)
3. தேவனாகிய கர்த்தர் அவர்கள்மேல் பிரகாசிப்பார் (வெளி 22:5; வெளி 22:6; எண் 6:25)

31. பரலோகத்தில் சத்திய ஆவியானவரின் இரகசியங்கள்

A.

1. சாட்சியின் கூடாரமாகிய ஆலயம்-சமுகம்
(வெளி 15:5; வெளி 11:19)
2. ஆவியானவர் சத்திய சாட்சியாயிருக்கிறார்
(1 யோவா 5:7, 6; வெளி 16:17)
3. சமுகத்தில் விண்ணப்பங்களைக் கேட்டு பதிலளிக்கிறார்
(1 இராஜா 9:3; சங் 55:1, 19)

B.

1. ஆவியானவரின் நாமம் வல்லமையுள்ளது-வல்லமை
(எரே 10:6; சங் 29:2, 9)
2. ஆவியானவருடைய சத்தம் வல்லமையுள்ளது
(சங் 29:4; சங் 63:2; 2 நாளா 6:41)
3. ஆவியானவருடைய ஆளுகை வல்லமையுள்ளது
(சங் 66:7; சங் 110:2; சங் 90:11)

C.

1. சிங்காசனத்தைச் சுற்றி ஒரு வானவில்
(வெளி 4:3; ஆதி 9:13-17)
2. ஏழு ஆவிகளாகிய ஏழு அக்கினி தீபங்கள்
(வெளி 4:5; வெளி 5:6; 2 நாளா 16:9)
3. பளிங்குக் கொப்பான கண்ணாடிக் கடல்
(வெளி 4:6; வெளி 15:2)

32. பழைய ஏற்பாட்டிலே சத்திய ஆவியானவரின் இரகசியங்கள்

A.

1. ஆவியானவரின் சமுகத்தின் இஸ்ரவேலின் தலைவன் தெரிந்து கொள்ளுதல் (2சாமு 6:21; எண் 17:5, 8, 9)
2. ஆவியானவரின் சமுகத்தில் இஸ்ரவேலர் நினைவு கூரப்படுதல் (எண் 10:9; யாத் 2:24, 25)
3. ஆவியானவரின் சமுகத்தில் இஸ்ரவேலர் நியாயம் விசாரிக்கப்படுதல்–சமுகம் (யோசு 7:15, 21, 23, 26)

B.

1. ஆவியானவரின் வல்லமையினால் எகிப்தில் வாதைகள் (எண் 14:18; யாத் 11:1; யாத் 12:13)
2. ஆவியானவரின் வல்லமையினால் இஸ்ரவேலருக்கு மீட்பு (80:2; யாத் 12:41, 51)
3. ஆவியானவரின் வல்லமையினால் சமுத்திரம் இரண்டாக பிளந்தது (சங் 74:13 யாத் 14:13–18)

C.

1. இஸ்ரவேலரை பகலிலே மேகஸ்தம்பத்தினால் வழி நடத்தினார்–பாதுகாப்பு (நெகே 9:19; யாத் 13:21)
2. இரவிலே அக்கினி ஸ்தம்பத்தினால் வெளிச்சம் தந்தார் (நெகே 9:19; யாத் 13:21; யாத் 14:20)
3. இரவிலே அக்கினி ஸ்தம்பத்தினால் நடக்க வேண்டிய வழியைக் காட்டினார் (நெகே 9:19; யாத் 13:21, 22)

33. புதிய ஏற்பாட்டில் சத்திய ஆவியானவரின் இரகசியங்கள்

A.

1. ஆவியானவர் நமக்குள் வாசம்பண்ண வேண்டும்–சமுகம்
(யோவா 14:17; யாக் 4:5; யோவா 14:26)
2. ஆவியானவர் நம்முடைய ஆவியுடனே கூட சாட்சியிடுகிறார் (ரோம 8:16; ரோம 9:2; 1கொரி1:4)
3. ஆவியானவர் நம்மேல் தங்கியிருக்கிறார்
(1 பேது 4:14; ரோம 9:2; 1 கொரி 6:19)

B.

1. ஆவியானவரின் வல்லமையினால் பலப்பட்டு சாட்சியாயிருத்தல்
(கொலோ 1:29; 2 தீமோ 1:8; எபே 3:16)
2. ஆவியானவரின் வல்லமையினால் சுவிசேஷம் அறிவித்தல் (1 தெச 1:5; 2 தீமோ 1:8; 1தெச 2:2)
3. ஆவியானவரின் வல்லமையினால் சரீர–குணம்
(அப் 4:7; அப் 5:16; அப் 28:8)

C.

1. ஆவியானவர் எருசலேமில் பவுலை யூதர்களிடமிருந்து அதிபதி மூலம் பாதுகாத்தார் (அப் 23:12,16,23,24,27)
2. ஆவியானவர் எபேசு ஊழியத்தில் சீஷர்கள் மூலம் பாதுகாத்தார் (அப் 19:23, 29, 30)
3. ஆவியானவர் மெலித்தா தீவில் விஷப்பூச்சி சேதப் படுத்தாமல் பாதுகாத்தார் (அப் 28:1, 3, 5)

34. சத்திய ஆவியானவரின் ஆத்துமா, ஆவி, சரீரத்தின் இரகசியங்கள்

A.

1. ஆவியானவரின் உணர்வு
(ரோம 8:27; எபே 4:30; ரோம 15:32)
2. ஆவியானவரின் எண்ணம்
(அப் 5:38, 39; அப் 6:5)
3. ஆவியானவரின் சித்தம்
(1 கொரி 12:11; அப் 13:2, 34)

B.

1. ஆவியானவரின் வாய்
(2 கொரி 6:17, 18;1 கொரி 7:25)
2. ஆவியானவரின் நாவு
(அப் 2:3, 4; அப் 8:29)
3. ஆவியானவரின் வார்த்தை
(ரோமர் 8:26, 27; அப் 8:29)

C.

1. ஆவியானவரின் கரம்
(அப் 11:21; அப் 13:11; அப் 4:27)
2. ஆவியானவரின் கிரியைகள்
(அப் 16:7; 1 கொரி 16:10; அப் 8:39)
3. ஆவியானவரின் குணங்கள்
(அப் 12:17; அப் 14:3; 1 தெச 4:6)

35. ஆவியானவரைக் குறித்து இயேசு கிறிஸ்து முன்னறிவித்த இரகசியங்கள்

A.

1. பிதாவினிடத்திலிருந்து நான் உங்களுக்கு அனுப்பப் போகிறவர்
   (1 யோவா 5:7; யோவா 15:26; யோவா 16:7)
2. பிதாவினிடத்திலிருந்து புறப்படுகிறவருமாகிய சத்திய ஆவியாகிய தேற்றரவாளன்
   (யோவா 15:26; மத் 3:16; யோவா 16:7)
3. பிதாவாகிய தேவன் இயேசுவின் நாமத்தினாலே அனுப்பப்போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளன்
   (யோவா 14:26; யோவா 16:7; யோவா 14:16)

B.

1. கேள்விப்பட்ட யாவையும் சொல்லுவார்
   (யோவா 16:13; அப் 6:10; மத் 10:19, 20)
2. சுயமாய்ப் பேசமாட்டார்
   (யோவா 16:13; யோவா 7:18, 28)
3. வரப்போகிற காரியங்களை அறிவிப்பார்
   (யோவா 16:13; அப் 2:19-21)

C.

1. நான் சொன்னவற்றைக் குறித்து நினைப்பூட்டுவார்
   யோவா 14:26; 2 பேது 1:12-14)
2. என்னைக் குறித்துச் சாட்சி கொடுப்பார்
   (யோவா 15:26; அப் 4:33; அப் 8:34, 35)
3. என்னை மகிமைப்படுத்துவார்
   (யோவா 16:14, 15; அப் 4:24)

36. ஆவியானவருடைய இரட்சிப்பைக் குறித்த இரகசியங்கள்

A.

1. இரட்சிப்பின் வழியை அறிவித்தல்
(அப் 16:17; அப் 8:29; அப் 8:32, 35)
2. இரட்சிப்புக்கேற்ற மனந்திரும்புதலை உண்டாக்குதல்
(2 கொரி 7:10; அப் 3:20; அப் 8:22)
3. இரட்சிப்பின் பாத்திரமாகி தொழுதுகொள்ளுதல்
(சங் 116:13; ரோம 10:13; ரோம 8:23)

B.

1. இரட்சிப்பின் ஊற்று
(ஏசா 12:3; எண் 21:17; சக 13:1; 1 பேது 1:2)
2. இரட்சிப்பின் (சந்தோஷம்) பாடல்கள்
(சங் 32:7; சங் 35:9; யாக் 5:13)
3. இரட்சிப்பின் நம்பிக்கை
(1 தெச 5:8; ஏசா 59:17; 1 பேது 1:13)

C.

1. இரட்சிப்பை கருத்தாய் ஆராய்தல்
(1 பேது 1:10; யோவா 5:39; யோவா 7:49)
2. இரட்சிப்பை நிறைவேற்ற பிரயாசப்படுதல்
(பிலி 2:12; மத் 24:13; எபி 12:1)
3. இரட்சிப்பின் வெளிச்சத்திலே நடப்பார்கள்
(வெளி 21:24; 1 தெச 5:9; 2 தெச 2:14,17)

37. பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தைக் குறித்த இரகசியங்கள்

A.

1. மேகத்தினால் ஞானஸ்நானம்
   (1 கொரி 10:2; யாத் 13:21; யாத் 14:20)
2. சமுத்திரத்தினால் (ஜலம்) ஞானஸ்நானம்
   (1 கொரி 10:2; யாத் 14:16; சங் 74:13)
3. அக்கினியினால் ஞானஸ்நானம்
   (நெகே 9:19; யாத் 13:21, 22)

B.

1. பலத்த காற்று அடிக்கிற முழக்கம்
   (அப் 2:2; 1 இராஜா 19:11; யோபு 38:1)
2. அக்கினிமயமான நாவுகள்
   (அப் 2:3; அப் 19:6; ஏசா 30:27)
3. பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்படுதல்
   (அப் 2:4; அப் 13:52; அப் 6:3)

C.

1. ஒரே ஆவியினாலே ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம்
   (1 கொரி 12:13; எபே 4:4; கலா 3:27)
2. ஒரே ஆவிக்குள்ளாக தாகந்தீர்க்கப்படுகிறோம்
   (1 கொரி 12:13; எபே 4:4; எபே 2:18)
3. அவயங்கள் அநேகம் சரீரம் ஒன்றே
   (1 கொரி 12:20; 1 கொரி 12:12, 27)

38. சகல சத்தியத்திற்குள்ளும் நடத்துவதைக் குறித்த இரகசியங்கள்

A.

ஆ.மைய வசனம் :1. நாங்கள் உமக்கு முன்பாக மிகவும் கெட்டவர்களாய் நடந்தோம்; நீர் உம்முடைய தாசனாகிய மோசேக்குக் கற்பித்த கற்பனைகளையும்

2. கட்டளைகளையும்,

3. நியாயங்களையும், கைக் கொள்ளாதேபோனோம்.
7-ஆம் வசனம்.

இ. மையச் செய்தி : சத்திய தேவன் மோசேக்கு கற்பித்த கட்டளைகளை கைக்கொள்ளாமல் போனபடியினால் இஸ்ரவேலர் கெட்டவர்களாய் நடந்து கொண்டனர்.

17. எஸ்தர் முதலாம் அதிகாரம்

அ. மைய வார்த்தை : சமுகம் (3 முறை)
3, 11, 13 –ஆம் வசனங்கள்.

ஆ. மைய வசனம் :1. அவன் தன் ராஜ்யபாரத்தின் மூன்றாம் வருஷத்திலே தன்னுடைய பிரபுக்களுக்கும் ஊழியக்காரருக்கும் விருந்து பண்ணினான்;

2. அப்பொழுது, பெர்சியா மேதிய தேசங்களிலுள்ள மகத்தான வர்களும்,

3. நாடுகளின் அதிபதிகளும், பிரபுக்களும் அவன் சமுகத்தில் வந்திருந்தார்கள்.
3–ஆம் வசனம்.

இ. மையச் செய்தி: சத்திய தேவனுடைய ராஜ்யத்தில் அவருடைய சமுகம் இருப்பது போல் பூமியின் ராஜாக்களின் ராஜ்யத்தில் அவர்களுடைய ராஜசமுகம் இருக்கின்றது.

18. யோபு முதலாம் அதிகாரம்

அ. மைய வார்த்தை : பயந்து (3 முறை)
1, 8, 9-ஆம் வசனங்கள்.

ஆ. மைய வசனம் :1. ஊத்ஸ் தேசத்திலே யோபு என்னும் பேர்கொண்ட ஒரு மனுஷன்இருந்தான். அந்த மனுஷன் உத்தனும்,

2. சன்மார்க்கனும்,

3. தேவனுக்கு பயந்து, பொல்லாப்புக்கு விலகுகிறவனுமாயிருந்தான்.
1-ஆம் வசனம்.

இ. மையச் செய்தி: சத்திய தேவனுக்கு யோபு பயந்தபடியினால், அவன் பொல்லாப்புக்கு விலகி வாழ்ந்தான். தேவன் பயப்படத்தக்கவர்.

19. சங்கீதம் முதலாம் அதிகாரம்

அ. மைய வார்த்தை : வழி (3 முறை)
1, 6, 6–ஆம் வசனங்கள்.

ஆ.மைய வசனம் :1. துன்மார்க்கருடைய ஆலோசனையில் நடவாமலும்,

2. பாவிகளுடைய வழியில் நில்லாமலும்,

3. பரியாசக்காரர் உட்காரும் இடத்தில் உட்காராமலும், 1–ஆம் வசனம்.

இ. மையச் செய்தி: சத்திய தேவனுடைய ஆலோசனையின்படி நடந்து, அவர் வழியில் நிற்க வேண்டும்,சத்திய தேவனுடைய வார்த்தையே நமக்கு வழியாயிருக்கிறது.

20. நீதிமொழிகள் முதலாம் அதிகாரம்

அ. மைய வார்த்தை : விவேகம் (3 முறை)
3, 4, 5-ஆம் வசனங்கள்.

ஆ. மைய வசனம் :1. புத்திமான் இவைகளைக் கேட்டு,

2. அறிவில் தேறுவான்;

3. விவேகி நல்லாலோசனைகளை அடைந்து,
5-ஆம் வசனம்.

இ. மையச் செய்தி: சத்திய தேவனுடைய நல்லாலோசனையினால் மனுஷர் விவேகமடைவார்கள்.

21. பிரசங்கி முதலாம் அதிகாரம்

அ. மைய வார்த்தை : காரியம் (3 முறை)
1, 1, 1-ஆம் வசனங்கள்.

ஆ.மைய வசனம் :1. சூரியனுக்குக் கீழே செய்யப்
படுகிற காரியங்களையெல்லா
கவனித்துப் பார்த்தேன்.

2. இதோ, எல்லாம் மாயையும்,

3. மனதுக்குச் சஞ்சலமுமாய்
இருக்கிறது.
14-ஆம் வசனம்.

இ. மையச் செய்தி: சத்திய தேவன் சகல
சிருஷ்டிக்கும் காரண காரிய
யிருக்கிறார். சிருஷ்டிக்கப்பட்ட
மனிதனால் செய்யப்படுகின்ற
காரியங்கள் அனைத்தும்
மாயையாயிருக்கிறது.
நூதனமானது ஒன்றுமில்லை.

22. உன்னதப்பாட்டு முதலாம் அதிகாரம்

அ. மைய வார்த்தை : இன்பம் (3 முறை)
2, 3, 16-ஆம் வசனங்கள்.

ஆ.மைய வசனம் :1. உமது பரிமள தைலங்கள் இன்பமான வாசனையுள்ளவைகள்;

2. உமது நாமம் ஊற்றுண்ட பரிமளதைலமாயிருக்கிறது;

3. ஆகையால் கன்னியர்கள் உம்மை நேசிக்கிறார்கள்.
3-ஆம் வசனம்.

இ. மையச் செய்தி: சத்திய தேவன் நமது இன்பமானவர். அவருடைய நாமம் பரிசுத்தவான்களாகிய கன்னியர்களால் நேசிக்கப்படுகின்றது.

23. ஏசாயா முதலாம் அதிகாரம்

அ. மைய வார்த்தை : பாவம் (3 முறை)
4, 18, 28-ஆம்
வசனங்கள்.

ஆ. மைய வசனம் :1. வழக்காடுவோம் வாருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்;

2. உங்கள் பாவங்கள் சிவேரென்றிருந்தாலும் உறைந்த மழையைப்போல் வெண்மையாகும்;

3. அவைகள் இரத்தாம்பர சிவப்பாயிருந்தாலும் பஞ்சைப்போலாகும்.
18-ஆம் வசனம்.

இ. மையச் செய்தி: சத்திய தேவன் பாவங்களை நீக்கி நம்மை (சுத்திமாக்குகிறார்) வெண்மையாக்குகிறார். இஸ்ரவேலரோ கர்த்தரை விட்டு, தமது பரிசுத்தருக்கு கோபமுண்டாக்கி பாவஞ் செய்தனர்.

24. எரேமியா முதலாம் அதிகாரம்

அ. மைய வார்த்தை : கட்டளை (3 முறை)
5, 7, 17-ஆம் வசனங்கள்.

ஆ.மைய வசனம் :1. ஆனாலும் கர்த்தர்: நான் சிறுபிள்ளையென்று நீ சொல்லாதே,

2. நான் உன்னை அனுப்புகிற எல்லாரிடத்திலும் நீ போய்;

3. நான் உனக்கு கட்டளையிடுகிறவைகளையெல்லாம் நீ பேசுவாயாக.
7-ஆம் வசனம்.

இ. மையச் செய்தி: சத்திய தேவனின் கட்டளையைத் தீர்க்கதரிசிக் கேட்டு, அவருக்கு விரோதமான செயலை செய்த இஸ்ரவேலருக்கு அதனைச் சொல்லஅவர்கள் முகத்துக்கு அஞ்சாதிரு என்றார்.

25. எரேமியாவின் புலம்பல்
முதலாம் அதிகாரம்

அ. மைய வார்த்தை : துக்கம் (3 முறை)
12, 2, 18-ஆம் வசனங்கள்.

ஆ.மைய வசனம் :1. கர்த்தர் நீதிபரர்; அவருடைய வாக்குக்கு விரோதமாய் நான் எழும்பினேன்;

2. ஜனங்களே, நீங்கள் எல்லாரும் இதைக்கேட்டு என் துக்கத்தைப் பாருங்கள்;

3. என் கன்னிகைகளும் என் வாலிபரும் சிறைப்பட்டுப் போனார்கள்.
18-ஆம் வசனம்.

இ. மையச் செய்தி: சத்திய தேவனுக்கு விரோதமாய் அவருடைய ஜனங்கள் செய்த மிகுதியான பாவத்தின் நிமித்தம் கர்த்தருடைய கோபம் அவர்களுக்கு உண்டானது. அவருடைய கோபத்தினால் துக்கம் அவர்களுக்கு ஏற்பட்டது.

26. எசேக்கியேல் முதலாம் அதிகாரம்

அ. மைய வார்த்தை : இரைச்சல் (3 முறை)
24-ஆம் வசனங்கள்.

ஆ.மைய வசனம் :

1. அவைகள் செல்லும்போது அவைகளுடைய செட்டைகளின் இரைச்சலைக் கேட்டேன்,

2. அது பெருவெள்ளத்தின் இரைச்சல்போலவும்,

3. சர்வவல்லவருடைய சத்தம் போலவும், ஒரு இராணுவத்தின் இரைச்சலுக்கு ஒத்த ஆரவாரத்தின் சத்தம் போலவுமிருந்தது; அவைகள் நிற்கும்போது தங்கள் செட்டைகளைத் தளர விட்டு இருந்தன.
24-ஆம் வசனம்.

இ. மையச் செய்தி: சத்திய தேவனுடைய நான்கு ஜீவன்களுடைய செட்டைகளின் இரைச்சல் சர்வவல்லவருடைய சத்தமாயிருக்கிறது.

27. தானியேல் முதலாம் அதிகாரம்

அ. மைய வார்த்தை : ஞானம் (3 முறை) 3, 17, 20-ஆம் வசனாங்கள்.

ஆ.மைய வசனம் :1. ஞானத்துக்கும் புத்திக்கும் அடுத்த எந்த விஷயத்தில் ராஜா அவர்களைக் கேட்டு,

2. விசாரித்தானோ,

3. அதிலே தன் ராஜ்யம் எங்கும் உள்ள சகல சாஸ்திரிகளிலும் ஜோசியரிலும் அவர்களைப் பத்துமடங்கு சமர்த்தராகக் கண்டான்.

20-ஆம் வசனம்.

இ. மையச் செய்தி: சத்திய தேவன் ஞானமாய் இருக்கிறார்.அவர் இஸ்ரவேல் புத்திரரில் தானியேலுக்கும் அவனை சேர்ந்த வாலிபருக்கும் ஞானத்தைக் கொடுத்திருந்தார்.

28. ஓசியா முதலாம் அதிகாரம்

அ. மைய வார்த்தை : பேரிடு (3 முறை)
4, 6,9-ஆம் வசனங்கள்.

ஆ. மைய வசனம் :1. அப்பொழுது அவர்: இவனுக்கு லோகம்மீ என்னும் பேரிடு.

2. ஏனெனில் நீங்கள் என் ஜனமல்ல,

3. நான் உங்கள் தேவனாயிருப் பதில்லை.
9-ஆம் வசனம்.

இ. மையச் செய்தி : சத்திய தேவன் அர்த்தமுள்ள பேரிடுகிறவர் யாக்கோபை இஸ்ரவேல் என்று பெயரிட்டவர். அவர்களில் தோன்றிய இஸ்ரவேலர் சோரம்போனதினால் அவர்களின் பெயரை மாற்றினார்.

29. யோவேல் முதலாம் அதிகாரம்

அ. மைய வார்த்தை : சந்தோஷம், மகிழ்ச்சி (3 முறை) 12, 16, 16-ஆம் வசனங்கள்.

ஆ.மைய வசனம் :1. நம்முடைய கண்களை விட்டு ஆகாரமும்,

2. நம்முடைய தேவனின் ஆலயத்தை விட்டுச் சந்தோஷமும்,

3. மகிழ்ச்சியும் நீக்கப்பட வில்லையோ?
12-ஆம் வசனம்.

இ. மையச் செய்தி: சத்திய தேவனுக்கு பிரியமில்லாமல் நடந்த தேவ ஜனங்களைவிட்டு அவருடையநாளில் சந்தோஷத்தை ஒழிந்து போகும்படிச் செய்தார்.

30. ஆமோஸ் முதலாம் அதிகாரம்

அ. மைய வார்த்தை : சங்காரம்பண்ணுவேன்,
அழிவு (3 முறை)
5, 8, 8 ஆம் வசனங்கள்.

ஆ. மைய வசனம் :1. நான் தமஸ்குவின் தாழ்பாளை உடைத்து,

2. குடிகளை ஆவேன் என்னும் பள்ளத்தாக்கிலும், செங்கோல் செலுத்துகிறவனைப் பெத் எதேனிலும் இராதபடிக்குச் சங்காரம்பண்ணுவேன்;

3. அப்பொழுது சீரியாவின் ஜனங்கள் கீருக்குச் சிறைப்பட்டு போவார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.
5-ஆம் வசனம்.

இ. மையச் செய்தி: சத்திய தேவனுக்கு எதிரான பாதங்களினிமித்தம் இஸ்ரவேலில் செங்கோல் செலுத்துபவனை சங்காரம் பண்ணுவேன் என்கிறார்.

31. ஒபதியா முதலாம் அதிகாரம்

அ. மைய வார்த்தை : ஆபத்துநாள் (3 முறை)
13–ஆம் வசனம்.

ஆ.மைய வசனம் :1. என் ஜனத்தின் ஆபத்து நாளிலே நீ அவர்கள் வாசல்களுக்குள் பிரவேசியாமலும்,

2. அவர்கள் ஆபத்துநாளிலே அவர்கள் அநுபவிக்கிற தீங்கை நீ பிரியத்தோடே பாராமலும்,

3. அவர்கள் ஆபத்து நாளிலே அவர்கள் ஆஸ்தியில் கைபோடாமலும்,
13–ஆம் வசனம்.

இ. மையச் செய்தி: சத்திய தேவனுக்கு சமமாக ஏசாவின் சந்ததியாகிய ஏதோமியர் தங்களை உயர்த்தி மோசம்போயிருந்தனர். அவர்கள் இஸ்ரவேலருடைய ஆபத்துநாளிலே பிரியமாய் பாராமலும், ஆஸ்தியில் கைபோடாதபடியும் செய்தார்.

32. யோனா முதலாம் அதிகாரம்

அ. மைய வார்த்தை : சீட்டு (3 முறை)
7-ஆம் வசனம்.

ஆ. மைய வசனம் :1. அவர்கள் யார்நிமித்தம் இந்த ஆபத்து நமக்கு நேரிட்டதென்று நாம் அறியும்படிக்குச் சீட்டு போடுவோம்,

2. வாருங்கள் என்று ஒருவரோ டொருவர் சொல்லிக்கொண்டு சீட்டுபோட்டார்கள்;

3. யோனாவின் பேருக்குச் சீட்டு விழுந்தது.
7-ஆம் வசனம்.

இ. மையச் செய்தி: சத்திய தேவன் நேரிடப் பண்ணின ஆபத்து யார்நிமித்தம் என்றும் அறிய சீட்டு போட்டார்கள்.

33. மீகா முதலாம் அதிகாரம்

அ. மைய வார்த்தை : அக்கினி, மகிமை (3 முறை) 4, 7, 15-ஆம் வசனங்கள்.

ஆ.மைய வசனம் :1. மெழுகு அக்கினிக்கு முன்பாக வருகிறதுபோலவும்,

2. மலைகளிலிருந்து பாயுந் தண்ணீர் தரையைப்பிளக் கிறது போலவும்,

3. பர்வதங்கள் அவர்கீழே உருகி, பள்ளத்தாக்குகள் பிளந்து போகும்,
4-ஆம் வசனம்.

இ. மையச் செய்தி: தேவனுக்கு எதிராக இஸ்ரவேலர் செய்த குற்றங்ளினிமித்தம் தேசத்திலே அக்கினியை அனுப்பி எரித்துப்போடுவார்.

34. நாகூம் முதலாம் அதிகாரம்

அ. மைய வார்த்தை : சர்வசங்காரம் (3முறை)
8, 9, 15-ஆம் வசனங்கள்.

ஆ.மைய வசனம் :1. நீங்கள் கர்த்தருக்கு விரோதமாகச் செய்ய நினைக்கிறது என்ன?

2. அவர் சர்வ சங்காரம்பண்ணுவார்;

3. இடுக்கம் மறுபடியும் உண்டாகாது.
9-ஆம் வசனம்.

இ. மையச் செய்தி: சத்திய தேவனுக்கு எதிராக நடந்த நினிவே ஸ்தானத்தை அவர் சங்காரம்பண்ணுவார்.

35. ஆபகூக் முதலாம் அதிகாரம்

அ. மைய வார்த்தை : நியாயம் (3 முறை)
4, 4, 7-ஆம் வசனங்கள்.

ஆ. மைய வசனம் :1. ஆகையால், நியாயப் பிரமாணம் பெலனற்றதாகி நியாயம் ஒருபோதும் செல்லாமற் போகிறது;

2. துன்மார்க்கன் நீதிமானை வளைந்துகொள்கிறான்.

3. ஆதலால் நியாயம் புரட்டப் படுகிறது.
4-ஆம் வசனம்.

இ. மையச் செய்தி: சத்திய தேவனுடைய ஜனங்கள் செய்கிற அக்கிரமத்தின் நிமித்தம் அவர்களுடைய நியாயம் புரட்டப்படுகிறது.

36. செப்பனியா முதலாம் அதிகாரம்

அ. மைய வார்த்தை : தண்டிப்பேன் (3 முறை)
8, 9, 12-ஆம் வசனங்கள்.

ஆ. மைய வசனம் :1. அக்காலத்திலே நான் எருசலேமை விளக்குக் கொளுத்திச் சோதித்து,

2. வண்டல் போலக்குழம்பி யிருக்கிறவர்களும்,

3. கர்த்தர் நன்மை செய்வதும் இல்லை, தீமை செய்வதும் இல்லையென்று தங்கள் இருதயத்தில் சொல்லுகிறவர் களுமான மனுஷரைத் தண்டிப்பேன்.
12-ஆம் வசனம்.

இ. மையச் செய்தி: சத்திய தேவனாகிய கர்த்தர் நன்மை செய்வதும் இல்லை தீமை செய்வதுமில்லையென்று தங்கள் இருதயத்தில் சொல்லுகிற மனுஷனை தண்டிப்பேன் என்றுரைத்தார்.

37. ஆகாய் முதலாம் அதிகாரம்

அ. மைய வார்த்தை : ஆலயம் (3 முறை)
2, 8, 14-ஆம் வசனங்கள்.

ஆ. மைய வசனம் :1. நீங்கள் மலையின்மேல் ஏறிப்போய் மரங்களை வெட்டிக்கொண்டு வந்து, ஆலயத்தைக் கட்டுங்கள்;

2. அதின்மேல் நான் பிரியமாயிருப்பேன்.

3. அதினால் என் மகிமை விளங்கும் என்று கர்த்தர் சொல்லுகிறார்.
8-ஆம் வசனம்.

இ. மையச் செய்தி: சத்திய தேவன் தம்முடைய ஆலயத்தின் வேலையைச் செய்ய இஸ்ரவேலரிலும், யூதாவிலும் அவர்களுடைய ஆவியை எழுப்பினார்.

38. சகரியா முதலாம் அதிகாரம்

அ. மைய வார்த்தை : மிருதுசெடிகள் (3 முறை) 8, 10, 11–ஆம் வசனங்கள்.

ஆ.மைய வசனம் :1. இதோ, இன்று ராத்திரி சிவப்பு குதிரையின் மேல் ஏறியிருந்த ஒரு புருஷனைக் கண்டேன்;

2. அவர் பள்ளத்தாக்கில் இருக்கிற மிருது செடிகளுக்குள்ளே நின்றார்;

3. அவருக்குப் பின்னாலே சிவப்பும் மங்கின நிறமும் வெண்மையுமான குதிரைகள் இருந்தன.
8–ஆம் வசனம்.

இ. மையச் செய்தி: சத்திய தேவன் தம்முடைய தூதனை பூமியிலே அனுப்பினார். அவர் மிருது செடிகளுக்குள்ளே நின்று பூமியின் அமைதலை அறிந்துகொண்டார்.

39. மல்கியா முதலாம் அதிகாரம்

அ. மைய வார்த்தை : மகத்துவம் (3முறை)
11, 11, 14-ஆம் வசனங்கள்.

ஆ.மைய வசனம் :1. தன் மந்தையில் கடா இருக்கையில் கெட்டுப்போனதை ஆண்டவருக்கு நேர்ந்து கொண்டு பலியிடுகிற கபடஸ்தன் சபிக்கப்பட்டவன்;

2. என் நாமம் ஜாதிகளுக்குள்ளே; பயங்கரமாயிருக்கும்;

3. நான் மகத்துவமான ராஜா என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.
14-ஆம் வசனம்.

இ. மையச் செய்தி: சத்திய தேவனின் நாமம் பூமி யெங்கும் மகத்துவமானதா யிருக்கும். அவர் மகத்துவ மான ராஜாவாயிருக்கிறார்.

40. மத்தேயு முதலாம் அதிகாரம்

அ. மைய வார்த்தை : பேரிடுவாயாக (3முறை) 21, 23, 25-ஆம் வசனங்கள்.

ஆ. மைய வசனம் : 1. அவள் ஒரு குமாரனைப் பெறுவாள்;

2. அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக ;

3. ஏனெனில் அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார் என்றான்.
21-ஆம் வசனம்.

இ. மையச் செய்தி: சத்திய தேவன் தமது தூதனை யோசேப்பினுடைய சொப்பனத்தில் காணும்படிச் செய்து மனுஷகுமாரன் கன்னிமரியாள் மூலம் பெற்றெடுக்கப்படுவதையும், அதன்பின் அவருக்கு இயேசு என்று பேரிடவும் கட்டளையிடப்பட்டது.

41. மாற்கு முதலாம் அதிகாரம்

அ. மைய வார்த்தை : சுவிசேஷம் (3 முறை)
1, 14, 15–ஆம் வசனங்கள்.

ஆ. மைய வசனம் :1. யோவான் காவலில் வைக்கப்பட்ட பின்பு,

2. இயேசு கலிலேயாவிலே வந்து,

3. தேவனுடைய ராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரங்கித்து,
14–ஆம் வசனம்.

இ. மையச் செய்தி: சத்திய தேவன் தமது ராஜ்யத்தின் சுவிசேஷத்தை இயேசு கிறிஸ்துவின் மூலம் பிரசங்கித்தார்.

42. லூக்கா முதலாம் அதிகாரம்

அ. மைய வார்த்தை : வார்த்தை (3முறை)
20, 29, 38-ஆம்
வசனங்கள்.

ஆ. மைய வசனம் :1. அவளோ அவனைக் கண்டு,

2. அவன் வார்த்தையினால் கலங்கி,

3. இந்த வாழ்த்துதல் எப்படிப் பட்டதோ என்று சிந்தித்துக் கொண்டிருந்தாள்.
29-ஆம் வசனம்.

இ. மையச் செய்தி: சத்திய தேவன் தம்முடைய தூதன் மூலம் வார்த்தையாகிய இயேசுவின் பிறப்பைக்குறித்தும், அவருடைய வழியை ஆயத்தப்படுத்தும் யோவான் ஸ்நானகனுடைய பிறப்பைக் குறித்தும் தமது வார்த்தையை வெளிப்படுத்தினார்.

43. யோவான் முதலாம் அதிகாரம்

அ. மைய வார்த்தை : மேன்மையுள்ளவர் (3 முறை) 15, 27, 30-ஆம் வசனங்கள்.

ஆ. மைய வசனம் :1. எனக்குப்பின் ஒருவர் வருகிறார்.

2. அவர் எனக்கு முன்னிருந்தபடியால்,

3. என்னிலும் மேன்மையுள்ளவரென்று நான் சொன்னேன். அவர் இவர்தான். 30-ஆம் வசனம்.

இ. மையச் செய்தி: சத்திய தேவனால் அனுப்பப்பட்ட யோவான் இயேசு கிறிஸ்துவை தன்னிலும் மேன்மையுள்ளவரென்று அறிந்து சாட்சி கொடுத்தான்.

44. அப்போஸ்தலர் முதலாம் அதிகாரம்

அ. மைய வார்த்தை : ஞானஸ்நானம் (3முறை) 4, 4, 21-ஆம் வசனங்கள்.

ஆ.மைய வசனம் :1. அன்றியும், அவர் அவர்களுடனே கூடி வந்திருக்கும்போது,

2. அவர்களை நோக்கி: யோவான் ஜலத்தினாலே ஞானஸ்நானங் கொடுத்தான்;

3. நீங்கள் சில நாளுக்குள்ளே பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம் பெறுவீர்கள். 4-ஆம் வசனம்.

இ. மையச் செய்தி: சத்திய தேவன் பரிசுத்தஆவியினாலே ஞானஸ்நானம் கொடுக்கின்றவர்.

45. ரோமர் முதலாம் அதிகாரம்

அ. மைய வார்த்தை : பலன் (3முறை)
13, 13, 37-ஆம்
வசனங்கள்.

ஆ.மைய வசனம் :1. சகோதரரே, புறஜாதிகளான மற்றவர்களுக்குள்ளே நான் பலனை அடைந்தது போல உங்களுக்குள்ளும் சில பலனை அடையும்படிக்கு,

2. உங்களிடத்தில் வர பலமுறை யோசனையாயிருந்தேன்,

3. ஆயினும், இதுவரைக்கும் எனக்குத் தடையுண்டாயிற்று என்று நீங்கள் அறியாதிருக்க எனக்கு மனதில்லை.
13-ஆம் வசனம்.

இ. மையச் செய்தி: சத்திய தேவனுடைய சுவிசேஷத்திற்கென்று பிரித்தெடுக்கப்பட்ட பவுல் புறஜாதிகளுக்குள்ளே தக்க பலனை அடைந்தான்.

46. 1 கொரிந்தியர் முதலாம் அதிகாரம்

அ. மையய வார்த்தை : தெரிந்துகெண்டார் (3 முறை) 2, 27, 28-ஆம் வசனாங்கள்.

ஆ. மையய வசனம் :1. உள்ளவைகளை அவமாக்கும்படி, உலகத்தின் இழிவானவைகளையும்,

2. அற்பமாய் எண்ணப்பட்டவைகளையும்,

3. இல்லாதவைகளையும் தேவன் தெரிந்துகொண்டார். 28-ஆம் வசனம்.

இ. மையச் செய்தி: சத்திய தேவன் இந்த உலகத்திலுள்ள ஞானிகளுடைய ஞானத்தை அழித்து, அவமாக்கும்படி தமக்குச் சித்தமானவர்களைத் தெரிந்துகொண்டார்.

47. 2 கொரிந்தியர் முதலாம் அதிகாரம்

அ. மைய வார்த்தை : தப்புவித்தார், தப்புவிக்கிறார், தப்புவிப்பார் (3முறை) 10-ஆம் வசனம்.

ஆ.மைய வசனம் :1. அப்படிப்பட்ட மரணத்தினின்றும் அவர் எங்களைத் தப்புவித்தார்,

2. இப்பொழுதும் தப்புவிக்கிறார்,

3. இன்னும் தப்புவிப்பார் என்று அவரை நம்பியிருக்கிறோம். 10-ஆம் வசனம்.

இ. மையச் செய்தி: சத்திய தேவன் தமது ஊழியர்களுக்கு நேரிடுகிற உபத்திரவங்களின் நேரங்களில் அதற்குத் தப்புவித்து பாதுகாக்கிறவராயிருக்கிறார்.

48. கலாத்தியர் முதலாம் அதிகாரம்

அ. மைய வார்த்தை : கிருபை (3முறை)
3, 6, 15-ஆம் வசனங்கள்.

ஆ. மைய வசனம் :1. நான் என் தாயின் வயிற்றிலிருந்ததுமுதல்,

2. என்னைப் பிரித்தெடுத்து,

3. தம்முடைய கிருபையினால் அழைத்த தேவன்.
15-ஆம் வசனம்.

இ. மையச் செய்தி: சத்திய தேவன் தமது கிருபையினால் ஊழியர்களை அழைத்தார்.

49. எபேசியர் முதலாம் அதிகாரம்

அ. மைய வார்த்தை : சுதந்தரமாகும்படி (3முறை) 12, 14, 18-ஆம் வசனங்கள்.

ஆ. மைய வசனம் :

1. தமது சித்தத்தின் ஆலோசனைக்குத்தக்கதாக எல்லாவற்றையும் நடப்பிக்கிற அவருடைய தீர்மானத்தின் படியே,
2. நாங்கள் முன்குறிக்கப்பட்டு,
3. கிறிஸ்துவுக்குள் அவருடைய சுதந்தரமாகும்படி தெரிந்து கொள்ளப்பட்டோம். 12-ஆம் வசனம்.

இ. மையச் செய்தி: சத்திய தேவன் நம்மை கிறிஸ்து இயேசுவின் மூலம் தமக்கு சுவிகாரபுத்திரராகும் படியான சுதந்தரத்தை அளித் துள்ளார்.

50. பிலிப்பியர் முதலாம் அதிகாரம்

அ. மைய வார்த்தை : அன்பு (3 முறை)
8, 9, 17-ஆம் வசனங்கள்.

ஆ. மைய வசனம் :1. இயேசு கிறிஸ்துவின் உருக்கமான அன்பிலே,

2. உங்களெல்லார் மேலும் எவ்வளவோ வாஞ்சையாய் இருக்கிறேன் என்பதற்கு,

3. தேவனே எனக்கு சாட்சி.
8-ஆம் வசனம்.

இ. மையச் செய்தி: சத்திய தேவன் தமது குமாரனைத் தந்து நம்மை அன்பு செய்தார். குமாரன் தம்முடைய ஜீவனைத் தந்து தமது அன்பினை வெளிப்படுத்தினார். இந்த அன்பின் அறிவிலே பெருக வேண்டும்.

51. கொலோசேயர் முதலாம் அதிகாரம்

அ. மைய வார்த்தை : இரகசியம் (3முறை) 25, 27, 27-ஆம் வசனங்கள்.

ஆ.மைய வசனம் :1. புற ஜாதிகளுக்குள்ளே விளங்கிய இந்த இரகசியத்திலுள்ள மகிமையின் ஐசுவரியம் இன்னதென்று,

2. தேவன் தம்முடைய பரிசுத்தவான்களுக்குத் தெரியப்படுத்தச் சித்தமானார்;

3. கிறிஸ்துவானவர் மகிமையின் நம்பிக்கையாக உங்களுக்குள் இருப்பதே அந்த இரகசியம். 27-ஆம் வசனம்.

இ. மையச் செய்தி: சத்திய தேவன் மறைத்து வைத்திருந்த இரகசியமாகிய தேவவசனத்தை தம்முடைய பரிசுத்தவான்களுக்கு வெளிப்படுத்தினார்.

52. 1 தெசலோனிக்கேயர் முதலாம் அதிகாரம்

அ. மைய வார்த்தை : வசனம் (3 முறை)
5, 6, 8–ஆம் வசனங்கள்.

ஆ. மைய வசனம் :

1. எப்படியெனில், உங்களிடத்திலிருந்து கர்த்தருடைய வசனம் மக்கதோனியாவிலும் அகாயாவிலும் தொனித்ததுமல்லாமல்,

2. நாங்கள் அதைக்குறித்து ஒன்றும்சொல்ல வேண்டியிராதபடிக்கு,

3. தேவனைப்பற்றின உங்கள் விசுவாசம் எங்கும் பிரசித்தமாயிற்று.
8–ஆம் வசனம்.

இ. மையச் செய்தி: சத்திய தேவனுடைய வசனம் தேவகுமாரனைக் குறித்த சுவிசேஷமாயிருக்கிறது. அது பரிசுத்தவான்களுடைய விசுவாசமாயிருக்கிறது.

53. 2 தெசலோனிக்கேயர்
முதலாம் அதிகாரம்

அ. மைய வார்த்தை : மகிமை (3 முறை)
9, 10, 11–ஆம் வசனங்கள்.

ஆ.மைய வசனம் :1. அவர்கள் கர்த்தருடைய சந்நிதானத்திலிருந்தும்,

2. அவருடைய வல்லமை பொருந்திய மகிமையிலிருந்தும் நீங்கலாகி,

3. நித்திய அழிவாகிய தண்டனையை அடைவார்கள்.
10–ஆம் வசனம்.

இ. மையச் செய்தி: சத்திய தேவனின் குமாரன் தமது இரண்டாம் வருகையில் பரிசுத்தவான்களில் மகிமைப் படத்தக்கவராய் வருகிறார்.

54. 1 தீமோத்தேயு முதலாம் அதிகாரம்

அ. மைய வார்த்தை : நல்மனசாட்சி (3 முறை) 5, 18, 19-ஆம் வசனங்கள்.

ஆ. மைய வசனம் :1. கற்பனையின் பொருள் என்னவெனில், சுத்தமான இருதயத்திலும்,

2. நல்மனசாட்சியிலும்,

3. மாயமற்ற விசுவாசத்திலும் பிறக்கும் அன்பே. 5-ஆம் வசனம்.

இ. மையச் செய்தி: சத்திய தேவனுடைய ஊழியக்காரன் அவரிடத்தில் விசுவாசமும் நல்மனசாட்சியும் உடையவனாயிருக்க வேண்டும்.

55. 2 தீமோத்தேயு முதலாம் அதிகாரம்

அ. மைய வார்த்தை : ஆவி (3முறை)
7, 7, 14-ஆம் வசனங்கள்.

ஆ. மைய வசனம் :1. தேவன் நமக்கு பயமுள்ள ஆவியைக் கொடாமல் பலமும்,

2. அன்பும்,

3. தெளிந்தபுத்தியுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார்.
7-ஆம் வசனம்.

இ. மையச் செய்தி: சத்திய தேவன் அருளும் வரத்தை ஆவியைக்கொண்டு அவருக்கு சாட்சியாயிருக்க வேண்டும்.

56. தீத்து முதலாம் அதிகாரம்

அ. மைய வார்த்தை : புத்தி (3 முறை)
8, 9, 15–ஆம் வசனங்கள்.

ஆ. மைய வசனம் :1. ஆரோக்கியமான உபதேசத்தினாலே புத்திசொல்லவும்,

2. எதிர்பேசுகிறவர்களைக் கண்டனம்பண்ணவும் வல்லவனாயிருக்கும்படி,

3. தான் போதிக்கப்பட்டதற்கேற்ற உண்மையான வசனத்தை நன்றாய்ப் பற்றிக் கொள்ளுகிறவனுமாயிருக்க வேண்டும்.
9–ஆம் வசனம்.

இ. மையச் செய்தி: சத்திய தேவன் தம்முடைய உபதேசமாகிய வார்த்தையைக் கொண்டு புத்தியைச்சொல்லுகிறார்.

57. பிலேமோன் முதலாம் அதிகாரம்

அ. மைய வார்த்தை : அன்பு (3 முறை)
4, 7, 9-ஆம் வசனங்கள்.

ஆ. மைய வசனம் :1. நீர் செய்யத்தக்கதை உமக்குக் கட்டளையிடும்படிக்கு கிறிஸ்துவுக்குள் நான் துணியத்தக்கவனாயிருந்தாலும்,

2. அப்படிச்செய்யாமல்,

3. அன்பினிமித்தம் மன்றாடுகிறேன்.
9-ஆம் வசனம்.

இ. மையச் செய்தி: சத்திய தேவன் அன்பாய் இருக்கிறார். அவருடைய ஊழியர் அன்பினிமித்தம் மன்றாடுகிறார்.

58. எபிரெயர் முதலாம் அதிகாரம்

அ. மைய வார்த்தை : சுதந்தரவாளி, சுதந்தரித்து (3 முறை) 2, 4, 14-ஆம் வசனங்கள்.

ஆ.மைய வசனம் :1. இந்த கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்குத் திருவுளம்பற்றினார்;

2. இவரைச் சர்வத்துக்கும் சுதந் தரவாளியாக நியமித்தார்.

3. இவரைக்கொண்டு உலகங் களையும் உண்டாக்கினார். 2-ஆம் வசனம்.

இ. மையச் செய்தி: சத்திய தேவன் தமது குமாரனை இந்த கடைசி நாட்களில் சுதந்தரவ்ாளியாக நியமித்து அவர் மூலம் இரட்சிப்பைச் சுதந்தரிப்பார்கள்.

59. யாக்கோபு முதலாம் அதிகாரம்

அ. மைய வார்த்தை : பொறுமை (3 முறை)
2, 4, 19-ஆம் வசனங்கள்.

ஆ. மைய வசனம் :1. ஆகையால், என் பிரியமான சகோதரரே, யாவரும் கேட்கிற தற்குத் தீவிரமாயும்,

2. பேசுகிறதற்குப் பொறுமையாயும்,

3. கோபிக்கிறதறகுத் தாமதமாயும் இருக்கக்கடவர்கள்.
19-ஆம் வசனம்.

இ. மையச் செய்தி: சத்திய தேவன் தம்முடைய பரிசுத்தவான்களை பொறுமையுள்ளவர்களாயிருக்க விரும்புகிறார்.

60. 1 பேதுரு முதலாம் அதிகாரம்

அ. மைய வார்த்தை : வசனம் (3 முறை) 23, 25, 25-ஆம் வசனங்கள்.

ஆ. மைய வசனம் : 1. அழிவுள்ள வித்தினாலே அல்ல,

2. என்றென்றைக்கும் நிற்கிறதும் ஜீவனுள்ளதுமான தேவ வசனமாகிய அழிவில்லாத வித்தினாலே,

3. மறுபடியும் ஜெநிப்பிக்கப் பட்டிருக்கிறீர்களே. 23-ஆம் வசனம்.

இ. மையச் செய்தி: சத்திய தேவனுடைய வசனம் சுவிசேஷமாய் அறிவிக்கப் பட்டு வருகிறது. அதனை விசுவாசிக்கிறவர்கள் நிலைத் திருப்பார்கள்.

61. 2 பேதுரு முதலாம் அதிகாரம்

அ. மைய வார்த்தை : அறிவு (3முறை)
2, 3, 8-ஆம் வசனங்கள்.

ஆ.மைய வசனம் :1. இவைகள் உங்களுக்கு உண்டாயிருந்து பெருகினால்,

2. உங்களை நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை அறிகிற அறிவிலே வீணரும்,

3. கனியற்றவர்களுமாயிருக்கவொட்டாது.
8-ஆம் வசனம்.

இ. மையச் செய்தி: சத்திய தேவனை அறிகிற அறிவினால் கிருபையும் சமாதானமும் பெருகும்.

62. 1 யோவான் முதலாம் அதிகாரம்

அ. மைய வார்த்தை : ஒளி (3முறை)
5, 7, 7-ஆம் வசனங்கள்.

ஆ.மைய வசனம் :1. அவர் ஒளியிலிருக்கிறதுபோல நாமும் ஒளியிலே நடந்தால் ஒருவரோடொருவர் ஐக்கியப் பட்டிருப்போம்,

2. அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி,

3. நம்மை சுத்திகரிக்கும்.
7-ஆம் வசனம்.

இ. மையச் செய்தி: சத்திய தேவன் ஒளியாயிருக்கிறார். நம்முடைய இருளைப் போக்கும் ஒளி அவரே. அவருடைய சத்தியத்தின்படி நடந்தால் நம்மை விட்டுபோய் நீங்கும்.

63. 2 யோவான் முதலாம் அதிகாரம்

அ. மைய வார்த்தை : உபதேசம் (3 முறை)
9, 9, 10–ஆம் வசனங்கள்.

ஆ. மைய வசனம் :1. ஒருவன் உங்களிடத்தில் வந்து உபதேசத்தைக் கொண்டு வராமலிருந்தால்,

2. அவனை உங்கள் வீட்டிலே ஏற்றுக்கொள்ளாமலும்,

3. அவனுக்கு வாழ்த்துதல் சொல்லாமலும் இருங்கள். 10–ஆம் வசனம்.

இ. மையச் செய்தி: சத்திய தேவனாகிய கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திருக்க வேண்டும். அப்பொழுது பிதாவையும், குமாரனையும் உடையவர்களாக இருப்போம்.

64. 3 யோவான் முதலாம் அதிகாரம்

அ. மைய வார்த்தை : சந்தோஷம் (3 முறை) 3, 4, 4-ஆம் வசனங்கள்.

ஆ. மைய வசனம் :

1. சகோதரர் வந்து நீ சத்தியத்தில் நடந்து கொள்கிறாய் என்று,
2. உன்னுடைய உண்மையைக் குறித்துச் சாட்சி கொடுத்த போது,
3. மிகவும் சந்தோஷப்பட்டேன். 3-ஆம் வசனம்.

இ. மையச் செய்தி: சத்திய தேவனுடைய பிள்ளைகள் அவருடைய சத்திய வசனத்தின்படி நடக்கிறதை கேட்கிற பொழுது தேவ ஊழியர்களுக்கு அதிக சந்தோஷமுண்டாகிறது.

65. யூதா முதலாம் அதிகாரம்

அ. மைய வார்த்தை : இரக்கம் (3முறை) 2, 21, 22-ஆம் வசனாங்கள்.

ஆ. மைய வசனம் :1. உங்களுக்கு இரக்கமும்,

2. சமாதானமும்,

3. அன்பும் பெருகக்கடவது. 2-ஆம் வசனம்.

இ. மையச் செய்தி: சத்தியதேவன் இரக்கமுள்ளவர். நித்திய அழிவுக்கு நம்மைத் தப்புவிக்க குமாரனாகிய கிறிஸ்துவினாலே இரக்கம் பாராட்டுகிறார். அவ்விரக்கத்தினாலே நித்திய ஜீவன் உண்டாகும்.

66. வெளிப்படுத்தின விசேஷம் முதலாம் அதிகாரம்

அ. மைய வார்த்தை : வசனம், தேவ வசனம் (3முறை)
2, 3, 9–ஆம் வசனங்கள்.

ஆ. மைய வசனம் :1. இந்த தீர்க்கதரிசன வசனங்களை வாசிக்கிறவனும்,

2. கேட்கிறவர்களும்,

3. இதில் எழுதியிருக்கிறவைகளை கைக்கொள்ளுகிறவர்களும் பாக்கியவான்கள், காலம் சமீபமாயிருக்கிறது. 3–ஆம் வசனம்.

இ. மையச் செய்தி: சத்திய தேவனுடைய வசனத்தினிமித்தம் யோவான் பத்மு தீவில் இருந்தான். அங்கே பெற்றுக்கொண்ட தேவ வசனத்தைக் குறித்து சாட்சியாக அறிவிக்க அதனை எழுதியுள்ளான்.

IV. புத்தக ஆராய்ச்சி

1. ஆதியாகமம்

அ. மைய வார்த்தை : ஆசீர்வாதம்

ஆ. மைய வசனம் :i. உயர வானத்திலிருந்து உண்டாகும் ஆசீர்வாதங்களினாலும்,

ii. கீழே ஆழத்தில் (சமுத்திரம்) உண்டாகும் ஆசீர்வாதங்களினாலும்,

iii. ஸ்தனங்களுக்கும் கர்ப்பங்களுக்கும் உரிய (பூமி) ஆசீர்வாதங்களினாலும் உன்னை ஆசீர்வதிப்பார்.
ஆதி 49:25-ஆம் வசனம்.

இ. மைய கருத்து :

ஆதியாகம புத்தகத்தில் ஆசீர்வாதம் என்கிற வார்த்தையே அதிகமாக வந்திருக்கின்ற மைய வார்த்தையாயிருக்கிறது. தேவன் உண்டாக்கின முதல் மனிதனிலிருந்து கடைசி அதிகாரத்தில் வருகிற யோசேப்பு வரையிலும் இந்த வார்த்தை வருகிறது.தேவன் ஆசீர்வாதத்தை வானத்திலிருந்தும் கீழே

ஆழமாகிய சமுத்திரதிலிருந்தும், பூமியில்வாழும்மனிதனுடைய சரீரசம்பந்தமான ஆசீர்வாதங் களையும் மையப்படுத்தி இப்புத்தகத்தில் அவர் வெளிப்படுத்துகின்றார். ஆதியாகமம் வேதத்தின் முதல் புத்தகம் என்பதைவிட ஆசீர்வாதத்தின் முதல் முக்கிய புத்தகம் என்பது எவ்வளவு சிறப்பாக இருக்கின்றது.

2. சங்கீதம்

அ. மைய வார்த்தை : துதி

ஆ. மைய வசனம் : i. பணிந்து,

ii. துதித்து,

iii. மகிமைப்படுத்தி,
சங் 138:2-ஆம் வசனம்.

இ. மைய கருத்து :

சங்கீத பத்தகத்தில் முதலாம் சங்கீதம் முதல் கடைசி சங்கீதம் வரை அதிகப்படியாகவருகின்ற மைய வார்த்தை துதியாகும். அந்த துதியோடு அதிகபடியான கருத்துக்களைப் பேசுகின்ற வசனம் சங் 138:2 ஆகும். இந்த புத்தகம்; ஆராதனையின் புத்தகமாகும். நாம் தெய்வத்தை பணிந்து தொழுதுகொள்ளவும், அவருடைய நாமத்தைத் துதித்து போற்றவும், அவருக்கு நன்றி செலுத்தி மகிமைப்படுத்த வேண்டும் என்பதை சங்கீத புத்தகம் நமக்கு போதிக்கின்றது.

3. வெளிப்படுத்தின விசேஷம்

அ. மைய வார்த்தை : சிங்காசனம்

ஆ. மைய வசனம் : i. ஏழு கொம்புகள்,

ii. ஏழு கண்கள்,

iii. ஏழு ஆவிகள்.
வெளி 5:6–ஆம் வசனம்.

இ. மைய கருத்து :

வெளிப்படுத்தின விசேஷத்தின் முதலாம் அதிகார முதல் கடைசி அதிகாரம் வரை அதிகப்படியாக வருகின்ற மைய வார்த்தை சிங்காசனமாகும். வெளிப்படுத்தின விசேஷம் பரலோக சம்பந்தப்பட்ட காரியங்கள் அதிகப்படியாக வருகிறபடியால் தேவனின் சிங்காசனம் இந்த புத்தகத்தில் அதிக முக்கியப்படுத்தப்படுகிறது. ஏழு கொம்புகளாகிய ஏழு கண்கள் பூமியெங்கும் அனுப்பப்படுகிற ஏழு ஆவிகளாகிய ஏழு அக்கினி தீபங்களைக் குறிக்கிறது. ஏழு அக்கினி தீபங்களும் பரலோக சபையில் எப்பொழுதும் எரிந்துகொண்டிருக்கிறது. சபையாகிய நாமும் எப்பொழுதும் எரிந்துகொண்டிருக்கிற அக்கினி தீபங்களாக ஏற்றப்பட்டு நித்தியத்தில் அவருடைய

சிங்காசனத்தின் ஆளுகையில் பிரகாசமுள்ளவர்களாக வேண்டுமென்றே இந்த புத்தகம் நமக்குப் போதிக்கிறது.

புத்தக ஆராய்ச்சியினை மூன்று பிரிவுகளாகச் செய்து அந்த புத்தகத்தின் இரகசியங்களை நம்மால் விளங்கிக் கொள்ள முடியும். ஒவ்வொரு புத்தகத்திலும் அதிகமாக வருகின்ற வார்த்தையினை மையவார்த்தையாகவும், அதனோடு சம்மந்தப்பட்ட அதிக பொருளை வெளிப்படுத்தும் ஒரு வசனத்தை மைய வசனமாகவும் கண்டறிந்து, மையக்கருத்தினை விளங்கிக் கொள்ள வேண்டும்.

V. குணபாத்திர ஆராய்ச்சி

1. ஆபிரகாம்

பின்பு ஆபிரகாம் தன் குமாரனை வெட்டும்படிக்குத் *தன் கையை நீட்டி* கத்தியை எடுத்தான்.

அப்பொழுது கர்த்தருடைய தூதனானவர் வானத்திலிருந்து, ஆபிரகாமே என்று கூப்பிட்டார்; அவன் *இதோ, அடியேன் என்றான்.*

அப்பொழுது அவர்: பிள்ளையாண்டான் மேல் உன் கையைப்போடாதே, அவனுக்கு ஒன்றும் செய்யாதே, நீ அவனை உன் புத்திரன் என்றும், உன் ஏக சுதன் என்றும் பாராமல் எனக்காக ஒப்புக்கொடுத்தபடியினால் *நீ தேவனுக்கு பயப்படுகிறவன்* என்று இப்பொழுது அறிந்திருக்கிறேன். என்றார். (ஆதி 22:10-11)

அ. ஆபிரகாமின் ஆத்துமா : தேவனுக்கு பயப்படுகிறவன்.

ஆ. ஆபிரகாமின் ஆவி : இதோ, அடியேன் என்றான்.

இ. ஆபிரகாமின் சரீரம் : கையை நீட்டி கத்தியை எடுத்தான்.

2. தாவீது

தாவீது சவுலின் சால்வைத் தொங்கலை அறுத்துக்கொண்டதினிமித்தம் அவன் ***மனது அடித்துக் கொண்டிருந்தது.***

அவன் தன் மனுஷரைப்பார்த்து: கர்த்தர் அபிஷேகம்பண்ணின என் ஆண்டவன் மேல் ***என் கையைப் போடும்படியான*** இப்படிப்பட்ட காரியத்தை ***நான் செய்யாதபடிக்கு,*** கர்த்தர் என்னைக் காப்பாராக. அவர் கர்த்தரால் அபிஷேகம்பண்ணப்பட்டவர் என்று சொல்லி,

தன் மனுஷரை சவுலின் மேல் எழும்ப ஒட்டாமல் ***இவ்வார்த்தைகளினால்*** அவர்களைத் ***தடைபண்ணி னான்;*** சவுல் எழுந்திருந்து, கெபியைவிட்டு, வழியே நடந்துபோனான். (1 சாமு 24:5-7)

அ. தாவீதின் ஆத்துமா	:	மனது அடித்துக்கொண் டிருந்தது.
ஆ. தாவீதின் ஆவி	:	சொல்லி, இவ்வார்த்தை களினால்,
இ. தாவீதின் சரீரம்	:	என் கையைப் போடும் படியான, நான் செய்யாத படிக்கு,

3. பவுல்

பவுலாகிய நான் இதை என் *சொந்தக்கையாலே எழுதினேன்.* நான் அதை செலுத்தித் தீர்ப்பேன். நீர் உம்மைத் தாமே எனக்கு கடனாக செலுத்த வேண்டுமென்று நான் உமக்கு *சொல்ல வேண்டுவதில்லையே,*

ஆம். சகோதரனே, கர்த்தருக்குள் உம்மாலே எனக்கு பிரயோஜனமுண்டாகட்டும்; கர்த்தருக்குள் என் *உள்ளத்தை இளைப்பாறப்பண்ணும்.* (பிலே 19,20)

அ. பவுலின் ஆத்துமா : என் உள்ளத்தை இளைப்பாறப்பண்ணும்.

ஆ. பவுலின் ஆவி : நான் உமக்கு சொல்ல வேண்டுவதில்லையே.

இ. பவுலின் சரீரம் : என் சொந்த கையாலே எழுதினேன்.

குணப்பாத்திர ஆராய்ச்சியினை மூன்று பிரிவுகளில் செய்ய வேண்டும். ஆத்துமா சம்மந்தப்பட்ட எண்ணங்களையும், ஆவி சம்மந்தப்பட்ட வார்த்தைகளையும், சரீரம் சம்மந்தப்பட்ட கிரியைகளையும் தனித்தனியே பகுத்துப் பிரித்து: குணப்பாத்திர ஆராய்ச்சியினைச் செய்ய வேண்டும்.

VI. குறியீட்டு வார்த்தை ஆராய்ச்சி

முதலாம் குறியீட்டு வார்த்தை – காவல்

அந்த ஆவியிலே அவர் போய்க் ***காவலிலுள்ள*** ஆவிகளுக்குப் பிரசங்கித்தார். (பேதுரு 3:19)

பிசாசென்னும் சாத்தானென்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய வலுசர்ப்பத்தை அவன் பிடித்து, அதை ஆயிரம் வருஷமளவும் நிறைவேறும் வரைக்கும் அது ஜனங்களை மோசம்போக்காதபடிக்கு அதைப் ***பாதாளத்திலே தள்ளியடைத்து*** அதின்மேல் முத்திரைபோட்டான். (வெளி 20:2)

அந்த ஆயிரம் வருஷம் முடியும் போது சாத்தான் தன் ***காவலிலிருந்து*** விடுதலையாகி, (வெளி 20:7)

அ. மைய குறியீட்டு வார்த்தை: காவல்

ஆ. மைய குறியீட்டு வார்த்தையின் பொருள் : சிறைவைக்க பயன் படுத்தும் இடம்.

இ. மைய குறியீட்டு வார்த்தையின் விளக்கம் :இயேசு மரித்த பின்பு அவர் போய் பிரசங்கித்த காவல் என்பதுபாதாளத்தை குறிக்கிறது. பிசாசானவன் பாதாளத்தில் தள்ளியடைக்கப்பட்டு ஆயிரம் வருஷம்முடிந்த பின்பு அந்த காவலிலிருந்து விடுதலை யானான்.

இரண்டாம் குறியீட்டு வார்ததை – அம்புகள்

சர்வ வல்லவரின் ***அம்புகள்*** எனக்குள் தைத்திருக்கிறது; அவைகளின் விஷம் என் உயிரைக் குடிக்கிறது; தேவனால் உண்டாகும் பயங்கரங்கள் எனக்கு முன்பாக அணியணியாய் நிற்கிறது. (யோபு 6:4)

அவனுக்கு மரணாயுதங்களை ஆயத்தம்பண்ணினார்; தம்முடைய ***அக்கினி அம்புகளாக்கினார்.*** (சங் 7:13)

என் ***வார்த்தை அக்கினியைப் போலும்,*** கன்மலையை நொறுக்கும் சம்மட்டியைப் போலும் இருக்கிறதல்லவோ? என்று கர்த்தர் சொல்லுகிறார். (எரே 23:29)

அ. மைய குறியீட்டு வார்த்தை : அம்புகள்

ஆ. மைய குறியீட்டு வார்த்தையின் பொருள் : யுத்தத்தில் எதிரியை வீழ்த்த உபயோகப் படுத்தும் மரணாயு தங்கள்.

இ. மைய குறியீட்டு வார்த்தையின் விளக்கம் : சர்வவல்லவர் தமது வாயின் வார்த்தை யாகிய அக்கினியை மரண ஆயுதத்தின் அம்புகளாக உபயோகப்படுத்தி யுத்தம் செய்கிறார்.

மூன்றாம் குறியீட்டு வார்தைத - கொம்புகள்

துன்மார்க்கருடையகொம்புகளையெல்லாம் வெட்டிப் போடுவேன்; நீதிமானுடைய ***கொம்புகளோ*** உயர்த்தப்படும். (சங் 75:10)

நீ கண்ட பத்துக் கொம்புகளும் ***பத்து ராஜாக்களாம்;*** இவர்கள் இன்னும் ராஜ்யம் பெறவில்லை இவர்கள் மிருகத்துடனே கூட ஒரு மணி நேரமளவும் ராஜாக்கள் போல அதிகாரம் பெற்றுக் கொள்ளுகிறார்கள். (வெளி 17:12)

அ. மைய குறியீட்டு வார்த்தை: கொம்புகள்

ஆ.	மைய குறியீட்டு வார்த்தையின் பொருள்	:	கொம்புகள்உயர்வைக் குறிக்கிறது.
இ.	மைய குறியீட்டு வார்த்தையின் விளக்கம்	:	கொம்புகள் என்பது உயர்ந்த ஸ்தானத்தைக்குறிக்கின்றது. உயர்ந்த ஸ்தானம் ஆளுகையைக் குறிக்கிறது. ஆளுகை செய்கிற கொம்புகள் ராஜாக்கள்.

குறியீட்டு வார்த்தையின் ஆராய்ச்சியினை மூன்று பிரிவுகளாகச் செய்ய வேண்டும். குறியீட்டு வார்த்தை என்பது வழக்கமான வார்த்தைகளாக பொருள்படாமல் வேறு ஒன்றை அடையாளப்படுத்துகிறதாக வரும். இப்படிப்பட்ட வார்த்தையின் பொருளை அறிய வேண்டும். அந்த வார்த்தையின் பொருளுக்குரிய விளக்கத்தை அறிந்து கொள்ள வேண்டும்.

VII. எண்கள் ஆராய்ச்சி

1. மூன்றும் ஏழும்

அ. எண் மூன்று : i. ஓய்ந்திருந்தார்.
ii. ஆசீர்வதித்தார்.
iii. பரிசுத்தமாக்கினார்.
ஆதி 2:2,3

ஆ. எண் ஏழு : i. ஏழாம் நாளிலே
ii. ஏழாம் நாளிலே
iii. ஏழாம் நாளை
ஆதி 2:2,3

இ. மூன்றும் ஏழும் விளக்கம் : தேவன் உலகங்களையும் அதிலுள்ள அனைத்தையும சிருஷ்டித்து முடித்த ஏழாம் நாளிலே ஓய்ந்திருந்து. ஆசீர்வதித்து அதனை பரிசுத்தமாக்கினார். ஏழாம் நாளில் மூன்று காரியங் களைச் செய்தார். மூன்று தேவனுடைய பரிபூரண எண். ஏழு அவருடைய வார்த்தை பரிபூரண எண்.

2. மூன்றும் ஏழும்

அ. எண் மூன்று :

i. கிண்ணம்

ii. அகல்கள்

iii. குழாய்கள் சக 4:2

ஆ. எண் ஏழு :

i. ஏழு அகல்கள்

ii. ஏழு குழாய்கள் சக 4:2

இ. மூன்றும் ஏழும் விளக்கம் : தேவன் குத்துவளக்கிலே கிண்ணம், அகல்கள், குழாய்கள் என மூன்று பகுதிகளையும் அவைகள் ஏழாக பெருகி அமைக்கவும் செய்தார். மூன்று தேவனுடைய பரிபூரண எண். ஏழு அவருடைய வார்த்தையின் பரிபூரண எண்.

3. மூன்றும் ஏழும்

அ. எண் மூன்று : i. வாதை
ii. கலசங்கள்
iii. தூதர்கள் வெளி 21:9

ஆ. எண் ஏழு : i. ஏழு வாதைகள்
ii. ஏழு கலசங்கள்
iii. ஏழு தூதர்கள் வெளி 21:9

இ. மூன்றும் ஏழும் விளக்கம் : கடைசியான ஏழு வாதைகளால் நிறைந்த ஏழு கலசங்களுடைய அந்த ஏழு தூதரில் ஒருவன் ஆட்டுக்குட்டியானவருடைய மணவாட்டியை யோவானுக்கு காண்பித்தான். மூன்று தேவனுடைய பரிபூரண எண். ஏழு தேவனுடைய வார்த்தையின் பரிபூரண எண்.

சத்தியம் பல்கலைக்கழகத்தின் விளக்கம்

O^3 வார்த்தையில் சத்தியத்தின் மூன்று சாட்சிகளின் வழியாக ஆராய்ச்சியை மையமாகக் கொண்டு இயங்குவதே சத்தியம் பல்கலைக்கழகம்.

* வெளிப்பாடு
* சீர்திருத்தம்
* மறுமலர்ச்சி

சத்தியம் பல்கலைக்கழகம் O^3 வார்த்தையின் சத்தியத்தை வெளிப்பாடுகளுடன் போதிக்கிறது. அதன் விளைவு சீர்திருத்தம் ஏற்படுகின்றது. எனவே பலனாக மறுமலர்ச்சி உண்டாகிறது.

சத்தியமாவது என்ன?
(யோவா 18:37; எரே 5:1)

* பிதாவாகிய தேவன் சத்தியம் - ஏசா 65:16
* குமாரனாகிய தேவன் (இயேசு) சத்தியம் - யோவா 14:6
* பரிசுத்த ஆவியானவராகிய தேவன் சத்தியம் - யோவா 16:13
* O^3 வார்த்தையின் எழுத்துக்கள் சத்தியம் - தானி 10:12
* O^3யின் வார்த்தைகள் சத்தியம் - IIசாமு 7:28
* O^3 வார்த்தையின் வசனங்கள் முழுவதும் சத்தியம் - சங் 119:160,142
* O^3 வார்த்தையாகிய தேவனே சத்தியம் - யோவா 1:1

பிதாவாகிய தேவனும், குமாரனாகிய தேவனும், பரிசுத்த ஆவியானவராகிய தேவனுமாகிய மூன்று சாட்சிகளுடைய ஒரே தேவனே சத்தியமாகும். சத்திய தேவனுடைய எழுத்துக்களும், எழுத்துக்கள் சேர்ந்த வார்த்தைகளும், வார்த்தைகள் இணைந்த வசனங்களும், மொத்தத்திலே O^3 வார்த்தையே சத்தியமாகும். பூரணமாக, தெளிவாக விளங்கிக்கொள்ள வார்த்தையாகிய தேவனே சத்தியமாகும்.

சத்தியத்தின் இரகசியம்
(கொலோ 1:25-27; எஸ்றா 7:10)

* ஆத்துமாவில் O^3 வார்த்தை - சங் 37:31
* ஆவியில் O^3 வார்த்தை - மல் 2:6
* சரீரத்தில் O^3 வார்த்தை - சங் 149:8
* O^3 வார்த்தையை (தேட, ஆராயவும், தியானம்பண்ண)
* அதின்படி செய்யவும்
* உபதேசிக்கவும்
* இருதயத்தைப் பக்குவப்படுத்துதல்

சத்திய தேவனுடைய சித்தம், திட்டம், நோக்கத்தின் இரகசியமானது O^3வார்த்தையின் வழியே பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவராகிய தேவன் நமக்குள் வந்து வாசம்பண்ண வேண்டும். எனவே, O^3 வார்த்தையின் சத்தியத்தை ஆத்துமா, ஆவி, சரீரத்தில் நிரப்புவதற்கு அதனை ஆராயவும், ஆராய்ந்து அறிந்து கொண்ட சத்தியத்தின்படி சாட்சியாக வாழவும், கைக்கொண்ட சத்தியத்தை உபதேசிக்கவும், இருதயத்தைப் பக்குவப் படுத்துகின்ற தேவ நோக்கத்தினையே ஆராய்ச்சிப் பயிற்சிகளின் வழியே சத்திய போதனையாக பயிற்றுவிக்கப்படுகின்றது.

சத்தியவான்கள் உருவாக்கப்படுவதன் காரணம்
(2 தீமோ 4:4; 2 பேது 2:1-3)

* சத்தியத்திலே நடக்கிறவர்கள் - (III யோவா 4)
* சத்தியத்தினாலே நற்சாட்சி பெற்றவர்கள் - (III யோவா 12)
* சத்தியத்திற்கு உடன் வேலையாட்கள் - (III யோவா 8)

சத்தியத்தை விட்டு விலகி கள்ள உபதேசங்களுக்குச் செவி சாய்ந்து போகுங்காலம் வருமென்று சத்தியம் எச்சரிக்கின்றது. ஆகவே இதனை உணர்ந்து O³ வார்த்தையின் சத்திய போதனையைப் பெற்று அதன் மூலம் சத்தியத்தின்படி நடக்கிறவர் களாகவும், அந்த சத்தியத்தினாலே நற்சாட்சி பெற்றவர்களாக வாழவும், அந்த சத்தியத்திற்கு உடன் வேலையாட்களாகவும் உருவாக்கப் படுவதே சத்தியவான்களைக் குறித்த காரணமாகும்.

சத்தியத்தினாலே இவ்விதமாய் உருவாக்கப்படுகின்றோம்

* சத்திய வீடு - 1தீமோ 3:15
* சத்திய நகரம் - ஏசா 1:26
* சத்திய தேசம் - எரே 5:1

மேற்கண்டபடி நாம் உருவாக்கப்பட வீடுகளிலும், நகரங்களிலும், தேசங்களிலும் சத்திய ஆராய்ச்சி மையங்களை நிறுவ வேண்டும். இந்தப் பகுதிகளில் சத்திய போதனை

வழங்கப்பட்டு, சத்திய ஆராய்ச்சிகள் பயிற்சியளிக்கப்படும். அதன் விளைவாக சத்தியத்தைக் கைக்கொண்டு வருகிற நீதியுள்ள ஜாதி இருக்கின்ற சத்திய வீடு, சத்திய நகரம், சத்திய தேசம் உருவாக்கப்படும்.

சத்தியம் பல்கலைக்கழகத்தின் தரிசனம் மனிதனுடைய வாழ்வில் எழுப்புதல்

* தனிப்பட்ட வாழக்கை - சந்தோஷம்
* குடும்ப வாழ்க்கை - சமாதானம்
* பொது வாழக்கை - நீதி / நியாயம்

சத்தியத்தைக் கைக்கொள்வதன் மூலம் ஒரு மனிதனுடைய தனிப்பட்ட வாழ்க்கையில் சந்தோஷத்தையடைவதும், அவனுடைய குடும்ப வாழ்க்கையில் சமாதானத்தைப் பெற்றுக் கொள்வதும், பொது வேலை வாழ்க்கையில் நீதி, நியாயங்களை நிறைவேற்றி நடக்கவும் வேண்டிய எழுப்புதலை, உயிர்ப்பித்தலை ஏற்படுத்துவதுமே சத்தியம் பல்கலைக்கழகத்தின் தரிசனமாகும்.

சந்திக்கப்படாதவர்களைச் சந்திப்பது

* புறஜாதிகள்
* இஸ்ரவேலர்கள்
* பாரம்பரிய கிறிஸ்தவர்கள்

சத்திய தேவனை அறியாத புறஜாதியாரையும், வார்த்தையை (இயேசுவை) விசுவாசியாத இஸ்ரவேலரையும், சத்திய போதனையை அறியாத (பாரம்பரிய, மனுஷ கற்பனைகளைப் பின்பற்றுகிற) கிறிஸ்தவ சபைகளையும் சத்தியத்தின் வழியாக சந்திப்பதே சந்திக்கப்படாதவர்களைச் சந்திப்பதாகும்.

[illegible] இரண்டாம் வருகைக்கு ஆயத்தப் [illegible] [illegible] [illegible] [illegible] (வெளி [illegible]) [illegible] [illegible] [illegible] [illegible] (வெளி [illegible])

[illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] இரண்டாம் வருகைக்கு, ஆயத்தப்படுத்திய சத்தியம் பல்கலைக் கழகத்தின் நோக்கமாகும்.

சத்தியம் பல்கலைக்கழகத்தின் திட்டம் உலகம் சந்திக்கப்படுதல்

* வார்த்தை (வழி)
* சத்தியம்
* ஜீவன்

உலகத்தை தேவன் தமது வார்த்தை, சத்தியம், ஜீவன் ஆகியவைகளின் மூலம் சந்திக்க இவைதனை உலகமெங்கிலும் கொண்டுசெல்வது முக்கியமான அம்சமாகும்.

ஆராய்ச்சி மையங்களை உருவாக்குதல்

* திறந்தவெளி கல்வி மையம்
* தபால் வழிக் கல்வி, மின் அஞ்சல் வழி கல்வி (மையம்)
* உறைவிடக் கல்வி மையம்

சத்தியம் பல்கலைக்கழகத்தின் பயிற்சிகள் பொது இடங்களில் திறந்தவெளிக் கல்வி வழியாகவும், தங்களது வீடுகளிலிருந்து படிப்பதற்கு வசதியாக தபால் வழி, மின்அஞ்சல் வழியாகவும், தலைமையிடம் சென்று தங்கி படிப்பதற்கு வசதியாக உறைவிடக் கல்வி முறையும் உருவாக்கப்படுவது இந்த ஆராய்ச்சி மையங்களின் வழி முறையாகும்.

சத்திய தலைவர்கள் அனுப்பப்டுதல்

* சத்தியவான்கள்
* சத்திய தலைவர்கள்
* சத்திய தீர்க்கர்கள்

சத்தியம் பல்கலைக் கழகத்தின் போதனை, பயிற்சி ஆகியவைகளைப் பெற்று உருவாக்கப்படுகின்ற சத்தியவான்கள், சத்திய தலைவர்கள், சத்திய தீர்க்கர்கள் சத்திய தேவனை அறிவிக்க உலகமெங்கிலும் அனுப்பப்படுவதே சத்தியம் பல்கலைக்கழகத்தின் திட்டமாகும்.

சத்தியம் பல்கலைக்கழகத்தின் செயல்பாடுகள்

சத்திய ஆராய்ச்சிப் படிப்புகள்

இளநிலைப் பட்டப்படிப்பு - இரண்டு வருடம்
மேல் நிலைப் பட்டப்படிப்பு - இரண்டு வருடம்
பண்டிதர் பட்டப்படிப்பு - மூன்று வருடம்

சத்தியம் பல்கலைக் கழகம் நடத்தி வருகின்ற ஆராய்ச்சிப் படிப்புகளின் வரிசைகளில் முதலாவது இளநிலைப் படிப்பு இரண்டு வருட காலக்கட்டமாகவும், இரண்டாவது மேல்நிலைப் படிப்பு இரண்டு வருட கால்கட்டமாகவும், மூன்றாவது பண்டிதர் படிப்பு மூன்று வருடகால் கட்டமாகவும் நடத்தப்பட்டு வருகின்றது..

சத்திய ஆராய்ச்சியில் இரகசியங்கள்

* சத்திய இயேசுவின் - 270 இரகசியங்கள்
* சத்திய ஆவியானவரின் - 270 இரகசியங்கள்
* சத்திய பிதாவின் - 360 இரகசியங்கள்

சத்தியம் பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சிப் படிப்பில் இயேசு கிறிஸ்துவைக் குறித்த 270 இரகசியங்கள் ஏறக்குறைய 900 வசன ஆதாரங்களுடனும், ஆவியானவரைக் குறித்த 270 இரகசியங்கள் ஏறக்குறைய 900 வசன ஆதாரங்களுடனும், பிதாவாகிய தேவனைக் குறித்த 360 இரகசியங்கள் 1200 வசன ஆதாரங்களுடனும் முறையே போதிக்கப் படுகின்றன.

சத்திய ஆராய்ச்சிப் பயிற்சிகள்

* அடிப்படை ஆராய்ச்சிகள்
* உயர்நிலை ஆராய்ச்சிகள்
* பண்டிதர் ஆராய்ச்சிகள்

1. வார்த்தை ஆராய்ச்சி
2. வசன ஆராயச்சி
3. அதிகார ஆராய்ச்சி
4. புத்தக ஆராய்ச்சி

5. குணப்பாத்திர ஆராய்ச்சி
6. பொருள் ஆராய்ச்சி
7. உபதேச ஆராய்ச்சி
8. குறியீட்டு ஆராய்ச்சி
9. புதிர் ஆராய்ச்சி
10. சிருஷ்டிப்பின் ஆராய்ச்சி
11. காத்தல் ஆராய்ச்சி
12. அழித்தல் ஆராய்ச்சி

சத்தியம் பல்கலைக்கழகத்தில் பல்வேறு துறை சார்ந்த ஆராய்ச்சிப் படிப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன. அந்தந்த படிப்புகளுக்கேற்ப ஆராய்ச்சிகள் பகுத்துப் பிரிக்கப்பட்டு முதல் நிலையாக அடிப்படை ஆராய்ச்சிப் பயிற்சிகளும், இரண்டாம் நிலையாக உயர்நிலை ஆராய்ச்சிப் பயிற்சிகளும், மூன்றாம் நிலையாக பண்டிதர் ஆராய்ச்சிப் பயிற்சிகளுமாக வகையறுக்கப்பட்டுள்ளன. இந்த ஆராய்ச்சிகளுக்காக துறை சார்ந்த படிப்புகள் வாரியாக மொத்தம் பன்னிரண்டு விதமான ஆராய்ச்சிப் பயிற்சிகள் கொடுக்கப்பட்டுவருகின்றன.

சத்தியம் பல்கலைக்கழகம் வழங்கும் பல்வேறு துறைகள்

O^3 வார்த்தையில் தெய்வீகம் - சீஷத்துவ ஆராய்ச்சிப் படிப்புகள்

* O^3 B.Th- இயேசு கிறிஸ்து - 2 வருடம்
* O^3 M.Th - பரிசுத்த ஆவியானவர் - 2 வருடம்
* O^3 D.Th - பிதாவாகிய தேவன் - 3 வருடம்

O^3 வார்த்தையில் தெய்வீகம் - ஊழியத்திற்கான ஆராய்ச்சிப் படிப்புகள்

* O^3 B.Min - இயேசுவின் ஊழியம் - 2 வருடம்
* O^3 M.Min - பரிசுத்த ஆவியானவரின் ஊழியம் 2 வருடம்
* O^3 D.Min - பிதாவாகிய தேவனின் ஊழியம் 3 வருடம்

O^3 வார்த்தையில் கலையியல் - போதனைக்கான ஆராய்ச்சிப் படிப்புகள்

* O^3 B.Ed - இயேசுவின் போதனை - 2 வருடம்
* O^3 M.Ed - பரிசுத்த ஆவியானவரின் போதனை 2 வருடம்
* O^3 D.Ed - பிதாவாகிய தேவனின் போதனை 3 வருடம்

O^3 வார்த்தையில் பண்டிதர்களுக்கான பல்வேறு துறைச் சார்ந்த ஆராய்ச்சிப் படிப்புகள்

1. O^3 வார்த்தையில் வானவியல்
   O^3 B.Astro; O^3 M.Astro; O^3 D.Astro

2. O^3 வார்த்தையில் பூமியியல்
   O^3 B.Geo; O^3 M.Geo; O^3 D.Geo

3. O^3 வார்த்தையில் சமுத்திரவியல்
   O^3 B.Ocean; O^3 M.Ocean; O^3 D.Ocean

4. **O^3 வார்த்தையில் சட்டவியல்**
O^3 B.Law; O^3 M.Law; O^3 D.Law

5. **O^3 வார்த்தையில் மருத்துவ இயல்**
O^3 B.Medi; O^3 M.Medi; O^3 D.Medi

6. **O^3 வார்த்தையில் பொறியியல்**
O^3 B.Eng; O^3 M.Eng; O^3 D.Eng

7. **O^3 வார்த்தையில் தொழில்நுட்பவியல்**
O^3 B.Tech; O^3 M.Tech; O^3 D.Tech

8. **O^3 வார்த்தையில் கலையியல்**
O^3 B.A.; O^3 M.A.; O^3 D.A.

9. **O^3 வார்த்தையில் அறிவியல்**
O^3 B.Sc.; O^3 M.Sc..;O^3 D.Sc.

10. **O^3 வார்த்தையில் வியாபாரவியல்**
O^3 B.B.A.; O^3 M.B.A.; O^3 D.B.A.

11. **O^3 வார்த்தையில் அரசாங்கவியல்**
O^3 B.Poli.; O^3 M.Poli.; O^3 D.Poli.

சத்தியம் பல்கலைக்கழகத்தின் O^3 வார்த்தையின் தெய்வீகத்தின் மூலம் சீஷத்துவ பயிற்சியையும், ஊழியங்களுக்கான தகுதியையடைவதும் நிச்சயம்., O^3 வாத்தையில் கலையியலின் வழியாக போதகருக்கான நிலையை அடைவதும் திண்ணம். இதர

துறைகளிலும் இளநிலைப்படிப்பு இரண்டு வருடமும், மேல்நிலைப் படிப்பு இரண்டு வருடமும், பண்டிதர் படிப்பு மூன்று வருடமும் ஆராய்ச்சிப் படிப்புகளாக நடத்தப்பட்டு வருகின்றன. ஆராய்ச்சிப் படிப்புகள் வழியாக படிப்பதன் மூலம் உலகங்களும், அதிலுள்ள அனைத்தும் சத்திய தேவனுடைய வார்த்தையினாலே உருவாக்கப்பட்டு, இயங்குவதையும் முடிவிலே வார்த்தையினாலே அழிந்துபோகும் நாள் வரைக்கும் காக்கப்பட்டு வருவதையும் அறிந்து கொண்டு அதனை உலகக் கல்விமான்களுக்கு நிரூபிக்க இயலும்.

O^3 வார்த்தை ஊழியத்தின் விளக்கம்

* சுவாசித்தல்
* மறுபடியும் உயிர்ப்பித்தல்
* புதுப்பித்தல்

O^3 வார்த்தையாகிய பிதா, குமாரன் பரிசுத்த ஆகியானவராகிய மூன்று சாட்சிகளுடைய வார்த்தையின் ஜீவனை சுவாசித்து அதன் மூலம் மறுபடியும் உயிரடைந்து, ஆதிமனுஷன் சிருஷ்டிக்கப்படட பழைய நிலைக்கு திரும்பி புதுப்பிக்கப்படுதலே வார்த்தை ஊழியம்.

O^3 வார்த்தையில் முக்காலத்தின் ஊழியங்கள்

1. பழைய ஏற்பாட்டு ஊழியத்தின் இரகசியங்கள்
2. புதிய ஏற்பாட்டு ஊழியத்தின் மறைபொருள்கள்
3. பரலோக (நித்திய) ஏற்பாட்டு ஊழியத்தின் பொக்கிஷங்கள்

O^3 வார்த்தை என்பது பிதா, குமாரன், பரிசுத்த ஆவியனாவராகிய தேவனையும் அவர்களுடைய தெய்வீகத்தையும் குறிப்பிடுகின்றது. இம்மூவரும் தம்முடைய ராஜ்யத்தின் ஊழியங்களை முக்காலங்களுக்கும் உரித்தாக்கியுள்ளனர். இவைதனை ஆதியாகமம் முதல் வெளிப்படுத்தின விசேஷம் வரைக்கும் வார்த்தை வார்த்தையாக ஆராய்ந்து அறிந்து, அனுபவ ஊழியத்திலே அப்பியாசப்படுத்த வேண்டும்.

O^3 வார்த்தையில் புதிய ஏற்பாட்டின் ஏழுவித ஊழியங்கள்

1. சுவிசேஷ ஊழியம்
2. மேய்ப்பரின் ஊழியம்
3. போதக ஊழியம்
4. தீர்க்கதரிசன ஊழியம்
5. அப்போஸ்தல ஊழியம்
6. மூப்பரின் ஊழியம்
7. உதவிக்காரரின் ஊழியம்

வார்த்தையாகிய தேவனுடைய முக்கால ஊழியங்களுள் இக்காலத்தின் ஊழியத்தில் நம்முடைய பங்கும், உழைப்பும் நிறைந்த முக்கியமான ஊழியமாயிருக்கிறது. இந்த புதிய ஏற்பாட்டு ஊழியங்கள் பிரதானமாக ஏழு விதங்களாக அமைந்திருக்கின்றன. தேவசித்தத்தின்படி இந்த ஊழியங்களை தேவனுடைய வார்த்தையின் மூலமாக கற்பிக்கப்பட்டு, ஆராய்ச்சிப் பயிற்சிக்காக வேதாகமத்தை ஏழுமுறை ஆராய்ந்து அறிந்து, வார்த்தையின் அனுபவத்திலே இந்த ஊழியங்களை நிறைவேற்ற வேண்டும்.

O^3 வார்த்தையின் தரிசனம் ஏழு வருடங்களுள் ஒவ்வொரு ஊழியரும்

* ஆவிக்குரிய பயிற்சி
* ஊழியத்தில் வளர்ச்சி
* பொருளாதார்தில் உயர்ச்சி

தேவனுடைய ஒவ்வொரு ஊழியரும் ஏழு வருடங்களுக்குள்ளாக வார்த்தையின் மூலம். ஆவிக்குரிய பயிற்சியையும், வார்த்தையின் அனுபவத்தின் மூலம் ஊழிய வளர்ச்சியினையும்,

வார்த்தையின் அடிப்படையில் பொருளாதார உயர்வினையும் பெற்று மேன்மையடைய வேண்டும்.

ஒவ்வொரு சபையும்

* வேதாகம (பள்ளி) மையம்
* தொழிற்கல்விக் கூடம்
* ஆத்தும ஆதாய கலைக்கூடம்

தேவனால் உருவாக்கப்படுகின்ற சபையானது வார்த்தைக்கு முக்கியம் கொடுக்கின்ற வேதாகமப் பள்ளியாகவும், வார்த்தையால் உயர்த்தப்படுகின்ற தொழில் கல்வி, சுயவேலைவாய்ப்பு மையமாகவும், வார்த்தையைக் கொண்டு தேவனிடமாய் ஆத்துமாக்களைச் சேர்க்கிற கலைக்கூடமாகவும் மாற்றியமைக்கப்பட வேண்டும்.

ஒவ்வொரு சபையிலும் ஊழியர்

* போதனையாளர்
* தொழிற்கல்வி மேலாளர்
* தேவ ஊழியக்காரர்

தேவனுடைய சபை வேதாகமக் கல்வி மையமாக மாற்றப்படும் பொழுது அதிலே சபையின் ஊழியர் அங்கிகாரம் பெற்ற போதனையாளருக்கான தகுதியையும், தொழில்கல்வியினை நிர்வாகம் செய்யும் மேலாளருக்கான பொறுப்பினையும், தேவனுக்காக ஊழியம் செய்வதற்கான வார்த்தையின் அதிகாரத்தையும் பெற்றுக்கொள்ள வேண்டும். இதுவே இந்த ஊழியத்தின் தரிசனமாகும்.

O^3 வார்த்தையின் திட்டம்

தனிப்பட்ட வாழ்க்கையில் ஆவிக்குரிய பயிற்சிக்காக!

* O^3 B.Th., O^3 M.Bin - இரகசியங்களைக் கற்பித்தல்
* O^3 M.Th., O^3 M.Min - ஏழுமுறை வேதாகமத்தை ஆராய பயிற்சியளித்தல்
* O^3 D.Th., O^3 D.Min - சான்றிதழ் வழங்கி தகுதியளித்தல்

தேவ ஊழியர் ஒவ்வொருவரின் தனிப்பட்ட வாழ்க்கையை முக்கியப்படுத்தி அவர்கள் வார்த்தையாகிய தேவனுடைய இரகசியங்களைக் கற்றுக்கொள்ள தேவையான பாடங்களை படிப்பின் வழியாக வழங்கவும், படிக்கின்ற காலங்களில் வேதாகமம் முழுவதும் ஏழுமுறை பல விதங்களில் ஆராய்ச்சி செய்து, வார்த்தையின் ஞானத்தைப் பெறுகின்ற பயிற்சியினை அளிக்கவும், மேலும் படித்து, பயிற்சியடைந்து முடிவிலே சான்றிதழ்களைப் பெற்றுக்கொண்டு தகுதிபடுத்தப்படவும் தேவ திட்டமாயிருக்கிறது.

குடும்ப வாழ்க்கையில் பொருளாதார வளர்ச்சிக்காக!

* மூன்றாம் வருடத்திலிருந்து இரண்டு குழந்தைகளின் கல்விக்கு உதவுதல்
* குடும்பத் தேவைகளைச் சந்திக்க உதவுதல்
* வீட்டு வாடகையைக் கொடுக்க உதவுதல்

தேவ ஊழியரின் குடும்பம் பொருளாதாரத்தில் உயர்வை, மேன்மையை, செழிப்பைப் பெற்றுக்கொள்ள முதல் இரண்டு வருடம் வார்த்தைக்கு, ஆராய்ச்சிப் பயிற்சிக்கு முக்கியம் கொடுத்தபடியினால் மூன்றாம் வருடத்திலிருந்து அவருடைய இரண்டு குழந்தைகளுடைய கல்விக்காகவும், குடும்பத் தேவைகளுக்காகவும், தங்கியிருக்கின்ற வீட்டிற்கான வாடகைக்காகவும் வேண்டிய வழிமுறைகளை வழங்கி உதவிகளைச் செய்ய தேவ திட்டமாயிருக்கிறது.

பொது/ஊழிய வாழ்க்கையின் வளர்ச்சிக்காக!

* சபையை வேதாகமப் பள்ளியாக மாற்றியமைக்க உதவுதல்
* சபையை சுய வேலைவாய்ப்பு மையமாக்க உதவுதல்
* புறஜாதியாரை சீஷராக்க (ஊழியத்திற்கு) உதவுதல்

தேவ ஊழியர் தனது சபையை வார்த்தைக்கு மகிமையாக வேதாகமப் பள்ளியாக மாற்றியமைக்க ஒப்புக்கொடுக்கும் வேளையில் அதனை நடத்த வேண்டிய பாடத்திட்டங்களை வழங்கி உதவுதல், வேதாகமப் பள்ளியில் படிக்கிறவர்களுக்கு வேலை வாய்ப்புகளை ஏற்படுத்த தொழிற்கல்வி வழங்கி உதவுதல், புறஜாதியாரை சந்தித்து ஊழியம் செய்வதற்கான திட்டம், வழிமுறைகளையும் வழங்கி உதவி செய்து ஊக்கப்படுத்தவதே வார்த்தை ஊழியத்தின் தேவ திட்டமாயிருக்கிறது. மேற்கண்ட உதவிகள் அனைத்துமே விதிமுறைகள், நிபந்தனைகள், சட்டதிட்டங்களுக்குட்பட்டது.

O^3 வார்த்தை ஊழியத்தின் நோக்கம்

வார்த்தை (ஊழியத்தில்) ஆலயம்

* வார்த்தையின் ஒரே சரீரம்
* வார்த்தையின் ஒரே கட்டிடம்
* வார்த்தையின் ஒரே குடும்பம்

O^3 வார்த்தையின் ஊழியத்தில் தேவனுடைய சித்தம், திட்டம், நோக்கத்தின்படியே வார்த்தையின் ஆலயத்தை வார்த்தையைக் கொண்டு ஒரே சரீரமாக இணைத்து பிரிவினையுண்டாயிராமல், ஆவியினால் இசைவாய் கூட்டப்பட்டு ஒரே கட்டிடமாகவும், தமது குமாரனின் ஜீவனை நமக்காக ஒப்புக்கொடுத்து அவரால் மீட்கப்பட்டவர்களைத் தம்மிடமாய் சேர்த்து ஒரே குடும்பமாகவும் உருவாக்கப்படுவதே வார்த்தையின் ஊழியத்தைக் குறித்த தேவனுடைய நோக்கமாகும்.

ஜீவ விருட்சத்தின் வெளியீடுகள்

மென்பொருள்கள்

* தமிழ் - பாகம் I, II - 699/- / 999/-
* மலையாளம் - பாகம் I, II - 699/- / 999/-
* ஹிந்தி - பாகம் I, II - 699/- / 999/-
* ஆங்கிலம் - பாகம் I, II - 699/- / 999/-

மென்பொருளில் இவை அனைத்தும்

* தமிழ்வேதம்
* ஆங்கில வேதம் (ஒன்பது)
* எபிரெய வேதம்
* கிரேக்க வேதம்
* 12 வேதங்களை ஒத்துப்பார்க்கும் வசதி
* தமிழ் அகராதி
* ஒரு வார்த்தை, இரண்டு வார்த்தை, மூன்று வார்த்தை ஆராய்ச்சி வசதி
* 66 புத்தகங்களின் முழு விபரங்கள்
* ஆயிரம் இரகசியங்கள் (ஆதியாகமம் - வெளிப்பாடு)
* 935 இரகசியங்கள் (ஆதியாகமம் - வெளிப்பாடு)
* அறிவியல் மற்றும் சரித்திரத்தின் 100 காரணங்கள்
* வரைபட விளக்கங்கள், அகராதிகள்
* தோட்டத்தின் ஆழமான 28 இரகசியங்கள்
* தெய்வீக நாமங்களுடைய ஆராதனை
* ஒன்று முல் ஏழு வரை தெய்வீகக் கணிதம்
* அன்றாட துதி செய்ய வசனத் திட்டம்
* அன்றாட வாக்குத்தத்தம்
* அனுதின ஜெபமுறைகள்
* குறிப்புகளை தயார் செய்யும் வசதி
* தமிழ் தட்டச்சுப் பலகை

இணை வேதாகம மென்பொருள்

* தமிழ், ஆங்கிலம், மலையாளம் மற்றும் ஹிந்தி - 300/-

II. வசன பொருட்கள்

* வேதாகம சிப்புகள், புடவைகள், பனியன்கள், வாட்ச், கிளாக்

III. DVD-ஆழமான இரகசியங்களடங்கிய ஒலி ஒளி குறுந்தடுகள்

* புத்தகங்கள், தாலந்துகளின் இரகசியம் - 100/-
* ஒளி, அக்கிரமத்தின் இரகசியம் - 100/-
* இயேசு கிறிஸ்துவின் முதல், இரண்டாம் வருகையின் இரகசியம் - 100/-
* சபை, சரீரம், குடும்பத்தின் இரகசியம் - 100/-

* யோசுவா, மோசே வாழ்க்கையின் இரகசியம் - 100/-
* நட்சத்திரம், ஆசீர்வாதத்தின் இரகசியம் - 100/-
* மனிதன், குற்றத்தின் இரகசியம் - 100/-
* கொம்பு, ஜெயத்தின் இரகசியம் - 100/-
* சுவிசேஷம், இரட்சிப்பின் இரகசியம் - 100/-
* கிரீடங்கள், இராஜ்யத்தின் இரகசியம் - 100/-
* கிறிஸ்தவன், சீஷனின் இரகசியம் - 100/-
* கல், ஞானத்தின் இரகசியம் - 100/-
* உயிர்த்தெழுதலின் இரகசியம் I, II - 100/-
* உபத்திரவம், மூன்றாம் வருகையின் இரகசியம் - 100/-
* சுவிசேஷம், அந்நிய பாஷையின் இரகசியம் - 100/-
* கண்கள், சோதனையின் இரகசியம் - 100/-
* விளக்கு, ஆராய்ச்சியின் இரகசியம் - 100/-
* தேவசாயல், வஸ்திரங்களின் இரகசியம் - 100/-
* எலும்பு, உன்னதத்தின் இரகசியம் - 100/-
* தேவன், பரிசுத்த ஆவியானவரின் இரகசியம் - 100/-
* சத்தியம், தேவதிட்டத்தின் இரகசியம் - 100/-
* பலியாகிய காணிக்கை, நியாயத்தீர்ப்பின் இரகசியம் - 100/-
* பரலோக அரசாங்கம், ஆலயம், அரமனையின் இரகசியம்-100/
* தெய்வீகம், தூதர்களின் இரகசியம் - 100/-
* ஆயத்தம், பரதீசின் இரகசியம் - 100/-
* இயேசுவின் பிறப்பு, உவமைகளின் இரகசியம் - 100/-
* அப்பம், சுகத்தின் இரகசியம் - 100/-
* கனிகளின் இரகசியம் I, II - 100/-
* தண்ணீர், ஆராதனையின் இரகசியம் - 100/-
* சத்தியத்தின் தேவ திட்டம், தேவனுடைய ஆள் தத்துவத்தின் இரகசியம். - 100/-

ஜீவ விருட்சத்தின் வெளியீடுகளில் மென்பொருள் மிகவும் பிரதானமானது கனிணி வசதியுடையவர். வேதத்தை பலவிதங்களில் ஆராய்ந்து அறிந்து கொள்ள சிறந்த வாய்ப்பு. மேலும் வசனங்கள் பொறிக்கப்பட்ட துணி வகைகள், நேரத்தைக் காண்பிக்கும் வாட்ச், கிளாக் போன்றவைகளும் கைபேசியில் வசனங்களைக் கேட்கும் வசதியில் வேதாகம சிப்புகளும், DVD ப்ளேயர் மூலம் வேதத்தின் பல அரிய இரகசியங்களைக் கேட்டு, காணும் வசதியில் வெளியாக்கப்பட்டுள்ள ஒலி, ஒளி குறுந்தகடுகளையும் கேட்டு, வாங்கி, தியானிப்பதன் மூலம் சத்திய அறிவை, ஜீவனையடைந்து, தேவனை மகிமைப்படுத்தி வாழ பேருதவியாக அமையும்.

PERSONAL INFORMATION

Name ....

Address ....

....

City ....

State.............................. Zip:.........................

Phone No. ....

Mobile No..

Email Id. ....

Date of Birth.......................Age.....................

Blood Group ....

And ye shall know the truth and the truth shall make you free john 8:32

INTERNATIONAL Truth University

Revelation Reformation Revolution

The Research University Of Trivium Holy Word

Regd. Office : 7/1 Clark Road Frazer Town Bangalore 560 005. Ph : 080-25806613
Corporate Office : 35/2 Residency Road 4th Cross Bangalore - 560 025 Ph : 080-25559184
Campus : Hennur Bunde Bangalore - 560 045. Cell : 08892606246
Website : www.truthuniversity.edu.in. E-mail thegreenroses@gmail.com

தேவனுடைய வார்த்தையானது
ஜீவனும் வல்லமையும் உள்ளதாயும், இருபுறமும்
கருக்குள்ள எந்த பட்டயத்திலும் கருக்கானதாயும்,
ஆத்துமாவையும் ஆவியையும், கணுக்களையும்,
ஊனையும், பிரிக்கத்தக்கதாக உருவக் குத்துகிறதாயும்
இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும்
வகையறுக்கிறதாயும் இருக்கிறது. – எபி 4:12

And the word become flesh and dwelt among us, full of grace and truth. John 1:14

WORD

WORLD OUTREACH FOR REVIVAL & DISCIPLESHIP

RESPIRATION RESUMPTION RESTITUTION

Regd. Office : 7/1, Clarke Road Bangalore - 560 005. Ph : 25806613
Corporate Office : 35/2, Residency Road, 4th Cross, Bangalore - 560 025. Ph : 080-25559184
Campus : Hennur Bunde Banagalore - 560 045. Cell : 08892606246
Website : www.wordintl.com, E-mail : word777@intl.com